AN

# EPITOME

OF

# CEYLON HISTORY

IN TAMIL

COMPILED FROM THE BEST AUTHORITIES,

BY

**A. MOOTOOTAMBY PILLAY.**

SECOND EDITION

# இலங்கைச் சரித்திர சூசனம்.

இது

யாழ்ப்பாணத்து மானிப்பாய்

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

இயற்றியது.

இரண்டாம் பதிப்பு.

**JAFFNA,**

PRINTED AT THE "NAVALAR" PRESS, JAFFNA.

**1903.**



A. MOOTOOTAMBY PILLAI.

# OPINIONS ON THIS WORK.

:o:

From

R. BRECKENRIDGE ESQ.

SUB-INSPECTOR OF SCHOOLS.

The appearance of an Epitome of the History of Ceylon in the Tamil Language is very auspicious and quite oportune. Mr. A. MOOTOOTAMBY PILLY of Manipay in Jaffna, has made extensive researches into all available ancient and modern works on the subject and has summed up genuine information in this small compass. The correctness of chronology and history as well as the beauty of the style of language in which they are clothed, are worthy of commendation. I do not hesitate to recommend this book for the use of pupils in our Schools.

If the author would take some more pains and make the book a little more elaborate, it cannot but be counted one among modern Tamil Classics.

R. Breckenridge.

Moolay, 8th Sept. 1883.

From

L. MANUEL ESQ.

SUB-ASST. INSPECTOR OF SCHOOLS.

The History of Ceylon in Tamil by Mr. A. Mootootamby Pillay, Editor of the "Sathiabhimanie" supplies a want longfelt in our Schools. The Compiler is a Scholar of some reputation, and a writer of much experience. He has consulted the best writers on Ceylon—Tennent, Furguson, Cassie Chetty and Turnour. The work is clear in arrangement; and its style is worthy of imitation by our youth. It is thus specially designed for schools, and I have much pleasure in recommending it to students in Middle and Training Schools, and Candidates desirous of qualifying themselves for Teachers' Certificates.

L. Manuel.

Jaffna, 15th Sept. 1883.

From
## J. R. ARNOLD ESQ.
PROF. OF VERNACULAR LITERATURE,
JAFFNA COLLEGE AND EDITOR, MORNING STAR.

From a careful and brief perusal and examination of Mr. A. Mootootamby Pilly's Epitome of Ceylon History, I am prepared to express my opinion that the work is well designed and executed, and will duly supply the want that is felt and exists in the Vernacular schools. The author, it seems, has spared no pains to execute the work in such a way as to please the students as well as the general readers. The style is neat, simple, commanding and animating; expressions are rich, forcible and enlivening. The plan of the work is what it should be—abundance of materials compressed into a small compass. The size of the work is such that the vast majority of the Tamil students can easily afford to purchase. To be brief, I am disposed to say that the work is in every respect worth the patronage of the Public.

J. R. Arnold.

Manipay, 15th Sept. 1883.

---

From
## WM. NEVINS ESQ.
HEAD MASTER, WES. CENTRAL COLLEGIATE
INSTITUTION, JAFFNA.

The History of a people proposes to give prominently an account of their thoughts, words and deeds, as they are exhibited mainly in public life. The Historian, properly so called, assumes and perhaps claims to himself the privileged gift of ascertaining as facts the things he has been recording.

The facts thus recorded deserve the attention and study of the rising generation, only when they tend to cultivate upon their welfare.

We have reason to believe that Mr. A. Mootootamby Pilly had these and smilar thoughts in view, in the preparation of his

Lanka Charitira Suchanam, and we recommend the Work to the Tamil public. Tamil scholars will certainly find in it valuable information closely connected with the ancient Tamils of India and Ceylon.

Wm. Nevins.

Jaffna, 19th Sept. 1883.

From

J. EVARTS ESQ.

HEAD MASTER, CHUNDICULLY SEMINARY.

The longfelt want of a history of our island in Tamil is worthily supplied by Mr. A. Mootootamby's Epitome of the History of Ceylon. As a text book in history for Vernacular Schools, it will be found to be a very useful work, containing as it does, much information in a little space; while the simplicity and conciseness of the style render it a valuable acquisition to the prose literature of our language.

J. Evarts.

Alevetty, 25th Sept. 1883.

From

V. FRANCIS THAMBOO ESQ.

EDITOR, CATHOLIC GUARDIAN.

I have perused with pleasure the Epitome of Ceylon History written for the use of Vernacular Schools by Mr. Mootootamby of Manipay, the Editor of the Karical Sathiabhimani, and I am happy to state that the work is generally interesting being written throughout in an elegant and agreeable style. The appendix given at the end will be of great use to students. Mr. Mootootamby has on the whole done his work well as it is admirably adapted to exhibit the whole of the History of Ceylon within a short compass.

V. Francis Thamboo.

Jaffna Town, 15th Sept. 1883.

From

JAMES H. MARTYN ESQ.

This little manual on the History of Ceylon by Mr. A. Mootootamby Pilly of Manipay, sheets of which were sent for my perusal as they issued from the press has special features which cannot fail to commend themselves to the public generally. There is sufficient matter. methodically given to meet the requirements of Tamil Schools. The style of writing is engaging and evinces a refined taste combined with considerable freshness and vigor. The writer is entitled to the praise of entire freedom from prejudice and partiality—the chief title to public approbation in the compiler of a historical manual. Altogether I look upon the work as a valuable contribution to the School literature of the Island which is just forming under the influence of the Revised Code. In saying all this I hope I do not commit myself to any expression of opinion as to the acceptability of the work in the case of denominational schools.

James H. Martyn.

Jaffna, 18th Sept. 1883.

---

From

E. SPAULDING ESQ.

LATE TEACHER, BATTICOTTA HIGH SCHOOL.

I have carefully read the Epitome of the Tamil History of Ceylon by Mr. A. Mootootamby Pilly and am of opinion that the work contains in a small compass much valuable and useful information and is characterised throughout with the highest graces of brevity, purity and simplicity of style. The author has certainly conferred a lasting benefit upon the youth of the country by supplying a long-felt desideratum and such as desire to gain a knowledge of the history of the Island will do well to possess the compendium.

E. Spaulding.

Manipay, 18th Sept. 1883.

# சிறப்புப்பாயிரம்.

---

உபவித்தியாபரீக்ஷகராகிய

## பிறெக்கெனிறிச்சு அவர்கள்

இயற்றியது.

பங்கப் பழனஞ் செறிதரு மானைப் பழம்பதிவாழ்
துங்க னறுமுகன் சேய்முத்துத் தம்பிநற் றோன்றறந்த
லங்கைச் சரித்திர சூசனந் தன்னைப் புகழ்ந்திசைத்த
றங்கக் குடத்தினிற் பொற்பொட் டிடுத றனக்கிணையே.

---

யாழ்ப்பாணத்து நல்லூர்

நாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும்

வித்துவசிரோமணியுமாகிய

## ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சீருறு மானிப் பதியன் செழுந்தமி ழின்னியலா
லேருறு மாறு முகவள்ள லீன்றமுத் துததம்பிதான்
பாருறு லங்கைச் சரித்திர சூசனம் பன்னினனாற்
கூருறு சொற்புல வோர்கட முள்ளங் குளிர்ந்திடவே.

---

சைவ உதயபானு பத்திராதிபராகிய

திருநெல்வேலி

## க. வேலுப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

நீரிலங்கைக் கடல்புடைசூ ழுலக மெங்கு
நேமியுருட் டிடுநெறியி னிகரி லாத
போரிலங்கைப் படைகடவு மாங்கிலேயர்
புறந்தருபா டையிற்பெரிதும் பொதிந்த மெய்ம்மைச்

சீரிலங்கைச் சரித்திரசூ சனத்தை யாருந்
   தெளியும்வகை செந்தமிழிற் செய்தான் மாணிப்
பேரிலங்கைப் பதிவாசன் முத்துத் தம்பிப்
   பெயரினனா றுமுகன்றருபே ரறிஞ னம்மா.

---

சுன்னாகம்

## அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சொன்னயமும் பொருணயமு மினிதென்று தொல்லறிஞர்
   தொகைகொண் டாடத்
தென்னிலங்கைச் சரித்திரசூ சனமொன்று வரைந்தச்சிற்
   றிகழச் செய்தான்
பொன்னமரு மாணிக்க ராறுமுக வேளருளும்
   புதல்வன் கீர்த்தி
மன்னுதமி ழிங்கிலிசு வல்லமுத்துத் தம்பியெனும்
   வள்ளன் மாதோ.

---

நூலாசிரியர்க்கு ஆசிரியரும்

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய

## பூ. முருகேசபிள்ளையவர்கள்

இயற்றியது.

திருத்தகுபல் வளங்களுக்கோ ரிடமே யாகித்
   திகழிலங்கா புரிமருவுஞ் சிறப்பு மிக்க
சரித்திரசூ சனமதனை யழகு சேர்ந்து
   தமிழ்மொழியாற் கற்பவர்கள் தமக்கு வாய்ப்பத்
திருத்தமுடன் வரைந்துபிர கடனஞ் செய்தான்
   செயவாறு முகக்குரிசில் செல்வன் கல்வி
விருத்திசெயுங் கவிஞர்குல திலகன் மேன்மை
   விளங்கியமுத் துத்தம்பி வித்து வானே.

---

தெல்லிப்பளைப் போதனாசக்திவித்தியாசாலைப்
பிரதம உபாத்தியாயராகிய

## எஸ். எஸ். ஜெரிமையா அவர்கள்

இயற்றியது.

சிறப்புய ரிலங்கைச் சரித்திரப் பரப்பிற்
றிறம்பெற மூழ்கியாய்ந் தெடுத்த
அறப்பெரு மாணி முத்தென வான்ற
வணிகொண்மா சரிதகூ டத்துத்
திறப்பென முத்துத் தம்பிநற் றமிழாற்
றிகழுமிச் சரித்ரகு சனத்தை
வறப்பினன் மழைபோன் மாணவர்க் களித்த
மாண்செயல் வழுத்துதற் கெளிதோ.

---

கத்தோலிக்கபாதுகாவல பத்திராதிபராகிய

## வி. எவ். தம்பு அவர்கள்

இயற்றியது.

சீரிலங்கைத் திகழ்நற் சரிதையை
யேரிலங்கு மினிய தமிழினு
ஞரிலங்கு நறுந்தொடை சேர்த்தெனப்
பாரிலங்க வரைந்தனன் பண்பினுல்.

அம்புவிக்க ணருங்கலை வல்லுநன்
றம்பிவாழுந் துயருடை மார்பினன்
இம்பராரு மெழில்செய் புகழ்முத்துத்
தம்பிமானைத் தடம்பதி யண்ணலே.

---

# முகவுரை.

பூவுலகத்திலே யாவரும் தத்தந் தேசசரித்திரங்களை யுணர்ந்து, தமது முன்னோர் நிலையையும் செயலையும் நாகரிகத்தையும் ஒருபால் நோக்கித், தமது நிலையையும் செயலையும் நாகரிகத்தையும் மற்றொருபால் நோக்குதல் அத்தியாவசியகமாம். நோக்குமிடத்துத் தமது நிலை தாழ்ந்ததாயின் உயருதற்கும், உயர்ந்ததாயின் மேன்மேல் உயருதற்கும் மனம் அவாவும். இங்ஙன முணர்ந்துநோக்கிய தேசத்தோரே பூமுகத்திலே உயர்ந்துள்ளாரென்பது பிரத்தியக்ஷம். ஆதலால் யாவரும் தத்தம் தேசசரித்திரத்தை ஆராய்தலையும் தம்மக்களுக்குக் கற்பித்தலையும் மாறாக் கடனாகக் கொள்ளுதல்வேண்டும்.

இந்நூலின் முதற்பதிப்பு இருபது வருஷத்துக்குமுன்னே பிரகடனஞ்செய்யப்பட்டது. அஃது அரசினராலும், சைவர் கததோலிக்கர் புரொடெஸ்டாண்டர் என்னும் முச்சமயிகளாலும் சன்மானிக்கப்பட்டுச் சர்வாங்கீகாரமாக, அப்பதிப்புப் பிரதிகளெல்லாம் எஞ்சாமல் விரைந்து செலவாயின. நெடுநாள் இப்புஸ்தகம் அகப்படாது வருந்திய உபாத்தியாயர்கள் பலர் பன்முறை செய்த வேண்டுகோள்நோக்கி இரண்டாம்பதிப்பு வெளியிடப்படுவதாயிற்று.

இந்நூலிலே 1883ன் பின்னர் வந்த தேசாதிபதிகள் சரித்திரமும் புதிதாகச் சேர்த்துச் சில திருத்தங்களும் ஆங்காங்குஞ் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம்
நாவலர் கோட்டம்
1903 ௵ நவம்பர் ௴

இங்ஙனம்,

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

கடவுள் துணை.

# இலங்கைச் சரித்திர சூசனம்.

இலங்கைத்தீவானது *ஆசியகண்டத்தைச் சேர்ந்ததாய், இந்து சமுத்திரத்திலே இந்தியாவையடுத்து, அதன் தென் கீழ்த்திசையிலேயுள்ளது. இதனை ஆரியர் "லங்கா" என்றும், மகதநாட்டார் "தாமிரவருணி" என்றும், திராவிடநாட்டார் "சிங்களத்தீவு" என்றும், சிங்களர் "இலங்கவி" என்றும், அராபியர் "சீரந்திப" என்றும், சீனர் "சைத்து" என்றும், கிரேக்கர் "தாபிரபனி" என்றும், தற்கால ஐரோப்பியர் "சீலோம்" என்றும் வழங்குவர்.

["இலங்கா" என வந்தது அத்தீவின் சிறப்புப்பற்றி யென்பர். "தாமிரவருணி" என வந்தது செம்மண் செறிவால். "சீரந்தீப" எனபது வடமொழியாகிய "சிம்ஹளத்துவீபம்" என்பதன் சிதைவு. "தாபிரபனி" என்பது "தாமிரவருணி" என்பதன் திரிபுபோலும். "சைத்து" என்பது, சேதுதீவு எனவு மோர்பெயர் இலங்கைக்குணமையால் அதன் சிதைவாதலகூடும்; அன்றேல், சீனபாஷையில் சிலாத பூமியென்னும் பொருளது. "சீலோம்" என்பது வடமொழித தற்சமமாகிய "சிமஹளம்" என்பதன் சிதைவு. சிங்களத்தீவு-பட்டைத்தீவு. பட்டை-கறுவாப்பட்டை.

இவ் வபிதானங்களேயன்றி வேறுபிறராற் கொடுக்கப்பட்ட நாமகரணங்களும் பிறவுண்டு.

---

* "ஆசிய" என்னும் ஆங்கிலேயமொழி சமஸ்கிருதமாகிய "உஷா" எனனும மொழியின் சிதைவு. உஷா=விடியற்காலம. உஷாகண்டம -சூரியன உதயஞ்செய்யுங் கண்டம்.

இத்தீவின் சிறப்பைக் கூறுங்கால், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், நாட்டிற் கிலக்கணங்கூறப் புகுந்தபோது இந்நாட்டையே இலக்கியமாகக்கொண்டு,

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு."

எனக் கூறினரென்று சொன்னாலும் தோஷமுறாது. அரிய பெரிய ஏரிகள் ஆறுகள் முதலிய சலாதாரங்களும் குறையாத மழை வீழ்வும் உடைமையால் நீர்வளமும், செந்நெற்பயிர்கள் கரும்புபோலோங்கி வளருதலால் நிலவளமும், உயர்ந்து செழித்த மலைக்குலங்களால் மலைவளமும், ஆகரங்களிற் படுவனவாகிய மாணிக்கம், வச்சிரம், நீலமணி யென்னு மிரத்தினங்களின் மிகுதியும், கடல்படு திரவியங்களாகிய சங்கு, முத்து முதலிய பொருள்களின் குப்பையும், மா, பலா, சந்தனம், சண்பகம், கருங்காலி, பாதிரி, தென்னை, கமுகு, பனை முதலிய திவ்விய விருக்ஷங்களும், வெயில் தெரியா தோங்கி வானளாவி யடர்ந் திடம்பரந்த சோலைகளெங்கும் யானை, மான், மரை, மேதி, பசு, மயில் முதலிய விலங்குகளின் கூட்டங்களும், திணைகள்தோறும் அவ்வம்மாந்தரும், நகரிகள்தோறும் பிராமணர் வைசியர் முதலியோரும், அவருட் கல்வியால் நிறைந்த சான்றோரும் பண்டைக்காலமுதல் வசிக்கும் பெற்றியும், ஐரோப்பியர் கணிதப்படி 3000 வருடங்களுக்கு முன்னரிருந் தரசாண்ட அரசர் செய்தியையும், அக்காலத்தில் இந்நாட்டுச் சீரினையும், உலகத்திலுள்ள இதிகாசங்களுள் அதி புராதனமுடைய தெனப்படும் இராமாயணமே யொருவாறு கூறலால் மறுக்கப்படாத பழமையும், ஆரிய மதநூற்படி தலவிசேடத்தோடு புண்ணிய தீர்த்தங்களும், மலையரண் மதிலரண் முதலியவற்றால் சூழ்ந்து சிறந்த நகரங்களும், தற்காலத்தில் எந்நாட்டினுஞ் சிறந்து விளங்கும் பிரித்தானிய தீவு தானும் பெறாத எண்ணில் இதிகாசங்களைப் பெற்றுள்ள பெரும் பெற்றிமையும் ஆகிய இவை முதலியவெல்லாம் உண்மையால், இலங்கைத்தீவிற்கு, அதன் மகா சிறப்பளவிலும் அதிப் பிரதாபத்தளவிலும் எந்நாட்டை எத்தீவை இணையென நிறுத்தலாமோ? அதற்கிணை வேறில்லையென்க.

இத்தீவின் பூருவக்குடிகள் இயக்கர், நாகர் என்போர். தற்காலத்துக்குடிகள் பரதேசிகளாகிய ஆங்கிலேயர் முதலியோரும், சுதேசிகளாகிய சிங்களர், தமிழர், சோனகர் என்போருமாம். சுதேச பாஷை தமிழும் சிங்களமும். மதம் சைவம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தம் என்பவை.

[இங்கு வசிக்கும் சோனகர் பரம்பரைச்சோனகரல்லர். இவர்கள், அராபியர் இலங்கையில் வர்த்தகஞ் செய்தகாலத்தில், அவர் சகாயம்பெற்று வர்த்தகத்தில் விருத்தி பெறும்பொருட்டு அவர் மதம்புகுந்த மலையாளநாட்டுச் சூத்திரர் பரம்பரையில் வந்தோரெனப்படுவர்.]

ஆதிகாலத்திலே, ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் உண்டான யுத்தத்தால் மகாமேருகிரியினது ஆயிரத்தெட்டுச் சிகரங்களுள் ஒன்று முரிந்து தெறித்துத் தென்சமுத்திரத்தில் விழுந்து இலங்கையாகிய தீவாயிற்றென்று கூறும் இராமாயணம். இது, ஆதியிலே இந்தியாவும் இலங்கையும் ஏகநாடாயிருந்து, பின் பூகம்பத்தால் கூறுபாடுற்று வேறு நாடாயிற்றென்பதை வெளியிடத்துணிந்த வருணனையேயாமென்க.

இத்தீவு முன்னே எழுநூறுகாதவழியுள்ளதாயிருந்து, பின், இராவணன்கோட்டையுள்பட இருநூற்றுமுப்பதுகாதவழியூரைக் * கடல்பொங்கியழித்தமையால் குறுகிற்றென்று கூறுவர். இதற்குப்பின்னும் காலாந்தரங்களில் கடல் பொங்கிப்பொங்கி அநேகவூர்களை ஆழ்த்திற்றென்று கூறவும் இடமுண்டு.

இப்போது இலங்கை நீளத்தால் 270 மைலும், அகலத்தால் 140 மைலும், பரிணாமத்தால் 760 மைலும், விஸ்தீரணத்தால் 25000 சதுரமைலுமுடையது.

---

* இப்போது இலங்கைக்குத் தெற்கே சமுத்திரத்திலே இரண்டாயிர மைல் தூரங்காறும் ஆங்காங்கும் கணங்களாகக்கிடக்கும் தீவுகளெல்லாம் (Polynesia) பூர்வம் ஒருகாலத்து நிகழ்ந்த மகாபூகம்பத்தால் தகர்ந்து பின்னங்களாகிய இலங்கையினது கூறுகளென்றும், ஜனசஞ்சாரமில்லாத சிலதீவுகளிலே ஆரியவேத சம்பந்தமான சிலவிக்கிரகங்கள் உளவென்றும் ஐரோப்பிய பண்டிதர் சிலர் சாதிப்பர். (Vide S. D. Vol. II.)

இத் தீவைப்பற்றிய சரித்திரம் முறையே பூர்வகாலம், விஜயவமிசகாலம், பறங்கிக்காரர்காலம், ஒல்லாந்தர்காலம், ஆங்கிலேயர்காலமென ஐந்து கால சரித்திரங்களாக வகுக்கப்படத்தக்கது:—

## 1. பூர்வகாலம்.

இலங்கையின் பூர்வகாலசரித்திரம் ஒழுகிய நடையும் விழுமிய விடயமும் பொருந்தியதன்று. இராமாயணத்திலுள்ளபடி, ஆதியிலே இலங்கையில் இராவணனென்றோர் இராக்ஷசன், எண்டிசையிலுளளோருமதன்பெயர் கேட்டு லைந்து நடுங்கி யஞ்சுமாறு உத்தண்ட கம்பீரனாயிருந்தரசியற்றினன். அக் காலத்திலே இந்தியாவிலே அயோத்தியாபுரியிலிருந்து செங்கோல் செலுத்திவந்த தசரதச்சக்கிரவர்த்தியுடைய குமாரன் இராமன் என்போன், சீதையைப் பாணிக்கிரகணம் பண்ணியபின், குடும்பத்திலே கலகமுண்டாக, அக் கலகத்தால் சீதையுடன் வனவாசியாயிருககும்படி நேர்ந்திட, இலங்காபதியாகிய இராவணன் அக்காட்டிற்குச் சென்று சீதையைத் திருடிக்கொண்டு போயினன். அதுகண்ட இராமன் *வானர வீரரைத் துணைக்கொண்டு இலங்காபுரியை வளைந்து, இராவணனையுமவன் கிளைகளையுங் கொன்று சீதையைச் சிறைமீட்டான், $ இது நிகழ்ந்தது இறக்குறைய 3000 வருடங்களுக்கு முன்னரென்பர் ஒருசார ஐரோப்பியர்.

இவனுக்குப் பின், அவன் தம்பி விபீஷணன முதலியோரிருந் தரசாண்டார். அவர்கள் அரசியல் ஒருதுறைப்பட்டதன்று. அவர்களுடையு தலைநகரம் இலங்காபுரி. இது மட்டக்களப்பு நாட்டிலேயுள்ள திருக்கோயிலுக்குநேரே கடலுள் அமிழ்ந்திக் கிடக்கின்றது என்பர்.

---

* வானரரென்றது - வனசரரைப்போலும். காப்பிரிகளிலும் குரூபிகளாகிய ஒரு ஜாதி வேடர் இன்றும விந்தியபர்வதச் சாரிலுளர். வானரரென்னுஞ்சொல் வடமொழி. அதன்பொருள் ஒருவாறு நரரை யொத்தவர் என்பது.

$ இராமன் பிறந்தது இற்றைக்கு 12,569,016 வருஷங்களுக்கு முன்னரென்று கூறும் Palagonda chronicle of Events என்னும நூலும் விஜயநகர பஞ்சாங்கமும். எனவே ஆரியர் இது நிகழ்ந்தது ஒருகோடியே இருபத்தைந்திலக்ஷத்து அறுபத்தொன்பதினாயிரம் வருஷங்களுக்கு முன்னரென்ப.

சிங்களருடைய காலத்துக்குமுன் இலங்கை, இயக்கராலும், நாகராலும் குடிகொள்ளப்பட்டிருந்தது. இயக்கர் என்று சிங்களர் கூறுவது இராக்ஷசரைப்போலும். அக்காலத்தில் ஆதிபுத்தர் இலங்கைக்கு மூன்று முறை வந்தாரென்றும், முதல்முறையில் ஆகாயமார்க்கமாய்ப் பறந்துவந்து விந்தனையிலே இயக்கருடைய சபாஸ்தானமாகிய மகாநக நந்தாவனத்தில் இறங்கினுரென்றும், இரண்டாமுறை வந்தபோது கொழும்புக்குச் சமீபத்தேயுள்ள கழனியாநாட்டுக்கு அதிபதியாயிருந்த நாகராஜனைப் பௌத்தனுக்கி மீண்டாரென்றும், மூன்றாம்முறை வந்தபோது திருவடிமலையில் தமது பாதமுத்திரையைவைத்துப் போயினுரென்றும் சொல்லுவர். மகியங்கனுவையென்று முன்னுளில் சொல்லப்பட்ட அவ் விந்தனைநகர் நெடுங்காலமாக இலங்கையிலுள்ள அதி முக்கியஸ்தலங்களு ளொன்றுயிருந்தது. இப்புத்தர் ஏழாம் பௌத்தாவதாரியாகிய கௌதமபுத்தர்.

இயக்கரும் நாகரும் தற்காலத்துச் சிங்களரையும் தமிழரையும் போன்று இரு வேறு சாதியினராயிருந்திருக்கலாமென்றன்றி, அவர் இன்னசாதியினர், இன்னபாஷையாளர் என்று துணிதற் கிடமில்லை. இனிச்சிங்களரும் தமிழரும் யாரோவெனில்—இந்தியாவிலுள்ள பாஷைகளெல்லாம் சமஸ்கிருதம் திராவிடம் என்னு மிருபாஷைகளுள்ளு மடங்குமாகையால், சிங்களபாஷைக்கும் மூலபாஷை சமஸ்கிருதமாகும். ஆகவே அப் பாஷைக்காரராகிய சிங்களர் சமஸ்கிருதம் வழங்கிவந்த நாடாகிய வட இந்தியாவினின்றும் இலங்கையிலே குடியேறினவர் எனவும், தமிழர் தமிழ்நாடாகிய தென் இந்தியாவினின்றும் குடியேறினவர் எனவும் அனுமானிக்கப்படுவர். அன்றியும், முன் ஓர் காலத்தில் கடல் வற்றுநாட்களில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எளிதில் நடந்துவரக் கூடியதாயு மிருந்தமையால், அது சாததியமே. இயக்கரும் நாகரும் பைசாச சர்ப்ப வழிபாடுகளுடையோர். அது பற்றியே பைசாசு சர்ப்பம் என்று முறையே அர்த்தங்கொள்ளும் இயக்கர் நாகர் என்னும் பெயர்கள் அவர்க்காயின. அன்றியும் இயக்கர் விகாரரூபிகளாயும், நாகர் கீழ்ச்சுரங்கங்களில் வசித்தவராயு மிருந்ததுபற்றி இழிவுரையாய் அப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருத்தலுங் கூடுமென் றெண்ணற் கிடமுண்டு. அது நிற்க, இவ்வியக்கர் நாகர்களுடைய இராச்சிய சரித்திரம் அபூரணமாய்ப்போந்த ஆதாரமின்றி இருத்தலால் அதனை இவ்வளவில் நிறுத்தி, சிங்கள அரசர் சரித்திரத்தையே இங்கு சொல்வாம்.

## II. விஜயவமிசகாலம்.

——o——

### க. அதிகாரம்.

[விஜயராஜன் வந்தது முதல்;
முத்தசிவராஜன் ஆண்டது பரியந்தம்.]

இச் சரித்திரத்தைச் செவ்வொழுக்காய் நடத்தி முடிக்க வேண்டி, இலங்கைக்கு (Wijayo) விஜயராஜன் வந்தமையை, ஆதி சம்பவமாகக் கொண்டு சொல்லுவாம்.

இவ் வரசனுடைய பிறப்பை ஆராயுமிடத்து, தந்தைவழி, வங்கநாட்டு அரசகுலமென்றும், தாய்வழி, கலிங்கநாட்டு அரச பத்தினிவமிசமென்றும் தெரியவருகின்றது. இவனுடைய மூதாயானவள், இழிகுலத்தவனாகிய சிங்கனென்பவனை வியபிசாரமார்க்கமாய்க் கூடிச் சிங்கவாகு என்பவனைப் பெற்றாள். (Singhababu) சிங்கவாகு இவ் விஜயராஜனைப் பெற்றான். இவ்வுண்மையை அறியாதார் உள்ளபடியே சிங்கத்தையணைந்து பெற்றாள் என்பர்.

* சிங்கவாகு என்பவன், மகத தேயத்திலேயுள்ள லாலாநாட்டைக் கட்டிக்கொண்டு, அதற்கு அரசனாகிச் சிங்கபுரமென்னு நகரத்திலிருந் தரசுசெய்து வருகையில், அவனுடைய மூத்த குமாரனாகிய விஜயராஜன், துன்மார்க்கனும் தன்போலிய துஷ்டர் பலரைச் சேர்த்துக்கொண்டு சனங்களுக்குத் துன்பஞ்செய்பவனுமா யிருந்தான். அதனால் ஜனங்கள் சிங்கவாகுவினிடத்திலே போய் முறையிட, சிங்கவாகு உடனே விஜயராஜனை 700 மெய்காப்பாளருடன், கடல்தாண்டி யப்புறம்போய்ப் பிழைக்கும்படி அனுப்பிவிட்டான். விஜயராஜனும் அவ்வாறே புறப்பட்டு இந்தியாக்கரையிலேயே வேறோர் இடத்தையடைய முயன்றும், வாய்க்காமையால், ஈற்றில் இலங்கையை நாடிச்சென்று புத்தளத்துக்குச் சமீபத்தேயுள்ள தம்பபண்ணையென்னு மிடத்தை யடைந்தான்.

சிங்கள சரித்திரகாரர் தமது நாட்டுக்குப் பெரியதொரு விசேஷங்கற்பிக்கு நோக்கமாய், இச் சம்பவ நிகழ்ச்சிக்குக் காலவரையறை கூறவே

* சிங்கவாகு வமிசத்தாரால் ஆளப்பட்டமையின் இலங்கைக்குச் சிம்ஹளத்துவீபம் என்னும் பெயர் விலேத்ததென்பர் சிலர். அது பொருந்தாது. சமஸ்கிருதத்திலே சிம்ஹளம் என்பதன் பொருள் பட்டையாதலின் சிங்களத்தீவு என்பது பட்டைத்தீவு எனப் பொருள்படும். அந்நாட்டிற் கறுவாப்பட்டை விசேஷமாக உற்பத்தியாதலின் அப்பெயர் பெற்றதென்க.

ண்டு, கிறிஸ்து பிறக்க 543 வருஷங்களுக்கு முன், புத்தர் இறந்த அற்றை ஞான்றே விஜயன் இலங்கைசேர்ந்தான் என்பர். இதனை நம்புதற்குப் போந்த ஆதாரமில்லையென்பது பின்னால் உணர்த்தப்படும்.

இப்பால், விஜயராஜன், இலங்கையிலிருந்த பிரதானி ஒருவனுடைய புத்திரியாகிய குவேனி யென்பவளை விவாகம் பண்ணிக்கொண்ட பின்னர், முழுநாட்டையும் தனதாணைக்குளாக்க முயன்றான். அதற்கு அவன் பத்தினியு முடன்பட்டவளாகிச் சமயம்பார்த்திருக்கும்நாளில், அவளுடைய செல்வாக்குக் காரணமாக, ஒரு சிரேஷ்ட பிரதானி, தன் கல்யாணத்துக்கு இவர்களை யழைக்கவும் இவர்கள் விருந்தினராக அங்குபோகவும் நேர்ந்தது. அங்கே குவேனி தன் பரிவாரத்தாருக்கு ஒரு சமிக்ஞைகாட்ட, அவர்களு முடனே ஐயமற்றிருந்த சிரேஷ்ட பிரதானி முதலியோர் மேல்விழுந்து சர்வ சங்காரஞ்செய்தார்கள். இவ்வாற்றால் இலங்கைமுழுமையும் விஜயராஜனுடைய ஆணையின்கீழாயிற்று.

ஆயினும், என்னை! துரோகச்செயலுடைய குவேனி செய்த தீமை யெல்லா மீற்றில் அவள்தலைக்கே ஆயின. விஜயராஜன் தனது ராஜமகத்துவத்துக்கு விருப்பமுடையவனாகித் தனக் கிணையெனத்தகும் ஒருபாரியைத்தேட முயன்று, பாண்டியனிடத்துககு ஒரு தூதனை அனுப்பி, அவன் மகளைத் தனக்கு மணமுடித்துத தரும்படி கேட்பித்தான். அதற்கு அவனு மியைந்து தன் மகளை அநேக தோழியருடனும், பரிவாரங்களுடனும் அனுப்பினான். அவள் வந்து சேர்ந்தமாத்திரத்தில், குவேனியையும் அவள்வயிற்றில் தனக்குப்பிறந்த இருபிள்ளைகளையும் அப்புறப்படுத்தினான். அவ்வாறு தள்ளிவிடப்பட்ட குவேனி, தன் புத்திர புத்திரிகளோடு இயக்கருடைய இலங்காபுரியைநோக்கி அலைந்தலைந்து காடு மலைதாண்டிச் செல்லுகையில், அவளை அவள் தீச்செயலாலறிந்த ஒருகுடியானவனகண்டு கொலை செய்தான். மற்றப் பிள்ளைகளிருவரும், அகப்படாது காட்டுக் கோடினார்கள். அவர்களுடைய சந்ததியாரே தற்காலத்து இலங்கையிலுள்ள வேடர் எனக் கன்ன பரம்பரையாய்க் கூறுவர் சிலர்.

இஃதிங்ஙனமாக, அங்கே விஜயராஜன் தான் வந்திறங்கிய நாட்டிலேயே தனக்குப் பின்வரும் அரசருக்கும உபயோக மாகுமென்னு நோககத்தோடுபோலும், தமனுவென்னு மொரு பட்டணத்தையுண்டாக்கித தனககு இராஜதானியாக வைதத்துக்கொண்டான். ஆயினும் அவனுக்குப் பின் வந்த அரசர் பற்பல விடங்களிலும் வந்து குடிகொண்டமையால் அவன எண்ணம் பயன்படவில்லை.

விஜயராஜன், தானிறக்கச் சிறிதுகாலத்துக்குமுன்னே, தன் தம்பிக்கு ஓர் ஓலை அனுப்பி, அவனைவந்து அரசுரிமையைக் கையேற்கும்படி கேட்டான். அதற்கிடையில், சிங்கபாகு இறந்துபோக, அவ் வரசுரிமை அவன் இரண்டாங் குமாரனும் விஜயராஜனுக்குத் தம்பியுமாகிய சமித்துவுக்காயிற்று. சமித்துவும், இலங்கா அரசாட்சியைத் தன் குடும்பத்துக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமென்னு மாசையால் தன் கடைக் குமாரனாகிய பந்துவாசனை அனுப்பினான்.

(Panduwasa) பந்துவாசன் வராமுன்னே விஜயராஜன் இறக்க, சிரேஷ்ட மந்திரியாகிய (Upatissa) உபத்தீசன் இராஜாவாகித் தன்பெயரால் ஒரு நகரத்தை நவமாய்ச் சமைத்துத் தனக்கு இராஜதானியாக்கிக்கொண்டான். அப்படி அவன் செய்தபோதிலும், ஒருவருடங் கழித்துப் பந்துவாசன் வந்தவுடன் சிறிதும் முரணாது இராஜாதிகாரத்தை அவனுக்கே கொடுத்தான்.

பந்துவாசனும் விஜயராஜனைப்போல, இந்தியாவினின்றும் தனக்கொரு மனைவியைச் சம்பாதித்துக்கொள்ள வகைதேடினான். அவ்வாறே அவனுக்கு ஓர் பாரி கிடைத்தலும், அவன் அவளைத் தன்பட்டத்து மனைவியாக்கினான். அவளோடுவந்த அவள் சகோதரர் ஆறுபேரும் ஆறு குறுநில ராஜதானிகள் கட்டி. அவற்றுட் சிலவற்றைச் சுயாதிபத்திய மாக்கிக்கொள்ளப்பார்த்தார்கள். அந்நகரங்கள்—இராமன்கட்டிய "இராமகோணம்," ஊருகுணன்கட்டிய "ஊருகுணை," திக்காயனன்கட்டிய "திக்கமதுனை," உறுவல்விகட்டிய "மாவிலிகமம்," அநுரதன்கட்டிய "அநுரதபுரம்," உச்சிதன்கட்டிய "உச்சிதபுரம்" என்பனவாம்.

இப்பந்துவாசனாற்றான் அநுரதபுரத்துக்குச் சமீபமாயுள்ளதும், சிங்கள சரித்திரத்தில் முதன்மையாகக் கூறப்பட்டுள்ளதுமான "அபயவாவி" என்னுங் குளங் கட்டப்பட்டது. இவன் முப்பது வருஷகாலம் யாவருங் களிகூரச் செங்கோல் செலுத்தி, பத்துப் புத்திரரையும் ஒரு புத்திரியையும் பெற்று நற்கீர்த்தியோடிறக்க, அவன் மூத்த குமாரனாகிய (Abhayo), அபயன் சிம்மாசனமேறினான்.

இவன் அரசுபுரிந்துவருகையில், அவன் சகோதரிபுத்திரனாகிய (Pandukabhayo) பந்துகாபயன் என்பவன் ஒரு தனவந்தனாகிய பார்ப்பானுடைய பொருளுதவிகொண்டு கஜதுரகபதாதிகளடங்கிய ஒரு சேனையைச் சேர்த்து, மகாவலிகங்காதீரத்தில் ஒரு கோட்டையுங் கட்டிக்கொண்டு கலகஞ்செய்யத் தொடங்கினான். இதைக்கண்ட அபயராஜன் அச்சங்கொண்டு இரகசியமாய், அவனுக்கு ஒரு பாகங்கொடுக்க ஒருப்பட்டான்.

அதனை, அபயராஜன் சகோதரர் அறிந்து கோபாதிக்கராய் அவனை ராஜபதத்தினின்றும் நீக்கிவிட்டுத் தம்முளொருவனாகிய தீசனை அரசனாக்கினார். பின்னர், பந்துகாபயன் இயக்கரைத் துணைக்கொண்டு தன் மாதுலருடைய சேனைகளை முரிய அடித்து, மாதுலருள் எண்மரைக் கொலைசெய்து, உடனே தீசராஜனையும் துரத்தினான். அங்ஙனமும் அரசு ஒருவழிப்படாமல் பந்துகாபயனுடைய கலகத்தில் பதினேழுவருஷம் அலைவுகொண்டு நின்று ஈற்றில் அவன் கைப்பட்டது. உடனே பந்துகாபயன் உபத்தீசபுரியினின்றும் இராஜாசனத்தைப் பெயர்த்து, அநுரதபுரிக்குக் கொணர்ந்து அங்கே ஸ்தாபித்தான். நாளடைவிலே அநுரதபுரியைப் பொன்னகர் என அலங்காரஞ்செய்வித்து, அநேக குளங்களைக்கட்டி, சூழ்ந்தகாடுகளையும் சிறந்த நாடுகள், கிராமங்கள், வயல்கள், தோட்டங்களெனத் திருத்தினான்.

விஜயராஜன் இலங்கைக்கு வந்தகாலம், வழக்கமாய்ச் சொல்லப்படுங் காலத்துக்குப் பிந்திய காலமென நிதானிக்கப்படுகின்றது. பந்துகாபயன் 20-ம் வயசில் விவாகம்பண்ணி 37-ம் வயசில் தன் மாதுலனை வென்று 70 வருஷம் அரசுசெய்தானெனச் சொல்லப்பட்டிருத்தலின், அவனிறந்தது 107-ம் வயசில் என்பது சித்தம். பின்னரும், அவன் குமாரன் 60 வருஷம் ஆண்டானும். இது எவ்வாறுகூடும்? கூடாதாகலின் சிறுபிழையுறுமாதலால் பௌத்தமதம் இலங்கைக்குவந்ததற்கும், விஜயராஜன் குடிகொண்டதற்கும் இடைப்பட்டகாலத்தைச் சற்றே குறுக்கல் ஆவசியகமாகும். ஆகவே, விஜயராஜன் இலங்கைக்கு வந்தது, கி-மு 477 ம வருஷத்தில் என்பது நிச்சயமாகும். அதுநிற்க:

பந்துகாபயன் இறக்க, அவன் சேஷ்ட புத்திரன் (Ganatissa) கணைத்தீசன் இராஜாவாகி 13 வருடமாண்டான். அதன்பின்பு, அவன்தம்பி (Muttasiva) மூத்தசிவராஜன் அரசனாகி, பத்துப்புத்திரரையும் இரு புத்திரிகளையும் பெற்று, 47 வருடமாண்டான். இவனாற்றான் "மகாமேகம்" என்னும் அலங்காரத்தோட்டம் அமைக்கப்பட்டது. அத்தோட்டம் செப்பனிட்டு முடிந்தவுடன் அகாலமழை பிரவாகமாய்ப் பொழிந்ததுபற்றியே அதற்கு "மகாமேக"மென்னும் பெயர்கிடைத்தது.

| அரசர் பெயர். | அரசசெய்யத் தொடங்கிய காலம். * கிறிஸ்து பூர்வாப்தம். | ஆண்ட காலம். |
|---|---|---|
| விஜயன் ........................................ | 543-ம் ௵ | 38-௵ |
| உபத்திசன் ........................................ | 505 ,, | 1 ,, |
| பந்துவாசன் ........................................ | 504 ,, | 30 ,, |
| அபயன் ........................................ | 474 ,, | 20 ,, |
| அரசின்றியிருந்தகாலம் ........................ | ——— | 17 ,, |
| பந்துகாபயன் ........................................ | 437 ,, | 70 ,, |
| கணத்திசன் ........................................ | 367 ,, | 13 ,, |
| முத்தசிவராஜன் ........................................ | 354 ,, | 47 ,, |

## உ. அதிகாரம்.

[தேவப்பிரியதீசன் அரசனானதுமுதல்;
எல்லாளன் வெற்றிபரியந்தம்.]

முத்தசிவராஜனுக்குப்பின், அஃதாவது கி-பூ- 307-ம் வருஷத்தில் அவன் மகன் (Devananpiatissa) தேவப்பிரியன் என்னும் பட்டப்பெயரையுடைய தீசன் அரசனானான். இவன் சிம்மாசன மேறியவுடன், பூமியில் புதைந்துகிடந்த பொன் வெள்ளி இரத்தினாதிகள் வெளியெழும்பினவென்றும், மூங்கில்கள் தாமே வளர்ந்து புஷ்பங்கள், மிருகங்கள், பலவர்ணப் பக்ஷிகள் முதலியவற்றையீன்றன வென்றும், இன்னும் இன்னோரன்ன பல அற்புத சம்பவங்கள் நிகழ்ந்தன வென்றும் சிங்கள புராணம் கூறும். இது மங்கலவருணனையன்றி உண்மையாய் நடந்ததன்று.

தேவப்பிரியன் தன் சிநேகனாகிய மகத தேயத்தரசன் தருமாசோகனுக்கு, ஒருமுறை, விலையுயர்ந்த ரத்தினங்களையும், திவ்விய மதுரமான சில கனிகளையும் உபகாரமாக நான்கு சிங்களப் பிரபுக்கள்வசத்தில் கொடுத்தனுப்பினான். அவர்கள் அவ்வுபகாரப் பொருள்களைக்கொண்டு, யாழ்ப்பாணத்துக்குச் சமீபமான வொருதுறையிலே தோணியேறி, அக்காலத்தில் $ "சம்புத்தீவு" எனப்பெயரிய இந்தியாக்கரையை 7-ம் நாளில் அடைந்து,

* கிறிஸ்த பூர்வாப்தம் - கிறிஸ்துபிறக்க முன்னுள்ளகாலம். கி. பூ. (B. C.) கிறிஸ்த அபராப்தம் - கிறிஸ்துபிறந்த பின்னுள்ளகாலம். கி. அ. (A. D.)

$ புராணாதிகளிலுள்ளபடி, சம்புத்தீவு சத்ததீவுகளில் ஒன்று. அது நவகண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றாகிய பரதகண்டமே இந்தியா.

அங்குநின்றும் புறப்பட்டு நேரே இராஜதானியாகிய பாடலிபுரத்துக்குப் போய், அரசன்முன் அப்பொருள்களைவைத்து வணங்கினின்றார்கள். அரசனும் அவர்களை மரியாதையோடுபசரித்து, பின், தான்பெற்ற பொருள்களுக்குப் பிரதியாக, ஒரு கிரீடம், ஒரு வாள், கங்கையின் தீர்த்தம் ஆகிய இவற்றோடு வேறு பலபொருள்களையும் தன்தூதர் சிலரிடத்துக்கொடுத்து, தன்னைப்போல் தீசராஜனும் புத்தகடவுளுக் கடிமையாக வேண்டும் என்னும் தனது கோரிக்கையையும் அரசனுக் குணர்த்துமாறு அவர்க்குக் கட்டளையிட்டு, அப்பிரபுக்களையு முடனனுப்பினான். அன்றியும், தருமாசோகன் பௌத்தமதத்திற் பெரும் பிரமையுடையனாயிருந்தமையால், அம்மதத்தை இலங்கையிலும் பரவச்செய்தல் வேண்டுமென்னு மாசைகொண்டு, பௌத்த குருமாருள் ஒருவனாயிருந்த தன்மகன் மகிந்தனையும் அவ்விடத்திற் கனுப்பினான். இது நிகழ்ந்தது கி-மு-306 ல்.

இவ்வாறுவந்த மகிந்தன், தேவப்பிரியனால் மரியாதையோடுபசரிக்கப்பெற்று, ஊர்கள்தோறும் சென்று பிரசங்கஞ் செய்யத் தொடங்கினான். அவன் பிரசங்கங்களைக் கேட்ட பலர், தம் சுயமதத்தைவிட்டுப் பௌத்தராயினார். பெண்கள் கூட்டங்கூட்டமாய்வந்து பிரசங்கங்களைக்கேட்டு அவற்றில் மயங்கினவராய்த் சமகாரசபததினியாகிய அனுலையென்பவளைத் தலைமையாகக்கொண்டு மகிந்தனை யணுகித் தங்களுக்குக் குருத்துவம் தரும்படி வேண்டினார்கள். மகிந்தன் அக்கேள்விக்கிசையாது, தன் சகோதரியாகிய "சங்கமித்தையைக்கேட்க" வென்று அவர்களுக்குரைத்தான். உடனே, அனுலை, பாடலிபுரத்துக் கொருதூதனை யனுப்பிச் சங்கமித்தைக்குத தனது கருத்தைத் தெரிவித்தாள். அதைக்கேட்ட சங்கமித்தை, தான் இலங்கைக்குப்போக விடைதரல்வேண்டுமென்று தந்தையைக் கேட்க, தந்தை "உன்னைப்பிரிந்து நான் உய்வதெப்படி" என்று தடுக்க, அவள் அதனைக் கேளாது தந்தையை யொருவாறு சம்மதிக்கச்செய்து, அவனிடத்தில் விடைபெற்று, ஒரு வெள்ளரசமரத்துக் கிளையையுங் கையிற்கொண்டு புறப்பட்டு இலங்கைவந்து சேர்ந்தாள்.

இவள் இவ்வாறு வந்து சேர்ந்தவுடன் தன்வேலையிற் கையிடத்தொடங்கி, முதலில் தான்கொணர்ந்த *வெள்ளரசங்கொம்பை மகாமேகத் தோட்டத்தில் நாட்டிப் பின் பற்பலவிடங்களுக்குஞ் சென்று பெண்களுக்குபதேசம்பண்ணிவருவாளாயினள். அக்காலையில் அரசன் அம்மகாமேகத் தோட்டத்தை மகிந்தனுக் குபகரிக்க, அவனு மதையேற்றுத் தனக்கு ஆசிரமமாக்கிக்கொண் டிருந்தான். இன்னும், சங்கமித்தை தனது சகோ

* வெள்ளரசு - போதி விருக்ஷம்.

தரனுடைய துணையால், சமாதிகளையும் பள்ளிகளையும் பலவாகக் கட்டுவித்ததுமன்றி, ஆங்காங்கும் மலைகளைக் குடைந்து செபிக்கோயில்களையும் முனிவர் வாசங்களையும் இயற்றுவித்தான். அப்போது தருமாசோகனும் ஒரு சிறியபாத்திரத்தில் புத்தருடைய அஸ்தியிற் சிறிதைவைத்து இலங்கைக்கு அனுப்பினான். அதனைச் சங்கமித்தைபெற்று ஆங்காங்கும் கோயில்களில் சிறிது சிறிதாய் அடக்கஞ்செய்து பிரதிஷ்டை செய்தாள். இப்படியே சங்கமித்தை தான் எடுத்துக்கொண்ட பிரயாசைகளால் திருப்தியடைந்தவளாய்த் தன்வாணாளின் கடைநாட்களை ஏகாந்தவாழ்விற் கழித்தாள்.

சமயாபிமானமென்னும் வீராவேசத்தால் தூண்டப்பட்டவர்களாய், மகிந்தனும் சகோதரியும், தங்கள் அரசயோக்கியத்தையும், போகபோக்கியத்தையும், தாய் தந்தையரோ டின்புற்றிருக்கும் சலாக்கியத்தையும் ஒரு சிறிதும் லட்சியம் செய்யாது, தம் பௌத்தமத விருத்தியின் பொருட்டு இலங்கைக்குவந்து தம் வாணாளைக் கழித்தது, எச்சமயத்தோராலும் புகழப்படத் தருவதொருசெயலேயாக, உலகத்தில் மெய்ச்சமயம் எதுவோ அச்சமயத்தி லபிமானமுடையோ மென்றிருப்போர், அச்சமய விருத்தியின் பொருட்டுத் தமதுயிரிழக்க வரினும் இழந்துவிடலன்றோ சிறப்பும் ஆண்டகைமையு மாகும். அதுநிற்க:

தேவப்பிரியன், அநுராதபுரத்திலே தூபாராமயமெனப் பெயரியதும், புத்தருடைய கழுத்தின் வலப்புறத் தெலும்பு அடங்கி யிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளதும், இலங்கையிலுள்ள கோயில்களுள் விசேட அலங்காரமுள்ளதுமான வோர் ஆலயத்தைக் கட்டுவித்ததுமன்றி, மிகிந்தலைமலையிலும் பௌத்த குருமாருக்காக முப்பத்திரண்டு கூடங்களையு மியற்றுவித்தான். இவையன்றி, திசவாவி எனப்பெரிய தடாகத்தையும் இவனே கட்டுவித்தான்.

இவ்வண்ணம் தேவப்பிரியன் அரசபுரிந்துவருநாளில், அவன்பத்தினியாகிய அனுலை, தனது நாயகன் இறக்கவருங்காலத்தில், தன் புத்திரனுக்குப் பட்டங் கிடைக்கவொட்டாமல், தன் கொழுந்தனாகிய மகாநாகன் கலகஞ்செய்வான் என்னும் அச்சத்தால், அவனைக் கொல்லவெண்ணி, நஞ்சூட்டியவொரு கனியை உபகாரப்பொருள்போல் அவனுக்கனுப்பினாள். "ஒன்றுனினைக்க வதுவொழிந்திட் டொன்றாகும்" என்றபடி அவனும் அதை வாங்கி அக்காலையில் தன்னுடனிருந்த அனுலை புத்திரனுக்கு ஐயமொன்றுமின்றி யுண்ணக்கொடுத்தான். அக்குழந்தையும் விதிவழியே அதனைத் துற்றுண்டு உடனே உயிர்துறந்தது. இதனைக்கண்ட மகாநாகன் நிலை

டைந்து, "இதுவோ நக்குபெப்பத்துச்சீ!" என்று, துயரத்தோடும் அவ்வி டத்தைவிட்டோடித் தெற்கின்கண் உள்ள ஊருகுணையையடைந்து, அங் கே மாகமம் என்னுமொரு பட்டணத்தை அமைத்து அதைத் தனக்கு ராஜதானியாக்கிக்கொண்டிருந்தான். அவ்விடத்திலே அநேக * விகாரை களும், மகியங்கனவிலே ஒருகோயிலும் இவனாற் கட்டப்பட்டன.

இவன் இப்படியிருக்க, இவன் குமாரன் (Yatalatissa) யதாலந்தீ சன் களனியாவென்று இக்காலத்திலழைக்கப்படும் இடத்துக்குச்சென்று அப்பெயரால் ஒரு நகரைக்கட்டி அங்கிருந்தாண்டான். அவனுக்குப்பின், களனித்தீசன் அந்நகர்க்கு அரசனாயினான். அவன்காலத்தில், நுளையர் வாசஞ்செய்த 979 சேரிகளையும் வேறு அநேக கிராமங்களையும் கடல் கொண்டது. அதுபற்றியே, முன் களனியாவிலிருந்து 16 மைல் தூரத திற்கிடந்த கடல், பிற்காலத்தில் 4 மைலாக நெருங்கிற்று. அதுநிற்க:

இவர்கள் சீரிப்படியாக, அங்கே தேவப்பிரியன் நாற்பது வருடம் நல்லரசு புரிந்து, கி. மு. 266-ம் வருடத்தில் இறக்க, அவன் தம்பி (Yttiya) உத்தியன் அரசனானான். இவன் அரசனாகி எட்டாம்வருடத்தில் மகிந்தன் இறந்துபோக, அவனுக்குத் தீக்கடன் முதலியசெய்து அவனை அதி சம்பி ரமத்துடன் தகனஞ்செய்வித்தான். அடுத்த வருஷத்தில் சங்கமித்தையு மிறந்தாள். மகிந்தனிறந்த இடம் இப்போது மகிந்தலமலை எனப்படும்.

இவ்வுத்தியராஜன் 10 வருடமரசுசெய்து, கி. மு. 56-ம் வருடத்தில் இறக்க, அவன் தம்பி (Mahasiva) மகாசிவன் அரசனாகினான். அவனும 10 வருடமாண்டு அப்பால் கி. மு. 246-ம் வருடத்தில் மடிந்துபோக, (Sura-tissa) சூரதீசன் அரசனானான். அவன் தன் அவிவேகத்தால், குதிரை சேனா பதிகளாக, (Sena) சேனன் (Guttika) கூத்திகன் என்னுமிரு தமிழரை நியோகிக்க, அவர்களும் சமயம்வாய்த்தது என்று அரசனுக்குமாறுசெய்து நம்பி அவனைக்கொன்று தாமே அரசராயினார். இவ்வாறிவர்கள் அரச ராகி 22 வருடமாண்டு வருமளவில், மேற்கூறிய மகா சிவராஜனது ஒன் பதாம் புத்திரனாகிய (Asela) அசேலன் என்பவனாற் கொலையுண்டிறந்தார்.

அப்பால் அசேலன் தானே அரசனாகி 10 வருஷம் செங்கோலோச்சி வருமளவில், சோழநாட்டிலிருந்தபடி இதனைக் கேள்வியுற்ற (Elala) எல் லாளன் என்னுமோர் தமிழ்ச் சிற்றரசன், மேற்கூறிய "இருதமிழரையும் வென்ற அசேலனோடு போர்செய்வேன்" எனத் தீர்மானித்து அங்குநின்

* விகாரை – பள்ளி.

றும் புறப்பட்டு, மகாவலிகங்காசங்கமத்திற்குச் சமீபமாகத் தனது சேனை
களோடு வந்திறங்கிச் சேனைகளை அணிவகுத் தழைத்துக்கொண்டு நேரே
அநுராதபுரத்திற்குச் சென்று, அங்கேஎதிர்த்த அசேலனைப் புறங்கொடுக்
கச் செய்து ஊருகுணை ஒழிந்த மற்றையநாடெல்லாம் ஒருங்கே கைப்பற்றி,
ஆங்காங்கும் ஓரோர் கோட்டையாக 32 கோட்டைகளைக்கட்டிக் காவல்
செய்தான். அன்றியும் மன்னாருக்குச் சமீபத்தேயுள்ள மாதோட்டமெ
ன்னும் நகரமு மிவனாற் கட்டப்பட்டதென்பது சிலர் துணிபு. தமிழர்
இலங்கையின்மேற் பெரும்படைகொண்டு நடந்தது இம்முறைதான். எல்
லாளராஜன் தான் வைதிக சமயத்தவனாயிருந்ததுபற்றி, பௌத்தமதத்தை
யடியோடுகளைய நோக்கத்தோடு, அப்பௌத்தாலயங்களையெல்லாம் தக
ர்ப்பித்து நாசஞ்செய்தானாயினும், தமர் என்றும் பிறர் என்றும் வேற்றுமை
செய்யாது சமநிலையுடையுளத்தினனாய் யாவரையும் நீதிவழிநின்று காத்
தானெனச் சிங்கள சரித்திரங்களே கூறும். இன்னும், சயனகாலங்களில்
முறையீட்டுக்காக வருவோர், சபாமண்டபத்தில் நின்றபடியே அசைத்தொ
லித்துத் தன் வரவை யரசனுக் குணர்த்துதற்கு உபகரணமாக, அச்சபா
மண்டபமுதல் சுவர்களை ஊடறுத்துச் சயனமண்டபம்வரையில் நீண்ட
ஓர்கயிற்றுடன் ஒரோசைமணி அச்சயன மண்டபத்திலே மஞ்சத்தின்மீது
கட்டித் தூக்கப்பட் டிருந்ததென்றால், அவனிடத்தில் அரசலக்ஷணம் நன்
றுயமைந்து கிடந்ததென்பதைச் சொல்லவும்வேணுமோ!

"காட்சிக்கெளியன கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்."

---

## ரு. அதிகாரம்.

[துஷ்டகைமுனு அரசனுபதுமுதல்;
ஸ்ரீசங்காபன் மரணபரியந்தம்.]

கி. பூ. 161.—கி. அ. 218.

இப்படி எல்லாளன், இங்கிருந்தரசியற்ற, அங்கே ஊருகுணையில்
மகாநாகனுக்குப்பின் அவன் வமிசத்தவனாகிய கவந்தீசன் அரசனாகி அரசு
செய்து வருகையில், அவன் புத்திரருள் மூத்தவனாகிய (Gemmunu)
கைமுனு என்பவன் பாலப்பிராயந் தொட்டுத் தமிழர் கையினின்றும் இல
ங்கையை யபகரித்துக்கொள்ள வேண்டுமென்ற பேராவலும் உள்ளக்கடு
ப்புமுடையனாயிருந்தான். ஓர்நாள், அவன் தன் கால்கைகளை மடித்துக்
கொண்டு படுத்திருக்கக்கண்ட கவந்தீசன் அவனை நோக்கி, "அப்பா, என்
பாலா, நீ நீட்டி நிமிர்ந்து படுத்தாலாகாதோ" வென்றுகேட்க, அதற்குக்
கைமுனு, "தந்தாய், நான் நீட்டி நிமிர்ந்துபடுக்கப் போதுமோ? இடந்தேடிவை
த்தீரோ? ஒருபக்கத்தை ஆற்றுக்கப்பால் தமிழர் கட்டிக்கொண்டார்; மற்

ளொரு பக்கத்தையோ சிறிதும் பின்வாங்காத சமுத்திரங்கொண்டது. பின்னையெனக்கிடமெங்கேயோ" வென் றுத்தரமாய்க் கூறினான். அதைக்கேட்டுத் தந்தை வெகுண்டு அப்புறம்போயினான். சிலநாட்சென்றபின், கைமுனு, யுத்தவீரர் சிலரைச் சேர்த்துக்கொண்டு தந்தையிடஞ் சென்று எல்லாளனோடு போர் செய்யப்போகத் தனக்கு விடைதரும்படி கேட்க, அவன் அதற் குடன்படாது மறுத்தான். இப்படிச் சின்னாள் இடை இடையே விட்டு, கைமுனு மும்முறைபோ யிரந்துகேட்க, அம் மும்முறையும் அவன் றந்தை யுடன்பட்டானில்லை. அதனால் கைமுனு மிகுந்த கோபாவேசனாய் உடனே அந்தப்புரஞ்சென்று பெண்களணியுமோ ராபரணத்தை வாங்கி அதையோர் தூதனிடங் கொடுத்து, "என்தந்தை ஆண்பிள்ளையல்லனாக இதையவன் அணியத்தகும்" என யான் சொன்னதாகச் சொல்லித் தந்தையிடம் கொடுத்து வாவென் றனுப்பினான். அம் மரியாதைக்குறைவான செயலுக்காகக் கவந்தீசன் தன்மகனைத் தண்டித்தல் வேண்டுமென்றுமுயல, கைமுனு, அதற்கஞ்சி அவ்விடம்விட்டு மலைநாடு தேடி யோடித் தந்தையிறக்கும்வரையில் ஊருக்கு மீளவில்லையென்னும் விரதத்தோடிருந்தான். இவ்வகைப் படிவின்மைகாரணமாக அவனுக்கு அவன் தந்தையே "துஷ்டன்" என்னும் பட்டப்பெயரைக்கொடுத்தான். இது நிகழ்ந்து சின்னாளில், கவந்தீசன் இறந்துபோக, "நெய்க்குடமுடைந்தது நாய்க்குவாய்ப்பான" பான்மைபோல் கைமுனு தன் எண்ணங்களை முடித்தற்கு நல்ல சமயமாயிற்று. உடனே அவன், போரில்வல்ல கஜதுரகபதாதிகளுடன் ஓர் சேனையைச் சேர்த்துக்கொண்டு மகாவலி கங்கையைத் தாண்டி *உச்சிதபுரத்தையடைந்து அதனைவளைந்தான். அப்படிவளைந்தும், அவ்வரண் அதிதீரரால் காக்கப்பட்டிருந்தமையால், அநேக மாசங்கள் வரையில் அவன் அப்பட்டணத்தைக் கைப்பற்றக் கூடாதவனாயிருக்குங்காலை ஓர்நாள், அவன் யானைகளிலொன்று அந்நகரத்து இருப்புக் கபாடங்களுளொன்றைத் தகர்த்து உள்ளேநுழைய, அவ்வழியாய் மற்றைய சேனாவீரரும் பிரவேசித்து உள்ளிருந்த காவல் வீரரை வாளுக் கிரையாக்கித் தம கொடியையுயர்த்தினர். இவ்வாறு துஷ்டகைமுனு க்ஷேத்திரமான பல இடங்களைக் கவர்ந்துகொண்டு அநுராதபுரத்தை நோக்கிச் சென்று, அதற் கயலிலுள்ள ஓரிடத்தைப் பிடித்து அதைத் தனக்குப் பாசறையாக்கி, அதை மேலும் பலப்பித்தற்பொருட்டு அங்கு 32 உப ஆவரணங்களையு மமைப்பித்தான்.

இதனை ஒற்றாலறிந்த எல்லாளன், தன் சேனைகளை அதிதீர சேனாபதியாகிய தீக்ககயத்தனால் நடத்திக்கொண்டு தானுங் கஜாரூடியாயம் புற

---

*உச்சிதபுரம் - துவரகாளவி நாட்டிலிருந்த ஓர் நகரம்.

ப்பட்டு, எதிர்த்துவந்த கைமுனு சேனையோடு முட்டினான். இப்படி முட்டிய இருதிறச் சேனைகளில் தமிழ்ச்சேனை தீரவீரத்தோடாரவாரித்து யுத்தஞ்செய்ய, சிங்களர்சேனை புறங்கொடுத்துத் தம்அரண்தேடி ஓட, அங்கும் ஒன்றன்பின் ஒன்றாய் ஆவரணங்களைத் தீர்க்கசயந்தன் போய் அழித்தழித்துச் சிங்களரைக் காற்றின் முன் பஞ்சுபோல் ஊதிவருஞ்சமயத்தில், கைமுனுவுடைய சேனாவீரனொருவன் தீர்க்கசயந்தனைச் சாடி அவன் வலிமையொழித்தான். இதனால் தமிழ்ப்படை கலங்கிப் புறங்காட்டவும், சிங்களர் படை முழங்கித் திறங்காட்டவுந் தொடங்கியதை எல்லாளன்கண்டு, புறங்கொடுத்தோடும் தன் சேனைகளைத் திரட்டும்படி தனக்குகந்த வீரர்சிலரோடு செல்லுகையில், கைமுனுவும் போரில்வல்ல வோர் யானைமேலேறி எதிர்த்துவந்து தனிப்போர்செய்யத் தலைப்பட்டான். அப்போது எல்லாளனும் யானைமேல் தவிசினிலிருந்தபடி தன் ஈட்டியை யெடுத்துக் கைமுனு பேரில் விட்டெறிந்தான். அவ்வல்லயத்திற்குக் கைமுனு உபாயமாய் நகர்ந்து தப்பிக்கொண்டு, தன் யானையை அவன்யானைமேல் தூண்டிவிட, அவ்யானையானது மற்றயானையைத் தாக்கிக் கீழே தள்ளவும், எல்லாளன்விழுந்து அதன்காலாலரைபட்டிறந்தான். அப்பால் கைமுனு வெற்றிசிறந்தவனாய்ச் சயபேரி முழங்க நகரத்துள் பிரவேசித்துச் சிங்காசனாதிபதியாகியவழி, மீண்டும் சிங்கவமிசத்தை நிலைநிறுத்தினாயினான்.

[இது நிகழ்ந்தது கிறிஸ்தபூர்வாப்தம், 161-ல். எல்லாளன் அரசு செய்த காலம், 44 வருஷம்.]

அதுநிற்க; துஷ்டகைமுனு அரசர் இயல்புக்கேற்பப் போர்முகத்தில் எல்லாளன்மேல் வன்கண்மை கொண்டுநின்றானாயினும், அவன்விழுந்து மடிந்தவுடன் பெருந்தண்ணளிகொண்டு, அவன் தைரியத்துக்கு வியந்து, அவன் விழுந்தவிடத்திற்றானே பேராடம்பரத்துடன் அவனைத் தகனஞ் செய்வித்து, அன்றுமுதல், அவ்வழியாய்ச் செல்வோர் பிரசைகளேயாயின் அவ்விடத்தில் தக்க வணக்கத்தோடும், அரசாங்கத்தவரேயாயின் வாத்தியங்களை நிறுத்திக் கால்நடையாயும் செல்லுதல் வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான்.

இதுநிகழ்ந்து சிலகாலம் கழிந்தபின், துஷ்டகைமுனு, தன்மனத்தில், தான் போர்முகத்தில் எண்ணிறந்த சீவராசிகளைக் கொன்றது பாவமெனவும், அப்பாபத்தின் பயனாகப் பரலோகத்தில் தனக்குக் கிடைக்கும் கதி இதுவெனவும் உணர்வுதோன்ற, அப்பாவ நிவிர்த்தியின்பொருட்டு, பள்ளிகளும் ஆலயங்களும் கட்டுவதிலேயே தன் சம்பத்துமுழுவதையும் போக்குவானாயினான்,

அப்படி அவனு லியற்றுவிக்கப்பட்ட பணிகளுள் மிகப்பெரியது அநந்தபுரத்திலுள்ள மகாலோக பவனம் என்னும் அரமனை. மகாலோகபவனம் என்பதன்பொருள் பெரிய செப்புமாளிகை என்பது. அது, நிரையொன்றுக்கு நாற்பதாளுகச் சதுரரகாரமாய் நாட்டப்பட்ட 1600 கற்றூண்களின்மேல், தொளாயிரமறைகளுள்ள ஒன்பது நிலமாடமாய், அந்நிலைகளா உயரங்களால் தனித்தனி 270 அடி யுள்ளதாய் அமைக்கப்பட்டுச் செப்புத்தகட்டால் வேயப்பட்டு மிருந்ததெனச் சொல்லுவர். இவ்வரமனையின் மத்தியில் ஓர் பெரிய சபாமண்டபமும், அதிலே தங்கவர்ணமிட்ட சிங்கப்பிரதிமைகள் யானைப்பிரதிமைகள்முதலிய அலங்கார வஸ்துக்களும் தந்தத்தாலாய வோர் அழகிய சிம்மாசனமு மிருந்தனவாம். இப்போது அவ்வரமனை, "எழுநிலமாடங் கால்சாய்ந்துக்குக் கழுதைமேய் பாழாகினுமாகும்" என்றபடி அழிந்துபோகத் தூண்கள்மாத்திரஞ் சில 12 அடி யுயரமுள்ளனவாய் நிறுவியபடி நிற்கின்றன.

மற்றொன்று, உறுவனவல்லிசமாதி. அதுவும் ஏறக்குறைய 270 அடியுயரமும், 2000 அடிச்சுற்றளவும் உடையவோர் கருங்கற்கட்டடம். அதனைச்சூழ்ந்து 70 அடியகலமுள்ள அகழியொன்று கிடந்தது. இச்சமாதியைக் கைமுனு கட்டத்தொடங்குகையில், திருப்பணிவேலைகளைக் கூலியாட்களாற் கட்டுவித்தலே புண்ணியமெனவெண்ணி, அவ்வாறே அநேக கூலியாட்களை யேற்படுத்தி அவ்வேலையை நடத்திவந்தான். அப்படி நடத்தியும், "தடியடிமிண்டனுக்குத் தயிருஞ்சோறும் தண்ணளியுடையானுக்குக் கூழுந் தண்ணீரும்" என்றபடி, அவனுடைய இளக்கங்கண்ட கூலியாட்களுடைய அசட்டையால் திருப்பணிவேலை சீக்கிரத்தில் முடியாதுநோக, கைமுனுவுக்கும் யமதூதர் ஓலைகொண்டு கடுகினர். அதுகண்டு அவன் சகோதரன், அக்கோயிலின் மேல்வேலையைப் போலிவேலையாய மரத்தினூற் கட்டி வஸ்திரங்களால் வேய்ந்து ஒருவாறு முடித்துவிட்டுத் தமையனாகிய கைமுனுவை ஓர்சிவிகையில் ஏற்றி வீதிவலங்கொணர்ந்து ஓரிடத்தில் நிறுத்தி, "அதோபாரும் உம் எண்ணப்படி சமாதிவேலை சமாப்தியாயிற்று" என்று அவனுக்குரைத்தான். அப்போது கைமுனு, தன்னிடத்தில் முன்னே சேனாபதியாயிருந்து பின்னர்க் குருத்துவம்பெற்ற ஒருவனைக் கூவியழைத்து, அவனை விளித்து, "என்கௌமாரபருவத்தில் பத்த வீரரைத் துணைக்கொண்டு யுத்தங்கள்செய்தேன்; இப்போதோ, ஒன்றியாய் யார்துணையுமின்றி, வெல்லுதற்கரிய கொடுங்கூற்றுவனோடு அமர் தொடங்குகின்றேன். அந்தோ!" என் றிரங்குகையில், அவனாலியற்றப்பட்ட தருமங்களின் நாமாவலி வாசிக்கப்பட்டது. அதனைக் கைமுனுகேட்டு

மீண்டும் சொல்லுவான்:—"உலகத்தில், நான் பலத்திலும் செல்வத்திலும் ஓங்கியிருந்தபோது இவற்றையெல்லாஞ் செய்துமுடித்தேன். செய்தும் அவை எனக்கிந்தருணத்தில் எந்த சகாயமொன்றுமில்லை; ஆயினும் என் மரணவஸ்தையின் ஆரம்பகாலத்தில் யான் செய்த பூசாபலிகளே எனக்கித்துன்பத் தீர்த்து வைத்தன" என்று இவ்வாறுசொல்லி அச் சமாதி மேல்வைத்த கண் இமைக்காதவனாய்த் தைகமுனு உயிர் துறந்தான்.

[இது கிறிஸ்துக்கு மு. பூ. 137-ல்.]

இப்படித் துஷ்டகைமுனு 24 வருடம் மரசியற்றி இறக்க, அவன்தம்பி (Saidaitissa) சயததிஸ்ஸன் அரசனானான். இவன் கைமுனு காலத்திலே உறுகுணையிலே உப அரசனாயிருந் தரசாளுகையில் மூலகிரிக்கலா பள்ளியைக் கட்டிமுடித்தான். இப்பட்டத்துக்கு வந்த பின்னர், அவன், உறுவேலி சமாதியையுஞ் சம்பூரணமாக்கி, 12 குளங்களையுங் கட்டி, 18 வருடம் அரசுசெய்தான்.

இவனுக்குப்பின் இவன்குமாரன் (Thullathanaka) துல்லதானகன் அரசனாகி ஒன்றரைமாச மரசியற்றி வருகையில், அவனை அவன் தமையனாகிய (Laiminitissa-I) இலயமினிதிஸ்ஸன் கொன்று அரசனாகி 9½ வருஷமாண்டான். அவனுக்குப்பின் துல்லதானகன் மகன் (Kalauna) கலுனன் என்பவன் 6 நாள் மரசியற்றித் தன் மந்திரியால் மாண்டான். இவனைப்பற்றி இங்கு சொல்லுக்கிடந்த தொன்றுமில்லை.

இதன்மேல்,(கி. மு. 104) கலுனனுடைய சகோதரனாகிய (Walagambahu) வாலகம்பாகு அரசனாகி 5 மாச மரசாண்டபின், இரண்டாம்முறை தமிழர் படையெடுத்து வருவாராயினர். இப்படிவந்த தமிழ்ப் பிரதானிகள் எழுவரும், தத்தம்படையுடன் இலங்கையில் வேறு வேறிடங்களில் இறங்கி ஒத்த நெறியினராய் அநுராதபுரத்தை நோக்கிச் சென்றார். அங்கே இரு திறத்தினரும் போர் மூண்டபோது, வாலகம்பாகு புறங்கொடுத்தது மன்றித் தன்பத்தினியையும் பறிகொடுத்துக் காடுதேடியோடினன். அப்பால் தமிழ்ப்பிரதானிகள் தாமே அரசராகிப் பதினான்குவருஷம் அரசு செய்து வருகையில், அவர்கள், தம்முள்ளே ஒருவர்மேல் ஒருவர் பகை ஈண்டி ஒவ்வொருவராய்க் கொலையுண்டிறக்க, ஈற்றில் ஒருவனேயிருந் தரசு செய்வானாயினன். அப்போது, "அடம்பங்கொடியும் திரண்டால் மிடுக்கு, பிரிந்தாற் போச்சு," என்றபடி அவன் வலிமைபுணர்ந்த வாலகம்பாகு காட்டினின்றும் மீண்டுவந்து அவனைத் துரத்தி அரசனானான்.

இவன், முன் தமிழர்க்கஞ்சி மறைந்துறைந்த நாளில், மாத்தளைக்குச் சமீபத்தேயுள்ள அலுவிகாரையிலிருந்து அநேக பௌத்தகுருமாரைச்

சொத்து, கன்ன பரம்பரையாய் வழங்கிவந்த * திரிபிடகம் என்னும் பௌத்தநூலை முதன் முதல் எழுதுவித்துப் புத்தகங்களாக்கியவழி, இன்றைக்கு மழியாததோர் கீர்த்தியைப் படைத்தான். தம்பிளை விகாரரையும், அநேக கெபிக்கோயில்களையும், அநுராதபுரத்திலுள்ள 400 அடியுயரமும், இந்நாள் அளவைப்படி ஒன்றே முக்கால் மைல் சுற்றளவாக விசாலித்த புறச் சுவரையுமுடைய அபயகிரிச் சமாதியையும் இவனே கட்டுவித்தான். இவையன்றியும், அவன், தான் தன்பத்தினியைச் சிறைமீட்டதற்கோர் அறிகுறியாக, 313 அடி யுயரமுடைய சுவர்ணராம சமாதியையும் பின்னர்க் கட்டுவித்தான். இவன்காலத்தில்தான் யாழ்ப்பாணம் குடியேற்றப்பட்டது.

இப்படி வாலகம்பாகு சர்வஜனோபகாரியாய் 13 வருஷ மரசுசெய்து கி. மு. 77-ல் இறக்க, அவன் மகன (Mahachula) மகாசூலன் அரசனுகிப் பதினுன்குவருஷமாண்டான். அவனுக்குப்பின் அவன்தம்பி (Chora-naga) சோரநாகன் அரசனுகித் தனபெயருக்கிசையக் களவனும துஷ்டனுமாயிருந்து 10 வருட மரசியற்றியிறக்க, அப்பால் அவன் தமையன் மகன் (Kudatissa) குடதீசன் இராசவானுன்.

அவன் ஆளத்தொடங்கி 3-ம் வருடத்தில், (கி. மு. 47) அவனை அவன் மனைவி அனுலையென்பவள், தன் சோரநாயகனுகிய பண்டியசெயன்றமன் என்னுமோர் சிரேஷ்டன் சம்மதமாக, நஞ்சூட்டிக்கொன்றுவிட்டுத் தானே அரசியானுள். இவள்தான் இலங்கையில் அரசபுரிந்த அரசிகளில் முதல் அரசி. அதுவன்றி; அவள் அரசியாகிச் சிலநாளில், ஓர் தமிழன் அவள் கண்களிற் குடிகொள்ள, அவள் பண்டியசெயன்றமன்மேல் வெறுப்புற்று அவனையும் நஞ்சினுலெமபுரமனுப்பிவிட்டு, அத்தமிழனைச் சேர்த்துக்கொண்டாள். அத்தமிழனும் சிலநாளில் தெவிட்டிப்போகவே அவனையும் முன்போல் நஞ்சினுற் றொலைத்தாள். இப்படியே அத்துஷ்டை, தான் ஆண்ட 5 வருடத்துக்குள் ஒரு பிராமணனுட்பட ஐவரியரை எமபுரஞ் சேர்த்தாள். ஈற்றில் தனித்திருந் தரசுசெய்கையில் முன் அவளுக்கஞ்சி யோடிய அவள் புத்திரன் மகாலந்திசன், ஓர் பெருஞ் சேனையோடு திரும்பிவந்து, அவளோடு போர்செய்து அவளைத் தோற்கடித்து, அநுராதபுரத்தைக் கவர்ந்தான். அவ்வனுலை அடங்காது தன் அரமனையிலிருந்தபடி மீண்டும் முரண, உடனே மகாலந்திசன் அரமனையோடு அவளையும் அக்கினிக்கிரையாக்கினுன்.

* திரிபிடகம் - விநயபிடகம், சூத்திரபிடகம், அதன்மபிடகமென்ன மூன்றுமாம்.

ம

அப்பால் (Mahalantissa) மகாலந்தீசன் அநுரதபுரத்தைச்சூழ அநேக குளங்களையும் விளைபுன்களையும் உள்ளடக்கி 64 மைல் சுற்றளவும் 7 முழ உயரமுமுள்ள ஓர் கன் மதிலைக்கட்டி யெழுப்பினார்.

அவன் 22 வருஷ மரசுசெய்து (கி. மு. 19-ல்) இறக்க, அவன்மகன் (Battyatissa) பத்தியத்தீசன் அரசனாகி, கோயில்குளங்களைப் புதுக்கித் தானதருமங்களைப் பெருக்கி, சனங்களுக் கிதமுடையவனாய் 28வரு அரசு செய் திறந்தான். இவன் இறந்தபோது யூதேயாநாட்டில் அவதரித்திருந்த கிறிஸ்துவுக்கு வயசு 9 என்பர். அப்பால், அவன் தம்பி மகாதைலியன், அவன் மகன் அட்டதைகமுனு, அவன் தம்பி கனிஜனிதீசன், அட்டகை முனு மகன் சூலாபயன், அவன் சகோதரி சீவல்லியரசி, அவள் சிற்றப்பன் மகன் ஈழநாகன், அவன் மகன் சந்தமுகுணன் என்னு மிவர்கள் வழி வழியே அரசராகி முறைமையே 12வரு, 10வரு, 2வரு, 1வரு, 4மா, 6வரு, 8½வரு அரசுபுரிந்தார்.

அப்பால் (கிறிஸ்த அப்தாப்தம் 52-ல்) சந்தமுகுணன் தம்பி (Yatalakatissa) யதாலகதீசன் முடிதரித்தரசுசெய்துவந்தான். அவனுடைய வாயிலாளருள் ஒருவனாகிய (Subha) சுப்பன் என்பவன் தேகரூபத்தால் அவனையொத் திருந்தமையால், அரசன் அவன்மேல் விசுவாசமுடையவனாகி, ஒரோர்நாளில் தன் உடுப்பை அச்சுப்பனும், அச்சுப்பன் உடுப்பைத் தானுமாக மாற்றியணிந்து கொண்டு காலக்ஷேபம் செய்யும் வழக்கப்படி ஓர் நாள் இருவரும் அவ்வாறு வேடிக்கைடா யிருக்கும்போது, சுப்பன் என்பவன் தன் வேஷத்துக்கிசைய இராஜாதிகாரஞ் செய்பவன்போல் வஞ்ச மனத்தோடு வாயிலாளனாகிய அரசனை யணுகி, "நீ, இன்றைக்கோ பெருங் குற்றஞ்செய்தனை; ஆதலால் உன்னை இவ்வாளுக் கிரையாக்கப் போகின்றேன்." என அச்சுறுத்திக் கண்டிப்பான்போல் நடித்து அரசன் சிரசை யுண்மையாகவே கண்டித்துவிட்டான். அரசன் விழுந்தமாத்திரத்தில் பாதகனாகிய சுப்பன், தானே அரசனாகி, அரசுசெய்துவருகையில், ஓர் குறிசொல்லி அவனிடம்வந்து, அரசனே! "உன்னை வாகாப்பு என்னும் பெயருடைய ஒருவன் கொல்வான்" என்று கூறினன். அவன் அதைக் கேட்டு, தன் சேவகரையழைத்து, எமது நாட்டில் வாகாப்பு என்னும் பெயருடையாரெல்லாரையுந் தேடிக்கொல்லுங்கள்" என் றுஞ்ஞைசெய்து அப்பெயருடைய யாவரையுங் கொல்வித்தும், வாகாப்பு என்ற அவன் சத்துரு கொல்லப்படவில்லை. இப்படி அவன் 6 வருட மரசுசெய்தபின், குறித்த (Wahap) வாகாப்பு என்பவனே வந்து அவனைக்கொன் றரசனானன்.

இவ்வாகாப்பு அநுரதபுரத்து மதில்களை 18 முழம் வரையிலு முயர்த்திக் கட்டுவித்ததுமன்றி, 3 விகாரைகளையும் 11 குளங்களையும் அமைப்பி

த்தான். இவன் 44 வருஷம் கலங்காத செங்கோலோச்சி இறந்துபோக, அவன்குமாரன் ( Wankanasika) வங்கநாசிகன் அரசனாயினான்.

இவன் அரசியற்றி வருநாளில், சோழநாட்டினின்றும் தமிழராகிய சோழியர் மூன்றாம்முறை (கி. அ. 111) படையெடுத்து வருவாராயினார்கள். அச்சோழியர் இலங்கையின் வடமேற்றிசையில் வந்திறங்கி, அதுமுதல் இராஜதானி வரையிலுள்ள நாடுகளையெல்லாஞ் சூறையாடி எண்ணிறந்த திரவியங்களை வாரிக்கொண்டும், 12,000 ஜனங்களைச் சிறைகளாகப் பிடித்துக்கொண்டும் தந்தேய நோக்கி மீண்டார். இதனையறிந்த வங்கநாசிகன் குமாரன் கஜபாகு என்பவன், பதிலுக்குப் பகைசாதிக்கவெண்ணி ஓர் பெருஞ்சேனையோடு சோழநாடு சென்று, முன் சோழியர் கைப்பட்ட சிங்களர் யாவரையுஞ் சிறைமீட்டு, அங்குநின்றும் அத்தனை சோழியர்களைக் கைதிகளாக்கிக்கொண்டு மீண்டான். அங்ஙனம் சிறைகளாகவந்த சோழியர் அலுத்துகோறளை, கரிஸ்பபற்று, தம்பனை யென்னு மிடங்களில் குடியேற்றப்பட்டார்.

இவ்வண்ணம் வங்கநாசிகன் மூன்றுவருடமாண்டபின், அவன் குமாரன் (Gajabahu) கஜபாகு அரசனாகி 12 வருடமரசபுரிந்தான். அவனுக்குப்பின், மகாலுமானன், பத்திபத்தீசன், சலத்தீசன், கூருனன், கடகாமன், கடசீரினன், வைரத்தீசன், அப்பாசேனன், ஸ்ரீநாகன், இந்துவிஜயன், சங்கத்தீசன், என்போர் அரசராகி முறையே 6, 54, 18, 10, 1, 19, 22, 8, 2, 1, 4-வருஷம் அரசியற்றினார்கள். இவர்கள் விசேடகீர்த்திப் பிரஸ்தாபரல்லர். கீர்த்திக்கு ஏதுக்களாயுள்ளன, அறிவித்தை, அதிதீமை, அதுநன்மை முதலியவாதலின் இவற்றில் ஒன்றாயினும் அவர்களிடத்தில் பொருந்தியிருந்த தின்மைபற்றியே, அவர்கள் இங்கெடுத்துப் பேசப்படாதொழிகின்றார்.

இவருக்குப் பின், அஃதாவது கி. அ. 246-ல். இந்துவிஜயன்வமிசத்தவனாகிய (Dhamma Srisangaba) தரும ஸ்ரீசங்காபன் அரசனாயினான். அவன், *அட்டசில விதியைக் கிரமப்படி சிறிதும் வழுவாது கைக்கொள்பவனும் விபரீதபத்தியுடையவனுமா யிருந்தான். கொலையென்ற சொல்லையும் காதினாற்கேட்கச் சகியான். கொலைத்தண்டனைக் கருகரான குற்

* அட்டசீலம் - கொல்லாமை, பொய்சொல்லாமை, களவின்மை, காமமின்மை, பிறர்பாலிரவாமை, உயர்ந்தவாதனத்திருத்தல், சந்தனமாலை முதலாயின தரியாமை, பாடலாடல் விரும்பாமை, உதயத்துக்குமுன் புசித்தல் என்னு மிவையெட்டுமாம்.

றவாளிகளுக்கு உலகநடைக்கொப்ப அத்தண்டனையை விதித்துவிட்டுப் பின்னர் அவர்களை இரகசியமாய்த் தப்பியோடச்செய்து, அவர்க்குப் பதிலாய்ச் செத்த பிணங்களைக் கொணர்வித்துக் கழுமரம்முதலிய கொலைக் கருவிகளில் ஏற்றிச் சனங்களுக்குக் காட்டுவிப்பான்.

இதனால் அவன்நாட்டில் அரசபயங்கரம் என்பது சிறிதுமில்லாமற் போக, கொலையுங் களவுமே அதிகரிக்கத் தலைப்பட்டன.

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களை கட்டதனொடு நேர்"

> "நாடோறு நாடி முறைசெய்யா மன்னவன்
> நாடோறு நாடு கெடும்"

என்றவுண்மையையுணர்ந்த அவன் சிரேஷ்டமந்திரியாகிய கோதாபயன் என்பவன் அவனைத் துரத்திவிடவகைதேடினான். அரசன் அக்குறிப்புணர்ந்து, நீர்வடி கருவி யொன்றைமாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு இராச்சியத்தைவிட்டு ஓடிப்போய், அட்டநாக மலைச்சாரலில் தவஞ்செய்துகொண்டிருக்க, இங்கே (Gothabhayo) கோதாபயன் அரசனாகி, ஸ்ரீசங்காபயன் எங்கிருக்கினும் அவனைத் தேடி அவன் சிரசைக்கொண்டு வருவோர்க்குப் பரிசு கொடுக்கப்படும் என்று முரசறைவித்தான். அப்படியே ஓர் கிருஷிகன் அவ்வரசனைத்தேடி அவன் சிரசைக் கொய்தான். அப்பால் கோதாபயன் அத்தலையை அம் மலையிலேயே புதைக்கச் செய்து, அவ்விடத்திலே ஒரு சமாதியையுமியற்றுவித்தான். பின்பு இவன் தனது நாட்டுச்சீரைத் திருத்திவருகையில், சமய ஒழுக்கந்தவறிய 60 பௌத்தகுருமாரைப்பிடித்து, அவர் முதுகில் சிவக்கக்காய்ச்சிய இருப்புக்கோலால் முத்திரையிட்டு இலங்கையைவிட்டோடச்செய்தான். அவர்கள் சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டணத்திற்குப்போய் அங்கே குடியேறினார்கள். இவன் 13 வருட மரசுசெய்தபின், அவன்மகன் (Mekalan Dethu Tissa) மேகலதேத்துதீசன் அரசனாகி 10 வருட மரசாண்டான்.

---

## ௪. அதிகாரம்.

[மகாசேனன் அரசனானதுமுதல்;
பறங்கிக்காரர் வந்தது பரியந்தம்.]

(கி. அ. 275—1505.)

கிறிஸ்த அபராப்தம் 275-ல் அவன் சகோதரனாகிய (Mahasen) மகாசேனன் என்பவன் பட்டாபிஷேகம் பண்ணப்பட்டான். அவன் தன

க்கு உபாத்தியாயனாயிருந்த ஓர் பௌத்தகுருவினது மதமாகிய போலிப் பௌத்தமதத்தில்... முன்னரே பிரவேசித்திருந்தமையால், அம்மதாபிமானம் பற்றி, அக்காலத்திற் பிக்ஷையேற்றுண்ண லொன்றால் மாத்திரம் காலங்கழித்து வந்தவராகிய சுத்த பௌத்த குருமாருக்கு ஊரில்யாரேனும் பிக்ஷை கொடுத்தலாகாதெனக் கட்டளையிட்டு, பின்னர், மகாலோக பவனமென்னும் அரமனையையும், 363 பௌத்தாலயங்களையும் இடித்தழித்து விட்டான். சிலகாலங் கழிந்தபின்பு, அவன் தான்செய்தவையெல்லாம் தவறென்று மனஸ்தாபமடைந்து, முன் இடித் தழித்துவிட்ட அரமனை முதலியவற்றையெல்லாம் மீளக் கட்டுவித்ததுமன்றி, அநுராதபுரத்திலே ஜயதவனராமசமாதியையும் நவமாய்க் கட்டுவித்தான். ஈற்றில், அப் போலிப் பௌத்த குருவையும் தன் பத்தினி கேள்விப்படி சிரபங்கஞ்செய்தான்.

இவன், மின்னேரி, கந்தளாய் முதலிய மிகப்பெரிய குளங்களைக் கட்டுவித்துப் பெயர்படைத்தான். அவற்றுள் மின்னேரியாகிய வாவி 20, 000 வயற்பாத்திகளுக்குப் பாயப்போதிய ஜலமும், 20 மைல் சுற்றளவும் உள்ளது. அதற்கயலில் மகாசேனனுடைய ஞாபகார்த்தமாக ஓர் சிறிய கோயில் அமைக்கப்பட்டிருந்ததலின், பிற்காலத்துப் பேதைச்சனங்கள் மின்னேரியாண்டவனென்று அவனை ஓர் தெய்வமாகக் கொண்டாடுவார்கள்.

இவன் மகாவமிசத் தரசரிற் கடையரசன். இனிக் கூறப்படுவோர் சுலு வமிசத்தரசர். சுலு என்பதன் பொருள் கீழ் என்பது. அவர்க் கிப்பெயர்வந்தது, அவர்காலத்திலேயே இலங்கை பொன்றவந்தமையாலென்க.

இவன் ஏறக்குறைய 23 வருட மரசுபுரிந்திறக்க, அப்பால் 298-ல் அவன்குமாரன் (Kirtisri Meghavarna) கீர்த்தி ஸ்ரீமேகவர்ணன் அரசனாயினான். இவன்காலத்திற்றான் புத்தருடைய பல்லெனப்படும் தாலதம் கலிங்கநாட்டிலேயுள்ள தந்தபுரத்தினின்றும் அவ்வூரிராஜபுத்திரியால் இலங்கைக்குக் கொண்டுவரப் பட்டதென்பர். இவன் 28 வருஷ மரசாண்டான்.

அப்பால் அவனுடைய சகோதரனாகிய (Dethu Tissa) தேத்துதீசன் அரசனாகி 9 வருஷ மரசுசெய்தான். இவன் சிற்பசாஸ்திரத்தில் அதிவல்லவன். அவனுக்குப்பின், அவன் குமாரன் (Budhadasa) புத்ததாசன் கி. அ. 335 ல், அரசனானான். அவனை, அவனுடைய நற்குணம் விசேடசம்பத்து முதலிய காரணமாக, "குணாகரம்" என்றும், "தனோததி" என்றும் புகழுவர். அவன் வைத்தியத்தில் அதிவல்லவனாகி ஓர் மருத்துவநூலையியற்றினான். அன்றியும், அவன் அநேக தரும வைத்தியசாலைகளையும், அங்கவீனர் அகதிகள் முதலாயினோர்க்கு அறச்சாலைகளையும் ஆங்காங்கு ஸ்தாபித்துச் சனங்களுக்குப் பெருஞ்சகாயங்கள் செய்தான்.

இவன் இவ்வாறு 29 வருஷம் செங்கோலோச்சி யிறந்துபோக, அவன் குமாரன், (Upatissa II.) உ-ம் உபத்தீசன் அரசனாகி 42 வருஷ மரசுபுரிந்தான். அவனுக்குப்பின், அஃதாவது, கி. அ. 406-ல் (Mahanama) மகாநாமன் அரசனாயினான். அந்நாளில், தன் நாவல்லவம்பற்றிப் புத்தகோஷன் எனப் பட்டப்பெயர் கொண்ட ஓர்பௌத்தன் இந்தியாவினின்றும் இலங்கைக்குவர, அவனை மகாநாமன் உபசரித்து, அவனால், சிங்களபாஷையிலுள்ள பிடக வியாக்கியானங்களைப் பாலிபாஷையில் மொழிபெயர்ப்பித்தான். இதன்பின்பு, தமிழ்ப்பிரதானிகள் படையெடுத்துவந்து இலங்கையைவளைய, மகாநாமன் அவர்களையெதிர்த்து யுத்தத்தில் மடிந்தான்.

இப்படி இவன் 22 வருடம் அரசாண்டிறந்துபோக, அவன் குமாரன் (Senghot) செங்கோட்டன் அரசனாகி ஒருநாள் அரசுசெய்யாமுன் அவனை அவன் மனைவிபோலும் நஞ்சூட்டித்தொலைத்தாள். அப்பால் அவளை வதுவைசெய்த (Laiminitissa II.) உ-ம்இலயமீனித்தீசன் அரசனாகி யொருவருடமாண்டான். அவனுக்குப்பின் (Mittasena) மீத்தசேனன் அரசனாகி ஒருவருடத்துக்குள் தமிழராற் கொல்லப்பட்டான். அப்பால் தமிழ்ப்பிரதானிகள் பலர் 25 வருட மரசியற்றினார். அவர்கள் அரசியற்றத்தொடங்க, பௌத்தமதமென்னும் சந்திரனுக்கும் அபரபக்ஷமாயிற்று.

அடுத்த 459-ல், சிறிதுகாலம் ஊருகுணையையாண்டிருந்த (Dhatusena) தத்துசேனன் தமிழரைப் பறக்கடித்து, இலங்கை முழுமைக்கும் தானே அரசனாதலும், சமாதானம் மேலோங்கவும், முன் பொன்றிக்கிடந்த பௌத்தசமயம் தழைக்கவுந் தொடங்கின. பின்னர் அவன் விபசாய விருத்திக்கு வேண்டுவன செய்யத்தொடங்கி, ஈற்றில் காளவாவிக்குளத்தைக் கட்டுவித்தான். அதனைக் கட்டுவிக்கும்போது, அணைகட்டக்குறித்தவிடத்தில், ஐம்புலனொடுக்கி யோகத்திலிருந்த ஓர் தபசியைச் சிறிது மிரக்கமின்றி அவ்வணையினுள் இட்டு மூடிக்கட்டுவித்தான். இதன்பின்பு அவன், தனதுமாமனும் பௌத்தகுருவுமாகிய மகாநாமன் என்பவனால், விஜயராஜன் இலங்கைக்கு வந்தது முதல் மகாசேனன் இறந்தது பரியந்தமாகவுள்ள அரசர்சரித்திரத்தை, "மகாவமிசம்" என்னும் பெயரால் எழுதுவித்தான். கடைசியில்,

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

என்ற பொய்யாமொழிப்புலவர் வாக்கின்படி, தத்துசேனனை அவன் மூத்த குமாரனாகிய (Kasiyapa I.) க-ம் காசியப்பன் சங்கிலியிற்கட்டி படக்கி ஓர் மதிற்சுவருக் கிடைப்படையாகப்போட்டுக் கட்டுவித்தான்.

இப்படித் தத்துசேனன் 18 வருடமரசாண்டு, காசியப்பனாற் கொலையுண்டிறந்தபோன்மையை மனத்தில் வைத்துச் சகிக்கவாற்றாத இளைய குமாரனாகிய (Mogallana) முகலானன் என்பவன், தன் தமையனோடு பகைசாதிக்கவெண்ணி, இந்தியாவுக்குப் போய், ஓர் சேனையைச் சேர்த்துக்கொண்டு, கொழும்பில் வந்திறங்கினான். அதனை அப் பிதுருசேதகன் கேள்வியுற்று, அஞ்சி, அநுராதபுரத்தினின்றும் தனக்குவேண்டிய திரவியங்களை வாரிக்கொண்டு மாத்தளைக்கோடி, அங்கே, யார்க்கு மேறுதற்கரிய * சீயகிரி என்னுங் குன்றின்மேல் ஓர் கோட்டையைக் கட்டிக்கொண்டங்கிருந்தான். சிலநாட் சென்றபின் காசியப்பன் குருநாகலுக்குப்போக நேரிட்டபோது, அங்கே அவனை முகலானன் எதிர்த்து யுத்தத்திற்கொன்றான்.

அப்பால் முகலானன் அரசனாகி அநுராதபுரத்தை ராஜதானியாக்கி 18 வருடமாண்டு கி. அ. 512-ல் இறந்தான். இவனுக்குப் பின், கி. அ. 769-ம் வருடம்வரையில் ஆண்ட அரசர், குமரதாசன் முதல் மூன்றாம் அக்கிரபோதி ஈறாக இருபதோடறுவர். அவருள், (Kumaradasa) குமாரதாசன் காலத்தில், கலாசமுத்திரமும் கவிராஜ சிங்கமுமாகிய காளிதாசன் இந்தியாவினின்றும் இலங்கைக்கு வந்திருந்தான். அரசன், ஒருநாள், தன் வழக்கப்படி ஓர் தாசிவீட்டுக்குப் போய் அவளுடன் இன்பம்நுகர்ந்து மீளும்போது அவ்வேசி வீட்டுச்சுவரில், ஒருவெண்பாவின் முதலடி இரண்டையும் எழுதி, அதற்குப் பக்கத்தில் "இதன் மற்றையடிகள் இரண்டையும் முடிப்பவர்க்குப் பரிசு கொடுக்கப்படும்" எனவு முடன்வரைந்துபோயினன். அவன்போனபின் அவ்வேசிவீட்டுக்குத் தற்செயலாய் வந்த காளிதாசன் அதனைக்கண்டு ஈற்றடியிரண்டையும் எழுதிமுடித்தான். இதனைக்கண்ட அந்தவேசி, அரசன் கொடுக்கும்பரிசைத் தான் பெற்றுக்கொள்ளவேண்டுமென் றாசைகொண்டு, தன்வீட்டுக்குள் காளிதாசனை யழைத்துச் சூதினாற் கொன்று முற்றத்தில் புதைத்தாள். இதனை எவ்வழியாயோ அரசனறிந்து ஆகுலக்கடலில் மூழ்கினவனாய் அவள்வீடு சென்று அப்பிணத்தையெடுத்து அதிசம்பிரமத்துடன் தகனஞ்செய்தும், தன்மனம் ஆகுலத்தினின்றும் நீங்காமை கண்டு அத் துயரத்திற் கெல்லைகாணுமாறு, "யான் இதை எவ்வாறுசகிப்பன்" என்று, கொளுந்திவெரியும் அக்காஷ்டத்தின்மீதிலேயே விழுந்திறந்தான்.

[இக்காளிதாசன் போஜனுடைய நேசனோ அல்லனோவென்பது சந்தேகம்.]

---

* சீயகிரி - அம்மலையில் சிங்க உருக்கள் வெட்டியிருந்தமையால் அதற்கு இப்பெயர் வந்தது.

மற்றையோர்சரித்திரம் இங்கு கூறத்தகும் விசேடமுடையதன்று. ஏற க்குறைய அவர்கள் எல்லோரும் அநுராதபுரத்திலேயேயிருந் தரசுசெய் துவந்தார். இவர்காலமெல்லாம், அஃதாவது ஏறக்குறைய 200 வருஷம் வரையில் தமிழர் இந்தியாவினின்றும் அடிக்கடி இலங்கைக்குவந்து கொள் ளையடித்துப் போவாராயினர்.

பின்னர், 769-ல் முந்திய ௩-ம் அக்கிரபோதி குமாரன் (Aggrabodhi IV.) ச-ம் அக்கிரபோதி அரசனாகித் தமிழருக் கச்சமுற்று, அநுராதபுரி யைவிட்டுப் பொல்லநாருவையை யடைந்து அதைத் தனக்கு இராஜதானி யாக்கி, "மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக்கோபுரமும்" என்றபடி அதனைச் சிறப்பிக்கவேண்டி அதன்சூழலில் அநேக பெரிய குளங்களையும் ஓர் விசி த்திரமான ராஜமாளிகையையும், அநுராதபுரியிலுள்ள சமாதிகளுக்குச் சரி வந்த சமாதிகளையும் அமைப்பித்தான். இவன், புத்திரரைப்பெற்றும், அவ ர்கள் அற்பாயுசுடையராய் இவனுக்கு முந்தியிறந்துவிட்டமையால், மிகிந் தன் என்னும் பெயருடைய ஒருவனைச் சுவீகார புத்திரனாக ஏற்று வளர் த்தான்.

இவன் 6-வருட மரசுசெய்து போக, (Mihinda) மிகிந்தன் அரசனாகி, தங்கத்தினால் ஓர் புத்தவிக்கிரகத்தை அமைப்பித்து, அதற்கு இரத்தினப் பிரசாதம் என்று மாலயத்தைக்கட்டி அதில் ஸ்தாபித்து, 20 வருடமாண் டான். அப்பால் 795-ல், அவன் மகன் (Dapulo III.) ௩-ம் தபுலு செங் கோல் கைக்கொண்டான். அவன், தன்குடிகளுடைய க்ஷேமத்தை விரு ம்பி, குளந்திருத்தலாதியாம் வேலைகளை அதியூக்கத்தோடும் நடப்பித்தான். தன்நாட்டில் மருத்துவரை யதிகரிப்பிக்கும் நோக்கத்தோடு ஓர் மருத்துவ கலாசாலையை ஸ்தாபித்தான். ஈற்றில் அந்நாட்டு அரசியற் பிரமாணங்க ளெல்லாம் தனக்குப் பின்னும் பிறழாது கைக்கொள்ளப்படவேண்டுமெ ன்னுங் கருத்தினனாய் அவற்றைத் திரட்டி ஓர் தரும நூலாக்குவித்தான்.

இவன் இப்படி 5 வருடமாண்டு போனபின், அவன் மகன் 2-ம் மிகி ந்தன் 4 வருட மரசியற்றினான். அவனுக்குப்பின் அவன்தம்பி 5-ம் அக் கிரபோதி 11 வருடம் பிரஜாபரிபாலனம் பண்ணினான். அவனுக்குப்பின் அவன்மகன் 4-ம் தபுலு 16 வருடம் செங்கோலோச்சினான். அவனுக்கு ப்பின் அவன் தாயாதியாகிய 6-ம் அக்கிரபோதி 3 வருடம் அரசுபுரிந் தான். அவனுக்குப்பின் (கி. அ. 838.) அவன்குமாரன் (Mitwellasen) மித்தவேலசேனன் அரசனானான்.

அப்போது பாண்டியன் படையெடுத்துவந்து பொல்லநாருவையை வளைந்து அரசனோடு போர்தொடுத்து, அரசனைப் புறங்காட்டச்செய்து,

அவன் மக்களில் ஒருவனைக்கொன்று, ஆலயங்களுள் பிரவேசித்து, தங்க நதிஞலாய புத்த விக்கிரகங்களையும், திருவாபரணங்களையும், ஆதிபுத்தருடைய திருப்பாத்திரத்தையும் கையாடிப் பொதி பொதியாய்த் திரவியங்களைவாரி, பாண்டி நாட்டுக் கனுப்பினான். சிறிது நாளின் மேல் மித்தவேலசேனன் பாண்டியனோடு உறவாடி ஒப்புரவாகித் தனதிராச்சியத்தை மீளப்பெற்றுச் சிறிதுகாலம் செங்கோலோச்சி வருகையில், இந்தியாவினின்றும் பௌத்தமதத்தில் ஓர் பேதமாகிய விச்சிரவாதிமதம் இலங்கையில் வரலாயிற்று.

இவன் 20 வருடமரசியற்றிப்போக, அவன் மகன் மகனாகிய ௬-ம் காசியப்பன் அரசனானான். அக்காலையில் பாண்டியன்மகன் தன் தந்தையோடு போர்புரிந் தாற்றாமல் புறங்கொடுத்து இலங்கையையடைந்து காசியப்பனைத் தஞ்சமாகப்பற்ற, "ஆனைக்கொரு காலமானால் பூனைக்கு மொரு காலம்" என்றபடி, காசியப்பனும் "என்பகைதீர்க்க இதுதான் சமய" மென்று பாண்டி நாட்டுக்குப் படையோடு சென்று பாண்டியனைக்கொன்று, அவன் மகனை அரசனாக்கி, முன் பாண்டியன் வாரிப்போன பொருள்களோடு ஏராளமான நிதிகளை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு மீண்டான்.

இவன் இப்படி வீரசூரனாய் 33 வருடம் அரசியற்றிப்போக, அவன் சகோதரன் (Udaya I.) ௧-ம் உதயன் அரசனாகிச் சலாதாரங்களைத் திருத்தி 35 வருடமரசுசெய்தான். அப்பால் 926-ல் அவன்குமாரன் ௨-ம் உதயன் அரசனாகி வெகு குளங்களைக் கட்டி 11 வருடம் ஆண்டான்.

அவனுக்குப்பின் அவன் மருகன் ௫-ம் காசியப்பன் முதல் ௪-ம் சேனன் ஈறாக, கி. அ. 937-ம் வருடம் தொடங்கி 1023-ம் வருடம் வரையில் ஆண்ட அரசர் பதின்மர். இதுகாறும் தலைநகராயிருந்த நகர் பொல்லாருவை.

அப்பால் 1023-ம் ஆண்டு அவன் சகோதரன் ௬-ம் மிகிந்தன் அநுராதபுரியை இராஜதானியாக்கி அங்கிருந் தரசுசெய்கையில், சோழர் படையெடுத்துவந்து யுத்தஞ்செய்து அவனையும் அவன் தேவியையும் சிறைப்படுத்திச் சோழநாட்டுக்குக் கொண்டுபோயினார். அப்படிப் போகும்போது இலங்கைக்குப் பிரதியதிபதியாக ஓர் தமிழனை நியோகித்துப்போக, அவனும் 30 வருடமரசுசெய்தான்.

அக்காலத்தில், பயிர்ச்செயலில்லாது கிடந்த ஊருருனை ராமோத்திரம் சிங்கள அரசர் கையிலிருந்தது. அதுவும் சிறிதுகாலம் உரிமைக்காரரற்றுக் கிடக்க, ஈற்றில் மந்திரியாகிய லோகேசுபரன் அரசனாகி, கீதிர்

காமத்திலிருந்து அரசாட்சிசெய்து கி. அ. 1071-ல் இறந்தான். அப்பால் அந்நாட்டுக் கரசனாக ராஜவமிசத்திலொருவன் விஜயபாகு என்னும் பட்டப்பெயருடன் வந்தான். அவன் அதிபராக்கிரமசாலியாயிருந்ததனால் மற்றைய நாடுகளினின்றும் தமிழரைத் துரத்திப் பொல்லநாருவை முதலிய பூர்வ தலைநகரங்களைக் கவர்ந்து இலங்கை முழுமைக்கும் ஏகசக்கிராதிபதியானான். பின்னர் அவன் தன்தேயத்தில், ஆன்றோருரைப்படி பிராதமிககுருமார் ஐவர்க்குக் குறையாமல் இருத்தல்வேண்டுமென்றெண்ணி, சீயநாட்டிலுள்ளதென அநுமிக்கப்படும் ஆரமனா நாட்டுக்கு ஓர் தூதனையனுப்பி அங்குநின்றும் அவர்களை வரவழைத்து, மதாதிவிஷயங்களைச் சீர்ப்படுத்தினான்.

இவன் 55 வருஷம் செங்கோல் செலுத்திச் சந்ததியின்றி யிறக்க, இராஜத்துவம் எனக்குனக்கென்று வாதிட்டுக் கலாமவிளைத்து அவன் தம்பி (Jayabaha) ஜயபாகு I வருடமும், விஜயபாகுவின் இளையமகன் விக்கிரமவாகுவும், அவன் தமையன்மகன் உ-ம் கஜபாகுவும் இணைந்து 20 வருடமும் ஆண்டார். ஈற்றில், 1153-ல், (Prakramabahu, The Great) மகா பராக்கிரமவாகு அரசனானான். சிங்களசரித்திரத்தில் இவ்வரசசிரோன்மணியினுடைய பெயரே அதிப்பிரபலியமுடையது. இவன் கல்வியைக் கிரமமாகக் கற்று, ஞானாசாரியாமிச அறிவுவிருத்தியின்பொருட்டுப் பரதேசசஞ்சாரஞ்செய்து அவ்வத்தேசத்தாருடைய ஒழுக்கவழக்கங்களைக் கிரகித்துணர்ந்தவன், இவன் தனது அரசியல் விடயத்தைக் கவனிக்கத்தொடங்கி, தூர்ந்துகிடந்த அநேக குளங்களையும், பாய்கால் வடிகால்களையும் திருத்திக் காடுமேடுகளை யெடுத்து விளையுள்களாக்கி நீர்வளம் நிலவளங்களைப் பெருக்கினான். ஆபத்துவருங் காலங்களில் புகலிடங்களாக உபயோகமாகும்பொருட்டுப் பற்பல விடங்களில் கோட்டைகளைக் கட்டுவித்தான். பொல்லநாருவைநகருக்கு அரணாகச்சுற்றியோர் கொதத ளத்தையும் அமைப்பித்தான். சுருக்கிச்சொல்லின், இவன் தன் நாட்டிற்கு வளத்தளவிலும் வலியளவிலும் விட்டகுறை ஒன்றேனுமில்லையென்க.

இவனிப்படித் தன் நாடும் குடிகளும் சீரினாலும் சிறப்பினாலும் செழித்தோங்க அரசியற்றி வருநாளில் இலங்கையினின்றும் சில குலீனஸ்திரிகளை ஓர் தளகத்தனோடும் ஏற்றிப் பரதகண்டநோக்கிச் சென்ற சிலமரக்கலங்கள், காம்போஜநாட்டின் ஓரமாய்ப்போக, அவைகளை அத்தேயத்தரசன்கண்டு, அவற்றிற்குத் தலைவனாகச் சென்ற தளகத்தனையும் மதியாது தடுத்து அவற்றிலிருந்த பெண்களை எடுத்தது காரணமாக, அவ்வரசனோடு போர்தொடுக்க வெண்ணிப் பராக்கிரமவாகு 500 மரக்கலங்களோடு ஓர் பெருஞ்சேனையையும் அச்சேனைக்கதிபதியாக அதிகாரமெனப் பெயரிய

ஓர் தமிழ்சேனையும் அனுப்பினன். அப்படிப்போன சேனாபதி தன்சேனையோடு காம்போஜநாட்டையடைந்து அங்கே யுத்தகளத்தில் அரசனைச்சாய்த்து, அந்நாட்டுக்கு ஓர் பிரதியதிபதியை நியோகித்து, அதனைத் தன் ஏகமானனாகிய பராக்கிரமவாகுவுக்குத் திறைநாடாக்கிவிட்டு மீண்டான்.

அதன்பின்னர், பராக்கிரமவாகு சோழ பாண்டியர் செருக்கையு மடக்க வெண்ணி ஆங்கும் ஓர் சேனையையும் சேனாபதியையு மனுப்பினன். இதனைச் சோழபாண்டியர் உணர்ந்து இருவரு மைக்கியப்பட்டுப் பராக்கிரமவாகுசேனையை யெதிர்த்தார். எதிர்த்தும் நிர்வகிக்கவாற்றாமல் அவர்கள் பின்வாங்க, அச்சேனாபதி வெற்றி சிறந்தவனாய் இராமேச்சரத்தையும் அதன் அயல்நாடுகளையும் சிங்களராச்சியத்துக் குட்பட்டவைகளாக்கி, அப்பால் பாண்டிநாட்டுக்குப் பாண்டியனைநீக்கி, அவன் மகனைத் திறையரசனாக நியோகித்துவிட்டுத் திரும்பினன்.

இவ்வண்ணம் பராக்கிரமவாகு பிறதேயத்தரசரையடக்கி அவரிடத்தில் திறைவாங்கிப் பகையரசர்பயம் சிறிதுமின்றி யரசுசெய்து வருமளவில், தன்னாட்டை யின்னுஞ் சிறப்பிக்கவேண்டுமென்றெண்ணி, பழந்தருமரச்சோலைகளை யுண்டாக்கல், கால்வாய் வெட்டல், குளங்களில் எந்நாளும் நீர் குறையாதிருக்கும்படி ஆறுகளைத் திருப்பல் முதலிய நன்முயற்சிகளில் கையிட்டுத் தன்காலத்தைக் கழித்தான். அப்படி யிவனாலியற்றப்பட்டவைகளுள் ஓர் வெட்டாறானது பன்னாகத்தில் எல்லகாஷரயென்னுமிடத்துக்குச் சமீபமாக, அம்பங்கை நதியினின்றும் பிரிந்து, மின்னேரி கந்தளாய் முதலிய பலகுளங்களுக்கு நீரூட்டி, ஏறக்குறைய நூறுமைல் நீளமுடையதாய் வடகிழக்கே சென்று, கடலிற் சங்கமிக்கின்றது. இது, இலங்காதேவிமார்பில், வச்சிரப்பதக்கங்களை இடை இடையே கோத்தணிந்ததோர் வச்சிரமாலைபோலும், பலகுளங்களைத் தொடுத்திருத்தலால் "பராக்கிரமோததி" எனவும்படும். [உததி - கடல்.]

இவன் இவ்வாறு ஊருக்கு அநேகநன்மைகளைச் செய்து உலோகரக்ஷகன் என்று ஜனங்கள் வாழ்த்தும்படி 33 வருடம் செங்கோல்செலுத்தி 1186-ல் இறக்க, அவன் சகோதரி புத்திரனாகிய உ-ம் விஜயபாகு அரசனாகி, ஒருவருடமரசுசெய்து வருகையில், அவனை ஓர் காமக்கிழத்திபொருட்டால் 5-ம் மிகிந்தன் என்றொருவன் கொன்று, தானே அரசனாகினன். அவனும் 5ம் ஆண்டு கொலையுண்டிறந்தான். அடுத்த 87-ல் கலிங்கநாட்டு அரசவமிசத்துக் கீர்த்திநிசங்கன் அரசனானன். அவனும் பராக்கிரமவாகுவைப்போல் ஊர்ச்சேமத்துக்கு வேண்டுவனவெல்லாஞ்செய்து, குடிகள் மனங்கோணாமல் நீதிவழி யரசுசெய்தான் என்பது, அக்காலத்தில் அவன்

அ

பேரால் நாட்டப்பட்டுள்ள ஞாபகஸ்தம்பங்களில் வரையப்பட்டிருக்கும். "கீர்த்திக்குறைவிடம்" (Fountain of renown), "பூலோகரக்ஷகன்" (Protector of the earth), "சர்வலோகபிரகாசதீபம்" (The Lamp by which the whole world is illuminated) என்னும் வசனங்களால் விளங்கக்கிடக்கின்றது. அவன் சிம்மாசனத்தைத் தாங்கிநின்ற கற்சிங்கம் இப்போது கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

இவன் 9 வருடம் அரசியற்றி 1196-ல் இறக்க, அவன்மகன் (Weerabahu) வீரவாகு அரசனாகி ஒருநாளரசு செய்யாமுன் பரிசாரகனால் கொல்லப்பட்டான். பின்பு 97-ல் பராக்கிரமவாகுவின் கைம்பெண்டாகிய (Lilawati) லீலாவதி அரசியானாள். இவள் மும்முறை யரசியாகி, அம் மும்முறையிலும் சிறிதுசிறிதுகாலம் அரசுசெய்து, கலகக்காரரால் அரசிழந்தாள். இறங்கோட்டுச் சமாதியெனப் பொல்லநாருவைக் கணித்தாகக் கிலமாகிக்கிடக்கும், மகோன்னத பௌத்தாலயத்தின் வில்மாடத்துக்குத் தங்கப் பூச்சிடுவித்தவள் இவளே. அன்றியும், இவள் தன் சமஸ்தானத்து வித்துவான்களால் *சசதாவம், மூவதேவதாவம் என்னும் காவியங்களை இயற்றுவித்தாள். இவை சிங்களத்தில் அதிசிறந்தபாடல்கள்.

அப்பால் 1200-ன்மேல் தமிழர்படை வரவு அடிக்கடியாக, இலங்கைபட்டதுயர் சிறிதல்ல. பாண்டிநாட்டினின்றும் தமிழர் திரள் திரளாய் வந்து எண்ணிறந்த சமாதிகளை இடித்துவிட்டார்கள்; விகாரைகளைப் படைவீடுகளாக்கினார்கள்; சிங்களருடைய மதநூல்களை எரித்தார்கள்; பிரபுக்களைச் சிறைப்படுத்தினார்கள்; அவர்கள் திரவியங்களைக் கொள்ளையாடினார்கள்; திரவியங்களிருக்குமிடத்தைக் காட்டாதவர்களுடைய கைகால்களைச் சேதித்தார்கள். அந்தோ! தமிழர் இலங்கையர்மே லிழைத்த துன்பம் சொல்லுதற்கு மரிது! அரிது!!

இப்படியெல்லாஞ் செய்து ஈற்றில் 1214-ல் தமிழரிற் பிரதானியாகிய (Magha) மாகன் என்பவன் இலங்காதிபதியாகி 21 வருட மரசுசெய்துவருகையில், ஸ்ரீசங்காபன் மரபிற்பிறந்த ௩-ம் விஜயபாகு அம் மாகனைத்தொலைத்து அரசனாகி, இலங்கையின் தென்பாலினின்றும் தமிழரை யகற்றிவிட்டான். அவர்களெல்லாரும் தற்காலத்துள்ளவாறே வடபாகத்திற் செறிந்து குடிகொண்டார். அதனால் விஜயபாகு தமிழர்க்கஞ்சி, தான் நாமமாத்திரையிலாயினும் அவர்க்குத் திறையரசனாயிருத்தல் புத்தியென் றடங்கி, ஏறக்குறைய 500 வருஷகாலமாகத் தன் முன்னோரிருந் தரசாண்

* சசதாவம - ஆதிபுத்தர் முயலா யவதரித்தவாறு கூறுநூல்.
மூவதேவதாவம - ஆதிபுத்தர் மான்வடிவெடுத்தவாறு கூறுநூல்.

டவிடமாகிய பொல்லநாருவையை விட்டு, சத்தகோறளையிலுள்ள தம்பதி னியா நகரியைத் தன் துரைத்தனஸ்தானமாக்கினன்.

இவன் 24 வருட மரசியற்றிப்போக, 1266-ல் (Pandit Prakramabahu) பண்டித பராக்கிரமவாகு அரசனாகி, அழிச்சாலைகளைத் திருத்தி, பாலங்களைக்கட்டி, ஸ்ரீவர்த்தனபுரியையு மமைப்பித்தான். (ஸ்ரீவர்த்தனபுரி-சத்தகோறளையிலிருந்த ஓர்நகரம்.) அவன் வித்தியாவிநோதனாயிருந்தது பற்றி ஊர்கள் தோறும் வித்தியாசாலைகளைத் தாபித்துக் கல்வியை அபிவிருத்தி செய்வதி லதியூக்கமுடையவனாயிருந்தான். இப்படியவன் அரசாட்சி செய்துவருகையில் தமிழர் படையெடுத்துவர, அவன் அவர்களை யெதிர்த்து ஆனைக்கூட்டத்தில் சிங்கம்பாய்ந்தாலொப்ப அநேகரைச் சங்கரித்துத் தமிழர்களையை அடியோடு களைந்தான். * பூஜாவலி என்னும் நூலையயூரபாதன் என்னும் பண்டிதனா லியற்றுவித்தவன் இவனே. இவன் மூந்திய அரசன்மகன்.

இவன் இவ்வண்ணம் 35 வருடம் அரசியற்றிப்போக. அப்பால் நான்காம் (Wijayabahu) விஜயபாகு அரசனாகிப் பொல்லநாருவையிலிருந்து 2 வருட மரசியற்றியபின் ஓர் பெண்பொருட்டுக் கொலையுண்டான். அப்பால் அவன் தம்பி (Bhuwanekabahu) புவனேகவாகு என்பவன் அரசனாகி இயப்பாகுநகரைத் தனக் கிராஜதானியாக்கி அங்கிருந்து அரசுசெய்யத்தொடங்க, உடனே பாண்டியர்வந் தரண்களைத்துச் சூறையாடி, "தாலதம்" என்னும் புத்ததசனத்தையு முடன்கொண்டுபோயினர். அப்படியிருந்தும் அவன் 11 வருட மரசியற்றினன்.

அப்பால், 1314-ல் ௪-ம் விஜயபாகு புத்திரன்(Prakramabahu IV.) ௪-ம் பராக்கிரமவாகு அரசனாகி, முன் பாண்டியர் அபகரித்துப்போன திவ்வியதந்தத்தை, அவரிடத்திற்போய்க் குறையிரந்து மீட்டுக்கொணர்ந்து, இனி யிங்கிருக்கலாகாதென்று இயப்பாகு நகரைவிடுத்துக் குருநாகலை நகருக்கேகி அங்கிருந்து அரசியற்றினன்.

இவன் 5 வருட மரசுசெய்துதொலைய, அப்பால் 2-ம் புவனேகவாகு 5-ம் விஜயபாகு ஈருக நால்வா அரசராகி அந்நகரிலிருந்தே முறையே யரசுசெய்தார்.

அவர்க்குப்பின் அஞ்சாவது கி. அ. 1347-ல் அரசனான ௪-ம் புவனேகவாகு அந்நகரைவிட்டுக் கம்பளைக்குப்போய், அங்கிருந்து 14 வருடமாண்டான். இவ்வண்ண மிவ்வரசர்கள் "பூனை, குட்டிபோட்டு எழுவீடு தூக்

* பூஜாவலி - ஆதி புத்தருடைய சரித்திரம்.

இச் செல்வது" போல், அடிக்கடி இராஜதானியை மாற்றிக்கொண்டது, தமிழருடைய துன்பத்துக்கஞ்சி யென்பது வெளிப்படை. கம்பளை முன்னோரால் கங்காஸ்ரீபுரம் என்றழைக்கப்பட்டது.

அப்பால் 1361-ல் 5-ம் பராக்கிரமவாகு அரசனாகிக் கம்பளையிலிருந்தே 10 வருடமாண்டிறக்க, 1371-ல் (Wikramabahu III.) ௩-ம் விக்கிரமவாகு அரசனாகிச் சிறிதுகாலங் கம்பளையிலும் சிறிதுகாலங் கண்டியிலுமாகவிருந்தரசுபுரிவானாயினான். அங்கிருந்தபடியே அவன் தன்மந்திரியாகிய அளகேசுபரனால், கொழும்புக்குச் சமீபத்தில் ஓர்கோட்டையையும், ஜயவர்த்தனபுரி யென்னும் பெயருள்ள ஓர் நகரையு மமைப்பித்தான். (ஜயவர்த்தனபுரி - கோட்டைக்காடு.) அந்நாளில், பாண்டியன் ஏவலின்வழி பெரும்படையோடுவந்த ஆரியச்சக்கிரவர்த்தி, கொழும்பு, நீர்கொழும்பு, சலாபம் என்னுமிடங்களிற் கோட்டைகளைக் கட்டுவித்து, அளகேசுபரனைத் திறைகொடுக்குமாறடக்கி, இலங்கையின் வடபாகத்தைத் தனதாளுகைக்குள்ளாக்கி, யாழ்ப்பாணத்திலிருந்தரசு செய்தான். அப்படியே அளகேசுபரனும் 'அச்சக்கிரவர்த்திக்குச் சிறிதுகாலுங் கப்பங்கட்டிப் பின்னர்த் தமிழரைச் சிறிதுந் தலையெடுக்காவண்ணம் பறக்கடித்து, இலங்கை முழுவதையும் விக்கிரமவாகு பெயரால் வெற்றிகொண்டான். கண்டி, முன்னோரால் செங்கடகநகரியெனப்படும்.

இவ் விக்கிரமவாகு 7 வருட மரசியற்றிப்போக, ௫-ம் புவனேகவாகு அரசனாகி 20 வருடமாண்டான். அப்பால், ௬-ம் விஜயபாகு அரசனாகி அக்கம்பளையிலேயே யிருந்தரசாண்டுவருகையில், சீனதேயத்தினின்றும் சில பௌத்தர் ஓர் தளகர்த்தனைத் தலைமையாகக்கொண்டு, தம் வழக்கப்படி, யாத்திரிகராய்ப் புறப்பட்டு, இலங்கையிலுள்ள தாலுதமகாலயத்துக்குக் காணிக்கைகொண்டு வருவாராயினார். அவர்களை விஜயபாகுராஜன் பதிவிருந்து சதிசெய்யப் பிரயத்தனித்தபோது, அவர்கள் அதிப்பிரயாசையோடும் அரசன்கைக்குத் தப்பித் தங் கப்பலுக்கு ஓடிப்போயினார்கள். அதனை அவர்கள் தங்கள் மனத்திற்கொண்டு, சீனத்துக்கேகியவுடன், அத்தளகர்த்தன் ஓர் கப்பற்சேனையை அங்குநின்றும் சேர்த்துக்கொண்டு யுத்தசன்னத்தனாய் மீண்டும் இலங்கையைநாடி வந்து, கம்பளையரசனை வளைந்து, அரசனையு மவன் மனைமக்களையும் சிறைப்படுத்திச் சீனதேயத்துக்குக் கொண்டுபோயினான். அங்கே சீனசக்கிரவர்த்தி அவர்களைக்கண்டு, "உங்களுள் விவேகியொருவனை எமக் கடிமைத்தனம்பூண்ட அரசனாக நியோகித்துக் கொள்ளுதல் உங்களுக்குடன்பாடாகில், நீங்கள் மீண்டிலங்கைக்குப் போதல் கூடு"மென்ன, அதற்கவர்கள் இசைந்து அங்குநின்றும் புறப்பட்டிலங்கையைவந்தடைந்து, உடனே, அஃதாவது 1410-ல், தம்முளொருவ

ளாகிய ௯-ம் பராக்கிரமவாகுவை யரசனாக வியோகிக்க, அவன் ஜயவர்த்தனபுரியைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு, அங்கிருந்து காலந்தோறும் சீனருக்கு இறைசெலுத்தி 30 வருடமும், அஃதின்றி 22 வருடமும் ஆக 52 வருட மரசுசெய்தான். அதற்கிடையில் அவன் தமிழருடைய செருக்கையெல்லாமடக்கி இலங்கையை முன்போல் ஏகசக்கிராதிபத்தியமாக்கினன். அன்றியு மரசிறைவருமானம் போதாதெனக் கண்டு புதிய வரிகளையு மேற்படுத்தினன். இவனிவ்வா றிராச்சியம்பண்ணி யிறந்துபோக, அவன் பௌத்திரன் (Jayabahu II.) ௨-ம் ஜயபாகு அரசனாகி 2 வருட மரசியற்றிவர, அவன் இனத்தவனாகிய 6-ம் புவனேகவாகு படையெடுத்து, அவனைப் போரில்வென்று பட்டாபிஷேகம் பண்ணிக்கொண் டேழுவருட மாண்டான். அவனுக்குப்பின் அவன் சுவீகாரபுத்திரனாகிய ௭-ம் பராக்கிரமவாகு அரசனாகி 14 வருடமாண்டான். இப் பராக்கிரமவாகுவுக்குப்பின், பட்டம்பெற நெடுநாளாகக் காத்திருந்தவனும், முன்னைப் புவனேகவாகுவுக்குத் தம்பியுமாகியவொருவன், பராக்கிரமவாகு இறந்தவுடன் அவனுடைய சுவீகாரபுத்திரன் பட்டம்பெறக் கொண்ட நோக்கத்தை யுணர்ந்து, அப்புத்திரனையும் அவன் பத்தினிகளையுங் கொன்று, (Prakramabahu VIII.) வீரபராக்கிரமவாகு என்னும் பட்டப்பெயர்தாங்கி, அரசனாகி, துலைகாவொப்ப, 20 வருடமாண்டு, 1505-ல் இறந்தான்.

அப்பால் அவன் குமாரருளொருவனாகிய (Prakramabahu IX.) தரும பராக்கிரமவாகு சிம்மாசனாதிபதியானான். இவன் காலத்தில்தான் பறங்கிக்காரர் முதன் முதல் இலங்கைக்கு வந்தார். வந்தவாறு பின்னாற் கூறுவாம்.

## ௫. அதிகாரம்.

[யாழ்ப்பாணச்சரித்திரம்:—
பறங்கிக்காரர் வந்ததுபரியந்தம்.]

மேற்போந்த அதிகாரத்திலே யாழ்ப்பாணமென வோரிடங் குறிக்கப்பட்டிருத்தலாலும், அதுவுமோர் பிரத்தியேகமான இராச்சியமாயிருந்தமையாலும் அதன் வரலாற்றையும், பறங்கிக்காரர் வந்ததுவரையில் இங்கு கூறுதல் ஆவசியகமாயிற்று. இத்தீவகற்பம் இலங்கைக்குச் சேர்ந்ததாயினும், அதனின் வேறாய்த் தமிழரசரால் ஆளப்பட்டு வந்தது. அத்தமிழரசரோ, தம் வழிமுறைச் சரித்திரத்தை, சிங்களர் மகாவமிசமென்னும் பேரால் ஒரு நூலையெழுதி வைத்ததுபோல் எழுதிவைத்தாரில்லை. ஆயி

னும், இந்நாட்டுச் சரித்திரம் கயிலாசமாலை வையபாமாலை முதலிய நூல்க ளில் அபூரணமாய்க் காணப்படும்.

யாழ்ப்பாணம் ஆதியில் சிங்களரால் நாகத்தீவு என்றும், தமிழரால் மணற்றிடல் என்றும் வழங்கப்பட்டு வந்தது.

ஏறக்குறைய, 2000 வருடங்களுக்குமுன் தஞ்சைநகரில் ஓர் இராஜ குமாரி தனது முகரூபம் குதிரைமுகத்தை யொத்திருந்தமையால், அத னைப் பரிகரிக்கவேண்டி விரதாதிகளனுட்டித்து வருநாளில், ஓரிரவு, "புத்திரி! கீரிமலையருகிலுள்ள சிற்றாற்றில் போய் ஸ்நானம்செய் உன்மு கம் மாறும்" என்றோர் கனவுகண்டு, அவ்வாறே அங்குநின்றும் பரிவாரங் களுடன் புறப்பட்டுத் தோணிமேல் ஊர்ந்து கீரிமலையை யடைந்து, அவ் வருவிகளில் தோயந்தமாத்திரத்தில், குதிரைமுகம் போக, நன்முகம் பெ ற்றாள். இதன் நிமித்தம் அவள் சிலகாலம் தங்கியிருந்தவிடத்தை மாவி ட்டபுரமென வழங்குவர். அதுநிற்க, அவளுடன் கூடிவந்த ஓர் பாணன்; தன் யாழ்வல்லபத்தைக் கண்டியரசனுக்குக் காட்டிப் பரிசுபெறவேண்டு மென்னும் ஆசைபற்றி யரசனிடம் சென்று அவன் சமுகத்தில், கேட் டோர் மாசுணம்போல் மயங்கி யானந்தமுறும்படி, வீணாகானம் செய்தான்' அரசன் அவன்சாதுரியத்துக்கு மெச்சி, "பாண, நாகத்தீவு என்னும் குடி யற்ற மணல்மேட்டை உனக்குப் பரிசாக ஈந்தோம்; பெறுக" என்று, ஓர் தாமிரசாசனமு முடனியற்றிக் கைச்சாத்திட் டளித்தான். அதனை யாழ் ப்பாணன் பெற்று உடனே சோழதேயத்துக்கேகி, அங்குநின்றும் பார்ப்பா ராதியாம் நான்கு வருணத்தினரிலும் அநேகரைக் கொணர்ந்து, தான்பெ ற்ற சிற்றூரில் குடியேற்றி, அவ்வூர்க்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு, தானே அரசனுயினன். அவன் சிலநாளாண்டிருந் திறந்துபோக, அவன் மந்திரிகள் பாண்டிநாட்டினின்றும் சிங்க ஆரியன் என்னுமோர் இராஜ குமாரனை வரித்து அரசனாக்கினர்.

அவனுக்கு ஒரு கை, கூழங்கையாயிருந்ததுபற்றி அவனைக் கூழங் கையன் என்பர். அவன் யாழ்ப்பாணநாட்டுடன் வன்னியையும், மன்னா ரின் றெற்குள்ள நாடுகளையும் கட்டி, நல்லூரிலிருந்தாண்டான். அவனு க்குப்பின் வந்தோர், ஆரியச் சக்கிரவர்த்திகள் என்னும் பட்டப்பெயர் தாங்கி அடிக்கடி சிங்களருடன் போர்மலைந்து அரசியற்றி வந்தார். இவ ர்களுள் ஒருவன், கி. அ. 1304-ல், குலசேகரபாண்டியனால் அனுப்பப்ப ட்ட சேனைகளை யழைத்துக்கொண்டு புவனேகவாகுவுடன் போர்புரிந்து யப்பாகுநகரையும் புத்த தசனத்தையும் கவர்ந்தான். வேறொருவன், அரா கேசுபரன் காலத்தில், கொழும்பு, நீர்கொழும்பு, சலாபம் என்னுமிடங்க

ளில் கோட்டைகளைக் கட்டுவித்து, மேல்நாடெங்கும் தன்கோலை செலுத்தி அளகேசுபரனிடத்தில் இறையும் வாங்கினான்.

இப்படியவர்கள் வலிமையுடையவர்களாய் நெடுங்கால மரசுபுரிந்து வருகையில், ஜெயவர்த்தனபுரியில் அரசாண்டிருந்த 6-ம் பராக்கிரமவாகு, கி. அ. 1410-ல், தன்மகனை, யாழ்ப்பாணத்தரசனுடன் போர்செய்யுமாறு ஓர் சேனையோடு மனுப்ப, அவன் யாழ்ப்பாணம் வந்து கொடிய யுத்தம் செய்து, அரசனைக் கொன்று, அவன் மனைமக்களைப் பிடித்துத் தந்தையிடங் கொண்டுபோய் ஒப்பித்தான். அதனால் பராக்கிரமவாகு அவன் திறமையை யறிந்து அவனையே யாழ்ப்பாணநாட்டுக் கதிபதியாக்கினான்.

இப்படிச் சிங்களருக்குக் கிடைத்த யாழ்ப்பாணத் தாதினம் நீடித்து நிற்கவில்லை. ஏனெனில், இலங்கைக்குப் பறங்கிக்காரர் வந்தவுடன் சிங்களா நிலைதளம்ப, யாழ்ப்பாணத்தரசர் தலையெழுப்பியதாலென்க.

இனிப் பறங்கிக்காரர் வந்தவாறு கூறுதும்:—

---

## III. பறங்கிக்காரர்காலம்.

### க. அதிகாரம்.

[பறங்கிக்காரர் வந்ததுமுதல்;
இராஜசிங்கன் அரசனானதுபரியந்தம்]

இலங்கையை ஐரோப்பியர் முதன்முதல் அறியவந்ததற்குக் காரணம், கறுவாப்பட்டையென்பது அநேகர் துணிபு. கிறிஸ்த பூர்வாப்தம். 484-ல் இருந்த (Herodotus) ஹெரோதோத்து என்னுங் கிரேக்க பௌராணிகர், இத்தீவைப்பற்றிச் சற்றே அறிந்திருந்தாரென அவரியற்றிய நூலால் விளங்குகின்றது. இனி, இத்தீவைப்பற்றி யார்தாம் ஆதியில் நன்குயறிந்திருந்தாரென ஆராயுமிடத்து, கி. பூ. 330-ம் ஆண்டளவிலிருந்த (Onesicritus) ஒனசைக்கிறிது என்பவரையே எடுத்துக்கூற இடமாகின்றது. கிறிஸ்த அப்தாரம்பத்தில்தான் ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் வர்த்தகசம்பந்தம் கிரமமாகவுண்டாகத் தொடங்கிற்று. அக்காலத்தில், துலுக்க வர்த்தகக் கப்பல்கள் நூற்றுக்குக்குறையாமல் செங்கடற்றுறையினின்றும் ஆங்குள்ள பொருள்களையேற்றிக்கொண்டு, மலையாளக்கரை, இலங்கைக்கரைமுதலிய விடங்களையடைந்து, பண்டமாற்றல்செய்து மீளும். அப்படி மாற்றி யிங்கிருந்து கொண்டுபோகப்படும் பொருள்கள், யானை, யானைத்தந்தம், ஆமையோடு, முத்து, கறுவாப்பட்டை யென்பனவாம்.

இன்னும், கி. அ. 270-ம் ஆண்டளவிலிருந்த ஓர் ஐரோப்பிய பௌராணிகர், இலங்கையானது மிகப் பெரிய தீவென்றும் அங்குள்ளாரெல்லோரும் ஐரோப்பியநாட்டுப் பெண்கள்போல் தலைமயிரை வளர்த்து முடித்துக்கொள்பவர்களென்றும் கூறுகின்றார். ஈதன்றி, 1284-ல் (Marco Paulo) மார்க்குபாவுலு என்னும் யாத்திரிகர் ஐரோப்பாவினின்றும் புறப்பட்டுத் தேசசஞ்சாரஞ்செய்துவருகையில் இலங்கைக்கு வந்துபோயினரென அவர்கூறிய இலங்காலக்ஷணம் ஒத்திருத்தலின், நன்கு புலப்படுகின்றது.

அது நிற்க; கி. அ. 1400-க்குப் பின்னரன்றி அதற்குமுன் ஐரோப்பாவினின்றும் கப்பல்கள் இலங்கைக்குநேராக வந்ததில்லை. அந்நாளில், வர்த்தகர்கள், பாதிவழி கடல்மார்க்கமாயும், பாதி தரைமார்க்கமாயும் போவர். அதனால் செலவு மதிகமாகப் பொருள்விலையு முயர்வாயிருந்தது.

1450-ன்மேல், ஐரோப்பியருள்ளும் பறங்கிக்காரரே கடற்பிரயாணத்தில் அதியூக்கமுடையவராயிருந்தார். அவர்கள் நாடு, ஐரோப்பாவிலே தென்கீழ்த்திசையிலுள்ள "போர்த்துக்கால்" என்பது. அக்காலத்தில் அவர்கள் அநேக யாத்திரைகள்செய்து, ஆபிரிக்காக்கரையில், பல இடங்களை நவமாய்க் கண்டுபிடித்திருந்தார்கள். இப்படியிருக்க 1486-ல் அந்நாட்டுக் கரசனாயிருந்த (John) ஜான் என்பவன், மேன்மேலும் யாத்திரைசெய்து கிழக்கேயுள்ள தேசங்களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற பேரவாவினால், மாலுமிவேலையில் அதிசமர்த்தனான (Bartholomew Diaz) பார்த்தலோமையதீயாஸ் என்பவனையும், அவன் அதிகாரத்துக்குள் அநேக கப்பல்களையும் சேர்த்தனுப்பினான். அவ்வாறு வழிக்கொண்ட தீயாஸ், தன் கப்பல்களை நடத்திக்கொண்டு கிழக்குநோக்கி அநேகமாசங்களாகக் கரைகாணாது யாத்திரைசெய்து, கொடிய மாருதங்களில் அகப்பட்டும் நிரங்குலையாமல், ஆபிரிக்காவின் தென்முனையை அதிப்பிரயாசையோடும் தாண்டி, அப்பால் அதனை வளைந்து வடக்கேசெல்லப் பிரயத்தனப்பட்டபோது, கப்பலோட்டிகள் சம்மதப்படாமையால், அவ்வளவில் நிறுத்தித் தன் ஜனனதேசத்தைநோக்கிமீண்டான். மீண்டபோது அம்முனையைப் (Cape of Storms) புயன்முனை யென்னும் பெயரால் குறித்துக்கொண்டு, தன்னூர்போய்ச் சேர்ந்தவுடன், அரசனுக்கு, தான் புறப்பட்டதுமுதல் மீண்டநாள்வரை நிகழ்ந்தவற்றையெல்லா முரைத்தான். அதனைக் கேட்ட அரசன் தன் முயற்சிக்கு அநுகூலக்காட்சி யுண்டானமைகாரணமாக, அம்முனைக்கு அப்பெயரைமாற்றி (Cape of Good Hope) நன்நம்பிக்கைமுனையெனப் பெயரிட்டான்.

அப்பால் 1497-ல் (Vasco de Gama) வாஸ்கொ தே காமா என்னும் கப்பல் அதிபதி, தன ததிகாரத்துக்குள் சில கப்பல்களைக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு, 10 மாசம்வரையி லோடி, ஈற்றில் மலையாளக் கரையில் கள்ளிக்கோட்டைக்குச் சமீபமாக வந்தடைந்தான். அவனை இந்தியர் அதிபக்ஷமாய் நடத்திவர, துலுக்கவர்த்தகரோ, தங்களுக்கு எதிரிகளுண்டாயினரெனக் கண்டு பொருமையுற்று வஞ்சனையிழைக்கத் துணிந்தார். அப்படியிருந்தும், "வாஸ்கோ தெ காமா" தனக்குவேண்டிய வர்த்தகப்பொருள்களை ஏராளமாய் வாங்கி யேற்றிக்கொண்டு மீண்டான். இதன்பின்னர்ப் பறங்கிக்காரர், அதுவேவழியாய் அடிக்கடி வரத்தொடங்கி இந்தியாவிலும் சில பட்டணங்களைச் சுயாதீனப்படுத்தினர்.

பின்னர், 1505-ல் இந்திய பறங்கிநாட்டுக் கதிபனாயிருந்த (Francisco D'Almeida) பிறன்சிஸ்கோ தல்மேதா என்பவன், மாலைதீவுநோக்கிச் சென்ற துலுக்கவர்த்தகக் கப்பல்களைத் தேடிச் சூறையாடிவரும்படி, தன்மகன் (Lorenzo) லோறன்சோ என்பவனை யனுப்பினான். அப்படியே அவனும் புறப்பட்டுச் சிலநாளாக யாத்திரைசெய்து போகையில், காற்று எதிரிட்டு மோதினமையால், காத்திராப்பிரகாரமாகக் கொழும்புக்கரையில் வந்தடைந்தான். உடனே துறைகாவலர் அச்சமாசாரத்தைக் கடிதமூலமாகப் பராக்கிரமவாகுவுக்குத் தெரிவித்தார். அவ்வோலையாவது:—"*இலங்கையிற் செங்கோலோச்சி யாவரையும் நீதிவழி இரக்ஷிக்கும் எங்கள் அண்ணலே! இன்று எங்கள் துறையில், அதிவெண்மைநிறமும், அழகுமுடையவோர் நூதனஜாதியினர் வந்திறங்கியிருக்கின்றார்கள். அவர்கள் இரும்பினாற்செய்த தொப்பியும் செருப்பு மணிந்தவர்களாய் எப்போதும் ஓடி யுலாவிக்கொண்டே திரிகின்றார்கள். அவர்கள் உண்பது வெண்ணிறக் கற்கள்; பருகுவதோ இரத்த பானம். ஒருமீனுக்கு இரண்டு மூன்று "இரிதி" பெறுமான பொன் வெள்ளி நாணயங்களைக் கொடுத்து வாங்குவார்கள். அவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகள் யுகாந்தர பருவதத்தின்மேல் இடியிடிப்பதுபோல் வெடித்து, தூரத்தேயுள்ள இரும்புமதிலையும் தகர்த்து நாசஞ்செய்யத்தக்க குண்டுகளைப் பொழிபவைகள். ஆதலால் இதனைவிரைந் தருசலியஸ்தராய்த் தமது திருச்சமுகத்துக்கு எழுதன்மேயினேம். இங்ஙனம், தங்கள் பாதசேவைக்காரரான துறைகாவலர்—." என்பதாம். [அவர்கள், தொப்பி பாதரக்ஷைகளை இரும்பு என்றது கருநிறம்பற்றிப்போலும். அது காட்சிமயக்கு. கல் இரத்தம் என்றது முறையே உரொட்டி, திராக்ஷாரசங்களை.]

---

*இலங்கையைப் பறங்கிக்காரர் "செலேன்" என்று சொல்லுவர்.

இதனை யரசன்கேட்டுப் பிரமித்து, தன் மந்திரிகளை யழைத்து, "இவ் வந்நியரோடு சமாதானப் படுதலா? யுத்தஞ்செய்தலா? எது யுக்தம்?" என்று கடாவினன். அதற்குப்பலரும் பலவாறுபேச, ஈற்றில் சக்கரன் என்பவன் எழுந்து, "அரசனே, யான்போய் அவர்கள் நிலைமையை ஒற்றாடி முடிவு தெரிவிக்கும் வரையில் பதறாதிரும்" என்றான். அதற்கு அரசனிசைந்து விடைதர, சக்கரனும் அரசனைவணங்கிப் புறப்பட்டு மாறுவேடம்பூண்டு கொழும்புக்கேகி, அங்கே பறங்கிக்காரருடைய நிலையைச் சூசித்துணர்ந்து, அங்கிருந்தபடியே. அரசனுக்கு, "இவ் விரணங்க சூரருடன் யாம் ஐக்கியமாதலே தகுதியன்றி, அவருடன் போர்முட்டின் பழுதுறும்" என்றோர் திருமுகம்வரைந் தனுப்பிவிட்டு, பின்னர்ப் பறங்கிக்காரரை அவர்க்குகந்தவரால் தூண்டி, அரசனிடத்துக்கு இரண்டுதூதரை யனுப்புமாறு செய்தான். அங்ஙன மனுப்பப்பட்ட தூதரைப் பராக்கிரமவாகு உபசரித்து, அவர்களிடம் தான்பெற்ற உபகாரங்களுக்குப் பிரதியுபகாரங்கள் பரிமாறி, ஓர் சமாதான உடன்படிக்கையு மியற்றி யனுப்பினான்.

இதன்பின்னர்ப் பறங்கிக்காரர் இலங்கையை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்குப் போய், அங்கு நிகழ்ந்த கலகத்தால் பதின்மூன்று வருடம்வரையில் மீளாதிருந்தார். அப்பால் 1518-ல் (Lopez Suarez Alvarengo) லோப்பே சுவாரே அல்வரங்கோ என்பவன், 16-கப்பல்கொண்ட சேனா சைனியங்களுடன், கோட்டை கட்டற்கு வேண்டிய சிற்பர்களையும் தளபாடங்களையுங் கொண்டு கொழும்பை வந்தடைந்தான். அதைக்கண்ட துலுக்க வர்த்தகர் தம்வாணிகத்துக்குக் கேடு வந்ததென்றஞ்சிப் பராக்கிரமவாகுவைத் தூண்டி, முன்செய்துகொடுத்த உடன்படிக்கைக்குமாறாய்ப் போர்தொடுக்குமாறுசெய்ய, அவனுமுடனேசென்று அவர்களுடன் பொருதவளவில், அவர்க்குத் தோற்றோடி, அவர்களுடைய யுத்தசாமர்த்தியத்திற்கும் துப்பாக்கி பீரங்கிகளுக்கு மஞ்சினவனாய், அவர்களுடன் மீண்டும் சமாதானம்புகுவான் விண்ணப்பஞ்செய்தான். அவர்களதற்கிசைய, அவர்களுடைய கேள்விப்படி பராக்கிரமவாகுவும், கறுவாப்பட்டை, மாணிக்கம், நீலமணி, யானை முதலிய பொருள்களை வருடந்தோறும் கப்பமாகச் செலுத்தித் திறையரசனாயிருந் தரசியற்றச் சம்மதித் தவ்வாறுசெய்துவந்தான். அதன்பின்பு பறங்கிக்காரர் கொழும்பிலே மண்ணினாலோர் கோட்டையக் கட்டி, அப்பால் 1520-ல் புதுராணுவங்கள் வந்தமாத்திரத்தில் அதனை யிடித்துக் கல்லாற்கட்டி முடித்தார்.

அவர்கள் சீரிவ்வாறாக, அங்கே பராக்கிரமவாகு 22 வருட மரசியற்றி 1527-ல் மாண்டான். உடனே அவனுடைய சகோதரனாகிய (Sakala Rajah) சகலராஜன் என்பவனைப் பிரஜைகளிற் பெரும்பாலார் முடிதரி

க்குமாறு வேண்ட, அவன், அதிநேர்மையுடையவனாயிருந்தமையால், தன்னிலும் விசேடவுரிமையுடைய சகோதரனொருவனிருக்க, தான் அரசனாவது நியாயவிரோதமென்றுரைத்து, அச்சனங்களைச் சமாதானமாக்கி அவர்களால் தன் சகோதரனைவரித்து, அவனுக்கு ௭-ம் விஜயபாகு என்னும் பட்டப்பெயருடன் முடிசூட்டிவைத்து ஆசீர்வதித்துப்போயினான். பின்பு சகலராஜன் கண்ணியமும் அடக்கமுமுடையனாய்த் தன் ஆயுளைக் கழித்தானென்க. இத்துணைத் தயாளகுணம் தற்காலத்துமுண்டா! அரிது!! அரிது!!!

இதற்கிடையில், பறங்கிக்காரர் பலமான பலகோட்டைகளைக் கட்டிமுடித்துக்கொண்டு, கொடுங்கோலோச்சத் தொடங்கி, சூறையாடல், குடிகளையிம்சித்தலாதிய துன்பங்களைச் செய்வாராயினார். இவர்களைப்போலும் கொடியவரை இலங்கை முன் கண்டு கேட்டறியாதெனினும் இழுக்குவராது.

என்னை! ஐரோப்பியருள் மற்றைநாட்டாரெல்லாரும் தத்தம் மூலையில் கிடக்க, பறங்கிக்காரர் மாத்திரம் ஊக்கங்கொண்டு தேசங்களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று துணிந்து, உயிரையும் பொருளையும் லட்சியம்பண்ணாது, அநேக இடையூறுகளை யடைந்தும் சோர்வடையாதவராய், கடல்யாத்திரை செய்து பற்பலநாடுகளை நவமாய்க் கண்டுபிடித்தமையையும், அவர்கள் ஆங்காங்கும் பெற்ற சித்திகளையும், அத்தகையமுயற்சியால் அவர்கள் தங்கள் பறங்கிநாட்டுக்குத் தேடிக்கொண்ட ஈடில்லாத புகழையும் கேட்டுணர்ந்து அவர்கள் பெருமையைப் பாராட்டவேண்டிய நாங்கள், பின்னர் அவர்கள் இந்தியாவில் நடந்துகொண்ட இயல்பை நினைக்குமளவில், சீ! இவர்களைப்போலும் கொடிய மறவருமுண்டோவென்று இகழ்ந்துபேசுதற்கிடனாகின்றது. முதலில் அவர்கள், வர்த்தகசிரேஷ்டர் குருமார் கடற்கொள்ளைக்காரர் என்னும் முத்திறத்தினராய்த் தோற்றினார்கள். அவர்கள் தாங்கள் புறப்பட்டது சிநேகம் வர்த்தகம் மதம் என்னுமிவற்றின் விருத்தியின்பொருட்டே என்று காட்டிக்கொண்டார்கள். அங்ஙனமாகவும், அவர்களுடைய கூட்டத்தாரோ திக்குவிஜயஞ்செய்வான் புறப்பட்ட யுத்தவீரரும் துருத்துவம்பெற்ற சேனாதிபதிகளும், சந்நியாசிகளுமாயிருந்தார். பின்னர் அவர்கள் இந்தியாவில் இடம்பெற்றவுடன், தம் சுயமத போதனைசெய்து தமது நோக்கத்திற்கு ஆரம்பஞ்செய்யவும், அது பயன்பெறாதபோது, "முதலையும் மூர்க்கனும் கொண்டதுவிடா" என்றபடி பிடிவாதக்காரராய் வைரங்கொண்டு வாளால் முடிவுகாணவும் தொடங்கினார். அப்பாலதுவே ஏதுவாக வாணிகத்தொழிலுடன் வாட்படைத் தொழிலையும் நடத்திவந்தார். இவ்வாறே அவர்கள் வர்த்தகசாலையெல்லாம் பின்பு கோட்டைக

ளாக, அவற்றிலிருந்து துரோகயுத்தமும் முறைகேடான அரசும் புரிவாராயினர். அந்நாளில் அவர்கள் துலுக்க வர்த்தகர்களுக்குச் செய்த கொடுமையைச் சொல்லவும் நாவெழாதே! அது "தாவுத் தல் முஜாஹித்தீன்" என்னும் நூலிற் காணப்படும்.

ஆங்கு நடத்தியவாறே இலங்கையிலும் அவர்கள் இடம்பெற்றவுடன் கொடுமைபுரியத் தலைப்பட்டார்கள்.

இவ்வகைக் கொடுமை காரணமாக விஜயபாகு கோபாவிக்கனும், இருபதினாயிரம் பதாதிகளுடன் கொழும்புநகரை வளைந்து, ஐந்துமாசம்வரையில் பறங்கிக்காரரை வெளிநாடவிடாது, யானைக்காட்டை வளைந்த சிங்கக்கூட்டம்போல் காவல்செய்தான். அக்காலத்தில், பஞ்சம் என்னுங் கொடியபாதகன் பகைஞனயிடைப்புக்குப் பறங்கிக்காரருடைய சைனியங்களை வருத்தா திருந்தானேல், அப்போது இலங்கையில் தேசாதிபதியாயிருந்த (De Bretto) தெபிறத்தோ என்பவன், சிங்களர் வந்து அரண்வளைத்த அக்கணத்திலேயே, சண்டமாருதத்தை யெதிர்த்த அம்சதூளிகையைப்போல், அவர்களை ஊதிவிட்டிருப்பன். இச்சமயத்தில் இந்தியாவினின்றும் போசுகீசர் ஓர் மரக்கலத்தில்வருதலும், "தெ பிறத்தோ"வும் பறங்கிகளும் பூரிப்படைந்து, உடனே வெளிப்பட்டு, இங்ஙனம் வருமென் றெண்ணாதிருந்த சிங்களரை நின்றநின்றவிடங்களில் தத்தம் ஆயுதாதிகளை யெடுக்க நேரமற்றவராய்விட்டு, நிலைகெட்டு, முதுகிட்டோடச் செய்தார்.

இவ்வாறு தோற்றோடிய விஜயபாகு, தனக்கு முதல்தாரத்தால் புவனேகவாகு, இறைகபண்டாரன், மாயாதுன்னையென மூவர் புத்திரரிருக்கவும், தன் இளைய மனையாள் மகனாகிய *தேவராஜன்மேலன்புதூண்டி அவனுக்குப் பட்டங்கட்ட நோக்கங்கொண்டான். இதையறிந்த முதற்றாரத்துக்குமாரர் கோபமுற்றுத் தந்தையைநெருக்க, அவன் அவர்களைக் கொல்ல வகைதேடினன். அதற்கவர்கள் தப்பியோடி, ஓர் சேனையைச் சேர்த்துக்கொண்டு, கோட்டைக் காட்டைச் சூறையாடி, அன்றிரவிலேயே தந்தையைக் கொல்வித்து, மற்றைநாளில், மூத்தவனாகிய புவனேகவாகு பட்டத்தரசனாகவும், பண்டாரனும் மாயாதுன்னையென்பவனும் முறையே §இறைகாட்டுக்கும் ||சீதாவாக்கத்துக்கும் குறுநிலமன்னராகவும் முடிதரித்தார். இது நிகழ்ந்தது 1534-ல்.

---

*தேவராஜன்:—இவனை அவ்விளையமனையாளுடைய தம்பியென்றும் பிறர்கூறுப.

§ இறைகம் - பாணந்துறையாற்றுக்குத் தென்பாலிலுள்ள ஓர் நாடு.

||சீதாவாக்கம் - கொழும்புக்குக் கிழக்கேயுள்ள வோரூர். அது முன்னை இராவணன் சீதையைச் சிறைவைத்தவிடம் என்பர்.

இவ்வாறுவந்த (Bhuwanekabahu. VII) எ-ம் புவனேகவாகு தன் புத்திரி புத்திரனாகிய தருமபாலனைத் தனக்குப்பின் அரசனாக்கவெண்ணி அவன் மேல் மிக்க காதலுடையனாயிருந்தான். இதனை மாயாதுன்னை யென்பவனுணர்ந்து, போருக்காயத்தமானான். உடனே புவனேகவாகுவும் பறங்கிக்காரரைத் துணைக்கொண்டு பகைமேற்சென்று சீதாவாக்கத்தை வளைந்தான். அதுகண்ட மாயாதுன்னை, அவர்களையெதிர்க்கப்போந்த வலியற்றவனாய், அவ்விடத்தை விட்டுப் பண்டாரனிடத்துக் கோடி, அவனைப் படைத்துணைகேட்க, அவன் அதற்கு இசைந்தான்போலிசையாது நாளைப் பின்போட்டான்.

பின்னர்ப் புவனேகவாகு தன்விருப்பை நிறைவேற்றுவான் றுணிந்து, பறங்கிக்காரருடைய சகாயத்தையே முற்றும் நாடினவனாய், அப்பிள்ளையைப்போலுமோர் விக்கிரகத்தைப் பொன்னினாலும், அதற்கோர் முடியை நவமணிகளாலு மியற்றுவித்து, சாலப்பு ஆராட்சிவசம் கொடுத்துப் போர்த்துக்கால்நாட்டுக் கனுப்பி, அங்கே அரசனாயிருந்த மூன்றாம்ஜான் என்பவனை, அப்பிள்ளைக்கு முடிசூட்டிய பாவனையாக, அவ்விக்கிரகத்துக்கு மகுடாபிஷேகப்பண்ணி யனுப்புமாறு வேண்டினான். அவ்வாறு சென்றடைந்த சாரணரை ஜான்வேந்தன் வெடிமுழக்காதிய வரிசைகளாலுபசரித்து, ஓர் தினங்குறித்து, அத்தினத்தில், லிஸ்பான் நகரத் தரமனையிலே, அநேகாடம்பரத்துடன் அவ் விக்கிரகத்துக்குத் தன்கையால் முடிகவித்து, (Don Juan Dharmapala) தோன் ஜுவான் தருமபாலன் என வாழ்த்தினான். இது நிகழ்ந்தது 1541-ல்.

இதற்கிடையில், மாயாதுன்னை தன்சகோதரனாகிய பண்டாரனைத் துணைக்கொண்டு புவனேகவாகுவோடு போர் தொடுத்தான். தொடுத்தும், புவனேகவாகுவுக்குப் பறங்கிக்காரர் துணைசெய்தமையால் வெல்லவியலாது முதுகிட்டோடினான். உடனே புவனேகவாகு சீதாவாக்கத்தை எரியூட்டி நாசஞ்செய்தான். அப்பால் ஓர்நாள், புவனேகவாகு பறங்கிப்பிரபுக்கள் சிலருடன் கலியாணியாற்றில் பந்தயத்துக்கு ஓடம்விட்டு விளையாடிக்கொண்டிருக்கையில், பறங்கிக்காரனொருவனாற் சுடப்பட்ட துப்பாக்கிக்குண்டு தற்செயலாய்ப் பாயப்பெற்று உயிர் துறந்தான். [கலியாணியாறு-கழனிகங்கை.]

இவனிப்படி 8 வருட மரசியற்றி யிறந்துபோக, 1542-ல், தருமபாலன் பறங்கிக்காரரால் முடிசூட்டப்பட்டான். உடனே அவனும் அநேக பிரபுக்களும் கிறிஸ்துமதப் பிரவேசஞ்செய்தார். அங்ஙன மவன்செய்தது,

பறங்கிக்காரரைத் தன்வசப்படுத்திக்கொள்ளற் பொருட்டன்றிப் பத்திகாரணமாகவன்றென இலங்கா இதிகாசசக்கிரவர்த்தியாகிய "தென்னன்ற" பண்டிதர்கூறுகின்றார். அதுநிற்க, இவர்களன்றி, இன்னும் அநேக குடிகளானவர்களும் பூச்சியதையாதியவோரொரு காரியத்தைவிரும்பிக் கிறிஸ்தமதானுசாரிகளாயினர். அப்பால், கோட்டைக்காட்டிலிருந்த பௌத்தகுருமாரெல்லோரும் அங்குநின்றும் துரத்தப்பட்டார்.

அப்பால் 1544-ம் வருடமளவில், வச்சிரகாயம் பெற்றவரெனப் போற்றப்படுபவராகிய (Xavier) சவேரியார் உடைய சிட்ரத போதனையாலும், அச்சமயத்தில் பறங்கிக்காரருடைய கடுபிடியே காரணமாக எழுந்த அச்சத்தாலும் அநேகர் மன்னாரிலே உரோமான் கத்தோலிக்க கிறிஸ்தவராயினார்கள். அந்நாளி லந்நாட்டையு முடனாண்டுவந்த யாழ்ப்பாணத்தரசன் திடபத்தியுடைய சைவசமயியா யிருந்தமையால், அக்கிறிஸ்தவர்களில் 600 பேரைக் கழுவிலேற்றிக் கொலைசெய்தான். அன்றியும் அன்று முதல் அத்தீவிற்குக் கிறிஸ்தகுருமார் எவரும் போகலாகாதென ஆஞ்ஞாபித்தான். ஆஞ்ஞாபித்து மென்னை? அவன் சேட்டகுமாரனே கிறிஸ்தமதத்தனாயினன். அதுகண்டு அரசன் சினந்து அப் புத்திரனுயிர்க்கும் கூற்றுவனானன். பின்னர் அவன் சகோதரியும் அம்மதத்திற் பிரவேசித்தாள். அப்பால் தன்மகனையும் இறந்த ராஜகுமாரனுக்குத் தம்பியாயுள்ள தன்மருகனையும் அம்மதப்படுத்தி, அரசன் கொல்வான் என்ற அச்சகாரணமாகச் சிறிதுகாலம் மறைந்தொழுகி, பின் அவர்களைக் கோவைக்கனுப்பினள்.

அப்பால் யாழ்ப்பாணத்தரசன் கிறிஸ்துமார்க்கத்துக்குப் பெரும் விரோதியாய் இடையூறு செய்துவருவதைச் சவேரியார்கண்டு, பறங்கிக்காரருக்கு அபியோகஞ்செய்தார். அதனை அவ்வரசன் அறிந்தமாத்திரத்தில் அச்சமுற்று, சவேரியாரை யதிமரியாதையோ டுபசரித்து, அவரை வணங்கித் தானுங் கிறிஸ்தவனாயினன். பின்பு அவ்வரசன், தன் இராச்சியத்துக்குவேண்டிய சகாயங்களையெல்லாம் சவேரியாரால் பறங்கிக்காரரிடம் பெற்றான்.

இதுநிற்க அங்கே (Maya Dunnai) மாயாதுன்னை, தருமபாலனுக்கு மாறாய்ப் படையெடுத்து, அவன் நாட்டிட் புகுந்து கலகஞ்செய்து, சிறிதுசிறிதாய் மத்தியமாகாணங்களனைத்தையுந் தன்னடிப்படுத்தினன். அப்பால் 1563-ல் கோட்டைக்காட்டையும் வளைந்து, அரசனுக்கா யெதிர்த்துவந்த பறங்கிக்காரருடன் போர்முட்டி, அவர்களி லநேகரை எமபுரஞ்சேர்த்துக் கோட்டையை நன்றாய்க் காவல்செய்து நின்றான். அப்போது

பறங்கிச்சேனாபதி, விழிப்புற்று, "இனி நாமோ வெளிப்படுதலரிது. போசனப்பொருள்களும் போதாமல்முட்டுறப்போகின்றன. ஆதலால், இங்குவிழுந்த பிணங்களையெல்லா மெடுத்துலர்த்திக் கருவாடாக்குவாம்" என்று தன் ஆட்களுக்குக் கட்டளையிட் டவ்வாறு செய்வித்துச் சமயத்தோடு சமயமாய்த் தன் வயிற்றுப்பாட்டுக்கும் முன்னரே ஜாக்கிரதை பண்ணிக்கொண்டானும். பின்பு பறங்கிக்காரர் அக்கோட்டையை மாயாதுன்னைக்குக் கையளித்துவிட்டுக் கொழும்புக்கேகினார்.

இதன்பின்பு, தருமபாலன் அவ்விடத்தைவிட்டுக் கொழும்புக்கேகி, தன் நாடுகளையெல்லாம் பிறர் ஆங்காங்கும் கட்டியாளவிட்டு, அங்கிருந்து வெற்றரசுபுரிந்தான். அப்போது அவனோ கொழும்பு மதிலைத்தாண்டி அப்பால் ஒரு சிறிதும் சென்றதில்லையென * இராஜாவலியென்னு மிதிகாசங்கூறும். இவன், எப்போதும், தன்முயற்சி சிறிதுமின்றிப் பறங்கிக்காரருடைய வலியிலேயே தங்கிநின்றவன்.

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு."

என ஆன்றோர் கூறினராகவும், இவனையோர் பேடியெனலாம்.

## ௨. அதிகாரம்.

[இராஜசிங்கன் அரசனானதுமுதல்; கரையோரநாடுகள் பறங்கிக்காரர் கைப்பட்டதுபரியந்தம்.]

இப்படி மாயாதுன்னை சீதாவாக்கத்திலிருந்து சிலகால மரசுசெய்து 1581-ல் இறக்க, அவன் மகன் (Raja Singha) இராஜசிங்கன் அரசனானான். அவன், தன் இளமைப்பிராயத்திலேயே, தென்னாடுகளில் தன் தந்தைக்குப் பகைவராயிருந்த சில சிற்றரசர்க்குமாறாய், ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு, அவருடன் ஆண்சிங்கம்போன்று அதிவீரபராக்கிரமத்துடன் எதிர்த்து அஞ்சாது யுத்தஞ்செய்தமையால், அவனுக்கு இராஜசிங்கன் என்னும் பட்டப்பெயர் கிடைப்பதாயிற்று என்பர்.

இவன் அரசனானதும், பறங்கிக்காரர், "சீதாவாக்கத்தைக் கைப்பற்றற்கு இதுதான் ஏற்ற சமயம்" என்றெண்ணி, ஒரு பெருஞ்சேனையை அவ்விடத்துக்குப் போக்கினார். அப்போது இராஜசிங்கன் ஓர் பெருஞ்சேனையைச் சேர்த்துக்கொண்டு போர்க்களத்தையணுகி, அங்கே தன் சேனையை ஈரணியாகவகுத்து ஓரணியைப் பின்னேநிறுத்தி, மற்றோரணியுடன் பற

* இராஜX ஆவலி = அரசர்வரிசை.

ங்கிகள்சேனைக்கு முன்சென்று அவரோடன் யுத்தஞ்செய்யுமளவில், பின்னே நின்ற சேனாவீரர், பறங்கிச்சேனையைப் பின்புறமாய்வந்து தாக்க, பறங்கிச்சேனை இருசரங்களுக்கு மிடையிலகப்பட்ட முழவுபோலாயின. இப்படி யிருதிறத்தாரும் முனைந்தெதிர்த்து யுத்தஞ்செய்தபோது, இராஜசிங்கன் ஓர் புரவிமேற்கொண்டு உக்கிர வீரசத்தியோடு சிங்கநாதஞ்செய்து இடசாரி வலசாரியாய்ப் பாய்ந்துபாய்ந்து, பறங்கிகளில் 1700-பேர் வரையில் கண்டதுண்டமாய்ச் சங்கரித்து யுத்தகளமெங்கும் பிணக்காடாக்கினான். இரத்தவெள்ளமோ, யுத்தகளத்திலிடம்பெறாது தேங்கி, யாறுபோலோடிப் புறத்தேபாயத் தொடங்கிற்று. இக்கொடிய யுத்தத்தில், பறங்கிகள், தம்வலியெல்லாம் முற்றத்துறந்து முறிந்தோட, இராஜசிங்கன் கோட்டைக்காட்டைக் கவர்ந்து அதற்குக் காவல்செய்துவிட்டு, அப்பால் கொழும்புக்கேகி அவ் வரணையும் வளைக்கத் தலைப்பட்டான். அப்போது நடுநாடுகளில் ஓர்கலகமுண்டாக, உடனே கொழும்பைக் கைநெகிழ்த்துவிட்டு உள்நாட்டைக் காக்குமாறு விரைந்து சென்று, அங்கே கலகஞ்செய்த பகைவரையெல்லாமெதிர்த்து முதுகிடச்செய்தான். இதனபின்னர் இராஜசிங்கன், தனக்கிடர் செய்யத்தக்க இராஜ வமிசத் தொவ்வொருவரையும் தேடித்தேடி, யாவரையுங் கருவறுத்தான். அப்பால் கண்டியரசனையும் அவன் மனைமக்களோடு அந்நகரைவிட் டோடுமாறுசெய்து, அந்நாட்டையும் தனதடிப்படுத்தினான். அங்ஙனம் ஒளித்தோடிய கண்டியரசன் மன்னாரிலே பறங்கிக்காரரைச் சரணடைந்து, அவர்கேள்விப்படி தன்குடும்பத்தோடு கிறிஸ்தவனாகித் "தொன்பிலிப்பு" என்ற பெயரையும் வகித்தங்கிருந்து சின்னாளிலிறக்க, அவன் புத்திரி "தொன்னாதரினா" என்பவள் அப் பறங்கிக்காரரிடத்திலிருந்து வளர்ந்தாள்.

இதற்கிடையில் இராஜசிங்கன் தன் பௌத்தமதத்தை விட்டுச் சைவசமயி யாயினான். ஆகி, ஐவிசாவெல்லை என்னுமிடத்தில் ஓர் மகாலங்காரமான சிவாலயமொன்றைக் கட்டி முடித்து, பௌத்த குருமாருக்குப் பலவிடர்செய்து, அவர்கள் மதநூல்களை யெல்லாம் தேடித் தேடிக் கண்ட கண்ட விடங்களில் அக்கினியிலிட்டு நாசமாக்கினான். * திருவடி மலையையும் புத்தருடைய வாதீனத்தினின்று நீக்கிச் சைவாசாரியருடைய விசாரகத்தில் வைத்தான். அப்பால் 1586-ல் இராஜசிங்கன் வயோதிகனாகியும் தைரியம்விடாது, மீண்டும் கொழும்பைப் பிடிக்க முயன்று, ஐம்பதினாயிரம் யுத்தவீரரையும், அத்தனை சிற்றாள்களையும், ஈராயிரத்தின் மேற்பட்ட

* இதனை ஆரியர், ஸ்ரீபாதம், சுபகூடம், தேவகூடம், சமந்தகூடம் என்னும் பெயர்களாலும், சிங்களர், சமனொலையென்றும், துலுக்கர் ஆதமலையென்றும் வழங்குவர்,

யானைகளையும், எண்ணிறந்த பொதியெருதுகளையும் கூட்டிக்கொண்டு கொழும்பரணை வளைந்தான். இவ்வளவில்விட்டானோ? இல்லை. ஓர்பெரிய கப்பற்சேனையையுமன்றோ சேர்த்துக் கடல்மேல்நின்ற பறங்கிக்கப்பற்கூட்டத்துக்கு மாறாய்விட்டான். இவ்வாறவளைந்த இராஜசிங்கன் அக்கோட்டையை வழியடைத்துக் காத்து நின்றபோது, "வாழைக்குத்தானீன்ற காய்கூற்றம்" என்றபடி அவன் வமிசத்தவரே அவனுக்குப் பகைவராயினர்:—முன் அவனுக்கஞ்சியோடிப் பறங்கிகளிடத்தில் சரண்புக்கிருந்த தொன்ஜான் என்னும் பெயர் பூண்ட கோணப்பு பண்டாரனென்பவன், கொழும்பில்நின்றும் வேறுவழியாய்ச் சில பிரதானிகளைத் துணைக்கொண்டு சீதாவாக்கத்துக்கோடி அவ்வரணை வளைந்தான். மற்றொருவழியாய்ப் பறங்கிக்காரர் சிலபடைகளை யெழுப்பிவிட்டுத் தென்றேசகளுக்குப்போய்ச் சூறையாடும்படி செய்தார். அங்ஙனஞ்சென்ற பறங்கிவீரர் ஐவிசாவெல்லையிலிருந்த கோயிலைத்தகர்த்து, அதனுள் இருந்த விக்கிரகத்தைப் பங்கப்படுத்தினதுமன்றி, அக்கோயிலினுள் கோவதையும் செய்தார். இதனால், இராஜசிங்கன், தான் ௯ மாசமாகக் கைப்பற்றி நின்ற கோட்டையை விடுத்துப் பின்வாங்கித் தன் நாடுகளைக் காக்கப் போயினான். அவனைக்கண்ட கோணப்பு பண்டாரன் மெல்லமெல்லப் பின்வாங்கிச் செல்லுந்தோறுமெதிர்ப்பட்ட சிற்றூர்களைச் சூறையாடிக்கொண்டு சிலவருடங்களில் மீண்டான்.

இதற்கிடையில் பறங்கிக்காரர்பாடு சற்றே நயப்படத்தொடங்கிற்று. முதலில் ஐவிசாவெல்லையையும் சத்தகோறளையையும் பிடித்துப் பின்னர்க் கண்டியையுங்கவர்ந்தார். உடனே அந்நகருக் கரசனாகத் தொன்பிலிப்பு என்னுமோர் இராஜகுமாரனை யேற்படுத்தினர். அது, தொன்ஜானுக்குப் பெரியதோர் கோபத்தைப் பறங்கிகள்மேலெழுப்பிவிட, அவன் உடனே கண்டிக்கேகி, அங்கே மறைந்திருந்து, சமயம்பார்த்து, நஞ்சிட்டுப் பிலிப்புவைக் கொன்று, பறங்கிகளையும் மேற்கொண்டான்.

பின்னருமோர்முறை இராஜசிங்கன் தன் அதிவிருத்தப்பிராயத்தில் போருக்கெழ நேர்ந்தது. தொன்ஜான் கடுகனுவை மலைவழியில் யுத்தசன்னத்தனாய்த் தன்சேனையோடுவர, இராஜசிங்கன் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு எதிர்த்து அமர்தொடுத்த அளவில், இராஜசிங்கனுடைய சைனியம் சிறிதுநேரஞ் சலிக்காது யுத்தஞ்செய்தும் ஈற்றில் ஆற்றாது பின்வாங்க, ஜான் தன்சேனையைத் தூண்டி மாற்றான் சேனைமேல்விடுத்து ஆட்டுக்கூட்டத்தில் புலிகள்விழுந்தவாறு வீரரைச் சாய்த்துச்சாய்த்துப் போர்க்களமெங்கும் பிணக்காடாக்கி விட்டான். அவ்வேளையில் சூரியனும் இராஜசிங்கன் தோற்பதைக்காணச் சகியாதனபோன்று மேலைக் கடற்புறஞ் செ

ல்ல, இராஜசிங்கன் தன் கிழக்கண்களை மலரவிழித்து, யுத்தகளத்திலமடிந்து சாய்ந்துகிடக்கும் யுத்தவீரரையும், அணியணியாய்ப் பின்னிட்டோடும் சேனுவீரரையும், சத்திரங்களால் ஊறுபட்டுக் குருதிசக்கும் தன் காலையும் கண்டுகலங்கி, "அந்தோ! முடிவுகாலமும் வந்ததென்னை அடுத்ததோ! இற்றைநாள் எனக்கமங்கலநாளாயினதோ! ஈண்டுப் பதினொரு வருடங்காறும் எனக்கு மாறுய்த் தலைநீட்டிய அரசன் யாவன்! இன்றோ என்மாற்றான் என்னிலும் வலியனுனுன். என்வலியோ வயசாற்குன்றியது. பின் யான் செய்யக்கிடப்பதென்னை" என்று வாய்விட்டுப் பிரலாபித்துப் பின்னிட்டான். அப்பால் அவன் தன்காலிற்பெற்ற காயத்தை மருந்திட்டாற்றின் மானபங்கமாமெனக் கருதி, அக்காயத்தோடிருந்தே சின்னுளில் தன் பரிசாரகராலிறந்தான்.

இது நிகழ்ந்தது 1592-ல். இவனிறந்தபோது வயசு 120 என்பர் பறங்கிக்காரர்.

இவனிறத்தலும், அவனுக்குப் பகைவனுயிருந்த Don Jhon Wimala Dharma தோன்ஜான் என்பவன் விமலதருமன் என்னும் பட்டப்பெயருடன் அரசனுயினுன். உடனே அவன், தான்சார்ந்த கிறிஸ்தமதத்தை விட்டு, மீண்டும் பௌத்தனுகி முனனே 1560-ம் ஆண்டளவில் பறங்கிக்காரரால் அபகரித்துக்கொண்டுபோய் நாசஞ்செய்யப்பட்ட பௌத்ததசனத்தைப்போலு மோர் போலித்தசனமொன் றியற்றுவித்து, அதைத்தான் சப்பிரகாமத்தில் சேமிக்கப்பட்டிருக்கக் கண்டெடுத்ததுபோல் சிங்களருக்குரைத்து, அத்தசனத்தை யுடையவனே இலங்காபதியென்ற அவர்கள் கொள்கைப்படி அவர்களால் தன்னை யரசனுக மதிப்பித்தான்.

இது பறங்கிக்காரருக்குப் பெருங்கோபத்தை யுண்டாக்கியதேயாயினும், அவர்களப்போது அவனை யெதிர்க்கும் திறனற்றவராயிருந்தார். அப்படியிருக்கையில் பறங்கித் தளகர்த்தனொருவன் மலாக்காவிலிருந்து கோவைக்குப் புறப்பட்டுக் கொழும்பு மார்க்கமாகவந்து அங்கு நங்கூரம்பாய்ச்சி இறங்கியபோது, இச்சமாசாரங்கள் அவன் காதுக் கெட்டின. அவன் பின்னர்க் கோவைக் கேகியபோது, தான் கேள்விப்பட்டவைகளைத் தேசாதிபதிக்குரைக்க, தேசாதிபதியும், உடனே, அவனையே தலைவனுக நியோகித்து, ஓர்பெருஞ் சேனையுடன் போகுமாறு சொன்னுன். அவன் அவ்வாறு போக ஆயத்தமானபோது தேசாதிபதி அவனையழைத்து, நீ இலங்கையை வெற்றிகொண்டக்கால், மன்னுரி விருப்பவளாகிய கண்டியரசன் புத்திரி தொன்னுகாதரினுவுக்கு நியாயப்படி பட்டங்கட்டிவைத்து மீளுதியென்று அநுமதி கொடுத்தனுப்பினுன்.

இச்சங்கேதத்தைத் தலைமேற்கொண்டு இலங்கையையடைந்த (Pedro Lopez de Souza) பேதுருலோப்பஸ்தூசை யென்னு மத் தளகர்த்

தன், மன்னாருக்கேகி அங்கே கோட்டையிலிருந்த தொன்னகாதரினைக் கண்டு, அவளைச் சேனாநாயகமாகவைத்து, அவளைச்சூழ்ந்து அச்சேனையும், அவளுடைய செல்விக்கைபற்றி அநேகசிங்களரும், புறஞ்செல்ல, யாவரையு நடத்திக்கொண்டு கண்டிக்குச் சென்றான். செல்லுமளவில், வெல்லைக்கணவாயில், யுகாந்தகாலத்து மேகமுழக்கோ, கடலொலியோ வெனப் பிரமிக்குமாறு நாற்றிசையினின்றும் விமலதருமன்பக்கத்துச் சேனைகளுடைய எக்காளமும் ரணபேரியும் கலந்தொலிக்கக் கேட்டுத் தளகர்த்தன் சிறிதுதூரஞ் செல்லாமுன்னே, சரங்களும் குண்டுகளும் வல்லயங்களும் சோனைமேகம்போற் சொரிய, அச் சேனைமுழுமையு மடியோடு நாசப்படுதலும், தொன்னகாதரினை திக்கற்றவளாய் விமலதருமன் கைவசப்பட்டாள். உடனே விமலதருமனும் அவளை வதுவைசெய்து கொண்டான். இது நிகழ்ந்தது 1593-ம் வருடம் அளவில். இதனைக் கோவையிலிருந்தபடி கேள்வியுற்ற பறங்கித்தேசாதிபதி, அதற்கு வைரஞ்சாதிக்க வெண்ணி, மனுஷர் உயிரை மசகம்போல் நினைத்துக் கொடுமைபுரிவதில் தன்னையன்றி உலகில் இணையில்லாத ஓர்கொடிய பறங்கிக்காரனை ஓர் சேனையோடும் 1594-ல் இலங்கைக்கு அனுப்பினான். அவன் கண்டிநாட்டில் செய்த தீமைகள் சொல்லுந்தரத்தவல்ல. என்னை! அவன் வீடுகள்தோறும் புகுந்து அனேகரை அநியாயமாய்க் கொலைசெய்வன். ஸ்திரிகளைக் கைப்பிடித்திழுத்து அவர்கள் கைக்குழந்தைகளைத் திரிகைகளிலிட்டு அவர்கள் கைகளால் திரிக்கச்செய்து கொன்றபின்பு, அவர்களையுஞ் சிரசைக்கொய்துகொல்லுவன். கல்லவ * குலத்துப் பிள்ளைகளைக்காணின், "கல்லோ!" என்னும் மொழி பறங்கிப்பாஷையில் சேவல் என்றர்த்தங்கொள்ளலால், பரிகசித்து, அக்குழந்தைகளை ஈட்டிநுதியில் குத்தி உயர்த்தி, "இவ்விளஞ் சேவல்கள் கூவுந்திறமையைப் பாருங்கள்" எனக் கூவியார்ப்பரித்துக் கொல்லுமாறு தன் சேனாவீரருக் காஞ்ஞைசெய்து, அவ்வாறு அவர்களால் எண்ணில் குழந்தைகளைக் கொல்வித்துக் களிப்பன். இவையன்றியும், மல்வனைப்பாலத்துக்குச் சமீபத்தே அநேக சிங்களரை ஆற்றில் தள்ளி, அதிலிருக்கும் முதலைகளுக் கிரையாக்குவன். [இது ஒருநாளன்று பலநாளாக நடந்தமையால் முதலைகளெல்லாம் சீழ்க்கையூதுங்கால் தண்ணீர்மேல் மிதந்து வாய்திறக்கவும் பழகியிருந்தன.] ஆங்காங்குஞ் சென்று பட்டணங்களை எரியூட்டுவன். ஆடுமாடுகளை வெருட்டிவிடுவன். பழந்தரு விருக்ஷங்களைச் சாய்த்துவிடுவன். குடிகளைப்பிடித்துச் சிறைப்படுத்துவன். ஆலயங்களையிடிப்பன். அந்தோ! இவனு மிவன்சேனைகளு மிவ்வாறுசெய்த கொடுமை பெரிது பெரிது! மிகப்பெரிது!

---

* கல்லவர் - சாலியர்.

இதற்கிடையில், விமலதருமன், தக்க உபாயந்தேடிக் கண்டிநாட்டினின்று மவனைக் கடைசியாய் வெருவியோடச்செய்தான்.

அவனிங்கே யிவ்வாறு கலகஞ்செய்துகொண்டிருக்கையில் அங்கே நாமமாத்திரையில் இலங்காபதியாய்க் கொழும்பிலிருந்த தொன்ஜான் தருமபாலன் தன்பேராலிருந்த நாடுகளையெல்லாம் பறங்கிக்காரருக்குக் கையளித்துவிட்டு, 1581-ம் ஆு மேமீ'த்தில் பரலோகவாசியானான். இவன் அரசனாயிருந்தகாலம் 39 வருடம்.

விஞ்சவிடம் பிடிக்கக் கொஞ்சவிடங்கேட்கும் வஞ்சநெஞ்சராகிய இப் பறங்கிகள் சீரிவ்வாறாக, இச்சமயத்தில் ஐரோப்பாதேயத்திலுள்ள மற்றோர் நாட்டினின்றும் இலங்கைக்குவந்த வேறோர் சாதிவர்த்தகரைப்பற்றிச் சொல்லுதும்:—ஐரோப்பாவிலே, பறங்கிநாட்டுக்கு உத்தரதிசையிலே, இங்கிலாந்துக்குச் சமீபத்தே, ஒல்லாந்துஎன ஓர் சிறுநாடுளது. அந்நாட்டிலுள்ளார் அதியுழப்பும் வர்த்தகப்பிரியமும் சுபமதாபிமானமு முடையவர்கள். அவர்கள் சிலர் 1590 ண்மேல், தமது நாட்டினுக்கு வேண்டிய எலாதிகள் கொள்ளுமாறு சில கப்பல்களோடும் பறங்கிநாட்டுக்குப் போயினர். அப்போது அந்நாட்டரசன் அவ்வொல்லாந்தரது மதப்பற்றியிற் பொறாமையுற்றவனாய், அவர்களிடத்தில் யாதொருபொருளும் கொள்ளலும் விற்றலுமாகாவெனத் தன் நாட்டார்க் காஞ்ஞாபித்தான். அதனால் ஒல்லாந்தர் அபிமானமும் கோபமுமுற்றவராய்த் தமது நாட்டுக்கு மீண்டு, ஒருவருடத்துக்கிடையில், கீழைத்தேய வர்த்தகத்துக்கென்று ஓர் வர்த்தகக்கூட்டத்தை ஏற்படுத்தி, 1595-ல் கப்பற்குழாமொன்றைப் பிரயாணப்படுத்தினர். அக்கப்பல்கள் நன்னம்பிக்கைமுனையைத் தாண்டிச் சாவகத்தீவு முதலிய தீவுகளையும் சேனையுமடைந்து எலாதிகள்மாற்றி மீளுவனவாயின. இவ்வாறு சிலநாள் நடந்தபின்னர், (Spilbergen) ஸ்பில்பேர்ஜன் என்னுமோர் கப்பற்சேனாபதியுடன் மூன்றுகப்பல்கள் இலங்கைக்கனுப்பப்பட்டன. அவைகள் சிந்தாயாத்திரையாய் 1602-ல் மட்டக்களப்பைவந்தடைந்தன. உடனே அச்சேனாபதி கரைப்பட்டுக் கண்டியைநோக்கிச் சென்று, அங்கே தன்வரவை அரசனுக்கறிவித்தான். அவனை விமலதருமனும் தக்கமரியாதையோடும் மிக்க ஆதரத்தோடும் உபசரித்து விருந்திட்டு உறவாடி அவன் விரும்பியவாறெல்லாம் செய்துகொள்ளுமாறு அநுமதிகொடுக்க, அதிபதியும் மகிழ்ந்து கறுவாப்பட்டை மிளகு முதலிய ஏற்றிக்கொண்டு மீண்டான்.

இதன்பின்னர் 1603-ல், மற்றொரு ஒல்லாந்தவர்த்தகக்குழாம் (Sebald de weerd) சீபால்தேவீர்த்து என்னுமோர் கப்பற்றளகருத்தனோடும் வந்து அத்துறையிலேயேயடைய, விமலதருமராஜன் அவனையெதிர்

கொள்ளுமாறு துறைப்புறஞ்சென்றான். அப்போது தலைதெரியாமல் மதுமயக்கெய்திக்கிடந்த அந்தனகர்த்தன் சிறிதும் மரியாதையின்றி யேறுமாறாய் நடக்க, அதனை அரசன் குறிக்கொண்டு, தன்னைச் சூழ்ந்துநின்ற பரிவாரங்களை நோக்கி, "இச் சனங்களைப் பந்தியுங்கள்" என்றாஞ்ஞாபிக்க, அவர்களுமவ்வாறே அவனைப் பிடித்துக்கட்டமுயன்றார். அதனால் பெரிய தள்ளுநூக்குண்டாகிக் கொடிய அமராய்முடிய, தனகர்த்தனும் அவன் பக்ஷத்தாரில் ஐம்பதின்மரும் கொலையுண்டிறந்தார். பின்னர் விமலதருமன் அக் கப்பற்குழாத்து இரண்டாம் அதிபதிக்கு ஓர் சிறியகடிதத்தைப் பறங்கிப்பாஷையில் வரைந்துவிடுத்தான். அதாவது:—"கட்குடியன் தப்பாது கேடுறுவன். கடவுளோ நீதியுடையவர். இனி உங்களுக்குச் சமாதானம் வேண்டுமேல் சமாதானத்துக்கும், அஃதின்றிப் போரேயாயின் போருக்கும் எத்தனப்படுக" என்பதாம். இதனைக்கண்ட அதிபதி அஞ்சிச் சமாதானமாகித் தன்னோக்கத்தை அந்நேரத்துக்குத் தக்கவாறு முடித்துக்கொண்டு தன்னூர்க்குமீண்டான்.

இப்படி விமலதருமன் வீரபராக்கிரமத்துடன் 12 வருடமரசுசெய்து, 1604-ல் இறந்தான். அப்போது, அவனுக்குக் காதரினாவைப்பற்றபுத்திரராகிய விசயபாலன், குமாரசிங்கன் என்னுமிருவரும் அதிபாலியராயிருந்தமையால், முடிதரித்தற்கு அபக்குவிகளாயிருந்தார். அப்போது, ஊவைநாட்டரசனுக்கும், விமலதருமராஜன் தம்பியும் திருவடிமலையிலிருந்த குருவுமாகிய ஒருவனுக்குமிடையே, அப்பிள்ளைகளுடைய சம்ரக்ஷணாதிகாரத்தினைப் பொருட்டு வழக்குண்டாக, குரு, ஊவையரசனைக்கொன்று, காதரினாவை மணமுடித்து, (Senerat) சேனாரதன் எனனும பட்டப்பெயருடன் அரசனாயினான்.

அவனரசியற்றிவருகையில், 1612-ல், ஒல்லாந்தரால் அனுப்பப்பட்ட (Marcellus de Boschouder) மார்செல்லியு தேபாஸ்கூதர் என்பவன் தூதனாய்க் கண்டிக்குவந்தான். அவனை அரசன உபசரித்து ஒருடன்படிக்கை பண்ணிக்கொண்டு, கொட்டியாரத்தில் ஓர் கோட்டையைக்கட்டிக்கொள்ள அநுமதிகொடுத்தான். அவ்வாறே ஒல்லாந்தர் அக்கோட்டையைக் கட்டிமுடித்தலும், பறங்கிகள் வெகுண்டு, (Simon Corea) சீமோன்கோறியாவென்னும் படைத்தலைவனோடு ஓர் சேனையையனுப்பினர். அவன் அக்கோட்டையைவளைந்து, உள்ளிருந்தோரையெல்லாம் வாளுக்கிரையாக்கி மீண்டான். அதனையறிந்த செனரதன் சிறிதுந் தாழ்க்காது பகைசாதிக்கவெண்ணி, அத்துட்டர் தமது நாடுபோய்ச்சேராமுன், ஐயாயிரம் யுத்தவீரருள்ள வோர் சேனையையனுப்பி, அவர்களுக்குத்தக்க தண்டம்புரிவித்தான்.

இதற்கிடையில் காதரினுவுடைய சேட்டபுத்திரன் அவமிருத்தாய் உயிர்துறந்தான். அப்போது காதரினு, தன் மகனைச் செனரதன் நஞ்சூட்டிக் கொன்றிருப்பன் எனச் சங்கையுற்று, மனக்கவலையே பிணியாய்ச் சிலநாளிலிறந்தாள். அவள் மரணிக்கும்போது, பாஸ்குதரையும் ஊவையரசனையும் வரித்து அவர்களிடத்தில் மற்றைய பிள்ளைகளைக் கையடையாய் ஒப்பித்தாள். இது நிகழ்ந்தது 1613-ம் ௵ ஜூலை௴ 20உ யில்.

அடுத்த 1614-ல், பறங்கிகள், கண்டியில்ஓர் "ரோமான்கத்தோலிக்க" தேவாலயமும், குருமாருக்காக ஓர் தவச்சாலையும் கட்டுதற்குச் செனரதனிடம் அநுமதிகேட்க, அரசன் அதற்குடன்படாதுமறுத்தான்.

அப்பால், 1615-ல், செனரதன் பறங்கிகளை இலங்கையினின்றும் அகற்றிவிட விரும்பி, பாஸ்குதரை ஒல்லாந்துக்கனுப்பி, அவ்வொல்லாந்தரிடம் படைத்துணைகேட்பித்தான். அதற்கொல்லாந்தர் மறுக்க, உடனே பாஸ்குதர் "தென்மார்க்கு" நாட்டுக்கேகி, அங்கே செனரதன்பேரால் ஓருடன்படிக்கை பண்ணிக்கொடுத்து, தேனியர்பலரைச் சேனைபாகச் சேர்த்துக்கொண்டு, தானே அதிபதியாகி, இலங்கையை நாடி மீண்டு வருமவழியில், இறந்தான். பின்னர்ச் செனரதன் அத்தேனியரை அங்கீகரிக்க அஞ்சி அவர்களை ஏற்றுக்கொள்ளாது விடுத்தான்.

ஈதிங்ஙனமாக, அங்கே பறங்கிக்காரர், 1591-ல், யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டு, பின், அதையாளும்படி அவ்வூரரசனுக்கே திறைக்காகவிடுத்து, பின்னர்ப் பேரவாவென்னும் பேய்வாய்ப்பட்டு, அவ்வரசன்மேல் விசுவாசகாதகம் எனப் பொய்க்குற்றமொன்று பாரித்து, அவனைத் துரத்திவிட்டு, அவ்வூரைத் தம்மூர்களுடன் கட்டியாண்டார். அப்போது அங்கே 1624-ல் ஓர் கோட்டையைக்கட்டத்தொடங்கி, 1632-ல் முடித்தார்.

இவ்வாறுபெற்ற அந்நாட்டை அவர்கள் 40 வருடம் அரசுசெய்தார். அவர்கள் அக்காலத்திலே மதவிஷயத்திற்புரிந்த கொடுமை சிறிதன்று. அதற்கஞ்சிப் பிராமணரு மங்ஙாளில் அம்மதம் புகுந்தாரென்றால் மற்றோர் செய்திசொல்லவும் வேண்டுமோ? அக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்தாம் இன்னும் ஊர்கள்தோறு மொவ்வொன்று யழிந்துகிடப்பனவ.

அதுவிற்க; 1627-ல், திரிகோணமலை மட்டக்களப்பு என்னுமிடங்களிலும் பறங்கிகள் கோட்டைகளைக்கட்டினார்கள். திரிகோணமலையில், குளக்கோட்டுமகாராஜனால் ஆதியில் கட்டப்பட்டிருந்த ஆயிரக்கால்மண்டபத்தையும் கோணேசர்கோயிலையுமிடித்து, அக்கற்களையெடுத்தே பறங்கிகள் அக்கோட்டையைக் கட்டுவித்தார்கள். அதன்மேல் பறங்கிகள் சிறிதுகாலமாகக் குடிகள் துயர்கூரவும், தம்மனம் களிகூரவும் அரசபுரிந்துவருவாராயினர்.

## ௯. அதிகாரம்.

[கொன்ஸ்தாந்தின் தெசாவுடைய
படைபெழுச்சிமுதல்; பறங்கிக்காரர்
துரத்தப்பட்டது பரியந்தம்.]

அப்பால் செனரதன் கண்டியிலிருந்தபடி போருக்கெத்தனஞ்செய்தி
ருந்தமையை 1630-ல், பறங்கிப்படைத்தலைவனாகிய (Constantine De
Saa) கொன்ஸ்தாந்தின் தெசா என்பவன் உணர்ந்து, அவனுக்கு முந்தி
விட எண்ணி, ஓர் பெருஞ்சேனையோடும் கொழும்பினின்று புறப்பட்டு,
காவல்வழிகளையெல்லாம் தாண்டிக் கண்டிநகருள் நுழைந்தான். இவ்வாறு
பறங்கிகள் வருவார்களென்று சிறிதும் காத்திராத செனரதன், அவர்களைக்
கண்ட அளவில் இடிமுழக்கங்கேட்ட சர்ப்பம்போல் திகைத்து, தைரியங்
குன்றி, யாதுஞ்செய்ய வியலாதவனாய்க் கண்டியை விட்டோடி, ஊவைநா
ட்டுக் காட்டுள் மறைந்தான். அதுகண்டு கொன்ஸ்தாந்தின் கொழும்பை
நோக்கி மீண்டான். அங்கு சென்றமாத்திரத்தில், அங்குள்ளார் அவனை எள
னம பண்ணினமையால், அவன் மறுபடியும் ஓர்சேனையைச்சேர்த்துக்கொ
ண்டு வதுளையையடைந்து, அந்நகரியை அக்கினியால் நாசஞ்செய்தான்.
அந்நகரை அப்போது காதலுமின்ற செனரதன் மகன் இரண்டாம் இராஜ
சிங்கன் உடனே தன் சேனைகளோடும் அவ்விடத்தைவிட் டோடவும்,
கொன்ஸ்தாந்தின் தன் சேனைகளைச் சிரமபரிகாரத்தின் பொருட்டும், வேறு
போருக் காயத்தம்பண்ணுவித்தமாகவும் நடத்திக்கொண்டுபோய் அச்சே
னையோடும் ஓர் மலைமேல் தங்கினான். இப்படியிருக்குநாளில், இராஜசிங்கன்
வெள்ளமென்னச் சேனைகளைத் திரட்டியனுப்ப, அவைகளும் ஓர்நாள் அந்
திப்போதில் அம்மலையை வளைந்து எதிரூன்றின. அப்போது இரவிறுத்த
மையால் போர்முட்டற்கியலாதவராய் இருதிறத்தாரும் தத்தமிடங்களிலி
ருந்து எப்போ விடியும் எப்போ புலருமென்று, காலக்ஷேபத்தின் பொருட்
டுச் சிங்களர் ஆடல்பாடலாலும், பறங்கிகள் தெய்வஸ்தோத்திரங்கள் செய்
வதாலும பொழுது போக்கினர். அப்போது கொன்ஸ்தாந்தின் தனது அணி
கள்தோறும் சென்று, "முன்பொருத வாறுதிறலுடன் பொருதல் வேண்டும
முன்செய்தது போரன்று. இனிவருவதே போர். இதற்குமுன் புகழ்பெ
றப்பொருதீர். இப்போதோ உங்கள் உயிருக்காகப் பொரலாவசியகமாயி
ற்று" என்று தைரியவசனம் பகர்ந்துவந்தான்.

இப்படியிருக்கக் சூக்கிலுமகத்திற்று. உடனே பறங்கிபக்ஷத்துச் சிங்
களமுதலிகளுட் சிலரொழிந்த மற்றியாவரும் தத்தமபடைகளோடும், முன்
னர்க் கண்டியரசனுடைய ஒற்றருடன் தாம் பண்ணிக்கொண்ட சங்கேதப்
படி, தம்மை நம்பிவந்த பறங்கிகளைக் கைவிட்டு, இராஜசிங்கன் பக்ஷமாயி

னார். அதுகண்ட சிங்களசேனாபதிகள் சிறிதுந் தாழ்க்காது போய்ப் பறங்கிகளை வளைய, "துணிந்தார்க்குயிர் துரும்பு" என்றபடி பறங்கிகள் சிறிதுமஞ்சாது, "மாற்றாருயிர்குடிப்போம், ஆற்றாதேல், எம்முயிர்மடிப்போம்" என்று சபதங்கூறி வீராவேசத்துடன் கடும்பலத்துப் பம்பரம்போல் சுழன்று சுழன்று, சிங்களப்படைமேல் விழுந்து, முகூர்த்தந்தோறும் இராஜசிங்கனால் அனுப்பப்பட்டுவரும் உபபலங்களையுமுடன்சேர்த்துச் சங்கரித்தும், தொலையாதெஞ்சிய உபபலங்களால் தம்பலங்களைச் சிறிதுசிறிதாய் மடியக்கொடுத்தும், தம்போருக் கெல்லைகாணாது அஸ்தமயனவரையில் போர் புரிந்தார்கள். அப்போது சூரியனும், "இவர்களிக்கு பசிதாக சிரமங்களோடுநின்று போர்செய்ய நான் பார்த்திருப்பது தருமமா? தருமமன்று" என்று கருணையால் மறைந்தான்போன்று மேற் கடற்புறஞ்சென்று இரவென்னும்படாமுகிழ்த்துமறைந்தான். அதுகண்டு இருதிறததாரும் போரொழிந்து களத்தைவிட்டு நீங்கினர். அவர்களுள், பறங்கிகள் தம் சிரமந்தீர்ப்பது கருத்தாய் ஆவலுடன் மலைமேல் தம்முறைவிடம் தேடிப்போதலும், அங்கே வருணபகவான், "இப்பாதகரை விடலாகாது; இவர்கள் என்பகைவனாகிய அக்கினிபகவானைத் துணைக்கொண்டு, என்னைநம்பியுயிர்வாழுபவராகிய சிங்களருடைய பட்டணங்களை நாசஞ்செய்தவர்கள். ஆதலால் நான் என்பகையைத் தீர்த்தற்கும் அச்சிங்களர் என்மேல்கொண்ட நம்பிக்கைக்குப் பயன்காட்டுதற்கும் ஏற்றசமயம் இதுவல்லதினிவாயாது" என்றெண்ணினான்போன்று, தாரைதாரையாய் மழையையிடையறாதுபொழிந்து, அவர்களைக் குளிரினால் சரீரங்குலைந்து வருந்தவும், படுக்கைக்கிடமில்லாமல் நடுநடுங்கி நிற்கவும் செய்ததுமன்றி, அவர்களுடைய வெடிமருந்தையும் நாசப்படுத்தினான். அப்போது பறங்கிவீரரெல்லோரும் தந்தலைவனாகிய கொன்ஸ்தாந்தினைநோக்கி, "இனி நமக்கிருக்கும் வலி யாது? ஆதலால், இப்போதே தப்பியோடிப் பிழைப்போம்வாரும்" என்றுவேண்ட, வீரத்திறலுடைய அத்தலைவன், நகைத்து, "வீரராயுள்ளவரும் படைமுகத்தில் முன்வைத்தகாலைப் பின்வைப்பரா? எம்முயிரைக்கொண்டு ஓடுதல் புகழன்று. இக்களத்தில் மடிவதே புகழாம்" என்று கூறிமறுத்தான். இப்படியிருக்க, கதிரவனும் அவர்கள் சீரைப் பார்க்கவருவான்போன்று தேரேறினான். உடனே சிங்களர் போர்தொடங்கிப் பறங்கிகளெல்லோரையும் சங்கரித்துப் போர்க்களமெங்கும் காக்கைகள் நாடவும், கழுகுகள் தேடவும், நாய்கள்கூடவும், நரிகள்பாடவும், குருதியோடவும், வீரர் ஆடவும் பிணக்காடாக்கி, ஈற்றில் கொன்ஸ்தாந்தினுடைய சிரசையுங் கருணையின்றிக் கொய்துகொண்டு, சமுத்திர கோஷம்போல் ஜயபேரி முழங்கச் சென்று, சமீபத்திலே ஓர் ஏரியிலே நீராடிநின்ற இராஜசிங்கனுடைய பாதத்தில் வைத்து வணங்கி அவனுடன் இராஜதானிக்கு மீண்டார்.

இப்படிக் கொன்ஸ்தாந்தின் பரலோகம் போக, பறங்கிக்காரரிடமிது காறும் வதிந்தருளிய விஜயலக்குமியும் புறஞ்செல்லத் தொடங்கினாள். அப்பால் செனரதன் கொழும்பைக் கவரமுயன்று சின்னாளில் அதனையும் எளிதில்லையாடிக் காவல் செய்தான். இப்படியிருக்கையில், பறங்கிக்காரருக்குக் கோவையிலிருந்து படைத்துணை வருதலும், அவர்கள்போர்தொடுத்து செனரதனை முதுகிடச்செய்து, அவனைத் தமக்கு வருடந்தோறும் திறையாக இரண்டியானை தரும்படிகேட்க, அவனுமிசைந்து சமாதானப்பட்டான்.

இவன் 30 வருட மரசுபுரிந்து 1634-ல் இறக்க, உ-ம் இராஜசிங்கன் அரசனானான். பின்பு, அவனுடைய தமையன்மாரும் தாயினது முதற்றாரத்துப் புத்திரருமாகிய மற்றிருவர், ஊவை மாத்தளை என்னும் நாடுகளுக்குக் குறுநிலமன்னராகிச் சிறிதுநாளுக்குள், ஒருவனாகிய குமாரசிங்கனிறந்துபோக, மற்றவனாகிய விஜயபாலன் இராஜசிங்கனுடன் போர்தொடுத்து முதுகிட்டோடிக் கோவைநகரையடைந்து பறங்கிகளைத் தஞ்சமாகக் கொண்டான். அந்நாளில் பறங்கிநாட்டதிபதியும் பரிதானப்பிரியனுமான (Diego de Mello) தீக்கோதெமெல்லோ என்பவன் தனக்கு இராஜசிங்கன் காணிக்கையாக யாதுங்கொடுக்கவில்லையென்று அழன்று, 700 பறங்கி வீரரோடும் 28000 சிங்களரோடும் யுத்தசன்னத்தனாய் வழிக்கொண்டு கண்டியை நோக்கி நெருங்குகையில், இராஜசிங்கன் ஓர் சாரணனை யனுப்பி, "நியாயமின்றிப் போருக்குவருதல் நீதியாமோ" வென்று கேட்பித்தும் சட்டைபண்ணாது வீரசூரத்தோடு போருக்கு நெருங்கினான். அதனைக் கண்டு இராஜசிங்கன் கோபாதிக்கனாய் ஓர் சேனையோடும வெல்லனைக்கணவாய் வரையில் சென்று, அங்கே எதிருன்றி நின்று, அவர்கள்மேல் சரங்களையும் வல்லயங்களையும் மாரிபோற் பொழிந்தான். அதனைக்கண்ட பறங்கிபக்கத்துச் சிங்களரெல்லோரும் பறங்கிகளைக் கைவிட்டுச் சிங்கனுடைய யூகத்தை வந்தணைந்தார். அப்போது, நிராயுதனாய் நின்ற சுத்தவீரனொருவன் கைக்கு ஓர் வாளாயுதமெட்டியதுபோல் அவர்கள் வந்துசேர்ந்தமாத்திரத்தில், இராஜசிங்கன் களிப்புற்று, பறங்கிகள் உடலெங்கும் அத்திரம்மொய்க்கவும், சத்திரம் தைக்கவும், சிரம்போனவர்சிலர், கரம்போனவர்சிலர், கால்போனவர்பலர், கண்போனவர்பலர், குடரிழந்தவர்பலர், பிடரிழந்தவர் பலர், பலராய்ச்சாய்து மாய்ந்து யுத்தகளத்தில் விழும்படி ஓர்பகலும இரவும் ஓயாது போராடி, ஈற்றில் அப்பறங்கிகளில் முப்பத்து மூவர் ஒழிந்தவனையோரை யொருங்கே சங்கரித்து வாகைமாலை சூடிப் போர்க்களத்தினின்றும் நீங்கினான்.

இப்பால் இராஜசிங்கன், இனிமேற் பறங்கிக்காரர் இலங்கையிலிருப்பாராயின் அவரால் தனக்கு இடர்கள் இடையறாது விளைந்துகொண்டேயிருக்குமென்று நினைந்து, அவரையொருங்கே இலங்கையினின்றும் துரத்திவிடும்பொருட்டு வத்தாவியிலிருந்த ஒல்லாந்தரிடம் படைத்துணைகேட்டு ஓர் தூதனையனுப்பினான். அவர்களு மக்கேள்விக்குடன்பட்டு, இராஜகாரியஸ்தர் சிலரைக் கண்டிக்கனுப்பினார்கள். அவர்களை இராஜசிங்கன் உபசரித்து, "யுத்தத்தின்பொருட்டு நேருஞ் செலவுகள் கண்டியரசனாற் பரிகரிக்கப்படுவனவாயின், வேண்டியசேனைகளையனுப்புவதும், பறங்கிகளைத் துரத்தியபின் கோட்டைகளை அரசனிடம் ஒப்பிப்பதும் ஒல்லாந்தர்கடன்" எனவும், "அவ்வுபகாரத்திற்குப் பிரதியாய் அரசனால் விடற்பாலது மிளகு கறுவாப்பட்டை என்னும் சரக்குகளின் வியாபாரசுதந்திரம்" எனவும் ஓர் பொருத்தப்பத்திரமெழுதி, இருதிறத்தாரும் கைச்சாத்திட்டபின், உறவாடி விடைகொடுத்தனுப்பினான். அக்காரியஸ்தர்களோடு இராஜசிங்கன் பேசும்போதெல்லாம் தலையிற்கிரீடமும், கையிற்கட்கமும், தேகத்தில் இரத்தினாபரணங்களும் பொற்சங்கிலிகளும் கிடந்திலங்க, நின்றுகொண்டே வார்த்தையாடினன். இவ்வாறு ஐரோப்பியர்க்கு மரியாதைகாட்டி இழிவந்த செயலுக்குடன்பட்டவன் இவனே அன்றி, இவனுக்குமுன் இவன்குலத்தோரெவரேனுமில்லை.

அதுநிற்க; இங்கு நிகழ்ந்தவற்றையெல்லா மறிந்த கொழும்புப் பறங்கியதிபதி, வரவிருக்கும் மாற்றான் வலியையுணர்ந்து அஞ்சி, தான் முந்திக்கொள்ளவேண்டுமென்றெண்ணி, அவ்வாறே யோர்படையோடும் கண்டிக்கேகிப் போரில்மேற்கொண்டு அந்நகரை அக்கினிவாய்ப்படுத்திமீண்டான். மீளுமளவில், இராஜசிங்கனுடைய சேனாவீரரெல்லாரும் திரண்டுவந்து அவர்களை வழிமறித்து யுத்தஞ்செய்து யாவரையுங்கொன்று, அவர்களுடைய சிரசுகளையெல்லாஞ் சேர்த்து அடிபரந்து நுனிகூர்ந்த வோர் கோபுரம்போலடுக்கித் தம்மரசனுக்குக் காட்டினார்கள்.

இதுநிகழ்ந்த சின்னாளில், முன்கூறிப்போன சங்கேதப்படி ஒல்லாந்தர், (Westerwold) வெஸ்தர்வோல்து என்னும் கப்பற்சேனாபதியுடன் ஓர்சேனையையனுப்ப, அவன் மட்டக்களப்பில் வந்திறங்கி, அங்கே இரண்டு பீரங்கிப் பித்திகைகளை அமைத்துக்கொண்டு அந்நகரையே வளைந்து பறங்கிகளுடன் போர் தொடுத்தான். அப்போது பறங்கிகள் சிறிதுநேரம் மூரணிப்பார்த்தும் முடியாமல் சமாதானங்கோரி வெண்கொடியுயர்த்திப் போரைநிறுத்தி, நாகபட்டணத்துக்குத் தங்களைத் தங்கள் ஆயுதாதிகளோடும் போயகலுமாறு விடும்படி வேண்டினர். அதற்கு ஒல்லாந்தர் இசைதலும், அவர்க ளவ்வாறே அங்குவிட்டகன்றார். அப்பால் திரிகோணமலையையும்

கவர்ந்து, இராஜசிங்கனுடைய ஏவலின்வழி அவ்விருகோட்டைகளையும் தகர்த்து அவை கிடந்தவிடமும் தெரியாவண்ணம் அழித்துவிட்டார். இது நிகழ்ந்தது 1639-ல்.

அடுத்தவருடத்தில் சடுதியாய் 12 ஒல்லாந்த மரக்கலங்கள் கொழும்பையடைந்து, அங்குநில்லாது நீர்கொழும்பைநோக்கிச் சென்று, அங்கே 2000 போர்மீளிகளை இறக்கிவிட, அம்மீளிகள் அந்நகர்க் காவல்வீரரையெல்லாம் கொன்று கோட்டையைப்பிடித்தார். அதன்மேல், அக்கோட்டையைச்சூழக் களிமண்ணால் ஓரணையையும், அகன்றதோரகழியையும் அமைத்து, அதில் 800-வீரரையும், 6-பீரங்கிகளையும் வைத்துவிட்டுக் காலியைநோக்கி மீண்டார். அங்கடைந்தபோது, அக்கோட்டையை எளிதிற் கவருதல் கூடாமல், 18 நாட்காறும் வளைந்துநின்று, 19-ம் நாளில் 5 நாழிகைநேரம் போராடி ஈற்றில் சயங்கொண்டு அதனையுங்கவர்ந்தார்.

இப்படியிருக்க, 1640-ல் கோவையதிபதிவந்தான். அவனைக் கண்டமாத்திரத்தில் பறங்கிகள் தைரியமடைந்து நீர்கொழும்புக்குப்போய்ப் போராடி ஒல்லாந்தரைக் கீழ்க்கண்டு, மீண்டும் நீர்கொழும்பைப்பிடித்தார். அப்பால் 1644-ல், ஒல்லாந்தர் மீண்டும் அந்நகரைவளைத்து முன்போல் பறங்கிகளை ஓட்டிவிட்டார்.

இதன்பின்னர் ஐரோப்பாவில் பறங்கிகளும் ஒல்லாந்தருமிணங்கி, சிறிதுகாலம் தம்முள் போரொழிந்திருக்கவும், தத்தமக்கு இலங்கையிலுள்ள ஊர்களைத் தாந்தாமே ஆளவும் உடன்பட்டு ஓர் பொருத்தச்சாசனம் பண்ணிக்கொண்டார். அதற்குத் தவறாம லிருதிறத்தாரும் 10 வருடகாலம் அரசுசெய்தார்.

இதன்மேல் பறங்கித்தேசாதிபதியாகிய (Homen) ஹோமேன் என்பவனுக்கும் அவனுடைய சேனைவீரருக்குமிடையே பிரிவினையுண்டாக, சேனைவீரர் அவனைச் சிறைச்சாலையிலடைத்தார். அப்போது ஒல்லாந்தர் இதுதான் நமக்குஞ்சமயமென்று இராஜசிங்கனையுந் துணைக்கொண்டு படையெடுத்து, 1656-ல் கொழும்பைவளைந்து கோட்டையை வழிமடுத்துக் காவல்செய்துநின்றார். அதனாற் கோட்டைக்குள்ளிருந்த பறங்கிகள், வெளிப்பட்டுப் போசனப்பொருள்கள் வாங்குவதற் கியலாதவராய்ப் பசிநோயால் உள்ளிருந்தபடியே வருந்துவாராயினர். அங்ஙனம்வருந்தி ஆற்றாதவராய் ஈற்றில் விதிச்சீட்டுப்போட்டு, அச்சீட்டுப்பிரகாரம் தம்முள்சிலரைத் தினந்தோறுங் கொன்றுகொன்றருந்திச் சிலகாலங்கழித்துவந்தார். அப்போது பசிக்கொடுமையால் ஓர்மாது தன்பிள்ளையையும் கொன்றருந்தினளாமென்றால் அக்காலத்தில் அவர்கள் பட்டதுன்பம் இவ்வகையதென்று சொல்ல

வும் வேண்டுமோ? இவ்வாறு எழுமாதம் கழிந்தபின்பு, பறங்கிகள் தமக்கினி மீட்சியில்லையெனக் கண்டு அஞ்சி, "எங்களை விட்டுவிடின் நாங்கள் எங்கள பொருள்களோடும் யாழ்ப்பாணமோடிப் பிழைக்கிறோம்" என்றிரந்தார். அதனைக்கேட்ட ஒல்லாந்தர் கருணைகூர்ந்து அவர்களைவிடுத்து, அப்பறங்கிகள் 140 வருடமாக ஆண்டுவந்த கொழும்பரணைக் கைக்கொண்டு வெற்றியுயர்த்தி விழவுகொண்டாடினர். இது நிகழ்ந்தது 1656-ம் ௵ மேய௴ 10௳.

இதற்கு முன்வருடத்தில் களுத்துறைபிடிக்கப்பட்டது. அவ்வருடத்திலேயே யாழ்ப்பாணத்துப் பறங்கித் தேசாதிபதியாகிய அந்தோனி என்பவன் கொழும்புக்கு வரும்வழியில் ஒல்லாந்தர்கைப்பட்டான்.

அது நிற்க, கொழும்பில் விடுபட்ட பறங்கிகள் யாழ்ப்பாணத்துக்கேகிச் சிறிதுகாலம் சுகம்பெற்றிருக்காமுன், "எங்குமிராமன்" என்றதற்கொப்ப, அங்கும் ஒல்லாந்தர்சென்று, 1658-ம் ௵ எப்பிறில் ௴ 10௳ ஊர்காவற்றுறையிலுள்ள (Fort Hammenheil) ஹம்மன்ஹீல் என்னும் கோட்டையைப்பிடித்து, அப்பால் யாழ்ப்பாண நகருக்கேகி அங்குள்ள அரணைவளைந்து 3½ ௴த்தின்மேல் அஃதாவது ஜூன் ௴ 21௳ அந்நகரிலிருந்த பறங்கிகளெல்லாரையும் சிறைப்படுத்தி அந்நகரையும் கைப்பற்றினர். இவ்வாறே பறங்கிக்காரருடைய இராச்சியகாலம் 1658-ம் ௵ ஜூன் ௴ 22௳ யோடு சமாப்தியெய்திற்று. அது நிற்க, ஒல்லாந்தர் இவ்வாறு வெற்றியடைந்தவுடன் தம்மதமாகிய புரோடெஸ்டாண்டுமதத்தை இலங்கையில் பரவச்செய்யவேண்டுமென்றெண்ணி, அவ்வருஷத்திலேயே முதல் முதல் யாழ்ப்பாணத்தில் அம்மதத்தை "பால்டியஸ்" என்னும் பாதிரியால் போதிப்பித்தார். அன்றியும், உரோமான் கத்தோலிக்ககுருமாருக்கு இலங்கையில் இடங்கொடுப்பவரும், அவரைவைத்துக்கொண்டு மறைப்பவரும் கொல்லப்படுவர் எனவும் முரசறைவித்தார்.

அது நிற்க; பறங்கிகள்காலத்தில் குடிகள் தம் பொருள்களையிழந்து சொல்லற்கரிய வேதனைக் காட்பட்டிருந்தாரன்றிப் பின் அவர்கள் கண்ட சுகம் ஏதுமுண்டோ? இல்லை! இல்லை!!

"கூழுங் குடியு மொருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு."

என்ற குறளுக்கு இவர்களரசு இலக்கான படிகாண்க. பறங்கிப்பாஷை அந்நாளில் அதிகமாய்ப் பரவியிருந்ததென்பது, தோம்பு, அலவாங்கு, தைலா, அலுமாரி, கதிரை, வீதுறு முதலிய பறங்கிச்சொற்கள் இந்நாளிலும் தமிழொடுகலந்து வழங்கப்படுதலால் விளங்கக்கிடக்கின்றது.

# IV. ஒல்லாந்தர்காலம்.

——:o:——

## க. அதிகாரம்.

[ஒல்லாந்தர்வெற்றிமுதல்;
இராஜசிங்கன் மரணபரியந்தம்.]

இப்படியே பறங்கிக்காரர் தாங்கட்டி யாண்டுவந்த நாடுகளையெல்லாம் ஒல்லாந்தர்க்குப் பறிகொடுத்து நாசப்பட்டொழிய, ஒல்லாந்தர் அந்நாடுகளை யெல்லாம் தங்கோலேகொண் டரசியற்றிவருவாராயினர். அதுகண்டு இராஜசிங்கன் உள்ளக்கடுப்புற்று, ஒகோ! இவர்களையுமகற்றியே விடல்வேண்டும்" என் றெண்ணினன். பின்னரதற்கான வழிவகைகளைத் தேடியடைய முயன்றவனாய்க் கடல்சார்ந்த நாட்டுக் கிராமாதிகாரிகளைத் துணைக்கொண்டு அவ்வொல்லாந்தா ஊர்களைக் கொள்ளையடித்து அக்கினியாலழித்து ஒல்லாந்தக்குடிகளிற் சிலரைக்கொன்று சிலரைச் சிறைப்படுத்தி இன்னும் பலவாறு துன்பம்விளைத்து ஒல்லாந்தருக்குக் கோபமூட்டினன். ஆயினும் அவர்கள் கோபமுறாதவராய், இராஜசிங்கனுக்குப் பிரீதியுள்ள சில பொருள்களை யுபகாரமாய்க்கொடுத்து ஓர் ஆதனையனுப்பி, "நாமிருதிறத்தாரும சமாதானமாயிருத்தல்வேண்டும. அப்படியில்லாமல் இவ்வாறு நீ கலகம்செய்வையாயின் நாங்கள் போருக்கெழும்புவோம். எங்களுக்கு வேண்டியது வர்த்தகமன்றி இராச்சியமன்று. பின்னை இந்நாடுகளை ஏன் பிடிததுக்கொண்டிருக்கிறீர்கள்? என்பையாயின், உன்னிடம் விடுவோமாயின் நீ, சத்துருக்களுக்கும் புறத்தேயத்தாருக்கு மிடங்கொடுத்து விடுவை யென்றவசசங் காரணமாயன்றிப் பிறிதொன்றாலன்று. நாங்களோ உன் பாதசேவைபுரியும் ஊழியக்காரராயிருக்கிறோம். "பூனையிருந்து குறுகுறுத்தாலென்? ஆனையிருந்தரசாண்டாலென்?" என்றபடி விடுத்து, எங்கள் காரியத்தைமாத்திரங் கவனியாது, உனக்காக இக்கோட்டைகளையும் காத்துவிற்பது நின்மாட்டு யாம்வைத்த பத்தியாலேயாம். ஆதலால் இங்ஙனம் நீசெய்வது நியாயமன்று," என் றின்னனகூறிவேண்டிக்கொண்டார்.

இவ்வளவிலாயினும் அவன் தன் சீற்றந்தணிந்தானில்லை. அவர்மேற்கொண்ட கோபத்தைத் தன்குடிகளிடத்து மூடத்தனத்தால்காட்டத்தொடங்கினன். அவன் தன் முன்னோர்போல் சீவகாருண்ணியம் ஊர்ச்சேமவிருப்புமுதலிய நற்குணங்கள் உடையவனல்லன். அவன் ஒருவனிடத்துக் குற்றங்காணின், அவனோடு அவன் கிளைகளையும்பிடித்து வருத்துவன். ஒருவன் ஒல்லாந்தருடன் பேசினன் என்றறிகினும் அவனையும் அவன்

மனை மக்களையும் பிடித்து, சிவக்கக் காய்ச்சிய இருப்புக்கோலா லவர்தேகத்தைச் சுடுவன். குறடுகொண்டு உடம்பிலுள்ள தசையைப் பிடுங்குவன், பிடுங்கிய தசையை அவர்க்கேகொடுத் துண்ணும்படி நெருக்குவன். பின்ளைகளைக் கொன்று அவர்களைப் பெற்ற தாயரையே யுண்ணச்செய்வன். இவ்வகை நிஷ்டூரங்களால் அவனுடைய பிரசைகள் அவன்மேல் வெறுப்புற்றுக் கலகஞ்செய்யத் தொடங்கினர். அதுகண்டு இராஜசிங்கன் மலைநாடுக்கோடி யொளித்தான். அப்பால் பிரசைகளெண்ணப்படி தான் அரசாளுதல் நீதியன்றென இராஜசிங்கன்மகன் மறுத்தான். அதனைக் கேள்வியுற்ற இராஜசிங்கன் மீண்டுவந்து கண்டியிற் பிரவேசித்து, கலகக்காரரையெல்லாம் நாசஞ்செய்து, தன்மகன் இருப்பதாலன்றோ இவ்வகைக் கலகம் விளைதற்கு ஏதுவாயிற்றுஎன்று நினைத்து அவனுக்கும் நஞ்சூட்டினான்.

இப்படியிருக்க, 1660-ல் (Ann) "ஆன்" என்னும் ஆங்கிலேய வர்த்தக்க் கப்பலொன்று புயல்வாய்ப்பட்டுச் சிறிதுசேதத்தோடும் திரிகோணமலையை வந்தடைந்தது. அதனை இராஜசிங்கன் கேள்வியுற்றுச் சில உத்தியோகஸ்தரையனுப்பிக் கப்பலைச் சிறைப்படுத்தி அதிலிருக்கும் அதிபதியைப் பிடித்துவருமாறு ஆஞ்ஞை செய்தான். அவர்களு மவ்வாறே சென்று வஞ்சனையால் (Knox) நாக்ஸ் என்ற அதிபதியையு மவன் மகனையும் அழைத்துச் சிறைப்படுத்திக்கொணர்ந் தரசனிடம் ஒப்பித்தார்கள். அரசன் அவர்களை மாத்தளை நாட்டில் சிறைவைத்தான். அங்கே தந்தை சுரநோய்கொண்டிறக்க, அவன்மகன் தாரித்திரத்துக்கு ஆளாகி ஆங்கிலேயர்போ லுடுப்பது மொழிந்து, நாட்டவர்போல் வேட்டிதரித்து உண்டநாளும் உண்ணாநாளுமாய் இருபதுவருடங் கழித்து ஈற்றில் வேறோர் ஆங்கிலேய னோடும் இராவழியாய் ஒளித்து யாழ்ப்பாணத்துக் கோடி, அங்கே ஒல்லாந்தருடைய சகாயம்பெற்று ஐரோப்பாவை யடைந்தான். இவன் அங்குசென்றிருந்தகாலத்தில் இலங்கையைப்பற்றித் தான் அறிந்தவரையி லோர்சரித்திரத்தை ஆங்கிலேய பாஷையில் எழுதினான்.

இது நிற்க; 1672-ல் பிராஞ்சியர் திரிகோணமலையில் வந்திறங்கினர். அதுகேட்டு இராஜசிங்கன் "ஒல்லாந்தரைத் துரத்திவிட நமக்கு நல்ல சமயம் வாய்த்தது" என்று பேரானந்தமுற் றிருக்குஞ் சமயத்தில், திரிகோணமலையினின்று பிராஞ்சிய தூதனும் துரகாரூடியாய், பரிசனங்கள்சூழ அரமனைவாயிலை யடைந்தான். அவன் ஒழுக்கமறியாதவனாய்க் குதிரைமேலிருந்தபடி அரமனைவாயிலை யடைந்ததுமன்றித் தன்னை யரசன் சீக்கிரத்திலுள்ளே யழைத்துக் கொள்ளாது காக்கவைத்தா னெனக் கூச்சலுமிட்டான். அதனால் இராஜன் கோபமுற்றுத் தன் பரிசனங்களால் அவனைப் பிடித்துச் சிறைப்படுத்தி மற்றோரை யடித்து வெருட்டிவிட்டான். இதன்

பின்னர், பிராஞ்சியர் திரிகோணமலையை எளிதில் கைப்பற்றிச் சிறிதுகாலிருந்து, பின் ஒல்லாந்தரால் துரத்தப்பட்டார்.

அப்பால் 1683-ல் ஒல்லாந்த தேசாதிபதியாகிய (Lorensz Van Pyl) லோறன்ஸ்வான்பில் என்பவன் இலங்கையில் தன் அதிகாரத்துட்பட்ட நாடுகளில் விக்கிரகாராதனை தகாதென்றும், அதுசெய்வார் தண்டம்பெறுவரென்றும் ஆஞ்ஞைசெய்தான். அது சுதேசிகளுக்கும் கத்தோலிக்கருக்கும் பெரும் இடையூறாக, அநேகர் என்செய்வோம் என்று புரோடெஸ்டாண்டு கிறிஸ்தவராயினர்.

அப்பால் 1684-ம்ஆண்டு டிசம்பர்மீ 6உ-யில் இராஜசிங்கன் இறந்தான். அவன் கோலோச்சிய காலம் 50 வருடம். அவன் ஸ்தெளத்தியப் பிரியனும், பேராசையுடையவனும், சித்தசமாதான மற்றவனும், மூர்க்கனும், சுறுசுறுப் புடையவனும், மானமற்றவனும், தந்திரோபாய முடையவனுமாயிருந்தான். இவன்காலத்தில் சிங்களக்கொல்லர் துப்பாக்கி செய்வதில் அதி திறமையுடையவராயிருந்தார்கள். அவர்கள்செய்த துப்பாக்கிகள் பிராஞ்சித் துப்பாக்கியினும் பதின்மடங்கு அழகும் வன்மையு முடையனவாம். அவர்களுடைய இருப்பு வேலைகளைப் பார்த்தால் வெள்ளி வேலையோவென்று ஐயமுறல் வேண்டுமெண "லின்ஸ்கொற்றன்" என்னும் ஒல்லாந்தர் கூறுகிறார்.

---

உ. அதிகாரம்.

[உ-ம். இராஜசிங்கன் இறந்ததுமுதல்; ஒல்லாந்தர் அகன்றதுபரியந்தம்.

இராஜசிங்கன் மரணிக்கும்போது தன்மகன் (Wimala Dharma II.) விமலதருமசூரியனை யழைத்து "நீ அரசுசெய்கிற பரியந்தம் ஒல்லாந்தருடன் சமாதானமாயிருந் தரசியற்றக் கடவை" என்று சொல்லிவிட்டிறந்தான். அப்படியே அவனும் அரசனாகி ஒல்லாந்தருடன் சமாதானப்பட்டிருந்து, அதுகாறும் நிகழ்ந்த யுத்தங்களால் நிலைதளம்பி முறைகெட்டுநின்ற பெளத்த மதாசாரங்களைச் சீரிடும்பொருட்டுச் சீயநாட்டினின்றும் பெளத்த குருமாரைவரித்து அவ்வாறுசெய்து, மதுராபுரியரசனுடைய கன்னிகையை மணம்புரிந்து, நாடெங்கும்புகழ் கேடொன்றுமின்றி, 20 வருடம் செங்கோலோச்சினன்.

இவனுக்குப்பின் அவன் மூத்தகுமாரன் (Narendra Singha) நரேந்திரசிங்கன் 1706-ல் அரசனாகி, மதுரை அரசன்புத்திரியை வதுவைசெய்து கண்டிக்குச் சமீபத்தேயுள்ள குண்டசாலையில் ஓர் அரமனையைக்க

ட்டி அதிலிருந்தரசியற்றிவந்தான். அவன் கொடியவனும் மதுபானியுமாகித் தனதுநாட்டுப் பிரபுக்களுக்குத் தீமையேபுரிந்து வருநாளில், அவனை அந்நாட்டார்வெறுத்து அவனுக்குமாறாகத் திரண்டெழுந்து கலகஞ்செய்து அவனைத் துரத்திவிட்டார். பின்னர் அவன் சமாதானமாகிச் சிறிதுநாள் அரசுசெய்து, சந்ததியின்றி 1739-ல் இறந்தான். இவனே சிங்கவமிசத்துக் கடையரசன்.

அவனுக்குப்பின், அவன்மனையாள் சகோதரனும் மதுரை அரசரில் வடுகவமிசத்தவனுமாகிய (Wijaya Singha) விஜயசிங்கன் அரசனானான். அவனும் எட்டுவருடமரசாண்டு சந்ததியின்றியிறக்க, அவன் மனைவி சகோதரன் (Kirti Sri Raja Singha) கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் என்பவனரசனானான். அவன் பௌத்தமத விருத்தியின்பொருட்டுச் சமாதிகளையும் ஆலயங்களையும்கட்டி, சீயநாட்டிலிருந்து குருமாரைவரித்து அவரால் அநேகரைக் குருமாராக்கினான். பின்னர் ஒல்லாந்தரைத் துரத்திவிடத் துணிந்து, அவர் நாடுகளிற்சென்று சூறையிட்டு, அப்பால் அவரோடெதிர்க்க முடியாது முதுகிட்டுக் கண்டிக்குமீண்டான். அதனால் ஒல்லாந்தர் 1763-ல் அவன் அடிச்சுவடுபற்றிக் கண்டிக்குவந்து அந்நகரைவளைந்து அவனைத்துரத்தித் தங்கொடியுயர்த்தி, ௯ மீ அரசுசெய்துவருகையில், அந்நகரில் கொள்ளைநோய் பரம்புதலும், அங்கிருக்க அஞ்சி, கீர்த்தி ஸ்ரீராஜசிங்கனையழைத்து, ஒரு பொருத்தச்சாசனம் பண்ணிக்கொண்டு அவனையே அரசனாக்கிவிட்டு, அங்குநின்று நீங்கித் தமதுநாடுசென்றார். பின்னர், அப்பொருத்தச் சாசனப்படி, புத்தளமும் மட்டக்களப்பும் ஒல்லாந்தர்க்கு விடப்பட்டதன்றியும், அந்நாள்முதல் கண்டியரசன் சமஸ்தானத்துக்குத் தூதர் ஒல்லாந்தரிடம் போகும்போதெல்லாம் தண்டம் சமர்ப்பித்தும் வருவர். இப்படி அவன் ஒல்லாந்தருக்குள் ஐக்கியமாகி யரசுசெய்து வருநாளில், 1780-ல், ஒல்லாந்தரிடம் இனாமாகப்பெற்ற ஓர் புரவிமேல் பவனிவரும்போது விழுந் துயிர்துறந்தான்.

இவனே மகாவமிசம் என்னும் நூலின் பிற்பாகத்தைத் தன் சமஸ்தான பண்டிதராகிய திபுட்டுவைவதநீருனான்சையென்பவரால் எழுதுவித்தவன்.

இவனுக்குப்பின், இவன் சகோதரன் (Rajadhi Rajah Singha) இராஜாதிராஜசிங்கன் அரசனாகி அரசியற்றுவானாயினான்.

இனி, “உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்” என்றபடி இலங்காபதிகளான ஒல்லாந்தருடைய அரசியல் முறையைப் பற்றிச் சிறிது சொல்வாம்:—அவர்களுடைய விசேடநோக்கம் பொருளீட்டல். ஆதலால்

அவர்கள் சுயநயம் விரும்பினாரன்றிக் குடிகளுடைய நயத்துக்காக யாதுஞ்செய்தாரல்லர். அவர்களுடைய எண்ணப்படி பொருளீட்டற்கேதுவாயிருந்தது கறுவாப்பட்டையே. அதை விருத்திசெய்யும்பொருட்டு அக்கிருஷிகத்தில்மாத்திரம் தொடக்கத்தில் சிறிதுகாலம் கவனஞ்செலுத்தினார்கள். அதுவும் தம்கைப்பொருள் சிறிதுஞ்செலவிடாது குடிகளைவருத்தியே அவரால் விளைவித்தார்கள். குடிகளைத் தமக்குரிய நிலத்திலாயினும் பயிரிட்டுக் கறுவாப்பட்டையை விற்று வயிறுவளர்க்கவும் விட்டாரில்லை. அவர்களுடைய நிலத்திலுண்டாகும் கறுவாவையும் ஒல்லாந்தரே அநியாயமாய் எடுத்துக்கொண்டுபோவர். குடிகளானவர் பல்விளக்கவும் ஓர் கறுவாக்கழியை ஒடிக்கலாகாது. ஒடித்தால் கொடுந்தண்டம்பெறுவர். சுருக்கிச்சொல்லுங்கால் குடிகளானவர், தமக்குரிய நிலத்திலுளதாயினும் கறுவாவை மோந்தும்பார்த்தலாகாது. இதுவன்றி, இவ்வளவதிகமாய் விளையாத மிளகின்பேருமீதே. இவ்வாறே ஒல்லாந்தர் சிங்களப்பிரஜைகளை ஒட்டாண்டிகளாக்கினார்கள்.

ஒல்லாந்த தேசாதிபதிகளிற் சிலர் மாத்திரம் சற்றே நீதியாய் அரசுபுரிந்துவந்தார்:—அவர்களுள், (Rump) "இரம்பு" என்பவன் சாதுரியமும காருண்ணியமுமுடையனாய் நீதிசெலுத்தினன். அப்பால 1736-ல் தேசாதிபதியாய்வந்த (Van Imhoff) "வான் இம்மாவ்" என்பவன்செய்த துரைத்தனமும் சற்றே வியக்கத்தக்கது. அச்சியந்திரசாலையொன்று ஸ்தாபித்துச் சிலபுத்தகங்கள் அச்சிட்டவனும் இரேகுச்சுங்கத்தை யேற்படுத்தியவனுமிவனே. மற்றொருவன் 1765-ல் தேசாதிபதியான (Falk) "வால்க்" என்பவன். அவன் காப்பி, ஏலம், மிளகு என்னும் செடிகளைப் பிறநாடுகளிலிருந்து கொணர்ந்துநாட்டிக் கிருஷிகத்தை மிகவிருத்திசெய்தான். கறுவாப்பட்டையையும் அமிதமாய்ச் செய்கைபண்ணுவித்தான்.

இனி மற்றையதேசாதிபதிகளோ மிகக்கொடியர். சிலர் பரிதானப்பிரியர். வேறுசிலர் அடிமையாட்களைவிற்றும், ஐசுவரியவான்களுக்கு "முதலியார்" "தொன்" என்னும் பட்டப்பெயர்களைவிற்றும் பெரும்பொருளீட்டினர். இன்னும் (Versluys) "வேர்சுலே" என்னுமொருதேசாதிபதி, "பொருளவாவுடையார்க்குப் புன்மலமுமினிது" என்றபடி, பொருட்பிராந்தியினல், அரிசிவிலையைக் கண்டமட்டிலுயர்த்திப் பிறநாடுகளினின்றும் எளியவிலையில் அரிசிதருவித்துத் தானே வைத்துக்கொண்டு விற்றுப் பெரும்பொருளீட்டினன். பஞ்சத்தை நிவிர்த்திசெய்யவேண்டியவர் அரசராகவும், இவன்பஞ்சத்தை வலிந்தழைத்து நுழையவிட்டது குடிகள்மேல்வைத்த காருண்ணியந்தானே! இவர்கள் தற்காலத்துள்ளவாறு அக்காலத்திலும்

கிராமங்கள்தோறும் கிராமாதிகாரிகளையும், ஊர்கள்தோறும் நீதியதிபதிமுதலியோரையும் நியோகித்து அரசுசெய்துவந்தாராயினும், அவர்கள் செலுத்திய நீதி சுருக்கிக்கூறின் அநீதியே.

இனி, மார்க்கவிஷயத்தில் யாதுசெய்தாரெனின், இவர்கள் தொடக்கத்தில், பறங்கிக்காரரைப்போல் அச்சுறுத்தியாயினும் மதஸ்தாபனஞ்செய்யாது, குடிகளாயுள்ளவர் வலிந்துவந்துசேர்ந்து கிறிஸ்தவராதற்கேதுவான கொலைத்தண்டனையும் பிறதுன்பங்களுமாகிய தீய உபாயங்களால் தம்மதத்தைப் பரவச்செய்தார்கள். இவர்கள் வைசேடியக்கிறிஸ்தம் எனத்தகும் "புரோடெஸ்டாண்டு" கிறிஸ்தமதத்தார். பறங்கிகள் சாதாரணகிறிஸ்தம் எனத்தகும் "கத்தோலிக்க" கிறிஸ்தமதத்தார். அம்மதத்திற்கும் இம்மதத்திற்கும் பாம்புக்குங் கருடனுக்குமுள்ளபொருத்தம். ஒல்லாந்தருடைய முதற்கவனம், கத்தோலிக்கமதத்தைக் களைந்துவிட்டு அம்மதத்திற்குப்பதிலாய்த் தம்மதமாகிய புரோடெஸ்டாண்டுமதத்தை நாட்டவேண்டுமென்பதாம்.

அதுநிற்க, பின்னைநாட்களில் வேறுமோருபாயஞ்செய்தார்:—அவர்கள், ஊர்கள்தோறும் பாடசாலைகளை ஸ்தாபித்து, அப்பாடசாலைகளுக்கே பிள்ளைகளை யாவரும் தப்பாதனுப்புதல்வேண்டுமென்றும், அங்ஙனந்தவறுவார்க்கு அபராதமிடப்படும் என்றும், இராஜாங்கத்தில் உத்தியோகமும், வரிக்குவிலக்களும்பெற விரும்புவோர், வைசேடியக் கிறிஸ்தகுருமாரிடம் ஞானஸ்நானம் என்னும் சுத்தோதக புரோக்ஷணம்பெற்ற கிறிஸ்தவராயிருத்தல்வேண்டுமென்றும் விளம்பரம் செய்தார். இவை காரணமாக, சைவராயிருந்தவரிலும் பௌத்தராயிருந்தவரிலும், சாதியாலுயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய அநேகரும், பறங்கிக்காரர்காலத்துக் கத்தோலிக்க பரம்பரையிலுள்ளாரிற் பலரும், அம்மதம் தழுவினர். இவர்கள்மாத்திரமா? இல்லை! யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணரிலுமன்றோ அநேகர் தஞ்சைவசமய லாஞ்சனையாகிய விபூதி உருத்திராக்ஷ முதலியவைகளைத் துறந்து அம்மதப்பட்டார். அற்றேல். அந்நாளில் யாவரோ அம்மதப்படாதவர்! இவ்வாற்றாலன்றோ 1688-ல் பால்டியஸ் என்னும் பாதிரி, யாழ்ப்பாணநாட்டில்மாத்திரம் கிறிஸ்தவராயினோர் தொகை (180,000) இலக்ஷத்தெண்பதினாயிரம் எனக் கொழும்பில் அக்காலத்திலிருந்து கொடுங்கோலோச்சிய ஒல்லாந்ததேசாதிபதிக்கு அறிக்கைப்பத்திரமனுப்பினர். அவர்களெல்லோரும் "கூலிக்கு மார்பறைந்தார்" போல் சீவனோபாயத்தினிமித்தம் அவ்வேடம்பூண்டாரன்றி, மெய்ம்மையாலங்ஙனஞ்சேர்ந்தோரல்லர். ஒல்லாந்தரிப்படிக் குடிகளை நெருக்கிப்பிடித்ததுமாகாது; குடிகள் அங்ஙனம் நடித்ததுமாகாது; என்னெனில், பொருளுக்காக ஒருவன் தன்மதம்விட்டுப் பரமதப்படுத்தல்போ

விழிவந்தசெயலும், பொருள்காட்டி பொருவன் மற்றொருவனைத் தன்மதத்திற்கு வலிந்திழுத்தல்போல் அவிவேகமும் பாவமும் மற்றின்மையாலென்க. இனி, கொலைக்கஞ்சிநடித்ததோவெனில், அது இன்றியமையாதாதலின் குற்றமன்று. இவையல்லாமலும், 1692-ல், களனியாநகரிலுள்ள பௌத்தாலயத்தில் மகோற்சவக்கொண்டாட்டம் நிறுத்தப்பட்டதுமன்றி, அங்கிருந்த பௌத்தகுருமாரும் துரத்தப்பட்டார். பின்னர் 1715-ல் கத்தோலிக்கர் கூட்டமாகக் கூடுதலும் பிரசங்கஞ்செய்தலும் ஆகாவெனவுமோர் ஆஞ்ஞைசெய்யப்பட்டது.

இங்ஙனம் ஒல்லாந்தர் செய்ததுமன்றி, தாம் கத்தோலிக்ககுருமார்மேல் இயல்பிலே கொண்டபகையால், அவர்களை இலங்கையினின்று துரத்திவிடுமாறு கருதி அவர்களைப் பறங்கிகளுடைய வேவுகாரரெனப் பொய்க்குற்றத்தின்பாற்படுத்தி, அக் குருமாரெவரும் இலங்கையிலிருத்தலாகாதென்றும், இருக்கக்காணின் சிறைப்படுத்தப்படுவரென்றும் முரசறைவித்தார். இவ்வகையுபாயத்தினால் ஒல்லாந்தர் சற்றேறக்குறையத் தம்மதத்தை இலங்கை முழுமையிலுமநாட்டிக் கத்தோலிக்கமதத்தையும் ஒருவாறு ஓட்டினரெனலாம்.

இப்பால் ஆங்கிலேயர்காலம் கிட்டியதால், அவர்கள் வரலாற்றைக்குறித்துச் சிறிதுசொல்வாம். அவர்கள் நாடு இங்கிலாந்து என்னுந்தீவு. இவ்வாங்கிலேயர் இற்றைக்கு 300 வருடங்களுக்குமுன் துருக்கிநாட்டுடன்மாத்திரம் வர்த்தகத்தொடர்புடையவராயிருந்தார்கள். அப்பால், அஃதாவது 1580-ன் மேல் பறங்கிக்காரருடைய முயற்சியையும் அதனால் அவர்களுடைய உயர்ச்சியையும் கண்டு, தாமும் அவரைப்போல் கீழைத்தேயத்தொடர்புடையவராக வேண்டுமென்று விருப்பங்கொண்டார். அவ்வாறே நான்கு ஆங்கிலேயவர்த்தகர் கீழைத்தேயத்தைநாடி வழிக்கொண்டு சிரியாமார்க்கமாய் இந்தியாவையடைந்தார். அவர்களுள் ஒருவர் "அக்பார்" அரசனிடத்தில் சேவகத்திலமர, மற்றை மூவரிலொருவர் பஞ்சாப்பிலிறந்துபோக, எஞ்சிய இருவரில் ஒருவர் துறவியாகிக் கோவையில் நின்றுவிட, மற்றவராகிய "பிற்சு" என்பவர் சீயம் மலாக்கா முதலிய இடங்களுக்குப் போய்ச் சுற்றிக்கொண்டு தமதூருக்கு மீளுகையில் 1589-ம் வ௵ மார்ச்சுமீ 5௳யில் கொழும்பில்வந்திறங்கினார். இவரே ஆங்கிலேயருள் முதன்முதல் இலங்கையைக்கண்டவரெனலாம்.

அப்பால் 2 வருடம்கழித்து, இங்கிலாந்துக்கு அந்நாளில் அரசியாயிருந்த (Elizabeth) எலிசபேத்து என்பவர், பறங்கிகளுடைய கொள்ளைக்கு மாறாய் இந்துசமுத்திரத்தில் போய் உலாவிவருமாறு சிலகப்பல்களைப் பிர

யாணைப்படுத்திவிட்டார். அவற்றுள் ஒன்று மலாக்காநாடுவரையில் சென்று மீளும்போது, காலித்துறையில், 1592-ம் ௵ டிசம்பர் ௴ 3௳-ல் வந்து நங்கூரம்பாய்ச்சிற்று. அக்கப்பற்பெயர் (Edward Bonaventure) எட்வார்ட் போனாவென்சர். இதுவே முதன்முதல் இலங்கைக்குவந்த ஆங்கிலேயர் கப்பல் எனலாம்.

இதன்மேல், இந்தியநாடானது, பறங்கிகள் ஒல்லாந்தர் பிராஞ்சியர் ஆங்கிலேயர் என்னு மிந்நான்கு சூரர்முன், "இது கெலித்தார்க்குரியது" என்று வைக்கப்பட்டதோர் விலையுயர்ந்த இரதினப் பரிசுபோலாக, அதனைக் கையாடும் பொருட்டு ஆங்கிலேயர் எறக்குறைய 200 வருடம்வரையில் போராடி நின்றமையால் இலங்கை அவர்கள் கவனத்திற்கு வரவில்லை.

பின்பு 1763-ல் சென்னைத் தேசாதிபதியானவர் இலங்கைமேல் காதல் கொண்டவராய், (Pybus) பைபூஸ் என்னும் துரையைக் கண்டிக்கனுப்பி, கீர்த்திஸ்ரீராஜசிங்கனிடம் ஒருடன்படிக்கைக்குச் சம்மதங்கேட்டார். அதற்கு அரசன் சம்மதப்பட்டானில்லை.

அப்பால் 1782-ல் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் போர் மூண்டது. அதுபற்றி, சென்னைத் தேசாதிபதி இலங்கையிலுள்ள ஒல்லாந்த நாடுகளைப் பிடிக்குமாறு கப்பற்றளபதியாகிய (Sir Edward Hughes) ஹியூஸ் துரையுடன் ஓர் கப்பற்படையையும், (Sir Hector Munro) மனாறு என்னும் சேனாபதியுடன் ஓர் சேனையையுமனுப்ப, அவர்கள் வந்து திரிகோணமலையைப் பிடித்தார்கள். இச்சமயத்திலும் சென்னைத் தேசாதிபதி ஓர் காரியஸ்தனை இராஜாதிராஜசிங்கனிடத்துக்கனுப்பி, "நீ ஒல்லாந்தருடன் போர்செய்வையாயின் நாங்களுதவிசெய்வோம். அதன்மேல் நீயும் நாமும் ஐக்கியமாயிருக்கலாம். இது உனக்குடன்பாடாயின சொல்லுக" என்று கேட்பித்தார். அதுகேட்டு இராஜாதிராஜசிங்கன், "இவர்களு நமக்குப்பின்னால் சத்துருக்களாவர்தாமே" என்றெண்ணியுடன்படாது மறுத்தான்.

அடுத்தவருடத்தில் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் சமாதானமிடைப்பட்டமையால் திரிகோணமலை மறுபடியும் ஒல்லாந்தர்க்கு விடப்பட்டது.

இப்படியிருக்கையில் மீண்டும் 1795-ல் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்கும் போர்தொடங்கிற்று. அப்போது சென்னைத் தேசாதிபதியாயிருந்த நரேந்திரப்பட்டமுடைய (Lord Hobart) ஹோபார்ட்டு என்பவர் (Gen. Stewart) ஸ்துவாட் சேனாபதியுடன் ஓர் சேனையை இலங்கைக்கனுப்பினார். அச்சேனாபதி உடனே திரிகோணமலையைவளைந்து மூன்றுவாரமாகக் காவல்செய் திற்றில் கைப்பற்றினான். அப்பால் யாழ்ப்பாணஞ்செ

ன்று அதனையும் எதிர்ப்பா ராருமின்றிக் கவர்ந்தான். அடுத்த 1796-ல் நீர் கொழும்பையு மவ்வாறுபிடித்தான். அதன்பின்பு கொழும்பைநோக்கி வழிக்கொண்டு களனியாற்றையுந்தாண்டி அந்நகரில்போய் எதிரூன்றினன். அங்கே பெப்பிரவரிமீ 16வ மலாயர்படையொன்று ஓர் பிராஞ்சித்தலைவனோடும்வந்து எதிரிட்டுச் சிறிதுநேரத்தில் தலைவனையும் மடியவிட்டோட, ஸ்துவாட்துரை வெற்றிமாலை யணிந்து, ஜயபேரிகள், "இலங்கைநாடரைப் பிணிவிட்டது! பிணிவிட்டது! பிணிவிட்டது! கொழும்புநகரும் பிடிபட்டது! பிடிபட்டது! பிடிபட்டது!" என்றொலிப்பதுபோல் முழங்க, கோட்டைக்குள்சென்று துஜாரோகணஞ்செய்தான். இதன்பின் சின்னாளில் காலியும் பிடிபட்டது இவ்வாறே ஒல்லாந்தர் 138-வருடமாகச்சட்டியாண்டுவந்த கரைதுறைநாடுகள் எல்லாம் ஒருங்கே ஆங்கிலேயருடைய தண்குடைநிழற் கீழ்ப்பட்டன.

இவ்வாறு ஆங்கிலேயர்க்கு எளிதில் வெற்றிகிடைத்ததற்குக் காரணம் ஒல்லாந்தருடைய முயற்சியின்மையும் அவர் சேனைவீரருடைய ஐக்கியமின்மையுமேயன்றி மற்றன்று. கொழும்பில் ஒல்லாந்ததேசாதிபதியாய்க் கடைசியிலிருந்த *"வான் அஞ்சல்பேக்" என்பவனை ஆங்கிலேயர் மேற்சென்று காக்காதுவிட்டிருப்பரேல், அவனுடைய சேனைவீரரவனைக் கொன்றிருப்பரென்றால், அவர்களுடைய கீழ்மையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ! "துற்புத்தியந்திரியால் அரசுக்கீனம்" என்றபடி கீழ்மையில்லாப் படைவீரரால் அவர்கள் அரசுக்கு இவ்வாறு சீக்கிரத்தில்கேடுண்டாயிற்று. இவ்வாறே கொடியரிற் கொடியராகிய ஒல்லாந்தருடைய அரசியற்காலம் 1796-ல் பிப்பிரவரிமீ த்தோடு தொலைந்தது. அவர்காலத்தில் வழங்கிவந்த சிலசட்டங்கள்மாத்திரம் தற்காலத்தும் பிரயோகத்திலிருக்கின்றன. கந்தோர், தரவளிமுதலியன ஒல்லாந்தச்சொற்கள்.

அவர்கள் சீரிழந்தனமாக, அங்கே கண்டிநாட்டில் இராஜாதிராஜசிங்கன் தன்னாட்டைப் புதியசத்துருக்கள் சூழ்ந்தாரென்று எண்ணி "ஆரையாம் பள்ளத் தாடேவாழினும் தேரை பாம்பிற்கு மிரவஞ்சுமமே" என்றபடி விழிப்புடன் அரசியற்றுவானாயினன்.

---

* இவன் சிறிதுகாலம் கொழும்பில் ஆங்கிலேயருடைய பாதுகாப்பிலிருந்து பின் தற்கொலைபுரிந்துகொண்டிறந்தான்.

# V. ஆங்கிலேயர்காலம்.

—:o:—

## க. அதிகாரம்.

[ஒல்லாந்தநாடுகள் பிடிபட்டதுமுதல்;
"நார்து" மன்னருடைய துரைத்தனம் அந்தம்.]

இவ்வண்ணம் நடுநாடொழிந்த வினையாதெல்லாம் ஆங்கிலேயருடைய கைப்பட்டவுடன், சென்னைத் தேசாதிபதியுடைய ஆஞ்ஞைக்குள்ளாகி, "இந்நாடு (East India Company) துரை இந்தியவர்த்தகக் கூட்டத்தார்க்கு விடப்படத்தக்கதோ, அல்லது இங்கிலாந்தரசுக்கு உபராஜாங்கமாக உபகரிக்கப்படத்தக்கதோ" வென்னுங் கேள்விக்கிடனாய், யோசனையில் நின்றன. அன்றியும் ஒல்லாந்தர் சமாதானப்படுங்கால் அவரிடத்தில் மீளவும் ஒப்பித்துவிடலாமெனவு மோர் எண்ணம் ஆங்கிலேயர் மனத்திற் கிடந்தது.

இப்படியிருந்தும், சென்னைத் தேசாதிபதி, இலங்கை அரசியல்முறையைச் சீரிடத் துணிந்து, சென்னையினின்றும், உலகவியலறியாதவனும் சோம்பனுமாகிய (Mr. Andrews) அந்திரேயஸ் என்னும் ஓர் துரைமகனைச் சகலவித அதிகாரங்களோடும் இலங்கைக்கனுப்ப, அவன் இலங்கையையடைந்து, முன்னிருந்த இறைதிரட்டிகளெல்லோரையும் நீக்கிப் புதிதாய்த் தமிழரை நியோகித்து, வரியின்றியிருந்த சுரோத்திரியம் மானியம் முதலிய நிலங்களுக்கு வழக்கத்துக்கு விரோதமாக வரிகளைவிதித்து, இது போன்ற வேறு தீமைகளையுஞ்செய்து, காருண்ணியமற்றவனாய் அதிகாரஞ் செலுத்திவந்தான். இதனைப்பொறுக்க ஆற்றாத சிங்களப்பிரபுக்கள் சிலர், சில ஒல்லாந்தக்குடிகளைத் துணைக்கொண்டு சனங்களைத்திரட்டி, கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலிருந்த அரண்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு மற்றைய விடங்களுக்குச்சென்று, அங்கெதிர்த்த ஆங்கிலேயரெல்லோரையும் கொன்றும் காயப்படுத்தியும் முதுகிடச்செய்து சிலநாளாக ஆங்கிலேயருக்குப் பெருந்துன்பஞ் செய்துவந்தார். ஈற்றில் ஆங்கிலேயர் சிறுபாம்பாயினும் பெருங்கோல்கொண் டடிக்கவேண்டுமென்றபடி, ஓர் சேனையோடும் சிங்களரை எதிர்த்து, தம்பக்கத்தில் பலரை யிறக்கக்கொடுத்தும் ஆண்மைவிடாது அச்சிங்களப்படையைச் சுட்டுவெட்டிப் பிடித்தடித்துதைத்துவதைத்துக் குத்திமொத்தி எற்றிப்பற்றி வெற்றிகொண்டு போதும்போதுமென் றோடச்செய்தார்.

இதனைக் கேள்வியுற்ற சென்னைத்தேசாதிபதியாகிய (Lord Hobart) ஹோபாட் கரேந்திரர் (Colonel De Meuran) தெமியூறன் என்

னும் படைத்தலைவனை அக்கலக விசாரணையின்பொருட்டு இலங்கைக்கனுப்பினர். அவனும் இலங்கைக்குவந்து அதன்விருத்தாந்தங்களையெல்லாமாதியோடந்தமாகச் சென்னைக்கெழுதியனுப்பினான். அதுகேட்ட தேசாதிபதி காலந்தாழ்க்காது உடனே இலங்கையை இங்கிலாந்துராஜாங்கத்துக்கு உபராஜாங்கமாக்கினான். அதனை இங்கிலாந்தரசனாகவிருந்த (George III.) ௩-ம் ஜார்ச்சு என்பவர் அதிசந்தோஷத்தோடும் அங்கீகரித்து, பூச்சியதையுடைய (Hon. Frederick North) பிறெடரிக் நார்து என்பவரைத் தேசாதிபதியாக இலங்கைக்கனுப்ப, அவரும் 1798-ம் ௵ அக்டோபர் ௴ இலங்கைசேர்ந்தார். பின்னர், அவர் உத்தியோகாசனம்பெற்றவுடன், “தெமியூரான்” அவரிடஞ்சென்று, “ஐயனே, தற்போது இறைதிரட்டப்படும் மேரையையும், இறைதிரட்டுபவராகிய தமிழரையும் நீக்கிவிட்டு, முன்னிருந்த ஏற்பாடுகளையும் சிங்களமுதலிகளையுமே ஏற்படுத்துவதாவசியகமாயிருக்கின்றது” என்று விண்ணப்பஞ்செய்தான். அதுகேட்டு “நார்து” மன்னனானவர், “தெமியூரானை” நோக்கி, “நீர்கூறியவாறு முன்னைய வேற்பாடுகளை நிலைப்படுத்துவதில் எமக்கு யாதும் ஆக்ஷேபமில்லை. புதிய வேற்பாடுகளால் எழுந்தகலகத்தையும் அதன்பேற்றையும் கண்டுள்ளோம். ஒரிராச்சியமுறையைத் திருத்துதல் காலக்கிரமத்தில் அன்றி, எடுத்தவுடன்கூடாது” என்றின்னனகூறி முன்னிருந்தமுறைகளை யநுசரித் தரசபுரியத்தொடங்கி, தமிழதிகாரிகள் யாவரையும்நீக்கி, அவர்களுடையபதத்தில் சிங்களரைவைத்து, ஆங்கிலேயமுறையைக் கைக்கொள்ளப் பின்னின்ற ஒல்லாந்தக்குடிகளையுமடக்கினார்.

ஆங்கிலேயர் சிரிவ்வாறாக, அங்கே கண்டியிலிருந்தரசியற்றிவந்த இராஜாதிராஜசிங்கன், 1796-ல் ஆங்கிலேயரிடத்திலிருந்து தன்னிடம்வரப்பெற்றபொருத்தச்சாசனத்தை வாசித்து, அது தனக்கு நன்மைபயக்கத் தக்கதெனக்கண்டும், அங்கீகரியாது தள்ளிவிட்டு, யாதோர பிணக்குமின்றி யரசியற்றிவருகையில், சுயகாரியப்புலியும் வஞ்சனுமாகிய (Pilame Talawe) பிலாமைத்தலாவை என்னும் முதன் மந்திரியுடைய சூதாற்போலும் 1798-ல் அரசிழந்ததுமன்றி உயிருமுடனிழந்தான். இவனுக்கு மனைவிகளாக ஐவரிருந்தும் அரசுரிமைக்கு ஒரு குழந்தையேனும் பிறந்ததில்லை.

அப்பால் பிலாமைத்தலாவை, அரசனுடைய கொழுந்திமகனும், அப்போது பதினெட்டுவயசுடையவனும், மேனியழகன்றிக் கல்வியழகுசிறிதுமில்லாதவனுமாகிய கண்ணுச்சாமியை (Sriwikrama Raja Singha) ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் என்னும் பட்டப்பெயருடன் அரசனாக்கி, அவனைத் தன்வசப்படுத்திக்கொண்டு தனக்குமாறாய்நின்ற இரண்டாம் *மந்திரியை

* மந்திரியைச் சிங்களர் அதிகாரம் என்பர்.

யும் மற்றோர்பிரபுவையும் வஞ்சனையாற்கொன்று, இராணியையு மவள்பிள்ளைகளையும் சிறையிலிட்டான். அப்போது அவ்விரோதிகளிலொருவனும் இராணிக்குச் சகோதரனுமாகிய முத்துச்சாமியென்பவன, இவனுக்கஞ்சி, யாழ்ப்பாணத்துக்கு ஓடி ஆங்கிலேயரிடத்தி லடைக்கலம்புகுந்தான்.

இதன்பின்பு பிலாமைத்தலாவைதானே அரசனாகிவிடவேண்டுமென்று அவாக்கொண்டு, ஆங்கிலேயருடைய துணையைத்தேடுமாறு இருமுறை அவரிடஞ்சென்றான். கடைமுறையில் "நார்து" மன்னரைக்கண்டு, "மன்னவரே, பண்டைக்காலமுதல் எங்களுக்குப் பகைவராயுள்ள தமிழரசருடைய கோலின்கீழ்வாழுதல் எங்கள் சாதியார்க் கிஷ்டமன்று. அவர்க்குக்கீழிருந்து குடிவாழுதலினும் நும் போலிய பரதேசிகளிடத்து வாழுதல் எங்களுக் கதிப்பிரீதி. இப்போது கண்டியை ஆள்பவன் சிங்களவமிசத்து அரசனல்லன். ஆதலால் தாம் தயைகூர்ந்து எங்களுக் குதவிசெய்யின், நாங்கள் அவனைக்கொன்றுவிட்டேனும் நீக்கிவிட்டேனும் தமது குடைநிழலிலிருந்து குடிவாழ்வோம். அன்றியும், யான் அவனை அரசனாக்கியது, நம்மவரெல்லோரும் அவன் குணத்தைக்கண்டு அவன்மேல் வெறுப்புற்று நம்மவனாகிய வொருவனை அரசனாகக்கோரட்டும் என்ற நோக்கத்தாலன்றி மற்றொன்றாலுமன்று" என் றின்னனவும் பிறவும் அவர்க்கு எடுத்துக்கூறினான்.

அதுகேட்டு, "நார்து" மன்னவர் உத்தரமாக, நீர் கூறியவாறு செய்வதெனக் குடன்பாடே; ஆயினும் அரசனைக்கொல்வது நீதியன்று. ஆதலால், அவனை யாழ்ப்பாணத்தில் எங்களுடைய பாதுகாப்பில்வைத்துக்கொள்ளவும், உம்மை எமக்கு ஐக்கியமான ஓர் உபராஜன் ஆக்கி, எங்கள் சேனாபதியாகிய (Macdowall) மாக்டவல் என்பவரையும் அவர்க்குமெய்காப்பாளரென ஓர் சேனையையும் கண்டியில்வைக்க உடன்பட்டேம்" என்று கூறி, விடையீந்து தலாவையை யனுப்பிவிட்டார்.

இப்பிரதிக்கினைப்படி, "நார்து" மன்னவரும், தமது பேருக்கு இது ஈனமாய் முடியுமென்பதையு நினையாது, சிறிதுகாலததுக்குள் ஓர் சேனையைத்திரட்டிக் குறித்த சேனாபதியோடும், 1801-ல் கண்டிக்குப் போக்கினார். அவர்கள்போயும், கண்டிநாட்டெல்லைக் காவல்வீரரை மேற்கொண்டு அவ்வெல்லையைத்தாண்டிச் செல்லற்கு இயலாதவராய்ப் பலநாள் பல உபாயங்கள்கொண்டு முயன்றும், வாய்க்காமையால் ஈற்றில்மீண்டார்.

அப்பால் தலாவை, "இனி ஆங்கிலேயர்தாமே வலிந்து போருக்குவரும்பொருட்டு ஒருபாயஞ்செய்வதே கருமம்" என்று மனத்தில் முடிவுசெய்துகொண்டிருக்கையில், கண்டிக்குவந்து யாக்குவாங்கிப் பொதியெரு

துகளில் ஏற்றிக்கொண்டு புத்தளத்துக்குமீண்டு வழிக்கொண்டசோனகர் சிலரைக்கண்டு, அரசனுடைய சேவகரால்வழிமறித்து, அவர்பொருள்களைப் பறித்துக்கொண்டு, அடித்து உதைத்து ஓட்டிவிட்டான். அதனை அறிந்த "நார்து" மன்னவர், கண்டியரசனுக்கு ஓர் கடிதம் போக்கி, "பறித்த பொருளையெல்லாம் மீளவும் அச்சோனகரிடம் ஒப்பித்துவிடுக" வென்று வேண்டினர். அதற்குக் கண்டியரசனை உடன்படவொட்டாமல் தலாவை தடுத்தான். அதுகண்டு, "நார்து" மன்னவரும் போர்க்கறைகூவினா.

அவ்வண்ணமே 1803-ம் ௵ பிப்பிரவரி௴ கொழும்பிலிருந்து "மாக்டவல்" ஒரு சேனையோடும், திரிகோணமலையிலிருந்து (Colonel Barbut) பார்பட்டு தளபதி ஓர் சேனையோடும் புறப்பட்டு, தம்மார்க்கத்தில் எதிர்ப்பாரியாருமின்றி ஏககாலத்தில் கண்டிநகரையடைந்து வளைந்தார்கள். இவர்கள் வழிக்கொண்டாரென்று முன்னரே அறிந்த அரசனும் குடிகளும் அவர்கள் வருவதன்முன்னே கண்டிநகருக்குத் தீயிட்டு, தம்பொருள்களோடும் அங்குருங்கத்தைக்கோடினார்கள். அதனையறிந்து ஆங்கிலேயர் கண்டிக்குள் நுழைந்து பார்த்தபோது, கண்டிநகர் ஆங்காங்கும் கரிந்து சாம்பர்மயமாய், நிர்ச்சனமாய், நாய்கள்வசிக்கும் நகரமோவென்றுபார்த்து நகைக்கும்படி சில நாய்கள்மாத்திரம் சஞ்சரிக்கப்பெற்றதாய்க் கிடக்கக்கண்டு, மேலும் சுற்றிப்பார்ப்போமென்று எங்குஞ்சுற்றினார்கள். அப்போது, ஓரிடத்தில் வெடிமருந்தும் குண்டுகளும் சில பீரங்கிகளும் அவர்கள் கைப்பட்டன.

இப்படியிருக்கையில், பிலாமைத்தலாவை, ஆங்கிலேயர்சேனையை நாசஞ்செய்யவெண்ணி, வஞ்சமனத்தோடும் ஓர்தூதனை ஆங்கிலேய சேனாபதியிடம் அனுப்பி, "ஓர்சிறுச் சேனையோடுமாத்திரம் உங்களில் ஒருவாவுரின அரசனைப் பிடித்துத்தருவேன்" என்று சொல்வித்தான். அதைக் கேட்ட "மாக்டவல்," தளபதியாகிய (Colonel Baillie) பேலியையும் 800 வீரரையும் அனுப்ப, அவர்களும் மந்திரி கற்பித்தபடி, இருகூறாயப்பிரிந்து இரண்டுவழியைப்பற்றி, அங்குருங்கத்தையை நோக்கிச்சென்றார். செல்லுகையில், சிங்களர், வழிசசார்பிலுள்ள மலைகளிலும், காடுகளிலும் மலைந்துநின்று, துப்பாக்கிகொண்டு பொழிந்த குண்டுகளையெல்லாம் சலிகமாது பெற்றுக்கொண்டு கடுகி, சங்கேதப்படியிருதிறத்தாரும் ஓரிடத்தில் சமுத்து, அணிவகுத்து, அங்குருங்கத்தையை அணுகினர். அங்கே சிங்கள வீரர் சிலர் வந்தெதிர்க்க, அவர்களைக் காற்றின்முன்னின்ற பஞ்சுபோலுதிரி முதுகிடச்செய்து, அரசன் அகப்பட்டான்! அகப்பட்டான்! என்று ஆர்த்து ஓடி, நகரைக் காவல்செய்தார். செய்து மென்னை! இவர்களகுபோயச

சேராமுன்னே அரசன் வேறிடம்போயகன்றுவிட்டான். அதுகண்டு "பேலி"த்துரை இலவுகாத்தகிளிபோல் வெள்கி, "மந்திரி மோசஞ்செய்தானே" என்று மனத்துள் மதித்து, அந்நகரைத் தீமூட்டிமீண்டான்.

அப்பால் "மாக்டவல்" "நார்து" மன்னரநுமதிப்படி (Mootoosamy) மூத்துச்சாமியை யாழ்ப்பாணத்தினின்றும் வரித்துக் கண்டிக்கரசனுக்கி, அவனோடும் ஓர் பொருத்தச்சாசனம் பண்ணிக்கொண்டு, அவ்விடத்தில் "பார்பத்து" தளபதியையும் ஆயிரம்போர்மீளிகளையும் மாத்திரம்வைத்துவிட்டு எஞ்சியசேனையோடும் கொழும்புக்கேகினர்.

இச்சமயத்தில் பிலாமைத்தலாவை "நார்து" மன்னவருடைய உயிரைக் கையாடவகைதேடி, மீண்டும் ஓருடன்படிக்கை பண்ணிக்கொள்ள முயல்வான்போல் நடித்து அவருக்குச் சயாசாரந்தெரிவிக்க, அவரும், சத்தகோறளையிலுள்ள தம்பதீனியாவென்றவிடத்தில் இன்னநாளைக்குவருக, யானும் அவ்விடம்போகின்றேன் என்று அவ்வஞ்சனுக்குச் செய்தியனுப்பினா. அப்படியே அவரும் ஓரணிமெய்காப்பாளருடன் அவ்விடம் சேர, "பார்பத்து" தளபதியும், 300 மலாய்வீரரோடு தற்செயலாய் அங்குசென்றான். இப்படியிருக்க, தலாவையும் வாள்நீட்டிக்கொண்டு உற்றதுணராமல் அச்சங்கேதப்படி குறித்தவிடத்தையடைந்தான். அங்கு சென்று கண்டஅளவில் தலாவை மனச்சோர்வுகொண்டு, "இப் பெரும்படைமுகத்தில் என்சூழ்ச்சி யாதுசெய்யும்? ஒன்றுஞ் செய்யாதாகலின், நேர்போய்விடுவதே தகுதி" யென்று தீர்மானித்து, வஞ்சமொழிப்படி ஓர்பயனில் உடன்படிக்கையை முடித்துக்கொண்டு கண்டிக்குமீள, மற்றோரும் தந்திசைநோக்கினர்.

இப்படியிருக்கையில், ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் விமிர்ந்து கண்டிக்கு வந்து கலகஞ்செய்து, அங்கிருந்த ஆங்கிலேயசேனைகள் மேல்விழுந்து அநேக வீரரைக்கொன்றான். அப்போது (Major Davie) டேவி என்னும ஆங்கிலேயசேனைத்தலைவன் சமாதானக்கொடியுயர்த்தி, "போரொழிக, நாங்கள் போய்விடுகிறோம்" என்றிரந்து, தன் சேனைகளையும், வீரத்திறல் இல்லாத முத்துச்சாமியையும் அழைத்துக்கொண்டு கண்டியைவிட்டுத் திரிகோணமலையைநோக்கி வழிக்கொண்டுசெல்லுகையில், மகாவலிகங்கைநதிப் பிரவாகமாயிருந்தமையால் தாண்டற்கியலாதவனாய் அலங்கன்தோட்டையில் இராத்தங்கினான்.

அதனை அறிந்த கண்டியரசனுடைய சேனாவீரர் உருவைவிட்டு நீங்காத நிழலைப்போல் அவ்விடத்திற்கும் தொடர்ந்துசென்று, "எங்கள் கையில் முத்துச்சாமியை ஒப்பித்தால் ஆற்றைத்தாண்டப் புணைகள்தருவோம். அத

ற்குடன்படமாட்டீராயின் நீங்கள்யாவரும் விடியுமுன் எமபுரஞ்சேரவரும்" என்றுகூறி அச்சுறுத்திப் பேடியாகிய "டேவியை" அனுப்பி, முத்துச்சாமியைப் பிடித்துக்கொண்டுபோய், அரசன்சமுகத்தில் நிறுத்தி அவனாஞ்ஞைப்படி சிரபங்கம் பண்ணினர். பின்பு, அரசன் தானே அவ்விடஞ்சென்று "டேவி"யையும் அவன் சேனாவீரரையும் பிடித்துக் கண்டிக்குக் கொண்டுபோய், அங்கே டேவியையும் வேறுசிலரையும் சிறையிலிட்டு, மற்றோர்யாவரையும் ஒருங்கே சங்கரித்தான். அவ்வளவிலும் நில்லாது, வைத்தியசாலையில் வைத்தியசகாயம்பெற்றுக் கொண்டிருந்த 120 பேரையும் கொன்று, இனி ஆங்கிலேயர்க் கஞ்சவேண்டுவதில்லையென்று ஆர்த்துப் பிரங்கிக்கோஷஞ் செய்வித்து ஆனந்தக்கூத்தாடினான். அதன்பின்பு, அரசன், முன்கொல்லாது சிறையில்வைத்த ஆங்கிலேய சேனையைச்சேர்ந்த மலாய் வீரனை, "நூர்தீன்" என்பவனை நோக்கி, நீ எனக்குக்கீழிருந்து சேவை செய்கிறாயா? அன்றி, உன் உயிர்விடப்போகிறாயா? என்றுகேட்டான். அதற்கு உத்தரமாக நூர்தீன், "என் உயிரிழக்கவரினும் இழப்பதேயன்றி இராஜதுரோகம் நினைப்பதில்லை" யென்றான். உடனே அரசன் அவனையும் அவன் தம்பியையும் கொன்று அவர்கள்காலிற் கயிற்றைக்கட்டி வீதிவழியாய் இழுத்துக்கொண்டுபோய் நாய்நரிக் கிரையாகக் காட்டில் போடுவித்தான். இச்சமயத்தில் மடிந்த ஆங்கிலேய சேனாவீரர் தொகை சற்றேறக்குறைய 700. இச்சங்காரத்தில் பிழைத்தோடிக் கொழும்புசேர்ந்தவன் ஒரே ஒருவன். இது நிகழ்ந்தது 1803ம் ௵ ஜூன்௴ 24௳.

இவ்வாற்றால் அரசன் பூரிப்படைந்து சிலவீரருடைய தைரியவசனங்களால் ஊக்கங்கொண்டு, ஆங்கிலேயருக்குரிய நாடுகளையும் கவருமாறு சேனாவீரரை அனுப்பினான். அப்படியே அச்சேனாவீரரும் சேனைத்தலைவனும் சென்று மாத்துறையை வளைந்து, காவல்வீரரைக்கொன்று அந்நகரைக் கவர்ந்தார். அப்போது காலியிலிருந்து (Captain Beaver) "பீவர்" என்னும் படைத்தலைவன் மாத்துறையை நோக்கி யோர்சேனையோடு வழிக்கொண்டமாத்திரத்தில், சிங்களப்படை வழிதடுத்திருந்தது கண்டு, கடல்வழியாய்வந்து மாத்துறையிலிறங்கி அச்சிங்களப்படையை வெருவச்செய்தான்.

இப்படியிருக்கையில் "நார்து" மன்னவர் இச்சமாசாரங்களையெல்லாம் தமதேசயானாகிய இந்தியதேசாதிபதிக்குத் தெரிவித்து, கண்டியரசனை அடக்கும்பொருட்டு 3000 புத்தவீரருக்குக் குறையாமலனுப்புமாறுவேண்டினார். அப்போது இங்கிலாந்துக்கும் பிராஞ்சியநாட்டுக்கும் யுத்தம் மூண்டமையால் இந்தியதேசாதிபதி "நார்து" மன்னவர் கேள்விப்படி வீரரையனுப்ப இயலாதவராயிருந்தார்.

அப்பால் 1804-ம் ஆண்டு செப்டம்பர் மீ த்தில், மட்டக்களப்பிலிருந்த (Captain Johnston) ஜான்ஸ்டன் தளபதி தனது அதிகாரத்துட்பட்ட 300 வீரருடன் அங்கு நின்றும் புறப்பட்டு வழியிலே, கண்டிநாட்டெல்லையில் நிறுத்தி வைக்கப்படும் சேனைவீரரையும் சேர்த்துக்கொண்டு கண்டிநகருக்குப் போகக்கடவனென்று "நார்து" மன்னவர் ஆஞ்ஞைசெய்தார். பின்பு "நார்து" மன்னவர், கண்டிநகரில் அரசன் இல்லையென்றறிந்து, உடனே அவ்வேற்பாட்டைத் தள்ளிவிட்டாரன்றி, அச்செய்தியை "ஜான்ஸ்டனுக்குத்" தெரிவித்தாரில்லை. இதனால் ஜான்ஸ்டன் தான்பெற்ற ஆஞ்ஞாபத்திரப்பிரகாரம் தனது யுத்தவீரருடன் புறப்பட்டு, குறித்தவிடத்தில் அச்சேனையைக் காணுதவராகியும், கண்டிக்கேகினன். அங்குசேர்ந்தபோது கண்டிநகர் பாழாயிருக்கக்கண்டு, "இனியாதுசெய்வது; கொழும்புச் சமாசாரம்வருமளவரையில் இங்கிருப்போம்" என்று தீர்மானித்திருக்கும் சமயத்தில், "கண்டியரசன் பெரும்படையோடும் அணுகினன்" என்று கேள்வியுற்றான். உடனே தன் சேனைவீரருடன் அங்கு நின்றும் மீண்டு காட்டுமார்க்கமாய்த் திரிகோணமலையைநாடி யாதோர் அபாயமுமின்றி அந்நகர் போய்ச்சேர்ந்தான்.

அப்பால் 1805-ல் கண்டியரசன், நூறுவீரரால் மாத்திரங் காக்கப்பட்டிருந்த *கங்குவேலைநகரை வளைக்க எத்தனப்பட்டு, அநேக சேனைவீரருடன் புறப்பட்டு அக்கோட்டைமதிலுக்கு இலக்கொட்டிக் குண்டுகளைப் பிரயோகித்துக்கொண்டு நெருங்கினன். அப்போது, நெருங்கிவரட்டும் என்று சமயம்பார்த்துக்கொண்டுள்ளிருந்த (Capt. Pullock) பல்லாக் தளபதி தன் வீரருடன், சிங்கமும் சிங்கக்குட்டிகளும் யானைகளைக் கண்டு சமயம் பார்த்துத் துணுக்கெனப் பாய்ந்தவாறு வெளிப்பட்டு, அரசன் சேனையோடெதிர்த்து இரண்டுமுகூர்த்தகாலம் கொடிய அமர்புரிந்தான், அப்போது ஓர் குண்டு அரசனைச் சற்றே தாக்கினமையால், அரசன் முதுகுகொடுத்தோடத் தலைப்பட்டான். அதுகண்டு அவன் சேனையும் சேனாபதிகளும், சிலர் ஆயுதங்களைவிட்டவரும், சிலர் துப்பாக்கி பீரங்கிகளைப் போட்டவரும், சிலர் பகைவர்கைப்பட்டவரும், சிலர் நிலைகெட்டவரும் ஆக நீயோ நாமோ முந்தி நம்மனைசேருவது என்று ஓடுவார்போலோடத் தலைப்பட்டார். அங்ஙனமோடினவருள் திசாபதியாகிய லியூக்கும் மகாமுதலியாரும், தனக்குமுந்தி அதிவிரைவாய் ஓடுவதைக்கண்ட அரசன் சினங்கொண்டு தன்னையடுத்துவந்த சேவகரைநோக்கி, "அப்பேடிகளுடைய சிரசைக் கொய்துகொண்டு வம்மின்" என்று இதழ்மடிக்காமுன், அவ்விருவர் சிரமும் சா

---

* கங்குவேலை - கொழும்பிலிருந்து 18-மைல் தூரத்திலே கண்டிமார்க்கத்திலுள்ள ஓர்நகர்.

ய்ந்தருண்டன. மீண்டும் அரசன் தன்கோபப்பிரசண்ட வேகத்தால் தம ரென்றும் பிறரென்றும் வேற்றுமையுணராது, தன்னையண்டியோடிவரும் அநேகவீரரையும் சாய்த்தும் சாய்ப்பித்துமோடினன்.

பின்னர்ப் பல்லாக்தளபதி தன்னைக்கு "இனிஇரையாது" என்று தேடிச்செல்லுகையில், கண்டிநகருக்குச் சமீபத்தில் அரசனை உபசரித்தற்பொருட்டு அமைக்கப்பட்டிருந்த ஓர் அலங்கார வசந்தமண்டபத்தைக் கண்டு அதனை நிர்மூலமாக்கினன். அம்மண்டபத்தின் முன்றிலில், போரில் கைதிகளாக்கப்படும் ஆங்கிலேயரைக் கொல்லற்கென்று அரசன் ஆஞ்ஞைப்படி இரு கழுக்கட்டைகள் நாட்டப்பட்டிருந்தன. அதுநிற்க, மீண்டுங் கண்டியரசன் யுத்தசன்னத்தனாய் உறுவென வல்லையில்வந்து ஆங்கிலேயருடன் எதிர்த்தான். ஆங்கும் ஆங்கிலேய வீரரே வாகை சூடினர்.

அப்பால் 1805-ல் "நார்து" மன்னவர் தமது உத்தியோகத்தினின்றும் பெயர, அவரிடத்துக்கு (Sir Thomas Maitland) மேயிற்லன்டு மன்னவர் வருவாராயினர். அதுநிற்க; "நார்து" மன்னவருடைய அரசியற்காலம் இடை இடையே கண்டியரசனுடைய போராலும் கலகத்தாலும் ஊறுபட்டதாயினும், அவருடைய கோன்முறை கவனிக்கப்படத்தக்கதே. என்னை! பிரசைகளுக்கு மதவிஷயத்தில் சுயாதீனத்தைக்கொடுத்தார். கத்தோலிக்கருக்குமாறாய் ஒல்லாந்தர் செய்த தீய ஏற்பாடுகளையெல்லாம் நீக்கினர். கல்வியையும் வாணிகத்தையும் அபிவிருத்தி செய்தற்கான உபாயங்களைத் தேடினர். நியாயசாலைகளை ஊர்கள்தோறும் ஸ்தாபித்தார். அரசிறைவருமான வழிகளைச் சீரிட்டார். சுதேசிகளைக் கிருஷிகம் வாணிகம் என்னும் தொழில்களை நடத்துமாறு தூண்டிவிட்டார். ஒல்லாந்தரால் ஏற்படுத்தப்பட்ட கொடியதண்டனைகளாகிய கழுவிலிடுதல், அங்கபங்கஞ்செய்தல் ஆதியவற்றை ஒழித்தார். ஒல்லாந்தரும் பறங்கிக்காரரும் செய்துவந்தவாறு சுயமதாபிமானம் சிறிதுமின்றிச் சர்வமதத்தினர்க்கும் உத்தியோகம் கொடுத்தார். இவ்வாறே அவர்செய்த அரசு பொதுப்பட நல்லதேயாமென்க.

இனி, அவர்காலத்து விசேட சம்பவங்கள்:—

1. இலங்கை பிரித்தானிய இராசாங்கத்துக்கு உபராசாங்கமானது. — 1798-ம் ௵ அக்டோபர் ௴ 12௳.
2. கோமாரியால் வடமாகாணத்திலுள்ள மாடுகளில் ஐந்தில் நாலுபங்கும் தொலைந்தது — 1800-ம் ௵ ல்.
3. "கசேற்று" என்னும் அரசியற்பத்திரிகை நடைபெறத் தொடங்கியது. — 1802-ம் ௵ மார்ச்சு௴ 15௳.

| | |
|---|---|
| 4. ஆதி ஆங்கிலேயகலாசாலை கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. | 1803 - ம் ஹூ ல். |
| 5. லண்டன் மிஷனரிமார்முதன் முதல் இலங்கைக்குவந்தது. | 1803 - ம் ஹூ ல். |
| 6. ஆங்கிலேயர்சேனை கண்டியில் அடியோடு சங்கரிக்கப்பட்டது. | 1803 - ம்ஹூ ஜூன்மீ 26வ |
| 7. ஆங்கிலேயர்க்குரிய நாட்டில் சிங்களர் படையேற்றிக் கலகஞ்செய்து முரிந்தோடியது. | 1805 - ம் ஹூ ல். |

---

## உ. அதிகாரம்.

[பிலாமைத்தலாவை இறந்ததுமுதல்;
கண்டிநாடு ஆங்கிலேயர்கைப்பட்டதுபரியந்தம்.]

இப்பால் 1805-ல் பூச்சியதைக்குரிய "மேயிற்லண்டு" என்பவர் தேசாதிபதிப்பதத்திலும், பூச்சியதைக்குரிய (Rt Hon. E. D. Leishington) லீஷிங்டன் என்பவர் சிரேஷ்ட நியாயாதிபதிப்பதத்திலும், (Hon. John Rodney) "றட்நீ" என்பவர் உபராஜாங்க லிகிதப்பதத்திலும் அமர்ந்தார்கள். அப்போது சிங்களர் ஆங்கிலேயருடன் போர்தொடுத்தலொழிந்து, கண்டியரசனுக்குமாறு யெழுந்து கலாம்விளைத்துப் போர்தொடுப்பா ராயினார்கள். எங்ஙனமெனில், 1806-ல் சத்தகோறளைநாட்டுக் கதிபனாயிருந்த திசாபதி இறத்தலும், அந்நாட்டுக்கு அதிகாரிகளாக எகேலபலையும் முள்ளிக்கொடையும் நியோகிக்கப்பட்டார். அது அவ்வூர்க்குடிகளுக்கு அதிவெறுப்பாயிருந்தமையால் பெரியதோர்கலகம் உண்டாயிற்று. அதுகண்டு பிலாமைத்தலாவை அரசனைநோக்கி, "அண்ணலே, அவ்வூர்க்கு அதிகாரிகளாக என்னையும் என்மருகனாகிய இறத்துவத்தை திசாபதியையும் நியோகிக்கின் கலகம்நிற்கும்" என்றுகூறினன். அவ்வாறே அரசனும் அவர்களை நியோகிக்க, அவர்களும் சனங்களையடக்கி ஆளுவாராயினர். அதுகண்டு அரசன் அவர்கள்மேல் பொறாமையுற்றிருக்குநாளில், கண்டிநகருக்கு இன்றியமையாப் பூஷணம்போற் கிடந்திலங்கும் தெப்பக்குளத்தையும், "பத்திரிப்பு" என்னும் அட்டகோண மண்டபத்தையும் இயற்றுவிக்கத் தொடங்கிக் குடிசனங்களைப் பலபந்தமாய்ப்பிடித்து அவர்களால் அவ்வேலையை நடத்திவந்தான். அப்போது பிலாமைத்தலாவை, "இதுதகாதசெயல்" என்று அரசனுக்குச் சொன்னான். அரசன் அவனுரையை அங்கீகரியாது தன் எண்ணப்படியே அவ்வேலையை முற்றுவித்தான். இதனால் இருவர்மனத்திலும் வைரமும் பகையும் வளர, ஒருவரை யொருவர் மோசஞ்செய்யச் சமயம் பார்த்திருந்தார்கள். இப்படியிருக்கையில், பிலாமைத்தலாவை, தன்மகனு

க்கும், சிறிதுகாலத்துக்கு முன்ன ரிறந்துபோன ; கீர்த்திஸ்ரீராஜசிங்கனுடைய பௌத்திரிக்கும் பாணிக்கிரகணம்செய்ய முயன்றான். அதனை அரசன் அறிந்து, "ஓகோ! இவன் சிம்மாசனத்துக்கன்றோ வழிதேடுகின்றான். நன்று! அவன்செருக்கை அழிக்கின்றேன்" என்று மனத்துள் மதித்து, சிறுது நாளுக்குள் அத்தலாவைமேல் யாதோ ஓர் அற்பகுற்றம் பாரித்து அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கினான். பின்னர் அதுகாரணமாக மானபங்கமுற்ற தலாவை, அரசனைக்கொல்லுமாறு ஒருபாயந்தேடி, அவ்வாறே மலாய்முகாந்திரம் என்பவனையும், அவனைச்சார்ந்த வீரர் அறுபதின்மரையும் பரிதானத்தால் தன்வசமாக்கி, இன்னநாளில் இன்னசமயத்தில் அரசனைக்கொன்றுவிடுங்கள் என்று அவர்களுக்குக்கற்பித்தான். அன்றியும், உடுநுவரை அத்திநுவரை என்னுமூர்களுக்கு அதிகாரிகளாயிருந்தவர்களையும் தன்பக்ஷமாக்கி, அவர்களை அவ்வூர்ச்சனங்களுடன் கலகத்துக்கு எத்தனமாக அச்சமயத்தில் வந்துவிடுமாறும் செய்தான். அப்படியே அந்நாளும் முகூர்த்தமும் வந்தடுத்தன. அப்போது அக்காதகர் எண்ணியிருந்தவாறு அரசன் சயனிக்காது விழிப்பாகவேயிருந்தான். அதுகண்டு அச்சதிகாரர் அரசன் நித்திரைபோமவரையில் பதிவிருந்தார்கள். அச்சமயத்தில் எவ்வழியாயோ அவர்களுடைய பிரயத்தனம் அரசனுக்குப்புலப்பட, அரசன் உக்கிரசிங்கமெனக் கண்களிற் கோபாக்கினிசொலிப்பத் திடுமென எழும்பி, பிலாமைத்தலாவையையும், அவன் மருகனையும், மகனையும், வேறு ஆறு பிரதானிகளையும்பிடித்துச் சிரச்சேதஞ்செய்து, கவந்தக்கூத்துக் கண்டுகளித்தான். "தன்அப்பம் தன்னைச்சுடும்" என்னும் முதுமொழி பொய்க்குமோ! இதுநிகழ்ந்தது 1812-ல்.

அப்பால் (Eheylapola) எகேலபலை முதன்மந்திரியானான். பின்பு அரசன், தன்னிடத்தன்றி மற்றெவர்மாட்டும் நம்பிக்கையற்றவனாய், தாக்ஷிண்ணியம் காருண்ணியம் என்பன சிறிதுமின்றி, தன்மாளிகையிலிருந்தவரும், சின்னாளின்முன் கலகத்துக்கெழுந்த நாட்டினைச்சார்ந்தவருமாகிய சகல உத்தியோகஸ்தரையும், தனது நகரத்து வணிகரையும் தூரத்திலுள்ள விடங்களுக்குப்போக்கிவிட்டு, பின் தனக்கு ஐக்கியமான நாட்டானென்னப் புலப்படுபவன் அன்றி மற்றெவனும் தன்னை அணுகலாகாதென ஆஞ்ஞாபித்தான். அப்பால் எகேலபலை மாட்டும் சற்றே ஐயங்கொண்டான். இப்படியிருக்கையில், தனது பட்டத்துத்தேவி வயிற்றிலுதித்த புத்திரரெல்லோரும் இறந்துவிட்டமையால், புத்திரோற்பத்தியின்பொருட்டுத் தன் கொழுந்திகளிருவரை வதுவைசெய்தான். அவ்வமயத்தில் மந்திரிகள் பிரதானிகள் காணிக்கை கொணர்ந்துவைத்து அரசனைவணங்கிப் போவாராயினர். அப்போது ,ஏகேலபலை விலையுயர்ந்த பொருள்களைக்கொணர்ந்து

அரசன்சமுகத்தில்வைத்தான். அவைகளை அரசன் இகழ்ந்து ஏற்காதுதள்ளினான்.

அப்பால் சின்னாட்கழித்து, அரசன், தன்பிரதானிகள் எல்லோரையும் தந்தம் நாடுகளுக்குச்சென்று ஆங்காங்குமுள்ள விளைவைக் கண்காணித்துப் பகுதிப்பணங்களைத் திரட்டிவரும்படி ஆஞ்ஞைசெய்தான். அது கண்டு ஏகேலபல்லே தனது திசாவகமாகிய சப்பிரகமத்துக்குச்சென்று, அங்கிருந்து அந்நாட்டார்க்கினியனாய்க் குற்றமற்ற அதிகாரஞ்செலுத்திவருங்காலில், வர்த்தகர் சிலர் அரசனிடஞ்சென்று, "அரமனைக்குச் சேரவேண்டிய வருமானங்களை ஏகேலபல்லே தான் எடுத்துக்கொள்வதுமன்றி நம்முடைய பணத்தையும் அபகரித்தான்" என்று பகைமுடிந்தார். அதனால் அரசன் அவன்மேற் கோபங்கொண்டு, "இத்திருமுகம் நீ காண்டலும் கண்டிக்குக்கடுகிவரக்கடவை" யென்று ஆஞ்ஞைப்பத்திரமொன்று போக்கினான். அதனை ஏகேலபல்லே கண்டும் பொருட்படுத்தாது, ஆங்கிலேயருடைய சிநேகம் தனக்கிருக்கும்வரையில் அச்சமில்லையென்னும் தருக்கு மீக்கூறப்பெற்றவனாய் அவர்களுடன் கிருபமுகமாய் உறவாடிக்கொண்டிருந்தான். இதனையும் அரசன் கேள்வியுற்று அதிககோபங்கொண்டு அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கி, முன்னிக்கொடையை முதன்மந்திரியாக்கினான். அது கேட்டு ஏகேலபல்லே தனக்கு அபாயங்கிட்டியது என்று ஆகுலித்திருக்கையில், சப்பிரகமநாட்டார் ஒத்தமொழியினராய், "எம்முயிர் இழந்தும் உம்முயிரைக்காப்போம் அஞ்சாதீர்" என்றுதேற்ற, அவனுந்தேறி, "இனி அரசனை எதிர்ப்பதே கருமம்" எனத் துணிந்திருந்தான். கொளுந்தி எரியுந்தீயில் நெய்யைச்சொரிந்ததுபோல் இச்சமாசாரமும் அரசன்செவிப்பட்டது. உடனே அரசன், "நன்று! அவன்வலியை ஒழிக்கின்றேன்" என்று உருத்தெழுந்து, ஏகேலபல்லேயுடைய மனைமக்களையும், சுற்றமித்திரர் சிலரையும் பிடித்துச் சிறைச்சாலையிலடைத்துவிட்டு, முன்னிக்கொடையை அழைத்து, "நீ ஓர்படையுடன்சென்று சப்பிரகமத்திலிருக்கும் அத்துஷ்டனுடன் போர்தொடுப்பையாக" என்று ஆஞ்ஞாபித்தான். அவ்வாறே முன்னிக்கொடையும் ஓர்படையுடன் சப்பிரகமத்துக்குச்சென்று போர்தொடுத்தளவில், ஏகேலபல்லேயுடைய பக்ஷத்தார் எதிர்த்துநிற்கமாட்டாதவராகிப் பின்னிட்டோட, ஏகேலபல்லேயும் தன்மித்திரர் சிலருடன் கொழும்புக்கோடி ஆங்கிலேயரைத் துணையடைந்தான். அதுகண்டு முன்னிக்கொடை அநேகரைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு ஜயபேரிமுழங்கக் கண்டிக்குமீண்டான்.

இக்கலகம் காரணமாக அரசனுக்கு எழுந்த ஆத்திரமும் இரௌத்திரமும் இத்தன்மையவென்று கூறல் எளிதன்று. "உற்றவிடத்துக் கொரு

வன் என நம்மால் மதிக்கப்பட்டிருந்த ஏகேலபலேயே நமக்குயிர்ப்பகைவனானெனில், மற்றியாரை இனி நம்புவது" என்னும் ஐயக்காட்சி அவனுக்கு உண்டாயிற்று. உண்டாகவே அநேகர் அவன் கோபத்துக்காளாகிச் சிலர் கழுவிலிடப்பட்டும், சிலர் அங்கபங்கம் பண்ணப்பட்டும், சிலர் சிரபங்கம் பண்ணப்பட்டும் இடையறாது ஒரு சிறுபொழுதுக்குள் தென்புலஞ்சேர்ந்தார். இச்சமயத்தில் முன் பிலாமைத்தலாவையுடைய கலகத்துக்கு அநுசாரிகளாயிருந்த பிரதானிகளிலும் பலர் அரசன் ஆஞ்ஞைப்படி கொலைக்களத்துக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களுள் 70 பிரபுக்கள், முன்னிக்கொடையாதியாம் மூவர்தீர்ப்பின்படி, அடியாலும் உதையாலும் அங்கபங்கமுற்றுக் குற்றுயிரோடு கழுவிலிடப்பட்டார்கள். இவ்வளவுபேருயிரைக்குடித்தும் இன்னும் அரசன் கோபந்தணியாதவனாகி மேன்மேலும் அழன்று சினந்து தன்கோபப்பிரசண்டவேகத்தால் தன்மானுஷிய இயல்பையும் துறந்து, எகேலபலேமேல் கொண்டகோபத்தை ஈற்றில் அவன் மனைமக்களாதியரிடத்துத் தீர்க்கத்துணிந்தான். அவ்வாறே எகேலபலேயுடைய தேவியும், அவன்பிள்ளைகளும், அவன்தம்பியும், தம்பி மனைவியும், அரமனைவாயிலிலே நாத விஷ்ணு தேவாலயங்களுக்கு மத்தியிலே கொணர்ந்து நிறுத்தப்பட்டார்கள். அவர்களுள் ஆண்மக்கள் சிரபங்கதண்டனைக்கும், பெண்களிருவரும் நீரிலாழ்த்தப்படற்கும் தீர்ப்புப்பெற்றார்கள்.

அவ்வாசகம் எகேலபலேயுடைய பத்தினி செவிப்படுதலும், அம்மாது நல்லாள், "நானும், என் பிராணநாயகனும், என் அருமருந்தன்ன பிள்ளைகளும், ஆயுங்கால், யாதும் குற்றஞ்செய்தோமல்லோம். இனி, அரசனே! உனது இஷ்டம்" என்றுகூறி, அப்பால் 11 வயதுள்ள தன் மூத்தமகனுடைய வதனத்தைப்பார்த்து, "அப்பா என்பாலா! திடங்கொள்! நாமிறப்பதால் உன் பிதாவுக்குச் சுகிர்தமுண்டாகும். அஞ்சாதுசென்று அதோ ஓங்கிநிற்கும் வாளுக்கு உன்தலையைக்குனித்து இரையாகக்கொடு" என்று சொன்னாள். அவன் அதனைக் கேட்டமாத்திரத்தில் உள்ள தைரியமுங்குன்றித் தன் தாயைக்கட்டிக்கொண்டு அரற்றத்தொடங்கினான்.

அப்போது 9 வயசுள்ள அவன்தம்பி முகமலர்வோடு திடமுடன்நடந்து தலையாரியை அணுகி, தன் தமையனைக்கூவி, "அண்ணா! இதற்குத்தானா அஞ்சுகின்றாய்? இதோபார் இதுவே இறக்கவழி" என்று ஆர்த்துத் தன் தலையை வாளுக்கிலக்கியமாக்க, தலையாரியும் ஒருவீச்சில் அப்பாலன் தலையைக்கூறுசெய்தான். அப்போது கல்லினும்வலிய நெஞ்சனாகிய அரசன், எகேலபலேயுடைய தேவியை அழைத்து, "அதோ நிலத்தில்விழுந்து குருதிகக்கிக்கொண்டு புரளும் உன் மகன்தலையை இதோ இருக்கும் உரலிலி

ட்டு உலக்கைபற்றி உண்கையால் துவைக்கக்கூடவில்லை; அன்றேல், மானபங்கமுற்று முடிவை"யென்று கூறினான். அம்மாற்றம், காய்ச்சிய நாராசம்போன்று அப்பதிவிரதாசிரோன்மணியுடைய செவியிற்புகுதலும், பதைபதைத்து "இருதலைக்கொள்ளியிலிடைப்பட்ட எறும்பு" போல் இதற்கென்செய்வேன்! என்செய்வேன்! என்று நைந்துவாடி, பின்,

"மருந்தோமற் றூனோம்பும்வாழ்க்கைபெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து."

என்றபடி என்னகெடினும் மானமொன்றே காக்கப்படத்தக்கது என்று தெளிந்து தேறி, அரசன் சொற்கமைந்து அச்சிரசையெடுத்து உரலிலிட்டுக் கையினில் உலக்கையையெடுத்து உயர்த்தி, கண்களினின்றும் நீர் தாரைதாரையாய்ச்சோர, துவைக்க மனம் வராமையால், அத்தலைமேல்விழும்படி கையைவிட்டாள்.

இவ்வாறே ஒன்றன்பின் ஒன்றாய் நான்குபிள்ளைகளின் தலையும் கொய்யப்பட்டுக் கீழேவிழ, அம்மாதும் ஓரொருதலையாய் உரலிலிட்டு உலக்கையையுயர்த்திக் கைவிட்டாள். ஈற்றில் பாலுண்டுகொண்டிருந்த ஓர் பாலகனையும், அரசன் ஏவலின்வழி ஓர் சேவகன்பறித்து அதன் சிரசைக்கொய்து உரலிலிட்டான். உரலிலிட்டபோது வாயினின்றும் பால் குபீரென்று ஓடிற்றும். பின்னர் அச்சிரசையும், அம்மாது தன் வயிறெரிய "ஜகத்தீசா! யாதுசெய்வேன்" என்று, வாய்விட்டலறி..........................

அக்காலையில், இக்கண்ணராவியைக் கண்டோர் கேட்டோருள் நைந்துருகாதவன் கன்னெஞ்சனாகிய அக்கொடியன் அன்றி மற்றியாவனோ! எல்லோரும் தம்வசந்தப்பி விம்மிதமுற்றுப் பரிதபிப்பாராயினர். அப்போது அரசன்பக்ஷத்துத் திசாபதிகளுள் ஒருவனாகிய பிலகப்பனைத்திசாபதியும் தன்னை யறியாமல் மனம்நெக்குருகிச் சோர்ந்து தரையில்விழுந்தான். அதுகண்டு அரசன்சினந்து அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கினான். அது நிற்க:

இவ்வாறந்தப் பிள்ளைகளைக்கொன்று துவைப்பித்தபின்னர், தீயரிற்றீயனாகிய அரசன், எகேலபலையுடைய மனைவியையும் அவனுடைய ஓய்ப்பிடியானையும் வேறிருபெண்களையும் போகாம்பரைவாவியில் இட்டு ஆழ்த்திக் கொல்வித்தான். வேறுமநேகர் சிரபங்கமுற்றார். இது நிகழ்ந்தநாள்முதல் இரண்டுமூன்று தினங்களாக அரசன் அரமனை ஒழிந்த மற்றுள்ள மனைகள்தோறும் துக்கங்கொண்டாடாதவரில்லை. அக்கிரகங்கள்தோறுமுள்ள அட்டிற்சாலை அடுப்புகளெல்லாம் தீமூட்டப்பெறாது ஆம்பிபூத்தவென்றால்

பின்னை அந்தகர்பட்டதுயரைச்சொல்வதெங்ஙனம்! இதுநிகழ்ந்தது 1814-ம்ஆு மேமீ"-ல்.

இவ்வகைக் கொடுமைகளைச் சகிக்கவாற்றாத பிரசைகள் எல்லோரும், "பெரும்பாரந்தாங்கி வருத்தமுடன் செல்லுமொருவன் எப்போது சுமைதாங்கி எதிர்ப்படும் என்று ஆவலுறுவதுபோல், எப்போது ஆங்கிலேயர் வருவார் நாமெப்போது இப்பாதகனைத்தொலைத்துச் சுகம்பெறுவோமென்று ஆவலும் மூட்டும் மேலிடப்பெற்றவராய், ஆங்கிலேயர்வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இது நிற்க; கடந்த 1812-ல் மேயிற்லண்டுமென்னவர் உத்தியோகத்தினின்றுபெயர, அவரிடத்திற்குத் தேசாதிபதியாக (Sir Robert Brownrigg) பிறவுன்ரிக்கு என்பவர் வந்திருந்தார். எகேலபலை அவரிடஞ்சென்று தனக்கும் தன் மனைமக்களுக்கு முற்றதை முறையிட்டதுமன்றி, "நீரே என்தாதை. என்னை இரக்ஷிப்பது உமது கடனாகும்" என்றுகூறி வியசனமேலீட்டினால் அழுதான். அதுகண்டு "பிறவுன்ரிக்கு" என்பவர் அவனுக்குத் தேறுதல்சொல்லி, "அஞ்சாதே" என்று தைரியவசனமும் பகர்ந்து, அரசனை அடக்குதற்கான உபாயங்களைத் தேடத்தொடங்கினர்.

இப்படியிருக்கையில், ஆங்கிலேயருடைய பிரசைகளாகிய சுவதேச வணிகர் பதின்மர் வியாபாரத்தின்பொருட்டுக் கண்டிக்குப்போக நேர்ந்தது. அவர்களை அரசன் வேவுகாரர் என்றெண்ணி எல்லோரையும்பிடித்து மூக்கரிந்ததுமன்றிச் சிலர்க்குக் கர்ணபங்கமும், சிலர்க்குப் புஜபங்கமுமுடன் செய்து, கூறிட்ட உறுப்புகளை மாலையாகக்கோத்து அவர்கள் கண்டத்தில் தாரணஞ்செய்து அனுப்பிவிட்டான். அவருள் எண்மர் வழியில் உயிர் துறக்க, எஞ்சிய இருவர்மாத்திரம் கொழும்புசேர்ந்து நிகழ்ந்ததை ஆங்கிலேயர்க்குணர்த்தினர். இது நிகழ்ந்து சின்னாளில், அரசன் தன்வீரர் சிலரையனுப்பி ஆங்கிலேயர்க்குரிய கிராமங்கள் சிலவற்றைத் தீயிட்டுநாசஞ் செய்வித்தான். இவ்வாறே அரசன் அடிக்கடி ஆங்கிலேயர்க்குக் கோபம் மூட்டிவந்தான்.

இவற்றையெல்லாங்கண்ட "பிறவுன்ரிக்கு" மன்னவர் இனி வாளாவிருப்பது தகுதியன்றெனநினைந்து, 1815-ம்ஆு ஜனவரிமீ" 10உ-ல் ஆங்கிலேயராகிய நாம் போருக்காயத்தமானோம் என்று அரசனுக்குத் தெரிவித்தார். தெரிவித்த விருப்பமாவது:—ஆங்கிலேயராகிய நாங்கள் கண்டி நாட்டாருக்குமாறாய்ப் போருக்கெழுந்தாமல்லேம். கொடுந்தொழிலாளனும் தகாதசெயலாளும் நமக்குக் கோபமூட்டியவனும், பரம்பரைப் பிரபுத்துவமுடைய சுதேசகுடும்பங்களைச் சூறாதுவீட்டியவனும், எண்ணிறப் பிர

ஜைகளைக்கொன்று கண்டிநகரில் உதிரப்பிரளயம் காட்டியவனும், சர்வ மதசம்மதசன்மார்க்கப் பிரமாணத்துக்கு முற்றும்மாறான தன் ஒழுக்கத்தால் மன் பனைதக்குமுன்னர்த் தன்னை மானுஷியவியல்பு சிறிதுமில்லாத மறவனாக நாட்டிக்கொண்டவனுமாகிய அத் தீய கொடுங்கோன்மன்னனுக்கு மாறாகவே போருக்கெழுந்தாம் என்பதாம்.

அப்பால் ஆங்கிலேய சைனிய பலங்களெல்லாம் எட்டு அனீகங்களாக வகுக்கப்பட்டு, இரண்டு கொழும்பினின்றும், ஒன்று நீர்கொழும்பினின்றும், இரண்டு காலியினின்றும், வேறிரண்டு திரிகோணமலையினின்றும், மற்றொன்று மட்டக்களப்பினின்றும் புறப்பட்டுக் கண்டிக்கேகும் படி ஏற்பாடுசெய்யப்பட்டது. அப்படியே கொழும்புச் சேனாவீரர் துப்பாக்கி பீரங்கி வாள்முதலிய ஆயுதங்களுடன் அணி அணியாய் வஞ்சிப்பூமாலைசூடிப் புறப்பட்டு, கண்டியரசனுடைய சேனைகள் பெருந்திரளாய் உறுவனவலையில் நிற்கின்றனவென்று கேள்வியுற்று அவ்விடஞ்சென்று தும்பைமாலைசூடினர். அப்போது கண்டிநாட்டுச் சேனாவீரரும் தும்பைமாலைசூடி ஆங்கிலேய சேனையுடன் எதிர்த்தமர்பொருதும் நிருவகிக்கவாற்றாது பின்வாங்கினர். அதுகண்டு ஆங்கிலேயர் முன்னேக்கிப் போர்முரசறைந்துகொண்டு நடந்தார். அப்போது இராசாங்கத்துச் சேனாவீரருடன் முள்ளிக்கொடை எதிர்த்துவந்தான். அவனை ஆங்கிலேயவீரர்வளைந்து அவன்சிவிகையைக் கையாடினர். ஆயினும் அவன் அவர்கள் கைக்கு அகப்படாது உபாயமாய்த்தப்பி யோடினன். ஓடியும், தான் கண்டியைவிட்டகலின், தன் பெண்டுபிள்ளைகளுக்கும் ஏகேலபலையுடைய மனைமக்களுக்குற்றவாறே உறுமென்னும் அச்சங்காரணமாகக் கண்டியைவிட்டோடக் கூடாதவனாய் வேறுவழியாய் ஆங்கிலேயரிடம்வந்து, தான் கண்டியரசனுக்குப் பகைஞனென்றும், அரசனைத் துரத்திவிட வருவோருக்கு அநுகூலியென்றும்கூறி அவர்களுக்கு நேசன் ஆனான். அதன்மேல் திரிகோறளை சதுர்க்கோறளையென்னு மிடங்களிலுள்ளோர் கலகம்விளைத்து நடனமாடியும் வாய்க்காமையால் ஈற்றில் அவ்வூர்ப் பிரதானிகள்யாவரும் முள்ளிக்கொடைபோன வழியையே பின்பற்றி ஆங்கிலேயரைச் சரணடைந்தார்கள்.

அப்பால் அரசன்தன்னைப் பிறர்வெல்லுதலரிதென்னும் வீண்பெருமிதத்தினால் இறுமாந்து, படையெடுத்து யுத்தசன்னத்தராய்க் கண்டியை நாடிவரும் ஆங்கிலேயருடன் பொருதற்கு யாதும் பிரயத்தனம்செய்யாது வாளாவிருந்தான். அப்போது ஆங்கிலேயரும் சற்றே அணித்தாகினர். அதனை அறிந்து அரசனுக்குத் துணைவர்போல் நின்றயாவரும் பின்வாங்கினர். அரசன் அதுகண்டு கண்களிற் கோபாக்கினி சொலிப்ப, "இனி யாது

செய்வது" என்றாலோசிக்கும்வேளையில், ஓர் ஒற்றன் ஓடிவந்து "ஐயனே! ஆங்கிலேயர் நகர்ப்புறஞ்சார்ந்தார்" என்றான். அதுகேட்டரசன் துணுக்குற்று, "இவன்தலையைச் சேதியுங்கள்" என்று தன் பரிசாரகர்க் காஞ்ஞைசெய்தான். சொல்லி யிதழ்மடிக்காமுன் அவ்வொற்றன்தலையும் பூமாதின்மடிப்பட்டது.

இங்கே அரசன்சீரிவ்வாறாக, அங்கே முள்ளிக்கொடைஎன்பவன் எகேலபலையைக் காணவிரும்பி ஓரிடத்தில் சந்தித்தபோது, அவனைப்பார்த்து, "மித்திரா! நான்பாழாகினனே" என்றான். அதுகேட்ட எகேலபலை, "அற்றாயின், என்னிலைமைபிறிதோ" வென்னலும், இருவரும் விம்மிதமுற்றழுது பின்தேறி, அரசனைத்தொலைக்கும் வழிவகைகளைச் சூழ்ச்சிசெய்துகொண்டு பிரிந்தார்கள்.

அதுநிற்க; அடுத்த 14-உயில், ஆங்கிலேயர்படைகள் எதிர்ப்பார்யாருமின்றிக் கண்டிநகருள் நுழைந்தன. அதுகண்டு அரசன் தன்னுயிரைமாத்திரம் காக்கமுயன்றவனாய், தன் ஆசைநாயகிகளிருவரைமாத்திரமழைத்துக்கொண்டு, மற்றைநாயகிகளையும் திரவியக்குவைகளையும் ஆங்கிலேயருடைய தயைக்கிடனாகவிட்டு, கண்டிநகரினின்றும் வெளிப்பட்டுத் தமிழப்பரிசாரகர் சிலருடன், சமீபத்திலுள்ள தும்பறைநாட்டுக்கோடி அங்கே ஓர் மலையின்மேல் ஏறி ஒளித்தான். அங்கும் மழை அவனுக்குப்பகைவனாய் அவனைத்துரத்த, அவனும் அஸ்தமயனவேளையில் அம்மலையினின்றுமிழிந்து, மெதமகாநுவரைக்கோடி, அங்கே ஒரு தனித்தவீட்டைத் தனக்கு மறைவிடமாக்கிக் கொண்டு சத்துருசமீபத்திலுளான் என்பதையுணராது கபாடபந்தனம் பண்ணிக்கொண்டு தன் மனைவியரிருவருடனும் நித்திரைபோயினான்.

அப்போது எகேலபலை தனது அடிமை ஆட்களையும் எகநெலைக்கொடைத் திசாபதியையும் அனுப்பி, அரசனிருப்பிடத்தையாராய்ந்து வருமாறுசெய்ய, அவர்களும் அரசன் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துச் சுவரைப்போழ்ந்து, தீவர்த்திகளுடன் உள்நுழைந்தார்கள். அரசன் அவர்களைக் கண்டமாத்திரத்தில் சற்றே தைரியங்குன்றி மயங்கிநின்று, பின் தைரியங்கொண்டு அவர்கள்மேற்சாடினான். அதுகண்டு எகநெலைக்கொடை தன் ஆட்களைநோக்கி, "அத்துஷ்டனைப் பிடித்துக்கட்டுங்கள்" என்ன, அவர்களும், அவனை மேல்விழுந்துபிடித்துக்கட்டி வாயில்வந்தவாறு தூஷித்து அவன் முகத்தில்துப்பிச் சிறிதுதூரம் தரையிலிட் டிழுத்துவந்தார்கள். அப்பால் எகநெலைக்கொடை அவனை (Colonel Hook) ஊக் தளபதியிட

மொப்பித்து, "துரையே, இத்தீயன்மீண்டரசுக்கு வருவனாயின், முன்னர்க் கழுவேறியவருடன் நானுமொருவனாவதில் தடையில்லை" யென்றுகூறினான். அதுகேட்டு "ஊக்" தளபதி சிறிதும் நேரந்தாழ்க்காது ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனையும் அவன் மனைமக்களாதியவரையும் கொழும்புக்கனுப்ப, அங்கே ஆங்கிலேயர் அவர்களைச் சிறைக்காவலிலிட்டு, அடுத்தவருஷத்தில் சென்னை இராஜதானியைச்சேர்ந்த வேலூர்க்கனுப்பினார்கள். அரசன் அங்கிருந்து 1832-ல் இறந்தான். அவன் பௌத்திரர், நாகபட்டணம்முதலிய விடங்களிலிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் அரசினர் உபகாரச்சம்பளங் கொடுத்துவருகிறார்கள்.

அப்பால் மார்ச்சுமீ 2உ-ல் கண்டியரமனைச் சபாமண்டபத்தில் தேசாதிபதியானவர் அந்நாட்டுப் பிரதானிகளுடன் ஓர்சபைகூட்டி, அச்சபையின்கண்ணே ஓர் பொருத்தஞ்செய்துகொண்டார். அதாவது, "இனி இக்கண்டிநாட்டு அரசியல் ஆங்கிலேயர்க்குரியது. அவ்வரசியலும் சுதேசிகளுடைய மதாசாரங்களுக்குச் சிறிதும் இடையூறுசெய்யாததாய், எச்சனங்களுக்கும் தராசுநாப்போல் நீதிசெலுத்துவதாய் நடைபெறும். இன்னும், பிரதானிகள் யாவரும் முன்போல் தத்தம் அதிகாரங்களும் வரிசைகளுமுடையவராய் இராசாங்கத்துக்குக் கீழமைந்து நடக்கக்கடவர்." என்பதாம்.

இவ்வாறு இச்சபையில் அரசியல்முறை சித்தாந்தப்பட்டவுடன், பிரசைகளொருபால்நின்று சந்தோஷத்துடன் ஆர்ப்பரிக்கவும், பீரங்கிகள் கடகடவென்று கோஷிக்கவும், தேசாதிபதிமுதலியோர் அதிசம்பிரமத்துடன் ஆங்கிலேயக்கொடியை ஆரோகணஞ்செய்து, இலங்கைக்கு இராஜா இங்கிலாந்திலிருந்து செங்கோல்செலுத்தும் இராஜாதிராஜனான (George III.) ௩-ம் ஜார்ச்சு வேந்தனே என்று வாழ்த்தினார்கள்.

கண்டிநாட்டு இராசாங்கம் தொடக்கத்தில் ஒருசங்கத்தால் நடத்தப்பட்டுவந்தது. அச்சங்கத்துக்குத் தலைவர் மூவர். ஒருவர் இராஜபிரதிநிதி. அடுத்தவர் நீதிவிசாரகர். மற்றவர் இறைவிசாரகர். இச்சங்கத்தில் வழக்குவிசாரணைபண்ணப்படும்போது மந்திரிபிரதானிகளுமுடனிருந்து விசாரிப்பர். இவர்கள்செய்யுந்தீர்ப்பைத் தேசாதிபதிமாத்திரம் மாற்ற அதிகாரமுடையவர். இச்சங்கமும் அதன்கீழ்ப்பட்ட ஊவை, சப்பிரகமம், திரிகோறளை என்னு மூர்களிலுள்ள (Agents) உப அதிபதிகளும் அன்றி உள்ளூர்களிலே, முன்போல் திசாபதிகளும் இரட்டை மகாத்மயாக்களுமே இருந்து அதிகாரம்பண்ணிவந்தார்கள். இன்னும் ஆங்காங்கும் பதினொரு இராணுவசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றில் 1000 போர்மீளிகளும் வைக்கப்பட்டார்கள். முதன்மந்திரி உத்தியோகத்தில் முன் இரண்டாம்மந்திரியாயி

ருந்த மூன்ஸிக்கொடையும், இரண்டாம்மந்திரியுடைய இடத்தில் வப் புவத்தையென்பவனும் நியமிக்கப்பட்டார்கள். முதன்மந்திரி உத்தியோகம் எகேலபலேக்கே முதலில் கிருமிக்கப்பட்டது. எகேலபலே, தான் கண்டிக்கு அரசனாகுதற்கு எண்ணியிருந்தமையால் அது வாயாதபோதே தனக்கு உத்தியோகம் வேண்டுவதில்லையென்றும், ஆங்கிலேயர்மித்திரன் என்னும புகழ்ச்சொல் ஒன்றேபோதியது என்றும் போக்குச்சொல்லி மந்திரித்துவத்தை அங்கிகரியாது, ஓர்பிரபுவுடைய கன்னிகையை வதுவைசெய்துகொண்டு அதி சம்பிரமத்துடன் கண்டிநகரில் வாழ்ந்திருந்தான்.

இனி, முன் தேசாதிபதிப் பதத்தினின்றும் நீங்கிப்போன மேயிற்லண்டென்னவருடைய அரசிபற்காலத்து விசேஷங்களாவன:—

| | |
|---|---|
| 1. முதன்முதல் பொலீசு விதானைமார் ஊர்கள்தோறும் நியோகிக்கப்பட்டது. | 1806-ம் ௵ ஜூலைமீ ல். |
| 2. மகமதியப்பிரமாணங்கள் அநுசரிக்கப்படத்தக்கவெனச் சங்கத்திலுத்தரவானது. | 1806-ம் ௵ ஆகஸ்டுமீ 5உ ல். |
| 3. கடைவரி விதிக்கப்பட்டது. | 1807-ம் ௵ ஜனவரிமீ ல். |
| 4. இராஜாங்க நந்தனவனம் (Botanic Garden) அமைக்கப்பட்டது. | 1812-ம் ௵ ல். |

---

## ௯. அதிகாரம்.

[கண்டிநாடுபிடிபட்டதுமுதல்; "மெக்கென்சி" த் தேசாதிபதியுடைய அரசியல்பரியந்தம்.]

இப்பால் கண்டிநாடுகளில், குடிகள் உவந்துகொண்டாடுமாறு ஆங்கிலேயர் ஈராண்டாகச் செங்கோல்செலுத்திவந்தார். என்னே! தம் சுஜாதி அரசர்காலத்தில் அடிமைகள்போல் அஞ்சி ஒதுங்கித்திரிந்த பிரசைகள் எல்லோரும் ஆங்கிலேயர்நாளில் தமக்குத்தாமே எசமானராய் நடமாடத் தலைப்பட்டார்கள். ஆங்கிலேய மன்னரும் பிள்ளைகளை இரக்ஷிக்கும் பெற்றார் போலவும் கண்ணைக்காக்கும் இமையைப்போலவும் அவர்களைப்பரிபாலித்து வந்தார்கள். ஆயினும், முன்னாளில் அரசர்களைத் தம்வசப்படுத்திக்கொண்டு, கேள்வி முறையொன்றுமின்றித் தம் மனம்போன போக்கே பிரமாணமாகக்கொண்டு அதிகாரம்பண்ணிக் குடிகளுடைய மண் பொன் பெண் என்பவைகளை அபகரித்து மிக்க செல்வித்தையுற்றிருந்த திசாபதிகள் மந்திரிகள் முதலாயினோர்க்குமாத்திரம் ஆங்கிலேயருடைய அரசியல் விபரீதமாய்க் காணப்பட்டது. ஏனெனில் முன்போல் சுயேச்சைப்

படி அதிகாரம்பண்ணற்கு வாய்க்காமையாலென்க. அதனால் பிரதானிகள் அநேகர், தம்மை மறவனாகிய விக்கிரமராஜசிங்கனுடைய கையினின்றும் இரக்ஷித்துவிட்ட ஆங்கிலேயர்க்குமாறாய், நன்றிமறந்து, கலகத்துக்கு ஆயத்தமானார்கள்.

அவ்வாறே 1817-ம் ஆு அக்டோபர்மாதமளவில் ஊவைநாட்டிலே பௌத்தகுரு ஒருவன், தானே கண்டிநாட்டுக்கு அரசன் என்றெழும்பி, அநேகரைத் தன்பக்ஷமாக்கிக்கொண்டு இராஜாதிகாரஞ் செய்யத்தலைப்பட்டான். அதுகண்டு கண்டிநாட்டிலுள்ள பிரதானிகள்யாவரும் அவன்பக்ஷமாயினர். ஊவைநாட்டுக்குத் திசாபதியென ஆங்கிலேயரால் நியோகிக்கப்பட்டிருந்தவனும் எகேலபலையுடைய மைத்துனனுமாகிய கபிற்றிப்பலை என்பனும் அவன்பக்ஷமாக, அவனை அப்போலி அரசன் தனக்கு முதன்மந்திரியாக்கிக்கொண்டான். அப்போது அவ்வூரவர்கள் ஓர் சோனகனைப் பிடித்துக்கொண்டுபோய் அவன்மேல் ஏதோ குற்றம்பாரித்து அப்போலி வேந்தனுடைய சமுகத்தில் நிறுத்த, அவ்வரசனும் அவனைக் குற்றவாளியென்று தீர்த்துக் கொல்வித்தான். அதனை ஊவைமாகாணதிபதியாயிருந்த (Wilson) வில்சன் துரை அறிந்து போர்வீரர்சிலருடன் அதனை விசாரிக்கும்பொருட்டு அவ்விடம்போனான். போகும்போது வழியில் திரண்டுநின்ற வேடர்கள் தம்வில்லிலிருந்த அஸ்திரங்களுக்கு அத்துரைமகனை இலக்காக்கிக் கொன்றார்கள். வில்சன்துரை விழுதலும் அவனுடைய வீரரெல்லோரும் புறமிட்டு அதிப்பிரயாசையோடும் வதுளைக்கோடினர்கள். பின்னர் இதுதான் சமயமென்று, தென்சப்பிரகமம், திரிகோறளை, சதுர்க்கோறளை, உடுநுவரை, அத்திநுவரை என்னு மூர்களிலுள்ளவர்களும், முதன்மந்திரியாகிய முள்ளிக்கொடையுமொழிந்த மற்றை ஊர்களிலுள்ளோர் யாவரும் ஆறுமாசத்துக்குள் ஆங்கிலேயர்க்குமாறாய் ஆயுதபாணிகளாயினர்கள். ஆகவே யுத்தமும் ஒன்றுநேரிட்டது. இருதிறத்தினரிலும் அநேகர் மடிந்தார்கள். ஆயினும் கண்டிநாட்டாரை ஆங்கிலேயர் மேற்கொண்டாரில்லை.

அடர்ந்தவனங்களிற் சென்று சிங்களரைத்தேடுதலும், மலைக்கணவாய்களின்மேலேறிச் செல்லுதலும், ஆறுகளைத்தாண்டுதலும், ஆங்கிலேயர்க்குக் கூடாமையாயிருந்தன. அன்றியும் சுரநோயும் ஒருபால்நின்று ஆங்கிலேயரை வாட்டிற்று. இக்காரணங்களால் சிங்களரை ஆங்கிலேயர்வெல்லுதல் அரியசெயலாயிருந்தது. அதுகண்டு ஆங்கிலேயர், 1818-ம் ஆு பிப்பிரவரிமீ 21உ, இனி இந்நாட்டாரை அடக்குதற்கு இதுவன்றி வேறு உபாயமில்லையென்று துணிந்து:—தம்முடைய சேனாவீரரை யழைத்து, "மறநெறியால் கண்டிநாட்டை அடக்குக" என்று ஆஞ்ஞைசெய்தார். அவ்

வாறே அவர்களும் ஊர்கள்தோறும்சென்று கலகக்காரருடைய வீடுகளுக்குத் தீயிட்டார்கள். கன்றுகாலிகளை நாசஞ்செய்தார்கள். கனிதரு விருக்ஷங்களை வீழ்த்தினார்கள். விளைநிலங்கள் தோட்டங்களை நிர்மூலமாக்கினார்கள். ஆலயங்களுள் நுழைந்து கொள்ளையாடினார்கள். கண்டியிலிருந்த புத்ததசனத்தையும் கையாடினார்கள். குருமாரைப்பிடித்து அவமானம்பண்ணி அடித் துவைத்துத் துரத்திவிட்டார்கள். இவ்வாறே கண்டிநாட்டில் ஒவ்வொருகோணத்திலும் ஆங்கிலேயவீரர் பரந்தார்கள். எங்கும் புகைக்காடாயினது. எங்கும் அமர்க்களமாயினது. எங்கும் அச்சமே மேலிட்டது.

இவற்றையெல்லாங்கண்ட குடிகளிற் பெரும்பாலார் கெடிமண்டித் தம்மனைமக்களோடு காடுமலைகளுக்கோடினார்கள். சிலர் ஆங்கிலேயர்க் கபயம் அபயம் என்று ஆங்கிலேயரை அடைந்தார்கள். காடுமலைகளுங்கோடிய குடிகளிற்பலர் பிணியாலும் பசியாலும் இறந்தார்கள். ஏனையோர் மழையால்வருந்தினார்கள்.

இச்சமயத்தில் சென்னைபுரியினின்றும் ஆங்கிலேயர்க்கு உபபலங்களும் வந்துசேர்ந்தன. இதற்கிடையில் சிங்களப்பிரதானிகளும் தம் ஐக்கியமுடைந்து தம்முள் ஒருவர்மேல் ஒருவர் பகைகாட்டத்தலைப்பட்டார்கள். போலி அரசனுடைய முதன்மந்திரியாகிய கபிற்றிப்பலைக்கும் இரண்டாம்மந்திரியாகிய மதுக்கலைக்குமே ஒரு சண்டைமூண்டது. இப்படியிருக்கையில் போலி அரசன் தும்பறைக்குவந்து அங்குள்ள அரமனையில் குடிகொண்டான். ஜனங்களும் அவனை அரசனாகவே மதித்து மரியாதை புரிந்தார்கள். அப்போது மதுக்கலை கபிற்றிப்பலையுடைய செருக்கை அடக்கவேண்டி அரசனைப்பிடித்து விலங்கிலிட்டான்.

அப்பால் 1818-ம்வரு அக்டோபர்மீ கலககாரணர் யாவரும் பிடிக்கப்பட்டார்கள். கபிற்றிப்பலையும், இறந்துபோன பிலாமைத்தலாவைமகனும் அநுரதபுரத்திலே (Gen. Fraser) பிரேசர் என்னுஞ் சேனாபதியுடையவீரரால் அகப்படுத்தப்பட்டார்கள். பின்னர் மதுக்கலையும் பிடிக்கப்பட்டான். ஈற்றில் எகேலபலையும் பிடிக்கப்பட்டான். கபிற்றிப்பலையும் மதுக்கலையும் சிரபங்கம் பண்ணப்பட்டார்கள். எகேலபலையும் தலாவைமகனும் வேறுமனேகரும் மோரிசுத்தீவுக் கனுப்பப்பட்டார்கள். (அவருள்பலர் கண்டியரசன் வேலூரில் இறந்தபின்னர் ஆங்கிலேயருடைய அநுமதிப்படி இலங்கைக்குமீண்டார்.)

இவ்வளவில் கலகமும் அமர்ந்தது. இவ்வொருவருடத்துக்கிடையில் மாண்ட கண்டிநாட்டுச் சனத்தொகை பதினாயிரத்துக்குக் குறையாது. அவ

ருட்சிலர் போராலும், பலர் காடுமலைகளிலிருந்து சுரநோய்கொண்டும் பசிநோய்கொண்டும் உயிர்விட்டார்கள். ஈராண்டாக நிலங்களெல்லாம் பயிர்ச்செயலின்றிப் பாழாகின. குடிகளுடைய நெற்போர்களெல்லாம் தொலைந்தன. அடுத்தபோகத்திற்குக் கார்காலமுமடுத்தது. அப்போது குடிகளிடத்தில் விரைமுதல் சிறிதுமில்லாமற்போயின. அதுகண்டு என்செய்வதென்று எல்லாநாடுகளும் ஒரொருநாடாய் ஆங்கிலேயர்க்குள் அடங்கி ஒடுங்கின.

இவ்வமயத்தில், ஆங்கிலேயர் கண்டிநாட்டு அரசியல்முறையை யெல்லாந்தள்ளிப் புது ஏற்பாடுகள் செய்தார்கள். முன் பகுதிப்பண அதிபதிகளாயிருந்த சிங்களரைநீக்கி அவர்கள்பதத்தில் ஆங்கிலேயரையே நியோகித்தார்கள். நீதிவிசாரணையையும் ஆங்கிலேயர்தாமே நடத்திவந்தார்கள்.

அப்பால் 1820-ல் "பிரவுன்ரிக்கு" தேசாதிபதி தம் உத்தியோகத்தினின்றும்நீங்க, (Sir Edward Barnes) பாண்ஸ் என்பவர் உபதேசாதிபதியாகினார். அடுத்த 1823-ல் (Sir Edward Paget) பாஜற்று என்பவர் தேசாதிபதியானார். அவர் பத்துமாசம்வரையில்மாத்திரம் அரசுசெய்தார். அவருக்குப்பின் (Campbell) காம்பேல் தேசாதிபனாகி 1 வருடமிருந்தார். இவர்கள்காலத்தில் அதாவது 1820-ல், முன் ஒருவன் அரசுசெய்ய எத்தனித்துப் பட்டபாட்டைக் கேள்வியுற்றிருந்தும் மறந்துபோலும் வேறொருவன் கலகத்துக்கெழுந்தான். உடனே அவன் அடக்கப்பட்டான். அடுத்த 1823-ல் புத்தகுரு ஒருவன் மாத்தளையில் கிளம்பினான். அவனையும்பிடித்துக் கண்டிநகர்த் தெருக்களைக் கூட்டுமாறுசெய்தார். அப்பால் வேறுபலரும் கலகஞ்செய்தெழுந்தார்கள். அவர்களுடைய எழுச்சியெல்லாம் ஆங்கிலேயர்க்கு வேடிக்கைபோலிருந்தன. 1824-ல் முன் உபதேசாதிபதியாயிருந்த பாண்ஸ் என்பவர் தேசாதிபதியாகி 1831-ம்வரு வரையில் கோலோச்சினார்.

அவர் கண்டிநாடுகளில் வழிச்சாலைகளுண்டாக்குவதில் அதிமுயற்சியுடையவராயிருந்தார். கழனியாற்றின்மேல் மிதவைகளால் ஓர்பாலத்தை அமைப்பித்தார். அதனைச் சங்கிலிப்பாலம் என்பர். கொழும்பிலிருந்து கண்டிவரையில் பாண்டிற்போக்குவரவுக்காக ஓர்சாலையை வெட்டுவித்தார். அப்பாதையைக் கடுகணாமலைமேல் அமைப்பித்த (Capt Dawson) "டாசன்" என்னும் சிற்பசாஸ்திரி அம்மலையிலேயே சுரநோயால் இறந்தார். அவருடைய ஞாபகார்த்தமாக அம்மலையிலே வழியோரத்தில் ஓர்ஸ்தம்பம் நாட்டப்பட்டுளது. பேராதனையிலும் மகாவலிகங்கையாற்றின்மேல் ஓர் அழகிய பாலத்தைக் கட்டுவித்தார். குருநாகலைமார்க்கத்தில் வழிதடுத்திருந்த மலையைக்குடைந்து போக்குவரவுக்கு வசதியாக்கினார். அன்றியும் கண்டிநக

ரிலுள்ள மகோன்னதமாளிகையையும் அவரே அமைப்பித்தார். இவ்வேலைகளையெல்லாம் அவர் கூலி கொடாது சனங்களைப் பலபந்தப்படுத்தி அவர்களால் முடிப்பித்தாரேனும், அவைகள் ஊருக்கு மிக்க நன்மையைத் தருவனவாயின. அவர்நாளிற்றான், அதாவது 1827-ல் ஆரோக்கியத்தின்பொருட்டு ஆங்கிலேயர் நுவரெலியாவுக்குப் போகத்தொடங்கினார்கள்.

இவ்வாறு "பாண்ஸ்" மன்னவர் பலவேலைகளைச் செய்து 7 வருடம் துரைத்தனஞ்செய்து 1831-ல் தமதூர்போக, (Robert Horton) றபேர்ட் ஹார்ட்டன் என்பவர் தேசாதிபதிப்பதத்திலமர்ந்தார். அவர் 1832-ல் கண்டிக்கும் கொழும்புக்குமிடையே தபாற்போக்குவரவின் பொருட்டு ஓர் குதிரைப்பாண்டிலை ஏற்படுத்தினர். அவ்வருடத்து ஜூன்மீ 1உ-ல் கொழும்புக்கோட்டையினுள்ளும் புறநகரினுள்ளுமுள்ள வீடுகளையும் நிலங்களையும் தமிழர்க்கும் சோனகர்க்கும் விற்றார். பின்னர், கொழும்பு வர்த்தமானியென்னும் ஆங்கிலேய சமாசாரபத்திரிகையை ஏற்படுத்தி அதற்குப்பத்திராதிபராக "ஜாட்சீ" என்பவரை நியோகித்து, இராஜாங்கத்து உத்தியோகத்தரையும் அதற்கு உதவிசெய்யுமாறுசெய்தார். பின்னர் அப்பத்திரிகை தலைமை இராஜாங்கத்தாரது அநுமதிப்படி நிறுத்தப்பட, கொழும்பிலுள்ள ஆங்கிலேய வர்த்தகர்களுடைய முயற்சியால் (Observer) ஒப்சேவர் என்னுஞ் சமாசார பத்திரிகை நடைபெறத்தொடங்கிற்று. அப்பால் தேசாதிபதியுடைய அதிமுயற்சியால் "இராஜகாரியம்" என்னும் கடும்பிடிவேலை ஒழிக்கப்பட்டது. (இராஜகாரியம் என்பது அரசினர் யாதொருவேலையைக் கூலிகொடாது சனங்களால் முடிப்பித்தல்.) பறங்கிக்காரர் காலந்தொட்டு இராஜாங்கத்துக் குரியதாயிருந்த கறுவாப்பட்டையின் வியாபார சுதந்திரம் யாவருக்கு முரியதாக்கப்பட்டது. அந்நாள்முதலாகப் பிரசைகள் கறுவாவினால் வருமூதியத்தைப் பெறுவாராயினர். 1833-ம்ஆ ஜூலைமீ 31உ-ல் "பார்லிமெண்டு" சபையாரால் அனுப்பப்பட்ட நீதிவிஷய அதிகாரபத்திரம் பிரஸ்தாபிக்கப்பட்டது. பின்னரதுவே ஆதாரமாக இலங்கையில் அநேகவிடங்களிலே நியாயசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அச்சாலைகள்தோறும் ஒவ்வொரு மாகாணநீதிபதி மூன்று மத்தியஸ்தர் சகிதமாயிருந்து அற்பவியாச்சியங்களை விசாரிக்குமாறு ஒழுங்குசெய்யப்பட்டது. மாகாணநீதிபதி தீர்க்கும் வழக்கில் குறைகாண்போர சிரேட்ட நீதிபதிகளுக்கே அபியோகஞ்செய்தல்வேண்டும். இலங்கைமுழுமைக்கும் சிரேஷ்ட நீதிபதிகள்மூவர். அவரே ஆங்காங்குஞ்சென்று பெரிய வழக்குகளை விசாரிப்பர். அந்நாளில் (1833-ல்) இலங்கை, உத்தரமாகாணம், குணமாகாணம், தக்ஷிணமாகாணம், குடமாகாணம், மத்தியமாகாணம், என ஐந்துபகுப்பாக்கப்பட்டது.

இத்தேசாதிபதிக்கு முன்னிருந்தோர், தம்முடன் சிலரைக் கூட்டிக்கொண்டு அவர்களுடைய ஆலோசனைப்படி சட்டங்களை உண்டாக்குவர். இவர்நாளில் அங்ஙனமாகாது, சட்டங்களை உண்டாக்கும்பொருட்டும், உண்டாக்கிய சட்டங்களை நடைபெறுவித்தற்பொருட்டும் முறையே (Legislative Council) 'பிரமாணவிதிசபை' (Executive Council) 'பிரமாணநிதிசபை'யென இரண்டு நூதனசபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. விதிசபையானது இராஜாங்க உத்தியோகத்தருள் ஒன்பதின்மரும், 6 பிரபுக்களும் ஊர்ச்சேமத்துக்கு ஆவசியகமான சட்டங்களை உண்டாக்குதற்பொருட்டுக் கூடுஞ்சபை. 9 உத்தியோகத்தராவார் சேனாபதி, இராஜாங்கலிகிதர், இராஜபக்ஷத்து நியாயதுரந்தரர், பொக்கிஷாதிபதி, (Auditor) ஆவேதனபரீக்ஷகர், குடமாகாணாதிபதி, மத்தியமாகாணாதிபதி, (Surveyor Genl.) நிலமாத்திரிகஸிரேட்டர், இரேகுக்கதிபதி என்போர். பிரபுக்கள் அறுவராவார் தமிழர்பிரதிநிதி, சிங்களர்பிரதிநிதி, பறங்கிக்காரர்பிரதிநிதி, கிருஷிகர்பிரதிநிதி, வர்த்தகர்பிரதிநிதி, ஆங்கிலேயர் பிரதிநிதி என்போர். இவ்வாறு பிரபுக்களும் தத்தம் ஜாதியாரால் தெரிந்து நியோகிக்கப்படுவர்கள். அச்சாதியாரும் தத்தமக்காக வேண்டியகாரியங்களைத் தத்தம் பிரதிநிதிகள்மூலமாக அரசினரிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம். இனி, நிதிசபையானது மேற்கூறிய விதிசபையிலுள்ள இராஜாங்க உத்தியோகத்தரில், சேனாபதிமுதல் ஆவேதனபரீக்ஷகரீறுயுள்ள ஐவருங்கூடி, விதிசபையாரால் உண்டாக்கப்படும் பிரமாணங்களை வழுவாது நடைபெறுவிக்கும் சபை. விதிசபையார் காலத்துக்குத் தக்கவாறு சட்டங்களை உண்டாக்கவும், உண்டாக்கிய சட்டங்களை அழித்துவிடவும் திருத்தவும் அதிகாரமுடையர். நிதிசபையாரோ அவ்வதிகாரமொன்றேனு மில்லாதவர்கள். இருசபைக்கும் சபாநாயகர் தேசாதிபதியே.

முதன்முதல் பிரமாணவிதிசபை கொழும்பில் கூட்டப்பட்டநாள் 1833ம் ௵ மேமீ 22உ. பின்னர் 1834-ல் கலாவிருத்தியின்பொருட்டு வித்தியாதரிசிகள் ஏற்படுத்தப்பட்டார்கள். அப்பால் 1836-ம் ௵ அக்டோபர்மீ 25உல் தற்காலத்தில் இராசகல்லூரி எனப்படும் கொழும்புச் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. (Accademy.)

இவ்வாறு "ஹார்ட்டன்" தேசாதிபதி பலநன்மைகளைச்செய்து 1837-ல் தமது உத்தியோகத்தைவிட்டுப்போக, (Rt. Hon. Stewart Mackenzie) மெக்கேன்சி என்பவர் அவ்விடம்பெற்றார். அவருடைய துரைத்தனகாலம் சொற்பமேயாயினும் அவர்செய்த நன்மைகளோபல. பிரசைகளுடைய நன்மையின்பொருட்டுப் பிரயாசைப்பட்டதேசாதிபதி மற்றியாவரி கழனியிற்களை வளர்ந்தது நீர்த்து ஊரில் அதிகரித்திருந்த சூதாடலையொழிக்கும்

பொருட்டு ஓர் பிரமாணத்தை உண்டாக்கினர். வைத்தியகாரரை ஆதரிப்பதற்காக ஓர் வைத்தியசாலையையும் ஏனைய பிணியாளர்க்காக ஓர் பொது வைத்தியசாலையையும் அமைப்பித்தார். தத்தமக்காகப் பறங்கிகளும் சிங்களரும் புத்தகசாலைகளை ஸ்தாபித்தபோது பெருந்துணைச்செய்தார். 1838-ல் கொழும்புக்கும் காலிக்கும் தபாற் போக்குவரவின்பொருட்டு ஓர்பாண்டிலை ஏற்படுத்தினர். 1840-ல் மீன்வரியும் ஒழிக்கப்பட்டது.

அவர், கல்விஷயத்திலும் அதிகமாக ஊக்கஞ் செலுத்தி இலங்கைமுழுமையிலும் ஆங்காங்கும் கல்விச்சாலைகளை ஸ்தாபித்தார். ஓர்பெண்பாடசாலையையும் கொழும்பில் ஸ்தாபித்தார். இலங்கையிலுள்ள பாலியரில் அநேகரைக் கற்குத்தாவுக்குப்போய்க் கற்குமாறு தூண்டினர். ஏறக்குறைய ஈராயிர வருடமாகக் காட்டுமிருகங்கள்போல் காடுகளில் சஞ்சரிக்கும் வேடர்கள்மாட்டும் இத்தேசாதிபதியுடைய மனஞ்சென்றது. இவருக்கு முன்னிருந்தோர் அவர்களிடத்தில் திறைவாங்கிவந்தார்களன்றி அவர்களைத் திருத்தத்துணிந்தாரில்லை. போர்க்காலங்களில்மாத்திரம் அவர்களைத்தேடுவோர்கள். அவர்கள் சீரைக் கேள்வியால் அறிந்த இத்தேசாதிபதி அவர்களிருக்கும் நாட்டுக்குப்போய், தமது கைப்பொருள்கொண்டு கலாசாலைகளை ஸ்தாபித்தார். வேளாண்மைக்குரிய மண்வெட்டி கோடரி கலப்பை முதலிய கருவிகளையும் விதைமுதல்களையும் அவர்களுக்குக்கொடுத்து அவர்களை வேளாண்மைத்தொழில் செய்யுமாறு தூண்டிவிட்டார். இவ்வாற்றால் அவ்வேடருட்சிலர் சற்றே நாகரிகமுற்றார்கள். பின்னர் அவர் அவ்வூரில் சுரநோயினால் அதிகமாய் வருந்தினமையால் தமது தேசத்துக்கு மீளுவாராயினர். அங்கே அவரை ஆங்கிலேயர் அவர் திறமைக்காகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

"பிறவுன்றிக்கு" மன்னவர்காலத்து
விசேடசம்பங்கள்:—

| | |
|---|---|
| 1. முத்துக்குளிப்பால் அரசினர்க்குவந்த வருமானம் 190,000 ரூ | 1812-ம் ஆண்டில். |
| 2. பிலாமைத்தலாவையைக் கண்டியரசன் சிரபங்கம்பண்ணியது. | 1812-ம்ஆண்டு ஆகஸ்டு-ல். |
| 3. கடைவரி நீக்கப்பட்டது. | 1813-ம்ஆண்டு ஆகஸ்டு 10உ-ல. |
| 4. எகேலபலை ஆங்கிலேயரைக் கொழும்பில் சரணடைந்தது. | 1814-ம்ஆண்டில். |
| 5. எகேலபலையுடைய மனைமக்கள் வதைக்கப்பட்டது. | 1814-ம்ஆண்டு மே மீ-ல. |

| | |
|---|---|
| 6. வெஸ்லியன்மிஷன் இலங்கைக்கு வந்தது. | 1814-ம் ௵ மே ௴-ல். |
| 7. கண்டியரசனுக்குமாறாய் ஆங்கிலேயருடைய படையெழுச்சி. | 1815-ம் ௵ ஜனவரி ௴ 10௳-ல். |
| 8. கண்டியரசன் ஊக்சேனாபதி கைப்பட்டது. | 1815-ம் ௵ பிப்பிரவரி ௴ 18௳-ல். |
| 9. ஆங்கிலேயர் கண்டியில் கொடியுயர்த்தியது. | 1815ம்-௵ மார்ச்சு ௴ 2௳-ல். |
| 10. அமெரிக்கன்மிஷன் இலங்கைக்கு வந்தது. | 1816-ம் ௵ மார்ச்சு ௴ 23௳-ல். |
| 11. ஊவைநாட்டுக்கலகமும் "வில்சன்" துரை கொல்லப்பட்டதும். | 1817-ம் ௵ செப்டம்பர் ௴-ல். |
| 12. கொழும்பில் அடித்த பெரும்புயலால் அநேக கப்பல்கள் முழுகியது. | 1817-ம் ௵ நவம்பர் ௴-ல். |
| 13. மறநெறியால் கண்டியை அழிக்குமாறு ஆங்கிலேயர் தம்சேனாவீரர்க்காஞ்ஞைசெய்தது. | 1818-ம் ௵ பிப்பிரவரி ௴ 21௳-ல். |
| 14. எகேலபலே மோரிசுக்கனுப்பப்பட்டதும் அநேக பிரதானிகள் சிரபங்கம் பண்ணப்பட்டதும் கலகம் அமர்ந்ததும். | 1818-ம் ௵ அக்டோபர் ௴-ல். |
| 15. கொழும்பில் முதன்முதல் பேதிநோய் ஆரம்பித்தது. | 1819-ம் ௵ ஜனவரி ௴-ல். |

"பாண்ஸ்" என்பவர்
உபதேசாதிபதியாயிருந்த காலத்துச் சம்பவம்:—

| | |
|---|---|
| 1. "ஜார்ச்சுபேட்" என்பவர் கண்டிநாட்டில் காப்பிப் பயிரிடத்தொடங்கியது. | 1820-ம் ௵-ல். |

"காம்பேல்" உபதேசாதிபதியாயிருந்தகாலத்துச் சம்பவம்:—

| | |
|---|---|
| 1. யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் "செமினரி" என்னும் வித்தியாசாலை பாதிரிமாரால் ஸ்தாபிக்கப்பட்டது. | 1823. |

"பாண்ஸ்" தேசாதிபதியாகி மீண்டுவந்தகாலத்துச்
சம்பவங்கள்:—

| | |
|---|---|
| 1. சங்கிலிப்பாலம் என்னும் மிதவைப்பாலம் அமைக்கப்பட்டது. | 1824. |
| 2. கண்டியிலே பெண்களை நீரிலாழ்த்திக்கொல்லும் தண்டனை ஒழிக்கப்பட்டது. | 1826. |
| 3. முதன்முதல் 16,000 அந்தர் காப்பிக்கொட்டை பிறதேசத்துக்கு ஏற்றப்பட்டது. | 1827. |

| | |
|---|---|
| 4. நுவரையெல்லி ஆங்கிலேயர்க்கு ஆரோக்கியஸ்தானமாகத்தொடங்கியது. | 1828. |
| 5. கண்டிக்கும் கொழும்புக்கு மிடையே கடுகண்ணாவலை ஓரமாக வழிச்சாலை திறக்கப்பட்டது. | 1831. |

"ஹார்ட்டன்" மன்னவருடைய காலத்தை விசேடிக்கும் சம்பவங்கள்:—

| | |
|---|---|
| 1. கொழும்பிலிருந்து கண்டிக்கு முதன்முதல் தபால்பாண்டில் போகத்தொடங்கியது. | 1832 பிப்பிரவரி மீ 1௨. |
| 2. தமிழரும் சோனகரும் கொழும்புநகருள் குடியிருக்க இடம்பெற்றது. | 1832 ஜூன் மீ 1௨. |
| 3. பிரமாணவிதிசபை முதன்முதல் கொழும்பில் கூட்டப்பட்டது. | 1832 மேமீ |
| 4. ஆங்கிலேயர் முதன்முதல் ஏற்றுமதி இறக்குமதிகளுக்குச் சுங்கம்விதித்தது. | 1836. |
| 5. பெருவெள்ளத்தால் கண்டிநாட்டில் அநேகபாலங்கள் சேதப்பட்டதும் கொழும்பில் 1200 வீடுகள் அழிந்ததும். | 1837 மேமீ. |

"மெக்கென்சி" மன்னவருடைய காலத்துச் சம்பவங்கள்:—

| | |
|---|---|
| 1. கொழும்பிலிருந்து காலிக்குத் தபால்பாண்டில் முதன்முதல் ஓடத் தொடங்கியது. | 1838 ஜூலைமீ |
| 2. மீன்வரி நீக்கப்பட்டது. | 1840. |

---

## ச. அதிகாரம்.

[காம்பேல் வந்ததுமுதல்; லோங்டன் அரசுபரியந்தம்.]

1841.—1881.

"மெக்கென்சி" மன்னவருக்குப்பின் (Sir Colin Campbell) காம்பேல் மன்னவர் இலங்கைத் தேசாதிபதியானார். அவருடைய துரைத்தன காலத்தை விசேடிப்பது காப்பிக் கிருஷிக விருத்தியே. காப்பிச்செடியானது ஆதியில் அராபிநாட்டிலே காவா என்னுமூரிலே ஓரடர்ந்தவனத்திலே உண்டாயிருந்தது. அம்மரத்திற்கு அதுசின்ற ஊர்ப்பெயரே வழங்கப்படுவதாயிற்று. காப்பி என்னும் பெயர் "காவா" என்னும் பெரியன் சிதைவு. அம்மரம், அராபிநாட்டினின்றும் இலங்கைக்குவந்து முன்னுளில் வர்த்தகஞ்செய்த அராபியர்களாலேயே இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

பறங்கிக்காரர்வந்தபோது காப்பிச்செடி ஒரோரிடங்களில் உண்டாயிருந்த க்கண்டார்கள். பின்னர் ஒல்லாந்தர் வந்தபோது அச்செடியைக் கண்டு அதை விருத்திசெய்ய முயன்றார்கள். முயன்றும் வாய்க்காமையால் ஈற்றில் இலங்கையினின்றும் சில கன்றுகளைச் சாவகத்தீவிற்குக் கொண்டு போய் அங்கே விருத்திசெய்தார்கள். அப்பால் ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்து கண்டிநாட்டைப் பிடித்தபோது, அக்குறுங்கத்தையிலே அரமனைத் தோட்டத்தில் சிலமரங்களைக் கண்டார்கள். சிங்களர் தமது தோட்டங்களில் காப்பி மரங்களை உண்டாக்கியிருந்தது காப்பி மலர் தங் கடவுட்பூசைக் குதவினமையாலன்றி வேறுபயன் கருதியன்று. சிறுபான்மை காப்பி இலையைப்பறித்துக் கறிசமைத்துண்பதுமுண்டு. இவ்விரு பிரயோசனமேயன்றிக் காப்பிக்கொட்டை பானத்துக்குதவும் என்பதை அவர்கள் கேள்வியாலாயினும் அறிந்தோரல்லர். அதுசிற்க; ஆங்கிலேயர் கண்டிநாடுகளைக் கைப்பற்றிய பின்னர், 1820-ல் "ஜார்ச்சுபேர்ட்" என்பவர் முதலில் பரீட்சையின்பொருட்டுக் கண்டியிலே ஓர் காப்பித்தோட்டத்தை அமைத்தார். அது நயப்பட்டதுகண்டு பிறரும் படிப்படியாய்க் காப்பிக் கிருஷிகத்தில் முயன்றார்கள். இவ்விதமாக விருத்திபெற்ற காப்பியின்பலன், 1827-ல் பதினாறாயிரம் "அந்தர்" எடைகொண்டகொட்டை. அவ்வளவும் ஆங்கிலேயநாட்டுக்கே ஏற்றுமதிபண்ணப்பட்டது. அப்பால் 1847-ல் ஏற்றுமதி பண்ணப்பட்ட கொட்டை மூன்றிலக்ஷம் "அந்தர்" எடையுள்ளது. 1870-ல் ஏற்றப்பட்டது 1,000,000 "அந்தர்." இப்படியே காப்பி வரவு அபரிமிதமாயிற்றென்க.

அவர்காலத்தில் காப்பி விருத்திபெற்றதுபோல் கல்வியும் இலங்கை முழுவதிலும் விருத்திபெற்று வளர்வதாயிற்று. 1844-ல் "பொலீசுக்கோர்ட்டு" எனப்படும் நகராதிபத்திய நியாயசாலைகள் ஆங்காங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. பின்னர் 1845-ல் சொற்பகடனுக்காகத் தொடுக்கப்படும் வழக்கு முதலியவற்றை விசாரிக்கும்பொருட்டு "றிக்குவெஸ்ட்டுக்கோட்டு" என்னும் நியாயசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. நீதிவிசாரிப்பின்பொருட்டு, இன்ன இன்ன ஊர்கள் இன்ன இன்ன நியாயசாலையைச் சேர்ந்தனவென நூதனமாக இலங்கை பகுக்கப்பட்டது. அப்பால் முன்னே ஐந்து மாகாணமாயிருந்த பகுப்பு மாற்றப்பட்டுக் குடோத்தரமாகாணமென ஒன்றுகூட்டி ஆறு மாகாணமாக்கப்பட்டது. பின்பு, தொன்றுதொட்ட வழக்கமாகிய அடிமை ஆட்சியும் நீக்கப்பட்டது. 1846-ல், கண்டிக்கும் கொழும்புக்குமிடையே ஓர் புகைரதச்சாலையை அமைத்தற்பொருட்டு ஓர் * சமாசமும் ஏற்படுத்தப்பட்டது.

* சமாசம் - ஒருவிஷயத்தைமுடித்தற்குப் பலர்கூடும் ஓர்கூட்டம்.

1847-ல் "காம்பேல்" மன்னவருடைய இடத்துக்கு (Lord Torrington) தோறிங்டன் வந்தார். அவ்வருடத்தில் காப்பி அதிகப்பட்டமையால் ஐரோப்பாவிலே அதன்விலை மிகக்குறைந்தது. அதுபற்றி ஐரோப்பாவிலே அந்தவருடத்தில் வியாபாரமும் பொன்றியது. பொன்றவே அரசினர்க்கும் பணமுட்டுப் பெரிதாயிற்று. அதை நிவிர்த்திசெய்யுமாறு அரசினர் காய்வரி முதலிய நூதன வரிகளை விதித்தார்கள். அதுகண்டு சிங்களரெல்லோரும் வெகுண்டு பெரியதோர் கலகத்துக்கு எத்தனஞ்செய்தார்கள். அவ்வாறே 1848-ம் ஞு ஜூலை 8உ-ல் கண்டிநாட்டில் ஆங்காங்கும் பிரசைகள் திரண்டு கூட்டங்கூடி முடிவுசெய்தார்கள். முடிவுசெய்தபிரகாரம் 28-உல் கொங்களைக்கொடைவண்டா என்பவன், கலகவீரர் சிலருடன் மாத்தளைநகரில் பிரவேசித்துச் சூறையாடினன். அற்றைநாளிரவில் சில ஆங்கிலேயபோர்வீரரும் மலாய்வீரரும் கண்டியினின்றும் புறப்பட்டு மாத்தளையையடைந்து மற்றைநாட்காலையில் கலகவீரருடன் போர்மூட்டினர்கள். அவ் யுத்தத்தில் சிங்களர் தம் வலியுடைந்து தம்முள் நாற்பதின்மரை மடியவிட்டு ஓட்டம்பிடிக்க, ஆங்கிலேயர் தம்முள் ஒருவரும் சேதமுறப்பெறாது வாகைசூடினர்கள். அப்பால், 30உ-ல் 2000 சிங்களர் குருநாகலையை வளைந்தார்கள். அங்கே ஆங்கிலேயரைச்சேர்ந்த முப்பது மலாய்வீரர்கள் அவர்களை எதிர்த்து ஒருநொடிக்குள் திசைகெட்டோடச் செய்தார்கள். அன்றியும் கலகஞ்செய்பவர்களுடைய ஊர்களில் படைவீரர் சென்று கொலை கொள்ளை முதலிய மறநெறியால் சனங்களை அடக்குமாறும் ஆஞ்ஞைசெய்யப்பட்டது. அப்பால் கலகக்காரர் கொழும்பை நாடினர்கள். உடனே ஆங்கிலேயர் ஓர் கப்பலைச் சென்னைக்கு அனுப்ப, அங்குநின்றும் 6-நாளில் சேனைவீரர் திரிகோணமலையில் வந்திறங்கிக் கண்டிக்குச் சென்றார்கள். அதனால் கலகம் முற்றும் அடங்கியது. ஈற்றில் வண்டாவும் பிடிக்கப்பட்டு அடியாலும் உதையாலும் வாட்டப்பட்டு மலாக்கா என்னுமூருக்கு ஏற்றப்பட்டான், கலகம் முடிந்து நெடுநாட்கழிந்தபின்னரும படைவீரர்க்குக் கற்பிக்கப்பட்ட (Martial Law) மறநெறி ஆஞ்ஞை நீறுத்தப்படவில்லை. இச்செயலும், கலககாரணமாகிய நூதனவரியும், ஆங்கிலேயருடைய அரசைப் பிரசைகள் கொடிய அரசென்று நினைத்தற்கும அபியோகஞ்செய்தற்கும் ஏதுவாயின. அதுகண்டு "பார்லிமேந்து" என்னும் ஆங்கிலேய மகாசபையார், இலங்கையில் துரைத்தனஞ்செய்துகொண்டிருந்த ஆங்கிலேயர் பலரை விசாரணையின்பொருட்டு இங்கிலாந்துக்கு அழைத்து, விசாரணை முடிந்தபின்னர் வேறுநாடுகளுக்கு உத்தியோகஸ்தராய் அனுப்பிவிட்டார்கள்.

1848-ல் தெருவேலைச்சட்டம் ஒன்று அநுசரிப்புக்குவந்தது. அது— தேசாதிபதி, சைனியவீரர், தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ்க்கூலியாட்கள், புத்தகுருமார் என்னுமிவர்கள் ஒழிந்த மற்றியாவருள்ளும் 18-க்கும் 55-க்கு மிடைப்பட்ட வயசுள்ள ஒவ்வொருவரும் அழைக்கப்படுங்கால், தத்தம் வாசஸ்தானத்துக்குச் சமீபமெனத்தகும் தூரத்திலுள்ள வழிச்சாலையில் ஆறுநாள் வேலைசெய்யக்கடவர் என்றும், அதற் கிஷ்டமில்லாதோர ஆறுநாள்வேலைக்கு ஓர்கூலியாள் என்ன கூலிபெறுவானோ அவ்வளவுபணம் கொடுத்துவிடக்கடவர் என்றும் வற்புறுத்தும் விதியை உடையது. இவ்வுபாயத்தினால் அநேகவழிச்சாலைகள் அமைக்கப்படுவனவாயின. ஈற்றில் அவை ஊருக்குப் பெரும் நன்மையாய்முடிந்தன.

1850-ல் "தோறிங்டன்" மன்னவர் தம் உத்தியோகத்தைப் பரித்தியாகஞ்செய்துவிட்டு ஜனனதேசத்துக்குமீள, அவர்பதத்திற்கு (Sir George Anderson) ஆண்டேர்சன் என்பவர் வந்தார். அப்பால், பொன்றிக்கிடந்த வாணிகமும், சற்றே குன்றிநின்ற காப்பிக் கிருஷிகமும் தலையெடுக்கத் தொடங்கின. "ஆண்டோர்சன்" மன்னவர், அளவின்றி அதிகரித்த சாராயக்கடைகளால் உண்டான பெருங்கேட்டை அறியவந்தபோது அக்கடைகளின்தொகையைக் குறைத்தார். அரசினர், தாம் தாலதாலயம் என்னும் பௌத்தகோயிலுக்கு ஆதீனகர்த்தரா யிருப்பதைக்குறித்து இங்கிலாந்து நாட்டார் ஆக்ஷேபித்தமையால், அக்கோயிலின் விசாரணையை 1853-ல், தேவநிலேமை முதலியோரிடத்தில் ஒப்பித்துவிட்டார்கள்.

1855-ல் "ஆண்டேர்சன்" மன்னவர் தம்மூர்க்கு மீள, (Sir Henry Ward) வார்ட் என்பவர் தேசாதிபதியானார். இவருடைய துரைத்தனகாலத்தில் அநேகநன்மைகள் இலங்கைக்குண்டாயின;—1856-ல் கடிதங்களுக்கு முத்திரைச்செலவு ஒரு பென்னியாயினது. 1857-ல் சிறுகடிகைக்குள் தூரத்திலுள்ள விடங்களிலிருந்து சமாசாரங்களை அறிதற்பொருட்டு முதலில் காலிக்கும் கொழும்புக்கு மிடையே மின்தாதுக்கம்பி தொடுக்கப்பட்டது. அப்பால் இந்தியாவுடனு மிணைக்கப்பட்டது. 1857-ல், நெடுநாளில்லாமலிருந்த முத்துச்சலாபமும் நயப்பட்டது. அவ்வருடத்தில் அதன்வருமானம் இரண்டிலக்ஷம்ரூபா. கொழும்பிலிருந்தபடி இலங்கையின் வடபாகங்களிலிருந்து சமாசாரங்களை அறிவது அதிப்பிரயாசமாயிருந்தமையால், மாசமொருமுறை இலங்கையைச்சுற்றி வருமாறு ஓர் நீராவி மரக்கலம் அரசினரால் தம்பொறுப்பில் ஏற்படுத்தப்பட்டது. 1858-ம்௵ ஆகஸ்டு௴ 3௳-ல் தேசாதிபதியானவர் பெருங்கூட்டம் ஒன்றுகூட்டி அப்பெருஞ்சனசமூகத்தில் புகைரதவீதியை ஆரம்பஞ்செய்ததற் கறிகுறியாகத் தமது திருக்கரத்தால் மண்வெட்டிகொண்டு முகூர்த்தக்குழி வெட்டி

னார். இரண்டிலக்ஷத்தைம்பதினாயிரம் ரூபாசேர்த்து மகாவலிகங்கை ஆற்றின்மேல் கம்பளையிலும் கட்டுக்கஸ்தோட்டையிலும் இருப்புப்பாலங்களை இடுவித்தார். தென்மாகாணத்திலுள்ள கிரிமி, உறுவக்கை என்னுங் குளங்களைத் திருத்தினார். 1859-ல் சிங்களருள் ஒருத்தி பல ஆடவரை மணமுடிக்கும் துர்வழக்கத்தையும் ஒழித்தார்.

1860-ல் "வார்ட்" மன்னவர் சென்னைத் தேசாதிபதியாக நியமனம் பெற்றுப்போக, (Sir Charles Macarthy) மெக்கார்த்தி மன்னவர் இலங்கைத் தேசாதிபதியானார். அவர் ஆன்ற அறிவாலமைந்தவர். அவர் தம் தேகசௌக்கியத்திற்கு இலங்கை ஒத்திராத காரணத்தால் 1863-ல் ஐரோப்பாவுக்குமீண்டு, அங்கே 1864-ல் இறந்தார். அதுநிற்க 1860-ல் காலியிலுள்ள சிங்களர "லங்காலோகயா" என்னும் ஓர் சமாசாரபத்திரிகையை நவமாய் வெளிப்படுத்தினார்கள். அது சின்னாள் நடைபெற்றுப் பின்னர் நிறுத்தப்பட்டது. 1861-ல் நம்மவராகிய "சேர்" குமாரசாமியென்பவர் பிரமாணவிதி சபைக்கு ஓர் அங்கத்தவர் ஆயினார். 1862-ல் கண்டிக்கும் கொழும்புக்குமிடையே புகைரதவீதி அமைக்க வருஞ்செலவு 87-லக்ஷத்து முப்பதினாயிரத்து 390 ரூபாவென மதிப்பிடப்பட்டது.

1864-ல் (Major Gen. O' Brien) ஒபிறியன் என்பவர் உபதேசாதிபதியானார். அவ்வருடத்திலேயே முதன்முதல் சொழும்பிலிருந்து அம்பிப்புஸ என்னுமிடத்திற்குப் புகைரதமோடியது.

1864-ம் ஞு மேமீ 16உ-ல் (Sir Hercules Robinson) றபின்சன் என்பவர் தேசாதிபதியானார். 1866-ல் இலங்கை முழுமையிலுமுள்ள குடிசனங்கள் பெரும் பஞ்சத்தினால் மிக்க துயர்கூர்ந்தார்கள். அப்போது கொழும்பு கண்டி காலியென்னுமிடங்களிலே பண்டசாலைகளிலிருந்த அரிசி நெல் முதலிய பொருள்களெல்லாம் சிங்களரால் கொள்ளையிடப்பட்டன. 1867-ம் ஞு ஏப்பிறில்மீ௳ல் கொழும்பிலிருந்து கண்டிக்கு முதன்முதல் புகைரதமோடத்தொடங்கியது. அப்பால் புகைரதமார்க்கமாய்ப் பிரயாணமும் பொருளேற்றுமதியும் அதிகரித்தமையால், கண்டியிலிருந்து நாவலப்பிட்டிவரையும் புகைரதப்பாதையை நீட்டுதற்கு அரசினர் எண்ணங்கொண்டார்கள். பாண்டிற்சாலைகளும் பிறவிடங்களுக்குத் திறக்கப்பட்டன. குளந்திருத்தல், பாய்கால் வடிகால்வெட்டல் முதலிய வேலைகளும் நடாத்தப்பட்டன. 1869-ல் கொழும்புப் மதிற்சுவரும் அகழியும் அழிக்கப்படத்தொடங்கின. அடுத்தவருடத்தில் வாயுத்தீபவேலை தொடங்கப்பட்டதுமன்றி கடலணை கட்டுதற்கும் முயற்சிசெய்யப்பட்டது.

இத் தேசாதிபதியால் கலாவிஷயமும் நன்றாய்க் கவனிக்கப்பட்டது. அன்றியும் பாடசாலைகளுக்குச் சகாயப்பண ஏர்பாடுஞ் செய்யப்பட்டது. இவர் கொழும்பில் ஓர் வைத்தியகலாசாலையையும், சிங்களம் பாலி என்னும் பாஷையிலுள்ள கரலிகித புஸ்தகங்களைச் சேர்த்துவைத்தற்பொருட்டு ஓர் புத்தகசாலையையும் ஸ்தாபித்தனர். 1870-ம் ஞு மார்ச்சுமீ 29உ-ல் எங்கள் இராணியாருடைய இரண்டாம் புத்திரராகிய (Duke of Edinburgh) டியூக் ஆவ் எடின்பர்க்கு என்னும் கோமகன் இலங்கைக்குவந்தார். 1871-ல் ஜனகணிதம் செய்யப்பட்டது, அப்போது, இலங்கை முழுமையிலும் கண்ட சனத்தொகை 24 லக்ஷத்து ஐயாயிரத்து இருநூற்று எண்பத்தேழு. 1872ம் ஞு ஜனவரிமீ 1உ-ல் ரூபா சதம் என்னும் நாணயங்கள் வழங்கப்படத்தொடங்கின.

அப்பால் மார்ச்சுமீ 4உ-ல்(Rt. Hon. W. H. Gregory) கிறேகோரி என்பவர் தேசாதிபதியானார். அவர் ஆகஸ்டுமீ 5உ-ல் முதன்முதல் வாயுத்தீபத்தை ஏற்றுவித்து, 1873-ம் ஞு பிப்பிரவரிமீத்தில் கம்பளைக்குப் போகும் புகைரதமார்க்கத்தை முற்றுவித்து, உத்தரமத்திய மாகாணமென ஓர் புதுப்பிரிவையும் வகுத்தார். இலங்கையில் வளரத்தக்க காப்பி எங்குளதென்றுதேடி, இலைபீரியாவென்னு மூரினின்றும் ஒருவகைக் காப்பியைத் தருவித்தார். 1874-ல் கொழும்புக் கடலணையைக் கட்டுவித்தற்குத் தொடக்கஞ்செய்தார். பிரமாணவிதிசபையில் தமிழர் பிரதிநிதியாயிருந்த "சேர்" குமாரசுவாமியென்பவருக்கு "நைட்" என்னும் பட்டப்பெயரை ஈந்தார். அவ்வருடத்தில் நாவலப்பிட்டிப் புகைரதவீதிவேலையையும் முற்றுவித்தார். இவரிப்படித் துரைத்தனஞ்செய்துவருநாளில் (1875-ல்) நம் இராணியினுடைய முதற்குமாரராகிய (Prince of Wales) வேல்ஸ் கோமகன் இலங்கைக்கு வந்துபோயினர். அப்பால், தேசாதிபதியுடைய முயற்சியால் விஞ்ஞதசாலையும் பாணந்துறைப் புகைரதவீதிவேலையும் நடைபெறத்தொடங்கின.

1877-ல் (Sir J. R. Longden) லாங்டன் என்பவர் தேசாதிபதியாகினார். இவர் துரைத்தனஞ்செய்யத் தொடங்கியபின்னர், (1879-ல்) வித்தியாகர்த்தராகிய "புறூஸ்" துரை என்பவர் கலாவிஷயத்தில் அநேக திருத்தப்பாடுகள்செய்து, அரசினரிடத்துச் சன்மானம்பெறும் பாடசாலைகளுக்காக ஓர் நூதனச்சட்டத்தையு மேற்படுத்தினார். அவ்வருடத்தில் களுத்துறைப் புகைரதமார்க்கம் அமைக்கப்பட்டதுமன்றி, 1880-ல் நாவ லோயைப் புகைரதவீதியும் ஆரம்பிக்கப்பட்டது. அப்பால் மாத்தளைவீதியும் முற்றியது.

1881-ல் தேசாதிபதியுடைய ஆஞ்ஞைப்படி ஜனகணிதம் பண்ணிக் கண்டதொகை இருபத்தேழிலக்ஷத் தைம்பத் தெண்ணாயிரத் தைஞ்நூற்

நிருபத் தேழு. அப்பால், 1883-ல் அத்தேசாதிபதி தமது துரைத்தனகாலம் முடியப்பெற்று இலங்கையைவிட்டகன்றார்.

இனி, "வார்ட்" தேசாதிபதியுடையகாலத்து விசேடங்கள்:—

| | |
|---|---|
| 1. கொழும்பில் (Clock Tower) கடிகாரக்கோபுரம் கட்டப்பட்டது. | 1857-ம் ௵ மார்ச்சுமீ ல். |
| 2. புகைரதவீதிக்கு முகூர்த்தக்குழி தேசாதிபதியால் வெட்டப்பட்டது. | 1858-ம் ௵ ஆகஸ்டுமீ 3உ-ல. |
| 3. கட்டுக்கஸ்தோட்டைப்பாலம் கட்டிமுடித்து விழவுகொண்டாடியது. | 1860-ம் ௵ மார்ச்சுமீ 1உ-ல். |

"றபின்சன்" தேசாதிபதியுடையகாலத்து விசேடங்கள்:—

| | |
|---|---|
| 1. நகரி காவல்வீரர் யாழ்ப்பாணத்தில் நியோகிக்கப்பட்டது. | 1866-ம் ௵ ல். |
| 2. முதன்முதல் கொழும்பிலிருந்து கண்டிக்குப் புகைரதம்போனது. | 1867-ம் ௵ ஏப்பிரல்மீ ல். |
| 3. எங்கள் இராணியாருடைய இரண்டாம் புத்திரராகிய "டியூக் ஆவ் எடின்பர்க்கு" வந்தது. | 1870-ம் ௵ மார்ச்சுமீ 29உ-ல். |

"கிறேகோறி" தேசாதிபதியுடையகாலத்து விசேடங்கள்:—

| | |
|---|---|
| 1. வடமத்தியமாகாணம் நவமாய் வகுக்கப்பட்டது. | 1873-ம் ௵ செப்டம்பர்மீ 6உ-ல். |
| 2. "சேர்" குமாரசாமிக்கு நயிட்பட்டம் கொடுக்கப்பட்டது. | 1874-ம் ௵ ஜூலைமீ 23உ-ல். |

---

அவர்க்குப்பின் 1883-ம் ௵ டிசெம்பர்மீ (Sir Arthur H. Gordon) கோர்டன் தேசாதிபதியாயினர். அவர் வந்தவுடன் செய்த முதல் நன்மை சேனைச் செலவைச் சிறிது சுருக்கியது. 1884-ம் ௵ மேமாசத்தில் ஓறியண்டல் வங்குச்சாலை நிலைதளர்ந்து நஷ்டமடைந்தது. அதுகாரணமாகத் தனிகர்களும் வணிகர்களும் குடிகளும் தாம் வருந்தியீட்டி அடைக்கலம் வைத்த பணமெல்லாம் போயிற்றென்றேங்கிக் கவன்று தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய, தேசாதிபதியவர்கள் ஏழைக்குடிகள்மேற் கருணைவைத்து அவர்களிடத்துள்ள காகித நாணகங்களாகிய "நோட்டு"களுக்கு வெள்ளிநாணகங்கொடுத்து அவர்கள் துன்பத்தை ஒருவாறு களைந்தனர். இது செய்யாதிருப்பரேல் இலங்கை மிக்க நஷ்டமடைந்து வருந்திவிடும். அந்நாள் முதலாக இலங்கைக்கு வங்கு நோட்டில்லாமல் ராஜாங்க நோட்டு வழங்கப்படுவதாயிற்று.

இவர்காலத்தில் புதிய மாகாணங்களும் இரண்டு வகுக்கப்பட்டன. ஒன்று ஊவை மாகாணம். அதன் தலைநகர் வதுளை. மற்றது ரத்தினபுரியைத் தலைநகராகவுடைய சப்ரகாம மாகாணம். காளவாவி ஏரி ஜீர்ணோத்தாரணம்பண்ணப்பட்டதும் வெந்தோட்டை அப்புத்தளை "ரயில்வே"கள் ஏற்படுத்தப்பட்டதும் காலி மாத்தறை "ரயில்வே" விஷயம் எடுத்துப் பேசப்பட்டதும் இவர்காலத்திலேயேயாம். இவர் காலத்தில் 1887ல் நடந்த மற்றொரு விசேஷ சம்பவம் மகாராணியார் (Jubilee) சஷ்டிபூர்த்தி மகோற்சவம். 1889-ல் கண்டிநாட்டார்க்கும் முகம்மதியர்க்குமாக இருபிரதிநிதிகளு மேற்படுத்தப்பட்டார்கள்.

1890-ல் (Sir Arthur Elibank Havelock) ஹாவ்லக் தேசாதிபத்தியம்பூண்டனர். இவர் பண்டாரவளை மாத்தளை இருப்புப்பாதைகளை முடித்துக் குருநாக்கல் இருப்புப்பாதையையும் காருக வித்தியாசாலையையும் வகுத்தனர். பயிரிடுவோர்க்குப் பெருந்துன்பம் விளைத்துவந்த நெல்வரி 1892-ல் இவரால் நீக்கப்பட்டது. இவ்வரி நீக்கத்துக்குக் காரணராயிருந்து வாதாடிய பரோபகார சீலர் ஜார்ஜ் வால்துரை. 1891-ல் செய்த ஜனகணிதத்தின்படி இலங்கைக் குடிசனத்தொகை 3,007,783. இவர் 1896-ல் சென்னைத் தேசாதிபதியாகிச்செல்ல, (Sir Joseph WestRidgeway) ரிட்சுவே இலங்கைத் தேசாதிபதியாகி அரசுபுரிந்துவருகின்றனர். இவர் அரசியல் வண்மையும் விருத்தியுமுடையது. ராஜாங்க விஷயத்திலும் நீர்ப்பாய்ச்சல் விஷயத்திலும் இவர் செய்த திருத்தங்கள் மிகவும் வியக்கத்தக்கன. இவர் இலங்கைக்குச் செய்துவரும் உபகாரங்கள் பலவற்றுள்ளும் யாழ்ப்பாண இருப்புப்பாதையும் களனிவெளி இருப்புப்பாதையும் மிகவும் பாராட்டப்படத்தக்கவை. இவர்க்கு முன்னிருந்த தேசாதிபதிகள் பலரும் முற்றாய் மறுத்துவிட்ட யாழ்ப்பாண இருப்புப்பாதை உபகாரம் இவ் அரசுக்கு வராதிருப்பரேல் எக்காலத்தும் கிடைப்பதில்லையென்னலாம். ஆதலால் இப்பெருந்தகையினது பெருநன்றி யாழ்ப்பாணத்தாரால் எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று. இவ்வுபகாரத்தினது ஞாபகார்த்தமாக இவர்பெயரால் யாழ்ப்பாணத்தில் ஒரு நகரமண்டபம் அமைத்து இவர் புகழை நிலையிடுதற்கு ஜனங்களால் வேண்டும் முயற்சியெல்லாம் செய்யப்படுகின்றது.

இவ்வளவில் இச்சரித்திரத்தைமுடித்து, இலங்கையின் தற்காலநிலைமையைப்பற்றிச் சிறிதுசொல்வாம். இலங்கை ஆங்கிலேயர்க்குரியதானது மூன்றாம் ஜார்ச்சுவேந்தன்காலத்தில். அவ்வேந்தனுக்குப்பின் சிங்காசனாதிபதியானார் நான்காம் ஜார்ச்சு. அவருக்குப்பின் முடிதரித்தார் நான்காம் வில்லியம். அவருக்குப்பின் (1837-ல்) மகுடாபிஷேகம்பண்ணப்பட்டார் விக்

டோரியா அரசியார். அவருக்குப்பின்னர் 1901-ல் முடிதரித்தார். இப்போ அரசியற்றுபவராகிய மகாகாருண்ணியமகிமாவது எட்வார்ட் அரசர்.

முன்னாளில் சுதேச அரசர்கள் வேளாண்மைவிஷயத்தில் மாத்திரம் தூங்காமுயற்சியுடையவர்களாயிருந்தார்கள். என்னே! இலங்கையிலே இடங்கடோறும் அழிந்தும் அழியாதும் செறிந்துகிடக்கும் எண்ணிறந்த குளங்களெல்லாம் அவர்களாலன்றோ அமைக்கப்பட்டன. பதுவில் குளத்தைப்போலும் ஒரு குளத்தை இக்காலத்தில் அமைக்கத்தொடங்கி முடிக்கப்புகின் இலக்ஷம்சனங்கள் தினந்தோறும் வேலைசெய்யினும் பதினைந்துவருடங்கள் செல்லுமே. அவைகளெல்லாம் நல்லஸ்திதியில் இருக்குமாயின் இலங்கைக்கு நெல்லால் குறையும்வருமோ? வராதுவராது. பிற்காலங்களில் தமிழர்முதலிய பகையரசர் எழும்பிச் சிங்கள அரசருக்குக் காலந்தோறும் அல்லல்புரிந்துவந்தமையால், அக்குளங்களெல்லாம் சிந்திப்பாரின்றி அணைகள் சிதையப்பெற்றுத் திடராகத்தொடங்கின. கரடி புலி யானைமுதலிய மிருகங்களுக்கு உறைவிடமாய் அடர்ந்த காடாகிக்கிடக்கும் வன்னிநாடு, முன்னாளில் கருநந்து சங்கு முதலிய நீர்ச்செந்துக்கள் தவழும் செந்நெற்கழனிகளாய்க் கிடந்தனவென்றால், அந்நாளில் இலங்கையின்வளம் இத்தன்மையதென்று சொல்லவும் வேண்டுமோ.

பின்னர், பறங்கிகள்வந்து இலங்கையில் தம்கோல்செலுத்தத்தொடங்க, வேளாண்மையும் பொன்றத்தொடங்கியது. அப்பால் வந்த ஒல்லாந்தராலும் பிரசைகள் யாதுஞ் சுகமறியாதிருக்கையில், கன்றின் பசியறிந்து கருணையோடும்புறப்பட்டு இடையில் தடுப்பவரையெல்லாம் மேற்கொண்டு ஓடிவரும் தெய்வப் பசுவைப்போலும் ஆங்கிலேயர்வந்தார்கள். அவர்கள் வந்த பின்னர், அவர்களுடையமுயற்சியால், குறவர் நாடுபோல் சீர்கெட்டுக்கிடந்த இலங்கை பல்வகையாலும் திருந்தத்தொடங்கி நாளடைவிலே தேவர்நாடுபோல் ஆகிவருகின்றது. அயலூர் அறியாமல் தமமூலையில் கிடந்த பிரசைகள், இப்போது இலங்கைமுழுமையும் அறிவேம் என்று சொல்லும்படியாக எங்கும் வழிச்சாலைகள் வகுக்கப்பட்டன. எங்கும் பாலங்கள் பூட்டப்பட்டன. எங்கும் பாண்டில்கள் மிகுத்தன. கண்டியிலிருந்து பத்துப்பதினைந்துநாளிலன்றிச் சென்றடையக்கூடாத கொழும்புநகருக்கு இப்போது பதினைந்து நாழிகையில் புகைரதமார்க்கமாய்ப் போதல்கூடும். முன்னாளில் கடிதமனுப்பும் வகைகிடையாது. இந்நாளில் காலியிலிருந்து பருத்தித்துறைக்கு ஒருகடிதத்தை ஐந்து சதச்செலவில் நாலுநாளில் செலுத்துதல் கூடும். அன்றியும் காலியில்நடக்கும் செய்தியை ஐந்துநிமிஷத்துக்குள் யாழ்ப்பாணத்திலிருந்தபடி மின்தாதுக் கம்பிமூலமாக கால்ரூபாச் செலவில் அறிதல்கூடும். வேளாண்மையும் சற்றே திறமையாய் நடை-

பெற்றுவருகின்றது. குளங்களெல்லாம் அணைகள் சிதைந்து காடுமண்டப்பெறுமுன்னே ஆங்கிலேயர்வந்திருப்பரேல், அவைகளை எளிதில் திருத்தியிருப்பர். இப்போதவைகளை ஒருங்கே திருத்துதலோ அதிப்பிரயாசை. ஆதலின் அவைகளை நாளடைவில் சிறுகச்சிறுகத் திருத்திவருகின்றார்கள். 1854-ம்ஞு முதல் 74-ம்ஞு வரையில் குளந்திருத்தல்வேலைக்காகச் செலவிடப்பட்ட ரூபா 20 இலக்ஷம்.

இன்னும், காடுமண்டி மிருகங்களுக்குறைவிடமாய்க் கிடந்த மலைகளெங்கும் காப்பித்தோட்டங்களாயின. அத்தோட்டங்களால் சீவனம்பெறுவோர் எண்ணிறந்தோர். சிறிதுகாலமாகக் காப்பி பயன்குன்றியது. குன்றவே ஏலமும் சின்கோனு என்னும் சுரகாரிமரங்களும் தேப்பூண்டும் பிறமரங்களும் விருத்திசெய்யப்பட்டு வருகின்றன. முன்னாளில் பிரசைகள் அரசர்க்கு அடிமைகள்போலிருந்தார்கள். இந்நாளிலோ பொதுநோக்கால் பார்க்கின் அரசினரும் பிரசைகளும் சமத்துவமுடையர். முன்னாளில் ஒருவன் மேனிலைமாடங்கட்டிவாழலாகாது. இந்நாளில் எவனும் எழுநிலைமாடமேனும் கட்டி அரசர்போல் வாழலாம். முன்னாளில் கல்வியறிவுடையவர் குருமாரும் வேறு சிலருமேயாவர். இந்நாளில் யாவருமே எனலாம். இறைகோல் நடுநிலைபிறழினும் பிறழும். ஆங்கிலேயமன்னர் முறைக்கோல் ஒருசிறிதும் பிறழாது. பிள்ளைவருந்தத் தாய் சகிக்கினுஞ்சகிப்பள். ஆங்கிலேயரோ தங் குடிகள்வருந்த ஒருசிறிதுஞ் சகியார்.

இவ்வாறே ஆங்கிலேயராஜாங்கத்தால் பிரஜைகள் அநுபவிக்கும் சுகங்கள் அநேகம் அநேகம் முன்னையிலும் பன்மடங்கநேகம் என்க.

இலங்கைச் சரித்திர சூசனம்
முற்றுப்பெற்றது.

---

வாழி விருத்தம்.

எட்டுணையு நீதிநெறி வழுவா வண்ணம்
எச்சமயத் தவர்களுக்கு மேற்கு மாறு
துட்டநெறி யறவொழித்துக் கருணை யோடுஞ்
சுகுணமுறு கல்விபயில் வித்த லாதி
மட்டறுநற் றருமமுறை பலவுஞ் செய்து
மகிதலத்திற் பிரஜைகளை யாளுஞ் செல்வச்
சிட்டர்களா மங்கிலேயர் செங்கோல் வாழி
தேவனருள் பெற்றெவரும் சிறந்து வாழி.

---

# விஷய சூசனம்.

———:o:———


| கி. பூ. வரு. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 543 | விஜயன் இலங்கைக்கு வந்தது | 7 |
| | குவேனியை விவாகஞ்செய்தது | ,, |
| | பாண்டியனுடைய கன்னிகையை மணம்புரிந்தது .. | ,, |
| | குவேனியுடையகதி | ,, |
| 505 | விஜயன் இறந்தது | 8 |
| ,, | உபத்தீசன் என்னும் மந்திரி அரசனானது .. | ,, |
| 504 | பந்துவாசன் (விஜயனுடைய தமபிமகன்) அரசனானது | ,, |
| 503 | அநுராதபுரங் கட்டப்பட்டது .. .. | ,, |
| 500 | முதன்முதல் இலங்கையிலுண்டான குளம் .. | ,, |
| 474 | பந்துவாசன் இறந்தது .. .. | ,, |
| ,, | அபயன் (பந்துவாசன் மகன்) அரசனானது .. | ,, |
| 454 | பந்துகாபயன் கலகஞ்செய்யத் தொடங்கியது .. | ,, |
| 437 | பந்துகாபயன் அரசனானது . . ... | 9 |
| ,, | அநுராதபுரம் ராஜதானியானது ... | ,, |
| 367 | பந்துகாபயன் இறந்தது .. .. .. | ,, |
| ,, | கணத்தீசன் (பந்துகாபயன்மகன்) அரசனானது ... | ,, |
| 354 | முத்தசிவராஜன் அரசனானது .. ... | ,, |
| ,, | மகாமேகம் என்னு நந்தனவனம் . ... | ,, |
| 307 | தேவப்பிரியன் (முத்தசிவன் மகன்) அரசனானதும் நூதனங்கழ்ச்சியும் ... . .. | 10 |
| 306 | மகிந்தன்வந்ததும் பௌத்தமதபிரபலியமும் . | 11 |
| 288 | சங்கமித்தை வந்தது ... . ... | ,, |
| ,, | உலகத்தில் ஐதிகமுடைய மரங்களுள் அதிபுராதனமுடைய வெள்ளரசு நாட்டப்பட்டது ... | ,, |
| ,, | ஆதிசமாதியாகிய தூபராமயம் கட்டப்பட்டது ... | 12 |
| ,, | அனுலை தன்கொழுந்தனுக்கு நஞ்சிடத்துணிந்தது ... | ,, |

| கி. பூ. ௵. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 288 | மாகமம் கட்டப்பட்டது ... | 13 |
| ,, | சில ஊர்களைக் கடலழித்தது ... | ,, |
| 266 | தேவப்பிரியன் இறந்தது ... | ,, |
| ,, | உத்தியன் (தேவாநம்பிதம்பி) அரசனானது ... | ,, |
| 258 | மகிந்தன் இறந்தது ... | ,, |
| 257 | சங்கமித்தை இறந்தது ... | ,, |
| 256 | உத்தியன் இறந்தது ... | ,, |
| ,, | மகாசிவன் (உத்தியன்தம்பி) அரசனானது ... | ,, |
| 246 | சூரதீசன் (மகாசிவன்தம்பி) அரசனானது ... | ,, |
| 237 | தமிழர் சூரதீசனைக்கொன்று அரசரானது... | ,, |
| 215 | அசேலன் தமிழரைக்கொன்று அரசனானது ... | ,, |
| 205 | எல்லாளன் [ஏலேலன்] என்னும் தமிழன் படையெடுத்து வந்ததும் அரசனானதும் ... | ,, |
| ,, | துட்டகைமுனுவுடைய முயற்சி ... | 14 |
| 161 | யுத்தம் ... | 15 |
| ,, | துட்டகைமுனு அரசனானது... | ,, |
| 160 | மகாலோகபவனம் கட்டப்பட்டது ... | 17 |
| 137 | துட்டகைமுனு இறந்தது ... | 18 |
| ,, | சயதயித்தீசன் (துட்டகைமுனு தம்பி) அரசனானது ... | ,, |
| 119 | துல்லதானகன் (சயதயித்தீசன்மகன்) அரசனானது ... | ,, |
| ,, | இலயமினித்தீசன் (துல்லதானகன் தமையன்) அரசனானது ... | ,, |
| 109 | கலுனன் (துல்லதானகன்மகன்) அரசனானது ... | ,, |
| 104 | வாலகம்பாகு (கலுனன்சகோதரன்) அரசனானது ... | ,, |
| 103 | தமிழர் இரண்டாம்முறை படையெடுத்துவந்தரசனைத் துரத்தியது ... | ,, |
| 95 | வாலகம்பாகு திரிபிடகத்தை முதன்முதன் ஏட்டில் எழுதுவித்தது... | 19 |
| 88 | வாலகம்பாகு தன் அரசை மீட்டது ... | ,, |
| ,, | யாழ்ப்பாணங் குடியேற்றப்பட்டது ... | ,, |
| 77 | வாலகம்பாகு இறந்தது ... | ,, |
| ,, | மகாசூலன் (வாலகம்பாகுமகன்) அரசனானது ... | ,, |
| 63 | சோரநாகன் (மகாசூலன்தம்பி) அரசனானது ... | ,, |

| கி. பூ. வரு. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 50 | கடத்திசன் (மகாசூலன்மகன்) அரசனானது ... | 19 |
| 47 | மனைவியுடைய துன்மார்க்கம் ... ... | ,, |
| ,, | அவள் (அனுலை) அரசியானது ... ... | ,, |
| 41 | மகாலந்திசன் (கடத்திசன்மகன்) அரசனானது ... | ,, |
| 19 | பத்தியத்திசன் (மகாலந்திசன்மகன்) அரசனானது ... | 20 |

கி. அ. வரு.

| கி. அ. வரு. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 9 | இறந்ததும் 52-ம் வருடம்வரையி லாண்ட அரசர் பெயரும் ... ... ... | ,, |
| 52 | யதாலகதிசன் (சந்தமுகணன்தம்பி) முடிசூடினது ... | ,, |
| 60 | சுப்பன் என்னுங் கட்டியக்காரன் அரசனானது ... | ,, |
| ,, | குறிகேட்டது ... ... ... | ,, |
| 66 | வாகாப்பு அரசனானது .. ... ... | ,, |
| ,, | அவனுடையவேலைகள் ... ... ... | ,, |
| 110 | வங்கநாசிகன் (வாகாப்புமகன்) அரசனானது ... | 21 |
| 111 | தமிழர் மூன்றும்முறை படையெடுத்துவந்தது ... | ,, |
| 112 | வங்கநாசிகன்மகன் சோழநாட்டில் படையேற்றியது | ,, |
| 113 | கஜபாகு (வங்கநாசிகன்மகன்) அரசனானது ... | ,, |
| 125 | கஜபாகு இறந்ததும், 246-ம் வருவரையில் ஆண்ட அரசர் பெயரும் ... ... ... | ,, |
| 246 | தருமஸ்ரீசங்காபன் அரசனானது ... ... | ,, |
| ,, | அட்டசீலம் என்பதன் விளக்கம் .. ... | ,, |
| ,, | அவன் குணாதிசயம் .. ... ... | 22 |
| 248 | கோதாபயன் என்னும் மந்திரி அரசனாகியது ... | ,, |
| ,, | பௌத்தகுருமார் சூட்டுக்கோல் முத்திரைபெற்றது | ,, |
| 261 | மேகலஜெத்துதிசன் (கோதாபயன்மகன்) அரசனானது | ,, |
| 275 | மகாசேனன் (மேகல—தம்பி) அரசனானது ... | 23 |
| ,, | பௌத்தாலயங்களையிடித்ததும் மீளக்கட்டியதும் ... | ,, |
| 280 | மின்னேரி என்னும் மகாவாவி கட்டப்பட்டது ... | ,, |
| ,, | மகாவமிசம் சுலுவமிசம் என்பன ... ... | ,, |
| 298 | கீர்த்திஸ்ரீமேகவர்ணன் (மகாசேனன்மகன்) அரசனானது | ,, |
| ,, | ஆதிபுத்தருடைய பல்லெனப்படும் தாலதம் கொண்டுவரப்பட்டது ... ... ... | ,, |

| கி. அ. ஆ. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 326 | தெத்துதீசன் (கீர்த்தி—தம்பி) அரசனானது ... | 23 |
| 335 | புத்ததாசன் (தெத்துதீசன்மகன்) அரசனானது .. .. | ,, |
| ,, | வைத்தியநூல் ... ... ... | ,, |
| 364 | ௨-ம் உபத்தீசன் (புத்ததாசன் மகன்) அரசனானது ... | 24 |
| 406 | மகாநாமன் (உபத்தீசன்தம்பி) அரசனானது ... | ,, |
| ,, | புத்தகோஷன்வந்து பிடகவியாக்கியானத்தை மொழிபெயர்த்தது ... ... ... | ,, |
| ,, | தமிழர் நான்காம்முறை படையெடுத்தது ... | ,, |
| 428 | செங்கோட்டன் (மகாநாமன்மகன்) அரசனானது ... | ,, |
| ,, | ௨-ம் இலயமினித்தீசன் அரசனானது ... ... | ,, |
| 429 | மித்தசேனன் அரசனானது ... .. | ,, |
| 430 | தமிழரசர் ... ... ... ... | ,, |
| 459 | தத்துசேனன் அரசனானது ... ... ... | ,, |
| ,, | காளவாவிக்குளம் ... ... ... | ,, |
| 478 | அவன் கதி ... ... ... ... | ,, |
| ,, | காசியப்பன் [கசியபன்] (தத்துசேனன்மகன்) அரசனாகிச் சீயகிரிக்குப்போனது ... ... | 25 |
| 495 | முகலானன் (காசியப்பன்தம்பி) போரில்வென்றது ... | ,, |
| 512 | இறந்தது ... ... ... ... | ,, |
| ,, | குமரதாசன் (முகலானன் மகன்) அரசனானது ... | ,, |
| 521 | காளிதாசபண்டிதன் வந்தது ... ... | ,, |
| ,, | அரசன் சககமனம்செய்தது ... ... | ,, |
| ,, | 25 அரசர் முறையே அரசுசெய்தது ... ... | 26 |
| 769 | ௪-ம் அக்கிரபோதி அரசனானது ... ... | ,, |
| ,, | பொல்லநாருவை ராஜதானியானது ... ... | ,, |
| 775 | மிகிந்தன் (அக்கிரபோதி சுவீகாரபுத்திரன) அரசனாகியது | ,, |
| ,, | தங்கவிக்கிரகம் ... ... ... | ,, |
| 795 | ௩-ம் தபுலு (மிகிந்தன்மகன்) அரசனாகியது ... | ,, |
| ,, | வைத்தியசாலையும் மருத்துவகலாசாலையும் ... | ,, |
| ,, | சட்டப்புத்தகம் ... ... ... | ,, |
| 800 | ௨-ம் மிகிந்தன் அரசனானது ... ... ... | ,, |
| 804 | ௫-ம் அக்கிரபோதி அரசனானது ... ... | ,, |
| 815 | ௪-ம் தபுலு அரசனானது ... ... ... | ,, |

| கி. அ. வரு. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 831 | சு-ம் அக்கிரபோதி அரசனானது ... ... | 26 |
| ,, | 834-ம் வருஷ முதல் 4 வருஷ கலகத்தால் அரசின்றியிருந்தது | ,, |
| 838 | மித்தவேலசேனன் (அக்கிரபோதி மகன்) அரசனாகியது... | ,, |
| ,, | பாண்டியன் படையெடுத்துவந்தது ... ... | ,, |
| ,, | போரும் கொள்ளையும் .. .. .. | 27 |
| ,, | மித்தவேலசேனன் பாண்டியனுடன் சமாதானமாதல் | ,, |
| | விச்சிரவாதிமதம் .. ... ... | ,, |
| 858 | ச-ம் காசியப்பன் (மித்தவேலசேனன் மகன்) அரசனாகியது | ,, |
| | பாண்டிநாட்டில் படையேற்றியது ... . | ,, |
| 891 | க-ம் உதயன் (காசியப்பன் தம்பி) அரசனாகியது .. | ,, |
| 926 | உ-ம் உதயன் (உதயன் மகன்) அரசனாகியது ... | ,, |
| 937 | ரு-ம் காசியப்பன் (உதயன் மருகன்) அரசனாகியது ... | ,, |
| 954 | 9 அரசர் முறையே அரசுசெய்யத் தொடங்கியது ... | ,, |
| 1023 | ச-ம் மிகிந்தன் அரசனாகியது . . .. | ,, |
| ,, | மீண்டும் அநுராதபுரம் தலைநகரானது . .. | ,, |
| ,, | சோழர் படையெடுத்துவந்தது ... .. | ,, |
| ,, | ச-ம் மிகிந்தன் சிறைப்பட்டது ... ... | ,, |
| 1029 | தமிழரசு ... ... ... .. | ,, |
| 1059 | அரசின்றியிருக்கத் தொடங்கியது .. ... | ,, |
| | ஊருகுணைநாடு ... ... . ... | ,, |
| 1071 | விஜயபாகு அரசனாகியது .. ... . | 28 |
| ,, | வெற்றி .. . ... ... | ,, |
| 1126 | ஜயபாகு (விஜயபாகு தம்பி) அரசனாகியது... ... | ,, |
| 1127 | விக்கிரமவாகுவும் உ-ம கஜபாகுவும அரசராகியது ... | ,, |
| 1153 | மகாபராக்கிரமபாகு (இவன் விஜயபாகுவுடைய கடைமகன்போலும்) அரசனாகியது ... ... | ,, |
| | அவனுடைய நல்லரசு ... ... ... | ,, |
| | காம்போஜநாட்டிற் படையேற்றியது ... ... | 29 |
| | சோழபாண்டி நாடுகளிற் படையேற்றியது ... | ,, |
| | பராக்கிரமோதியென்னும் கால்வாய் ... ... | ,, |
| 1186 | உ-ம் விஜயபாகு (பராக்கிரமவாகு மருகன்) அரசனாகியது | ,, |
| 1187 | கீர்த்திநிச்சாங்கன் அரசனாகியது ... ... | ,, |

| கி. அ. ஞூ. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1187 | அவனுடைய சிறப்புப்பெயர்கள் . . . . | 30 |
| | கற்சிங்கம் . . . . . . . . . | ,, |
| 1196 | வீரவாகு (கீர்த்திஸிசாங்கன்மகன்) அரசனாகியது . . | ,, |
| 1197 | லீலாவதி (பராக்கிரமவாகுவுடைய கைம்பெண்) அரசியானது ... ... . . | ,, |
| | சசதாவம் மூவதேவதாவம் என்னும் நூல்கள் . . | ,, |
| 1200 | தமிழருடைய கலகம் ... . . . . | ,, |
| 1214 | மாகன் (தமிழன்) அரசனாகியது ... . . | ,, |
| 1235 | ௩-ம் விஜயபாகு அரசனாகியது ... . . | ,, |
| 1241 | தம்பதீனியாநகர் தலைநகராக்கப்பட்டது ... | 31 |
| | (௩-ம் விஜயபாகு இந்நகரிலிருந் தரசியற்றியகாலமே 24 ஞூ என நூலினுட் கூறப்பட்டதெனக்கொள்க) . . , ... . . | ,, |
| 1266 | பண்டிதபராக்கிரமவாகு (௩-ம் விஜயபாகுமகன்) அரசனாகியது... ... ... ... | ,, |
| | ஸ்ரீவர்த்தனபுரி ... . . . . | ,, |
| | வித்தியாசாலைகள் ... ... ... | ,, |
| | தமிழரை வென்றது ... ... ... | ,, |
| | பூஜாவலி என்னும் நூல் . . . . ... | ,, |
| 1301 | ௪-ம் விஜயபாகு அரசனாகியது . . ... | ,, |
| | மீண்டும் பொல்லநாருவை ராஜதானியாக்கப்பட்டது | ,, |
| 1303 | புவனேகவாகு (விஜயபாகு தம்பி) அரசனாகியது ... | ,, |
| ,, | இயப்பாகு தலைநகரானது . . . . | ,, |
| ,, | பாண்டியர் புத்தருடையபல்லைக் கொண்டுபோனது ... | ,, |
| 1314 | ௪-ம் பராக்கிரமவாகு (விஜயபாகுமகன்) அரசனாகியது ... | ,, |
| ,, | புத்தர்பல்லு மீட்கப்பட்டது ... ... | ,, |
| ,, | * குருநாகலை தலைநகராக்கப்பட்டது ... ... | ,, |


* ஆதியில், குருகுலமன்னராகிய துரியோதனனாதியரும், பஞ்சபாண்டவர்களும் யுத்தஞ்செய்த குருக்ஷேத்திரத்திலிருந்துவந்த பிரஜைகளால் குடிகொள்ளப்பட்டமையால் குருநாகலை என வந்தது. குருகிகலா என்பது மருவிக் குருநாகலையென்றாயிற்று. குரு - குருக்ஷேத்திரத்தார் (வாசஞ்செய்கின்ற), கலா - மலை. கி - உபசர்க்கம்போலும். அஸ்திசைலபுரியென்றும் அதற்குப்பெயர். அஸ்தி - யானை, சைலம் - மலை.

| கி. அ. வரு. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1319 | உ-ம் புவனேகவாகுமுதல் நால்வர் முறையே அரசரானது (அவர்பெயர், உ-ம்பண்டித பராக்கிரமவாகு, ௩-ம் புவனேகவாகு, ௫-ம் விஜயபாகு) ... ... | 31 ,, |
| 1317 | ௪-ம் புவனேகவாகு அரசனாகியது ... ... | ,, |
| ,, | கம்பளை ராஜதானியாகியது ... ... | ,, |
| 1361 | ௫-ம் பராக்கிரமவாகு அரசனாகியது . ... | 32 |
| 1371 | ௩-ம் விக்கிரமவாகு (பரா—தாயாதி) அரசனாகியதும் ஜயவர்த்தனபுரியும் ... .. ... | ,, |
| ,, | ஆரியச்சக்கிரவர்த்தி படையெடுத்துவந்து வென்றது ... | ,, |
| | ஆரியச்சக்கிரவர்த்தி தோற்றது ... ... | ,, |
| | செங்கடகநகரி . . ... ... | ,, |
| 1378 | ௫-ம் புவனேகவாகு அரசனாகியது ... ... | ,, |
| 1398 | ௬-ம் விஜயபாகு அரசனாகியது ... ... | ,, |
| 1410 | சீனர்வந்ததும அரசன் அவர்களுக்குச் சதிசெய்யத்துணிந்ததும் ... ... ... | ,, |
| ,, | சீனர் மீண்டும் ஒருமுறைவந்து அரசனைச்சிறைப்படுத்திச் சீனத்துக்குக் கொண்டுபோனது ... | ,, |
| ,, | அரசன் மீண்டது . . . . ... | ,, |
| ,, | ௬-ம் பராக்கிரமவாகு அரசனாகியது . . ... | 33 |
| ,, | ஜயவர்த்தனபுரி (கோட்டைக்காடு) ராஜதானியானது | ,, |
| ,, | சீனருக்குத் திறைசெலுத்தியது . . ... | ,, |
| 1462 | உ-ம் ஜயபாகு அரசனாகியது ... ... | ,, |
| 1464 | ௬-ம் புவனேகவாகு அரசனாகியது . . ... | ,, |
| 1471 | ௭-ம் பராக்கிரமவாகு அரசனாகியது . . . . | ,, |
| 1485 | வீரபராக்கிரமவாகு அரசனாகியது ... ... | ,, |
| 1505 | தருமபராக்கிரமவாகு (வீரபராக்கிரமவாகு மகன்) அரசனாகியது . . . . ... | ,, |
| | யாழ்ப்பாணச் சரித்திரம் . ... ... | ,, |
| | பறங்கிக்காரர் வந்தவிபரம் ... ... | 35 |
| ,, | லோறன்சோ கொழும்புக்குவந்தது ... ... | 37 |
| ,, | துறைகாவலர் கடிதம் ... . . ... | ,, |
| ,, | தருமபராக்கிரமவாகு யோசித்தல் ... ... | 38 |
| ,, | அரசனுடைய ஒற்றன் கொழும்புக்குப்போனது ... | ,, |

| கி. அ. வரு. | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| 1505 | பறங்கிகள் அரசனிடம் தூதனுப்பியது ... .. | 38 |
| ,, | பறங்கிகள் மீண்டது ... ... ... | ,, |
| 1518 | பறங்கிகள் கோட்டைகட்டுதற்கு ஆயத்தமாய் மீண்டது | ,, |
| ,, | துலுக்கர் அரசனைப் போர்செய்யத் தூண்டியது ... | ,, |
| ,, | தருமபராக்கிரமவாகு திறைகொடுத்தல் ... | ,, |
| ,, | களிமண்கோட்டை ... ... .. | ,, |
| 1520 | களிமண்கோட்டையை இடித்துக் கல்லினாற்கட்டியது | ,, |
| 1527 | தருமபராக்கிரமவாகு இறந்தது ... ... | ,, |
| ,, | எ-ம் விஜயபாகு சகலராஜனால் முடிசூட்டப்பட்டது ... | 39 |
| ,, | பறங்கிக்காரருடைய நடக்கை... ... . | ,, |
| 1528 | எ-ம் விஜயபாகு கொழும்புக்கோட்டையை வளைந்தது . | 40* |
| ,, | விஜயபாகு பறங்கிகளுக்குத்தோற்றோடியது ... | ,, |
| 1534 | விஜயபாகு தன்மக்களால் கொலையுண்டது . .. | ,, |
| ,, | எ-ம் புவனேகவாகு அரசனாகியது ... .. | 41 |
| | மாயாதுன்னை தோற்றோடியது .. .. | ,, |
| | புவனேகவாகு தன்பௌத்திரனைப்போலும் ஒருருவை அமைப்பித்துப் போர்த்துக்காலரசனுக்கனுப்பி முடிசூட்டுவித்தது ... ... | ,, |
| 1541 | போர்த்துக்காலரசன் முடிசூட்டியது ... . | ,, |
| ,, | மாயாதுன்னை பண்டாரனைத் துணைக்கொண்டு போர்தொடுத்துத் தோற்றது ... ... ... | ,, |
| 1542 | புவனேகவாகு கழனியாற்றில்மாண்டது ... ... | ,, |
| ,, | தோன்ஜுவான் தருமபாலன் பறங்கிகளால் கொழும்பில் முடிசூட்டப்பட்டது... ... ... | ,, |
| ,, | அவனுடன் அநேகர்கிறிஸ்தவரானது ... ... | ,, |
| 1544 | மன்னாரிலே சவேரியாரது முயற்சியால் அநேகர் கிறிஸ்தவரானது ... ... ... | 42 |
| ,, | யாழ்ப்பாணத்தரசன் * 600 கிறிஸ்தவர்களைக் கழுவேற்றியது... ... ... ... | ,, |


* இக்கிறிஸ்தவர்களை அரசன்நோக்கி, "நீங்கள் மீளவும் சைவசமயிகளாவீரேல் உம்முயிர் இரக்ஷிக்கப்படும்" என்று கூறியபோது, அவர்கள் நாங்கள் சைவசமயிகளாவதிலும் உயிர்விடுவதே உத்தமம் என்று உத்தரங்கூறித் திடபத்தியுடன் கழுவிலேறினார்களாம்.

| கி. அ. ௵. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ,, | அவ்வரசனுடையமகன் கிறிஸ்தவனுகியதும் கொலையுண்டதும் ... ... ... | ,, |
| ,, | அரசன் தானே கிறிஸ்தவனுகியது ... ... | ,, |
| 1552 | கண்டிநாட்டில் மாயாதுன்னை அரசனுகியது ... | ,, |
| 1563 | மாயாதுன்னை கோட்டைக்காட்டைவளைந்தது ... | ,, |
| ,, | கோட்டைக்குள் அகப்பட்ட பறங்கிகள் போசனப்பொருளின்மையால் மனுஷருடலைப் புசித்தது ... | 43 |
| ,, | பறங்கிகள் கோட்டைக்காட்டை மாயாதுன்னைக்குக் கையளித்துவிட்டது ... ... | ,, |
| ,, | தருமபாலன் தனது ராஜமாபுரமாகிய கோட்டைக்காட்டினின்றும் அகன்று கொழும்புக்கேகியது ... | ,, |


☞ இப்பால் காலவரையறை கிரமமாகக் கூறப்பட்டுக் கிடத்தலின் அட்டவணைவேண்டா. அட்டவணை வரையப்புகின் விரியுமென்றஞ்சி விடுகின்றும்.